சிறுகதை சிறப்பிதழ்

ஜனவரி - மார்ச் 2023

# உள்ளம்

www.ullamm.com

கலை, இலக்கிய, சமூக காலாண்டிதழ்



இலங்கை: 250 ரூபா

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழக வெளியீடு

# Digital solutions designed to **empower your business !**

cyberUP TECHNOLOGY

## Unlock your business growth

With 60+ years of collective experience of the founders in building cyber technologies and accelerating growth for small and medium enterprises, we can help jumpstart your business through our experience and expertise in web and mobile technologies. Also we maximize business reach, Optimize market scale and Increase operational efficiency.



## E-COM SOLUTIONS

- Search Engine Optimization
- Branding/Logo Design
- E-Com Web Development




## WEB SOLUTIONS

- Web Development
- Web Design
- Social Media Activation



## MOBILE SOLUTIONS

- Enterprise Apps
- Mobile App Development
- User Interface Design



## DIGITAL SOLUTIONS

- Digital Marketing
- Explainer Videos
- Business Blogs

+1-978-319-0455
info@cyberuptech.com
www.cyberuptech.com

சிறுகதை சிறப்பிதழ்

# உள்ளத்துள்

## கட்டுரைகள்


ஆசிரியத்துவமும் குருத்துவமும் விரவிய பேராசிரியர் மாரிமுத்து சின்னத்தம்பி அவர்கள்
*கௌ.சித்தாந்தன்* 8

ஈழத்தில் சிற்றிதழ்கள் வளர்ச்சியும் உள்ளம் சஞ்சிகையின் உதயமும்
*ஐங்கரன் விக்கினேஸ்வரா* 26

காசு... பணம்... துட்டு... Money... Matters...
*ரகுராஜ்* 32

உள்ளம் இருந்த காலம்
*கானா பிரபா* 36

ஐயம்தெளி 1
*மு. துலாபரணி* 60

ஐயம்தெளி 2
*விக்னேஸ்வரன்* 64

காலத்தை வென்ற இசைகுரலோன்: பொப் மார்லி
*ஐங்கரன் விக்கினேஸ்வரா* 72

தமிழ்நாட்டில் ஈழ அகதிகளும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைப்பாடுகளும்
*சுகன்யா ஞானசூரி* 82

துணிவு திரைப்படம் வங்கி, மற்றும் நிதித்துறைகளை மோசடிக்காரராக தவறாகச் சித்தரிக்கின்றதா?
*சிவநேசன் வைத்தியநாதர்* 95

வேண்டத்தக்கது அறிவாய் நீ
*பிரவீணன் விழிமைந்தன்* 100

# சிறுகதைகள்


ஏற்றுமதிக்காக
*தமிழ்க்கவி* 20

குறையொன்றுமில்லை
*நவமகன்* 38

குல்லமடை...
*சரவணபவன் ஆதவன்* 76

காலமாற்றம்
*அலெக்ஸ்பரந்தாமன்* 88







கொக்குவில்
*அகரன் பூமிநேசன்* 108

சயிக்கிள் டாக்குத்தர்
*காரைக்கவி கந்தையா பத்மானந்தன்* 116

பொட்டல் வெளிப் பறவைகள்
*ஜி.எம்.குர்ஷித்* 122

ஹிப்பி
*ஆதி பார்த்திபன்* 132

## கவிதைகள்

சீசன் பறவைகள்
*க.ஷியா* 24

திசை எனும் வாகனம்
காற்றின் காதல்
*அகமது ஃபைசல்* 30-31

டீன் கபூரின் கவிதைகள் 70-71

அறிவும் கூட்டுக்குள்
*ப.பார்த்தீ* 107

இதம்
*கருணை ரவி* 114

இறுதிப் பயணம்
*முவைஸ் அன்சாரி* 115

வெண்மையின் புன்னகை
*தாட்சாயணி* 121

சகோதரர்களே.. பசியுடன்
என் தாயை சந்திக்க நேர்ந்தால்...
கீதம் இனிய குயிலே
*சண்முகம் சிவகுமார்* 130-131

## செட்டை முளைக்கும் சிட்டுக்கள்

அகரா கவிதைகள் 145

இவள் ஒரு பொக்கிஷம்
*அப்பையா தேவதாஸ்* 147

கரப்பான் பூச்சி
*அகமது ஃபைசல்* 149

---

விதானையாரின் விண்ணானப் பதில்கள் 34


கட்புலக் கலைஞர்கள் 106

# அகவெளி

உலகப் பொருளாதாரம் ஒரு மந்த நிலையை (Economic Recession) நோக்கி இந்த ஆண்டின் இறுதியில் அல்லது அடுத்த ஆண்டில் நகர்வதற்கான சாத்தியங்கள் அதிகரித்துள்ளன. அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் வங்கித் துறைகள் கடுமையான நிதி முகாமை நெருக்கடிக்குள் ஆட்பட்டு உள்ளன. கடந்த மார்ச் மாதத்தில் அமெரிக்காவில் இரண்டு வங்கிகள் அரச கண்காணிப்பாளர்களால் (Bank regulators) மூடப்பட்டன. உலகெங்கும் பணவீக்கத்தை குறைப்பதற்காக மத்திய வங்கிகள் வட்டி வீதங்களை கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியாக அதிகரித்து வந்த பின்னணியில், இந்த வங்கி முறிவுகள் பொருளாதாரம் சம்பந்தமான அச்ச நிலைகளை மேற்கத்திய நாடுகளில் அதிகரித்துள்ளன. வட்டி வீத மாற்றங்களினால் ஏற்பட்ட ஆபத்துக்களை (Interest rate risks) சரிவர முகாமிக்காததன் காரணமாகவே அமெரிக்க நிதி நிறுவனங்கள் முறிவடைய நேரிட்டது. இதேபோன்று உலகின் மிகவும் மதிப்புமிக்க முதலீட்டு வங்கிகளில் ஒன்றான ஐரோப்பாவின் கிரெடிட் சூயிஸ் (Credit Suisse. வங்கியின் வீழ்ச்சி சுவிஸ் அரசாங்கத்தின் நிதி பங்களிப்பால் தவிர்க்கப்பட்டது. இந்த வங்கி முறிவுகளை தொடர்ந்து அமெரிக்காவில் குறிப்பாக சிறிய பிராந்திய வங்கிகளது எதிர்காலம் பற்றிய ஐயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இது தவிர கோவிட் கால தொழிற்சந்தை மாற்றங்களால் பெரும்பாலானோர் வளர்ந்த நாடுகளில் வீட்டில் இருந்தே வேலை செய்யும் நடைமுறையை பின்பற்றி வருவதனால் தொழில் நிறுவனங்களுக்கு கட்டடங்களை வாடகைக்கு விடுகின்ற நிறுவனங்களும் (Commercial real estate sector) மிகப் பெரும் நிதி நெருக்கடிகளை சந்தித்து வருகின்றன.

2008-2009 இல் உலகில் ஏற்பட்ட மிகப்பெரிய நிதி நெருக்கடி, ஒரு நிறுவனத்தில் ஏற்படும் நிதி நெருக்கடி, அந்தத் துறையின் ஏனைய நிறுவனங்களுக்கும் ஏனைய நாடுகளுக்கும் விரைவாக பரவி, உலகளாவிய பொருளாதார நெருக்கடி ஒன்றை மிக விரைவாக சில நாட்களுக்குள்ளேயே உருவாக்கிவிட முடியும் என்பதை நிரூபித்தது. ஏற்கனவே மிகப்பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் ஆட்பட்டிருக்கும் இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டுக்கு வளர்ந்த நாடுகளில் ஏற்படக்கூடிய பொருளாதார மந்த நிலையும் வங்கித் துறை நெருக்கடிகளும் பங்குச்சந்தை வீழ்ச்சியும் மிகப்பெரும் பின்னடைவாக எதிர்வரும் மாதங்களில் அமைந்து விட முடியும். பொருளாதார நெருக்கடிகளுக்கு புறம்பாக புவிசார் அரசியல் நிலைமைகளும் கடந்த சில மாதங்களாக கடுமையாக சூடேறி வருகிறது அணு ஆயுத வல்லரசுகளான ரஷ்யாவும் சீனாவும் ஒரு பக்கமும் அமெரிக்காவும் அதன் நேச ஐரோப்பிய நாடுகள் இன்னொரு பக்கமும். உக்ரைன் இடையில்.





பொருளாதார மந்த நிலை, சுற்றுலா மற்றும் ஏற்றுமதி வருவாயில் வீழ்ச்சி, வெளிநாட்டு முதலீடுகளில் வீழ்ச்சி, வெளிநாட்டு வேலை வாய்ப்புகளில் குறைப்பு, வெளிநாட்டு உதவிகளில் குறைப்பு என்றவாறு வளர்முக நாடுகளுக்கு கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தலாம். பொருளாதார மந்த நிலையின் விளைவுகளில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள இடர்கள் ஏற்படக்கூடிய பொருளாதாரத்தின் துறைகளை மிகக் கவனமாக கண்காணிப்பதும் வளங்களின் பயன்பாட்டில் மிகக் கவனமாக இருப்பதும் பிரதானமானது. இலங்கையின் வங்கித் துறையை எடுத்துக் கொண்டாலும் தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களான இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ் என்பவற்றிற்கு அரச வங்கிகளால் வழங்கப்பட்டுள்ள பல கோடிக்கணக்கான கடன்கள் ஒரு குறிப்பிடத்தக்க இடர் என்பதில் ஐயமில்லை. நிதி நிறுவனங்களது செயல்படாக் கடன்கள் (Non-performing loans) தொடர்ச்சியாக அதிகரித்து வருவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் பொருளாதார இடர்களுக்கான அடிப்படை காரணம். ஒரு வரியில் சொல்வதானால் இருந்ததை மீறிச் செலவு செய்ததாகும் (lived beyond our means). நாடும் வீடும் எத்தகைய பொருளாதார இடர்களையும் எதிர்கொள்வதற்குள்ள சரியான மார்க்கம் எம்மிடம் உள்ள வளங்களுக்குள் வாழப் பழகுவதே (living within our means).


மதி: 7 பிறை. 18

**வெள்ளை நிறப் பூவுமல்ல**
**வேறெந்த மலருமல்ல**
**உள்ளக் கமலமடி**
**உத்தமனார் வேண்டுவது**
**– விபுலானந்த அடிகள்**

❖

அட்டைப்படம் வடிவமைப்பு
லார்க் பாஸ்கரன்

❖

இதழ் வடிவமைப்பு
சந்தோஷ் கொளஞ்சி

❖

வலைத்தள வடிவமைப்பு
Maestro Innovative solution (PVT) Ltd.

❖

படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. எனினும், ஊடக அறம் கருதி பிரசுரித்ததற்கான பொறுப்பை ஆசிரியர் குழு ஏற்றுக் கொள்ளும்.

❖

இதில் வரும் சில புகைப்படங்கள் இணையத்தில் இருந்து எடுக்கப்படடவை.

❖



தொடர்புகளுக்கு :
வளர்மதி முன்னேற்றக்
கழகமும் சனசமூக நிலையமும்
சம்பியன் லேன்
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில் .

❖

மின்னஞ்சல்: info@ullamm.com

❖

இலங்கை: 0763397297
இங்கிலாந்து: 7814643273
சுவிஸ் மற்றும்
ஏனைய ஐரோப்பிய நாடுகள்: 41794670366
வட அமெரிக்கா : (416) 316 3112

❖

வலைத்தளம்: www.ullamm.com

❖

உ

# ஆசிரியத்துவமும் கருத்துவமும்

## விரவிய பேராசிரியர் மாரிமுத்து சின்னத்தம்பி அவர்கள்



“எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்” எனும் கொன்றைவேந்தனில் முதலில் நிற்பது எண்ணாகும். தமிழின் தொன்மைக் காலத்திலே ‘ஆசிரியர்’ என்பவரைக் ‘கணக்காயர்’ என்று குறிப்பிட்டார்கள். மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்றும் திருமுருகாற்றுப்படை ஆசிரியரைக் குறிப்பிடுவர். தக்க முதுகுரவரிடம் கற்றவரால் எழுதப்பட்டமையால் ஆற்றுப்படை இலக்கியத்தில் முதலில் வைத்து கூறப்படும் திருமுருகாற்றுப்படை இலக்கியத்தன்மையும், இலக்கியநயமும், ஆன்மிகப்பண்பும் விரவிய வகையில் காணப்படுகிறது. உண்மையான ஆசிரியர் இவ்வியல்புகளைத் தன் உள்ளத்தில் கொண்டவராகத்தான் இருப்பார். மேற்கத்தேய செல்வாக்கால் இடைக்காலத்திலே ஆசிரியர்கள் அறிவை (Knowledge) வழங்குபவர்கள் எனவும், ஞானத்தை (Wisdom) வழங்குபவர்கள் எனவும் பிரிக்கப்பட்டார்கள். இதனால்தான் ‘விஞ்ஞானம் இல்லாத சமயம் முடமெனவும் மெய்ஞ்ஞானம் இல்லாத விஞ்ஞானம் குருடு’ என்றனர். இவ்வடிப்படையில் இன்றைக்கு அறிவும், ஆன்மிகமும் கலந்த வகையிலான இலங்கையின் தலைசிறந்த கல்விக் கணக்காயர்களில் ஒருவராக பேராசிரியர் மா.சின்னத்தம்பி திகழ்கிறார்.

1980 ஆம் ஆண்டு,பேராசிரியர் ‘சுபசதனம்” (சம்பியன் லேன், கொக்குவில்) இல்லத்தில் இருந்து கொண்டு “படிப்பில் ஆர்வமும், பிரச்சினைகளில் பொறுமையும், வாழ்வில் தன்னம்பிக்கையும் பெற்றுச் சிறந்து வாழ என் நல்லாசிகள்” என்று எனது தந்தையாருக்கு எழுதிய பயன்மிக்க ஆற்றுப்படுத்தற்குறிப்புக்கள் இன்று எனது அரிய சொத்தாகி என்னை முன்னோக்கி இயக்கிக் கொண்டிருக்கிறது. எனது தந்தையார் மட்டத்தில் உள்ளவர்களுக்கு பேராசிரியர் பயன்படுகிறார் என்பதை விட,

என் போன்ற அனுபவக் கல்வியைப் பெற இருப்பவர்களுக்கு இவர் 'அரிய நல்லறிவுச் சுடர்' என்பது வெறும் முகமனுக்கானதல்ல.

கௌ.சித்தாந்தன்



### இளங்கதிரோன்

மாவை.இ.சுந்தரராஜசர்மா (தமிழ்நாடு) அவர்கள் 1960 ஆம் ஆண்டு வித்துவசிரோமணி சி.கணேசையர் அவர்களுக்கு "ஞானசூரியன்" என்று தலைப்பிட்டு வெளிப்படுத்திய மலர் ஒன்று அண்மையில் பார்க்கக் கிடைத்தது. இத்தொடரை இங்கே பேராசிரியர் சின்னத்தம்பிக்கும் பொருத்திப் பார்க்க விரும்பவில்லை. ஏனெனில் சூரியன் என்பதிலே "சூர்" என்பது (சுடுதல்) வேர்ச்சொல்லாக (Root word) வருகிறது. பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்திலிருந்து 1948 இல் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் 'இளங்கதிர்" (சஞ்சிகை) அறிவுத் தெறிப்பினால் (Refelection) எம்மையும் வளப்படுத்தியிருக்கிறது. பேராசிரியர் கொழும்புப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்க ஆரம்பகால அருமையான 'இளந்தென்றல்' இதழ்களாலும் போசிக்கப்பட்டவர்.



"ஆசிரியன் சொல்லுவான் ; ஞான ஆசிரியன் சொல்வதுடன் ஆவேசித்து உணர்த்தக் கூடியவனும்" என்று அறிந்துள்ளேன். நயனம் (பார்வை) ,மானசம் (நினைப்பு), வாசகம் (சொல்) என்று பலவகையான பொறிமுறைச் சாதனங்களைப் பற்றி சாஸ்திர நூல்களும் கூறும். தன்னிடம் எத்தனை மாணவர்கள் வருகிறார்களோ அத்தனை முகங்களும் நல்லாசிரியருக்கு இருக்க வேண்டும் எனப்படுகிறது. இப்பெருந்தன்மையும் பேராசிரியரிடமிருந்தது.

1979 ஆம் ஆண்டு சுன்னாகம் ஆனந்தா கலைக் கல்லூரியில் புவியியலுக்கு க.குணராசா (செங்கைஆழியான்) போல் பொருளியலுக்கு மா.சின்னத்தம்பி. கரும்பலகையில், பொருளா(தாரம்)? மணியான எழுத்தில்; இதிலுள்ள வினாக்குறி இவரைச் சோக்ரடீசின் மாணவரோ? என்று எண்ண வைத்தது. தாரமென்பது இந்துநாகரிகப்பாட மாணவர்களுக்கு, 'அருளாதாரம்', 'அவதாரம்' என்பனவற்றை நினைவுக்குக் கொண்டு வந்தது. பண்டிதர் க.வீரகத்தி படிமுறையாகத்



"ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோடாயினும் ஆசைஅறுமின்கள்
ஆசைப்படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தம் ஆமே"

(திருமந்திரம்—2615)

### பேராசிரியரின் இளமைநலம்

பேராசிரியருக்கும் எனது தந்தையாருக்கும் இடையிலான ஆசிரிய—மாணவர் உறவினால் (Interpersonal) ஏற்பட்ட செல்வாக்கின் விளைவால் கடந்த இரு தசாப்தங்களாக பேராசிரியருடன் பழகும் அரிய வாய்ப்பினைப் பெற்று வருகிறேன். புத்தளத்தில் பிறந்து தரம் நான்கு வரை ஆரம்பக் கல்வி கற்றுவிட்டு, 2003 ஆம் ஆண்டு இணுவில் மத்திய கல்லூரியில் தரம் ஐந்து கற்கும்போது பேராசிரியரை முதன் முதலில் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. எங்களது கல்வி முறை ஒடுக்கப்பட்டோருக்கானது (Oppressed of the Education) என்பது பேராசிரியர் 'பவுலோ பிரையறி' என்பவருடைய முடிவு. இவர் கூற்றிலே நிறைய உண்மையுண்டு. இதன் செல்வாக்கு அக்காலத்திலும் என்னையும் பாதித்துக் கொண்டிருந்தது. பேராசிரியரிடம் ஆராய்ச்சி தொடர்பான நூலொன்றைப் பெறுவதற்காகத் தந்தையார் என்னையும் அழைத்துச் சென்றார். ஆசிரியர்களைச் சந்திப்பது என்றாலே எனக்குச் சற்றுப்பயம். அப்படியிருந்த என்னைப் பேராசிரியர் ஒருவருடைய வீட்டிற்குக் கூட்டிச்சென்று அவரை சந்திக்கும்வரை என்னுள்ளே பலவிதமான சலனங்கள் என்னவோ உ.வே. சாமிநாதையர் தமது குருவைச் சந்திக்கச் சென்றதைப் போன்றதானதொரு அனுபவம். கல்வித்துறைத்தலைவர் என்பதனையும் ஒரு புறம்வைத்துவிட்டு எங்கள் இருவரையும் பேராசிரியர் வரவேற்ற முறை அதற்கு மேலால் செல்விஅன்ரியின் மேலான உபசரிப்பு, இரண்டுமே அருமையான உயர்ந்த

தமிழ்கற்கும் மாணவர்களை பாடசாலையிலே படிக்கிறார்கள் உயர்தரத்தில் எடுக்கிறார்கள் பல்கலைக்கழகத்தில் செய்கிறார்கள் என்பர். உயர்தரத்தில் 'தமிழ் எடுப்பவர்களுக்கு', (தமிழ் படிப்பவர்களுக்கல்ல) இல்லறவியலில் முதன்மையாகவரும் தாரம்; அதாவது, "மனைத்தக்க மாண்புடையளாகி...." என்று தொடங்கும் (வாழ்க்கைத்துணைநலம்) குறள் விளக்கம் குறிப்பிட்ட வினாடிக்குள்ளாக வந்து செல்கிறது. பொருளியல் பற்றிய விரிவுரை தொடங்குகிறது கணீர் என்ற குரலில் "ஆசைகள் அளவிறந்தன அதனால் தேவைகளும் அளவிறந்தன. அந்தத் தேவைகளை நிறைவேற்றக்கூடிய சாதனங்கள் வரையறுக்கப்பட்டவை. இதிலிருந்து, அருமை, தெரிவு, பரிமாற்றம் என்ற பெரும் உண்மைகளைக் கற்கிறோம். இதுதான் 'இக்னோமியா' என்பதிலிருந்து பிறந்த 'இக்கொணமிக்ஸ்' " என்று கூறியது பேராசிரியரது மாணவராகிய எனது தந்தையாருக்கு இன்றைக்கும் மனதில் நிலைத்திருக்கிறது. இவரது விரிவுரைக் குறிப்பிலிருந்து, இன்று, எனது தந்தையார் பெற்றுக் கொண்டது,




மனப்பதிவு. தந்தையார் எதிர்பார்த்துச் சென்ற கலாநிதி Jayadeva Uyangoda எழுதிய How to write a Thesis (1997) என்னும் நூல் கிடைக்கிறது. அதற்கு மேல் தம்மிடம் இருந்த பழைய சிந்தனை, ஞானம், மானுடம் முதலான சஞ்சிகைகளையும் கொடுத்து உதவினார். ஆய்வாளனால் கருதிக்கொள்ளப்படுவது —கருதுகோள் என்று Hypothesis என்பதற்குக் கொடுத்த சொற்பொருள் விளக்கம் அற்புதமானது.

இரண்டாவது தரிசனம் ஏழாலை முத்தமிழ் மன்றத்தில் 2016 ஜூன் மாதம் பேராசிரியர் இரா.வை.கனகரத்தினம் (1946—2016) அவர்களின் 31ஆவது நினைவஞ்சலி மற்றும் சைவவித்யா இரத்தினம் மலர் வெளியீட்டின்போது பேராசிரியரின் உரையைக் கேட்கக் கிடைத்தது. இதற்கு அடுத்த ஆண்டு எனது தந்தையாரோடு ஒன்றாகப் பேராசிரியரிடம் கற்ற சுதுமலை பொ. அமிர்தலிங்கம் (காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி அதிபர்) அவர்களின் அகால மரண நிகழ்வின் இறுதி அஞ்சலியின்போது பேராசிரியர் நிகழ்த்திய உருக்கமான உரையினைக் கேட்கக்கிடைத்தது மூன்றாவதுதரிசனம். பின்னிரண்டு நிகழ்வுகளும் பேராசிரியர், தமது நண்பர்,மாணவரை அவர்களது மரணத்தின் பின்னும் அவர்களை உளப்பூர்வமாக நேசித்தார் என்பதற்குச் சான்று பகர்வன.

இதன்பின்னர், பேராசிரியர் பாரியாருடன் வெளிநாடு சென்று, பிள்ளைகள், மருமகன்மார், பேரப்பிள்ளைகள், நண்பர்களுடன் இன்பதுன்பங்களைப் பகிர்ந்து விட்டு, 2022 இல் இருந்து தன் தாய்நாட்டில் தமது திருவாட்டியுடன் ஓய்வுடனும், ஓய்வுஇன்றியும் மிக்கமகிழ்வுடன் வாழ்கின்றமை தாமாகத் தேடிக்கொண்ட பசுநல்வினை, சிவநல்வினை என்று தான் கூறத் தோன்றுகிறது.

**கண்ட நாள் முதல் இந்த நாள் வரை...**

பேராசிரியருடன் எனது தந்தையாருக்கு ஐம்பது ஆண்டு காலத் தொடர்பும் எனக்கு இருபது ஆண்டு காலத்தொடர்பும்

உண்டு. எம் இருவர் பார்வையிலும் பேராசிரியரின் தோற்றப் பொலிவும் நடத்தைகளும் அன்றிருந்தது போன்றே இன்றும் இருப்பது தெரிகிறது. இதற்கான காரணத்தை நான் என்னையே (Intraper—sonal) கேட்டுக்கொண்டேன்;. அதற்கான அருமையான விடை...

சங்கச் சான்றோனும் பெரும் புலமையாளனுமாகிய பிசிராந்தையாரது பின்வரும் புறநானூற்றுப் பாடலில் உள்ளது.

*"யாண்டு பல வாக நரை இல ஆகுதல்*

*யாங்காகியர்? என வினவுதிர் ஆயின்*

*மாண்ட என் மனைவியோடு மக்களும் நிரம்பினர்*

*யான் கண்டனையர் என் இளையரும் வேந்தனும்*

*அல்லவை செய்யான் காக்கும் அதன் தலை*

*ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்*

*சான்றோர் பலர் யான் வாழும் ஊரே"*

*(மாண்ட—மாட்சிமைபொருந்திய)*
*(புறம்:191.)*

பிசிராந்தையாரது ஊரிலே(பாண்டிநாடு) அவருடன் வாழுகின்ற அனைவரும் நல்லவர்கள், நற்குண நற்செய்கைகளையுடைய மனைவியுடன், நல்லறிவு நிரம்பப்பெற்ற பிள்ளைகள். வேலைக்காரரும் இளையவர்கள்;. அவர்கள் புலவர் எண்ணுபவற்றையே செய்பவர்கள். ஆளுமரசனும் நல்லனவற்றையே செய்வான். புலவரின் ஊரிலே வாழ்பவர்களும் அறிவு நிரம்பிப் புலனடங்கி அருள்வழி நடக்கின்ற வாழ்க்கையினை உடையவர்கள்.'மனிதன் சாகிறதில்லை; அவன் தன்னைத்தானே கொன்று கொள்கிறான்." என்பர் தத்துவவியலாளர்கள். குறிப்பாக உளரீதியான பாதிப்புக்கள் தான் பிணி,மூப்பு,சாக்காடு என்பனவற்றை ஏற்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகின்றன. என்றும் உளவியலாளர் கூறுவர்.

இப்பாடலில் முக்கியமான இயல்புகளை பேராசிரியரின் வாழ்க்கையுடன் பொருத்திப் பார்க்கையில், அவரது மனைவி, மக்கள்நலம் என்பன சின்னத்தம்பி அவர்களின் உள ஆரேக்கியத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றுவதால் அவர் இன்றும் இளமையோடு இருப்பதுடன் தம்மைச்சார்ந்தோர்களையும் அவ்வாறே வாழவைத்துக்கொண்டிருக்கிறார். இவற்றோடு வள்ளுவர் குறிப்பிடும்,

"தன்னைத்தான் காக்கின் சினம் காக்க" என்பதும் பேராசிரியருக்குப் பொருந்தி வருவதால் குறையின்றி நிறைவாழ்வு வாழ்ந்து வருகிறார்.

**கல்வியும் கலை ஆர்வமும்**

பேராசிரியர் மா. சின்னத்தம்பி அவர்கள், யாழ்ப்பாணத்தின் முன்னணிப் பாடசாலைகளான வைத்தீஸ்வரக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி என்பனவற்றில் கற்று அக்காலத்திலே இலங்கைப் பல்கலைக்கழகம் எனும் அந்தஸ்து உடைய கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் கற்று, B.A., B.Phil.(Hons.) பட்டம் பெற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் கல்வி டிப்ளோமா, பொருளியலில் M.A.› கல்வியியலில் M.Phil. பட்டங்கள் பெற்றவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசவும் எழுதவும் வல்லவர். சிங்களமும் தெரியும். இதுவரை பொருளியல், கல்வியியல்,ஆராய்ச்சி தொடர்பாக 37 நூல்கள் எழுதியவர். நூற்றுக்கு மேற்பட்ட பயன்மிகு ஆய்வுக் கட்டுரைகளை எழுதித் தம்வசம் வைத்துள்ளார். "பாத்திரமறிந்து பிச்சை கொடு", என்பதற்கேற்ப, தேவையானோர்களுக்கு இலவசமாகக் கொடுத்துதவி வருகிறார். விரிவுரையாளர், ஆசிரியர், சேவைக்கால ஆலோசகர், பரீட்சைமேற்பார்வையாளர், பல்கலைக்கழக விரிவுரையாளர், பேராசிரியர், சட்டம்,

கல்வியியல் துறைகளின் தலைவர், கல்வியியல்துறை, உயர்பட்டப் படிப்புகள் பீடம் என்பனவற்றில் கல்வியியல் முதுமாணி, பட்டப்பின் டிப்ளோமோ போன்ற கற்கைகளின் இணைப்பாளர், உயர்ப்பட்டப் படிப்பு கல்விச்சபையின் தலைவர், கனடா ரொரன்ரோ ஆகிய பல்கலைக்கழகங்களின் வருகைதரு விரிவுரையாளர் முதலான பதவிகளை வகித்த மாபெரும் நடமாடும் கல்வி, கலைக் களஞ்சியம் (Repository), சான்றோனும் கூட. கொள்கைச் சான்றோர்கள் தமது வாழ்நாளின் பிற்காலப் பகுதியிலும் தம்மிடம் உதவி வேண்டி நாடி வருவோர்களுக்கு உலகமே நினைந்துருகும் வண்ணமாக உதவி செய்வார்கள் என்று பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் "ஆறு" என்றொரு கட்டுரையில் குறிப்பிட்டதைப் பார்த்திருக்கிறேன். பண்டிதமணி அதிலே குறிப்பிட்ட "ஒழுகலாறு" இக்காலத்திலே பேராசிரியர் சின்னத்தம்பியிடமும் இருப்பதனைப் பார்த்து வியந்த சந்தர்ப்பங்கள் பல .

"புலமையும் வறுமையும் பிரிக்க முடியாதது" என்பதனை மறுத்து, அண்மையில் 30.01.2023 அன்று, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்ற பேராசிரியர் அவர்களுக்கான பவளவிழாவில் பேராசிரியர் நிகழ்த்திய உரை பலருக்குக் கல்விமூலம் வாழ்வில் உயர்வதற்கான உத்வேகத்தைக் கொடுத்தது உண்மை.

கல்வித் தத்துவவியலாளர்களின் கருத்தை அடியொற்றி, கல்வி கற்று வருகின்ற பயணம் என்பது ஒரு பூங்காவினூடான வருகின்ற பயணம் போன்றதன்று; அது பெரும்பாலானோர்க்கு கரடு முரடு போன்ற கற்கள் நிறைந்த பாதைகளால் வருகின்ற பயணம் போன்றதாகும் என்பதனைப் பேராசிரியர் தமது கல்வி வாழ்வை உதாரணத்திற்குக்காட்டிச் சொல்லி இருக்கிறார்.



அண்மையில் பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள் என்னிடம் வாசிப்பதற்குக் கொடுத்த யாழ்தினக்குரல் 'பொய்கை" வெளியீடான "ஆழப் பதிந்த வேர்கள்..." நூலில் காணப்பட்ட பேராசிரியரின் அனுபவப் பதிவுக் கட்டுரையான "உண்மை ஆசிரியர்கள் காலங்கடந்து நிற்கும் தெய்வங்கள்" என்பதனை வாசித்தபோது, என்னையும் அறியாமல் எனது கண்கள் கண்ணீரைச் சொரிந்தன.

அக்கட்டுரையின் இதயப்பகுதி...

சின்னத்தம்பி சொல்கிறார்...

"ஏன் பாடமாக்கேல்லை? நீ படிக்காமல் விடப் போறியா? கையை நீட்டு" என்று சொல்லிக் கொண்டே மிகுந்த கோபத்துடனும், ஏமாற்றத்துடனும் பிரம்பை ஓங்கினார். உள்ளங்கையில் தன்னால் இயன்றவரை ஓங்கி, ஓங்கி ஐந்து அல்லது ஆறு தடவை அடித்தார். எனது கை விண் விண்



என்று வலித்தது. அடுத்து, அடிவாங்கி அழுது கொண்டிருந்த நான் மேசையில் அழுதபடி படுத்துவிட்டேன். என்னிடம் பிறகு எதுவுமே பேசவில்லை.

மணி அடித்தது; கடைசிப்பாடம் என்பதால் எல்லோரும் புத்தகங்களை எடுத்துக்கொண்டு கேற்றை நோக்கி ஓடினர். என்னால் அன்றுமாத்திரம் அவ்வாறு ஓட முடியவில்லை. கனத்த மனதுடன் மேசையில் படுத்தபடியே இருந்தேன். ஏறக்குறைய எல்லோரும் போய்க்கொண்டிருந்தனர். நான் அழுதபடியே கைகளை மடித்தபடி அதன் மேல் தலையை கவிழ்த்து அழுதபடி இருந்தேன். (தண்டனை கொடுத்த பழனிச்சாமி ஆசிரியர் சைக்கிளை நிறுத்திவிட்டு சின்னத்தம்பி அருகே வந்து), "ஏன் வீட்டை போகேல்லையா? அன்புடனும் உறுதியுடன் கேட்டார்."

"இல்லைசேர்" என்று சொன்னவுடன் திரும்பவும் விக்கி விக்கி அழுதேன். நிறுத்த முடியவில்லை.

கிட்ட நெருங்கி வந்து, மீண்டும் என் தலையைக் கோதியபடியே "எல்லோருக்கும் இரண்டுஅடி. உனக்கு மாத்திரம் ஏன் ஐந்தாறு அடி? இதுதானே உனது கோபம்" என்றார். நான் தலை குனிந்து மௌனமாக அழுதபடியே நின்றேன்.

எனது தாடையைக் கையால் பிடித்து முகத்தை உயர்த்தினார். என் கண்கள் கண்ணீரால் நிறைந்திருந்ததால் அவரது முகம் எனக்குத் தெளிவில்லாமல் தெரிந்தது. எனினும் அவரது முகத்தில் ஒரு ஞானிக்குரிய மௌனம், தேஜஸ் இருந்ததைக் கண்டேன். அவர் சொன்னார், "உன்னை மற்றவர்கள் போல என்னால் விட முடியாது. உன்னால் படிக்க முடியும். நீ வாழ்வில் நன்றாக வருவாய். நீ அப்படி வராமல் விடக்கூடாது என்ற கோபத்தால் தான் கூட அடிச்சுப் போட்டன்" என்றார். மீண்டும் ஒரு தடவை தோளில் தடவி, 'நீ நிச்சயம் நல்லாக வருவாய் எனக்கு நன்றாகத் தெரியும்" என்று உறுதியாகச் சொன்னார்.

அந்த மந்திரச் சொற்களை நான் காதால் மட்டும் கேட்கவில்லை. அதில் கட்டுண்டேன். எனக்குள் நம்பிக்கைத் துளிர்கள் துளிர்த்தன." (பக்.77—78.)

இதனை எழுதுகின்றபோது கனக. செந்திநாதன் (1916—1977) அவர்களின் 'வெண்சங்கு' எனும் சிறுகதையில் வரும் 'மருதப்பு' என்பவருக்கு நடந்தது நினைவுக்கு வருகிறது. அங்கே மருதப்பு, தனக்குக் கற்பித்த ஆசிரியரின் வெஞ்சொற்களை (நாவினால் சுட்ட வடு) தாங்கிக்கொள்ள முடியாமல் இடைவிலகுகின்றான்

;(Drop—out) கனக.செந்தியின் கதையைப் படிக்கும்போதும் கண்ணீர் மல்கத்தான் செய்யும். அது உண்மையும் கற்பனையும் கலந்தது. பேராசிரியருக்கு நடந்த சம்பவம் உண்மைச்சம்பவம் .

புராதன காலத்திலிருந்து நீண்ட காலமாக இலக்கியங்கள் அதற்கான இலக்கணங்கள் என்பனதான் கல்வி நூல்களாக இருந்து வந்திருக்கின்றன. வேதங்களையும், வேத இலக்கியங்கள் என்று தான் சொல்கிறார்கள். எனவே கணக்கர் என்ற ஆசிரியரும் இலக்கிய கருத்தாவானார். பொருளியல் ஆசிரியரான சின்னத்தம்பி அவர்களும் இயல்பாகவே 'கணக்காயினார்' ஆனதும் வியப்பானது அல்ல. இவரிடம் இலக்கிய உணர்வு இயல்பாகவே இருந்தமையினை அவர் மூலமும் அறியக் கூடியதாக இருக்கிறது. அவரது இலக்கியநய உணர்வு அக்காலத்து அர்த்தமுள்ள திரைப்படங்களைப் பார்த்ததினாலும், பாடல்களைக் கேட்டதினாலும் ஏற்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட அதேபோலப் பாடுதல், மனதிலே பதிந்த எதுகை, மோனையுடன்கூடிய வசனங்களை சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போதெல்லாம் வெளிப்படுத்தி உரிய பாராட்டுதல்களை, பரிசில்களைப் பெறுவதிலிருந்து வளர்ந்தது. 'போலச் செய்தல்' என்பதும் அவருக்கு கைவந்த கலை. பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகம் வரையிலுள்ள ஆசிரியர்கள் எவ்வாறு அங்க அசைவுகளுடனும், அபிநயத்துடன் கற்பிப்பார்கள் என்பதனை அவருடன் உரையாடிப் பார்த்தால் தெரியும்.

**புராதன காலத்திலிருந்து நீண்ட காலமாக இலக்கியங்கள் அதற்கான இலக்கணங்கள் என்பனதான் கல்வி நூல்களாக இருந்து வந்திருக்கின்றன. வேதங்களையும், வேத இலக்கியங்கள் என்று தான் சொல்கிறார்கள். எனவே கணக்கர் என்ற ஆசிரியரும் இலக்கிய கருத்தாவானார். பொருளியல் ஆசிரியரான சின்னத்தம்பி அவர்களும் இயல்பாகவே 'கணக்காயினார்' ஆனதும் வியப்பானது அல்ல.**

இவர் கற்ற பாடசாலைகளில் யாழ். இந்துதான் இவரது விளைதிறன் மிக்க கற்றலுக்கான களமாக அமைந்தமை தெரிகிறது. இங்கே கற்பித்த சொக்கலிங்கம் (1930—2004), க.சிவராமலிங்கபிள்ளை (1925—2005) ஆசிரியர்கள்தான் ஆலயங்களிலும், சபைகளிலும் பேசிப் புகழ்பெறக் காரணமானவர்கள் என்கிறார். அங்கே கற்பித்த வரலாற்று ஆசிரியரான திரு. T. சிறீனிவாசன் அவர்களும் பேராசிரியரின் ஆளுமையில் செல்வாக்குச் செலுத்தியவர் என்பதினை அவ்வாசிரியர், சக்தி தொலைக்காட்சியில் பேராசிரியரின் கருத்துச் செறிவுடன் கூடிய யாழ்ப்பாணத்துப் பேச்சு நடையினைப் பார்த்து, எழுதிய கடிதம் (15.04.2014) சான்று பகர்கிறது.

கற்றலிலே பன்முகப்பட்ட அறிவையும் விசாலிப்பினையும் ஏற்படுத்தியதில் வாசிப்புக்குத்தான் முதன்மையான இடம் உண்டு என்கிறார் பேராசிரியர். சுவாமி விவேகானந்தரும் கற்றலுக்கு ஒரேயொரு வழிதான் உண்டு. அது மனதை ஒருமுகப்படுத்தி வாசிப்பது! வாசிப்பது!! என்றார். இதனால்தான் வாசிப்பினை 'சுவாசிப்பு' என்றும் கூறினர். அண்மைக்காலத்தில் இருந்து வருவது போல தொலைக்காட்சிகளோ, இணையத்தளவசதிகள் முதலானவையோ அக்காலத்தில் இருக்கவில்லை. எனவே நூல்கள், சஞ்சிகைகள், சிறப்புமலர்கள் போன்றனவும்தான் கை கொடுத்து உதவின. குறுக்கு வழியில் அல்லது

விரைந்து கேட்பதற்கான பிரத்தியேகக் கல்வி நிறுவனங்களும் அக்காலத்தில் இருந்திருக்கவில்லை. சஞ்சிகை என்பதில் தான் பேராசிரியருக்கு அதிக ஈடுபாடு இருந்தது. ஏனெனில் அவற்றிலே தான் மரபிலிருந்து மிகப் பிந்திய நவீனம் வரையான கல்வி, கலைச்செல்வங்கள் இருக்கும் என்பது பேராசிரியரின் உயர்ந்த கருத்துமாகும்.

இருபதாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே 'செந்தமிழ்' என்று ஒரு பத்திரிகை (சஞ்சிகை) தமிழ்நாட்டிலிருந்து வெளிவந்து கொண்டிருந்தது. அதிலே புலமையும், வித்துவச்செருக்கும் தான்அதிகம். மொழிநடையும் கடினமானது.இவருக்கு யாழ். இந்துவிலே கிடைக்கக்கூடியதாக மிகவும் உபயோகமானதாகவும் இருந்தது ஜி.ஆர். தாமோதரன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு தமிழ்நாட்டிலிருந்து வெளிவந்த 'கலைக்கதிர்' எனும் மாதாந்த அறிவியற் சஞ்சிகையாகும். பாரதி மனங்கொண்ட "ஒரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள யாவருக்கும்" ஆக வெளிவந்த சஞ்சிகை என்றும் கூறலாம். கல்வி என்றால் வாழ்க்கை என்பதற்கு ஏற்றவாறு விஞ்ஞானம், மருத்துவம், இரசாயனம், கல்வி, மொழி, இலக்கியம், இலக்கணம், கலைகள், தத்துவம், சமயம், வரலாறு, உணவு, ஆரோக்கியம், பொருளியல், மனையியல், விவசாயம், திறனாய்வு, சட்டம், இயற்கை போன்ற பல விடயங்கள் பொருத்தமான கண்கவர் வர்ணப்படங்களுடன் வெளிவந்தன. இவற்றிலே எழுதிய திரு ஞா.தேவநேயப் பாவாணர், பாரதிதாசன், ஈ. வெ. ரா. பெரியார், தெ .பொ. மீனாட்சிசுந்தரனார், ராஜாஜி, எம்.பக்தவத்சலம், நாமக்கல் வெ. இராமலிங்கம்பிள்ளை, சுத்தானந்தபாரதியார், எஸ்.வி.சிட்டிபாபு, முத்து சண்முகன், கே.கே.பிள்ளை, ரா.பி சேதுப்பிள்ளை, நா.பார்த்தசாரதி, மு. வரதராசன், கி.வா. ஜகந்நாதன், தா.ஏ. சண்முகம், துரை. அரங்கனார், அழ. வள்ளியப்பா, அகிலன், மா.இராசமாணிக்கனார். இலங்கை எழுத்தாளர்களான க.பொ. இரத்தினம், அருள் செல்வநாயகம் போன்ற புகழ் பூத்த எழுத்தாளர்களினதும் சிந்தனைகளை உள்வாங்கி வளம் பெற்றவர் பேராசிரியர் சின்னத்தம்பி.

கல்லூரிக்கு வெளியே, இவர் பயன்படுத்திய நூல் நிலையங்களில் யாழ்ப்பாணத்தில் இருந்த அமெரிக்கன் தகவல் நிலையத்தினைக் (American Information centre) குறிப்பிடுகின்றார். அங்கே இருந்து ஒவ்வொரு வெள்ளியும் ஒவ்வொரு நூலினை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் இந்த நிறுவனத்திற்குத் தமது ஆங்கிலக் கல்வி முன்னேற்றத்தில் முக்கிய பங்குண்டென்றும் அங்கு பணிபுரிந்த தம்பிரட்ணம் என்பவரையும் நன்றியுடன் நினைவு கூருகின்றார். இந்தநிறுவனம் பின்னர் கொழும்பிலிருந்து காலிமுகத்திடலுக்கு அருகில் மாறி இருந்தபோது— தாம் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றகாலத்திலே அதனை நன்கு பயன்படுத்தியிருக்கிறார்.

**இலங்கைப் பல்கலைக்கழகக் கல்வி**

இலங்கைப் பல்கலைக்கழகம் கொழும்பில் மா.சின்னத்தம்பி அவர்கள் முதலாம் வருடத்திலே தமிழ்ப்பாடம் கற்றது முக்கியமானது. அங்கே பேராசிரியர் ஆ.சதாசிவம் (1926—1988), கலாநிதி க. கைலாசபதி (1933—1982), கலாநிதி பொ. பூலோகசிங்கம் (1936—2019) ஆகியோரிடம் தமிழ் படித்ததைப் பெரும் பேறாகக் கருதுகின்றார். பேராசிரியர், பண்டிதர் ஆ.சதாசிவம் இவருக்கு மொழியியலில் (Linguistics) ஒலியியல் (Phonology) படிப்பித்திருக்கிறார். ஒலி,ஒலியன்,உருபன் (Morpheme), சொல், தொடர், வாக்கியம் என்பதுதான் ஒரு மொழியின் படிநிலைஅமைப்பு. (Hierarchy of language ) ஒரு மொழியின் அடிப்படை ஒலியினை ஒலியன் என்கின்றனர். எனவே பிறமொழிகளையும் அதனதன் உச்சரிப்புச் சுத்தத்துடன் பேசுவதற்கும், கற்பதற்கும்

மிக அடிப்படையானது ஒலியியல்பாடம். கலைக்கதிர்—ஏப்ரல்1960, ஜூலை—1961 என்பனவற்றிலே மொழியியலாளரான திரு. முத்துச்சண்முகம் முறையே ஒலியுறுப்புகளும், அவற்றின் தொழிலும், ஒலியனியல் என்ற தலைப்புகளிலே எழுதி வெளிவந்தமையினை சின்னத்தம்பி பார்த்திருக்கிறார். பேராசிரியர் சதாசிவம் படம் வரைந்து விளக்கியபின்னர் சின்னத்தம்பி அவர்கள் விளங்காத சகபாடிகளுக்கு இலகுவாக விளக்கினார் என்றும் அறிந்திருக்கிறேன். இவருடன் ஒன்றாகக் கற்ற திருமதி இரத்தினமலர் கயிலாயநாதன் மொழியியல் பாடத்தைச் சிறப்புப்பாடமாகக் கற்று உயர்ந்தது போல சின்னத்தம்பி அவர்களும் அத்துறைக்குப் போயிருந்தால் நல்ல விளைவைப் பெற்றிருக்கமுடியும் .

கலாநிதி கைலாசபதி, பாரதியாரின் பாஞ்சாலிசபதம் படிப்பித்திருக்கிறார். ஏற்கனவே க.பொ.த. (சாதாரண) தர வகுப்பிலே வித்துவான் ந. சுப்பையபிள்ளையின் உரையுடன் கூடிய, பாரதியார் பாடல்;தொகுப்பினைக் (1961) கற்றிருந்தாலும், க.பொ.த. (உயர்தர) வகுப்பிலே வித்துவான் பண்டிதர் வீ.சி. கந்தையா அவர்களது அரும்பத உரையுடன், ஆராய்ச்சிக் கட்டுரைகளும் கொண்ட பாரதியாரின் பாஞ்சாலிசபதம் (1963) நூலினை சின்னத்தம்பி அவர்கள் கற்றிருந்தாலும் கலாநிதி கைலாசபதி அவர்கள் வரலாற்று ஒளியில் வைத்து விமர்சன ரீதியாகக் கற்பித்தமை, சுத்தானந்தபாரதியாரின் கவிக்குயில் பாரதியார்(1946), ரகுநாதனின் பாரதியும் ஷெல்லியும் (1964), சு.கணபதிப்பிள்ளையின்(சுகணா) ‘கம்பனும் பாரதியும்’ (1961), கைலாசபதியின் பாரதி நூல்களும் பாடபேத ஆராய்ச்சியும், ரவீந்திரநாத்தாகூரும் பாரதியுமாகிய இரு மகாகவிகள் எனும் நூல்களையும், மூதூர் நீ. வஸ்தியான் நீக்கொலாஸ் எழுதிய நான் கண்ட பாரதி (1965), சுகி சுப்பிரமணியன் எழுதிய புதுமைப்புலவன் பாரதி (1965) ஆகிய நூல்களைப் பார்க்க வைத்தன. கைலாசபதியின் விமர்சன வீச்சுக்கருத்துக்களின் செல்வாக்கிற்குட்பட்டு ஜெயகாந்தன்,ஜெயமோகன்,கோ. கேசவன் ஆதியோரின் ஆக்கங்களையும் படித்து தன்னை விமர்சனரீதியாக வளப்படுத்திக்கொண்டார். இவரின் கவனம் திரும்பிய ஜெயகாந்தனின் சிறுகதை இலக்கியத்தொகுப்பிலே, சுயதரிசனம் (1967) குறிப்பிடத்தக்க ஒன்றாகத் தெரிகிறது. இக்கதைத்தொகுப்பில் வருகின்ற கதை ஒன்று அக்கினிப்பிரவேசமென்பது. அக்கதை தொடர்பான விமர்சனங்களுக்கு ஜெயகாந்தன் சமூகப்பொறுப்புடன் தெரிவித்த பின்வரும் கருத்து சின்னத்தம்பி அவர்களைக் கவர்ந்ததென்பது குறிப்பிடத்தக்கது.“பிரச்சினைகளுக்கெல்லாம் மரணம்தான், தற்கொலைதான் அல்லது

**கைலாசபதியின் விமர்சன வீச்சுக்கருத்துக்களின் செல்வாக்கிற்குட்பட்டு ஜெயகாந்தன்,ஜெயமோகன்,கோ.கேசவன் ஆதியோரின் ஆக்கங்களையும் படித்து தன்னை விமர்சனரீதியாக வளப்படுத்திக்கொண்டார். இவரின் கவனம் திரும்பிய ஜெயகாந்தனின் சிறுகதை இலக்கியத்தொகுப்பிலே, சுயதரிசனம் (1967) குறிப்பிடத்தக்க ஒன்றாகத் தெரிகிறது. இக்கதைத்தொகுப்பில் வருகின்ற கதை ஒன்று அக்கினிப்பிரவேசமென்பது. அக்கதை தொடர்பான விமர்சனங்களுக்கு ஜெயகாந்தன் சமூகப்பொறுப்புடன் தெரிவித்த பின்வரும் கருத்து சின்னத்தம்பி அவர்களைக் கவர்ந்ததென்பது குறிப்பிடத்தக்கது.**

கொலைதான் தீர்வு என்றால் பேனாவை, இலக்கியத்தை, அறிவை, மனச்சாட்சியை, சட்டதிட்டங்களை, சமூகநெறிகளை எல்லாம் தூக்கியெறிந்து விட்டு அரிவாளைத் தூக்கிக்கொள்ளலாமே! எனக்கு முன்னே பலர் அப்படிக் கதை எழுதியிருக்கிறார்கள். யார் செய்த தப்புக்கோ இரையாகிப்போனப் பெண்ணிற்கு தற்கொலையையே தங்கள் சிருஷ்களின் மூலம் பல எழுத்தாளர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்கள். அதை மறுத்து ஒரு பெண்ணைப் பெற்றவள் அவளுக்குப் புதியஞானம் தந்து புதிய வலிமையும் தந்து அவளை வாழ வைக்கிறாள் என்பது என்கதை. இதில் மற்றவர்களுக்கு என்ன கடுப்பு? என்ன உறுத்தல்? இதை மறுத்து எழுதியவர்கள் சீர்திருத்தம் பேசிக் கதை எழுதி அந்தக் கட்டுப்பெட்டித் தாய்க்கு இருக்கக்கூடிய விசால இதயம்கூட இல்லாமல் இலக்கியப் பீடத்தில் ஏற்றி வைத்து அவளை எரித்து மகிழ்கிறார்கள்......" . சுயதரிசனம் முன்னுரை:ப.06.

கலாநிதி பொ. பூலோகசிங்கம் இவருக்கு தமிழ் இலக்கிய வரலாறு கற்பித்திருக்கிறார். பேராசிரியர் வி. செல்வநாயகம் (1907—1973) அவர்கள் அவரது தமிழ் இலக்கிய வரலாறு எனும் நூலில் சங்கமருவிய காலப்பகுதியைப் பற்றிக் குறிப்பிடுகையில், "அக்காலப்பகுதி தமிழ்நாட்டின் சரித்திரத்தில் ஓர் இருளடர்ந்த காலப் பகுதி எனக் கருதப்படுகிறது"(1973,ப.91.) என்று குறிப்பிட்டது பூலோகசிங்கம் அவர்களுக்கு பிடிக்கவில்லை என்றும், செல்வநாயகம் இருட்டுக்குள் நின்று அப்படி எழுதியிருக்கின்றார் போலும் என்று கிண்டல் பண்ணியதாகச் சின்னதம்பி அவர்கள் சொல்கின்றார். கலாநிதி பூலோகசிங்கம் அவர்களின் 'தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெரு முயற்சிகள்' (1970) எனும் இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றோடு சம்பந்தப்பட்ட நூலைத் தலைசிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைத்தொகுப்புநூல் என்று சொல்கிறார்.

**நிறைவுரை:**

*"வைப்புழிக் கோட்படா வாய்த்து ஈயிற் கேடில்லை*

*மிக்க சிறப்பின் அரசர் செறின் வவ்வார்*

*எச்சம் என ஒருவன் மக்கட்கு செய்வன*

*விச்சை மற்று அல்ல பிற"*

(நாலடி:134)

என்று நாலடியார் கூறும் கல்வித் தொண்டின் உயர்வுக்கு இலக்கியமாக இருப்பவர் பேராசிரியர் மாரிமுத்து சின்னத்தம்பி. கொடுக்கக் கொடுக்கக் குறையாத செல்வம் (ஈயக் குறைவென்றால்— நாலடி) கல்வி என்பதனை பேராசிரியரிடம்தான் கற்க வேண்டும். "எதிர்பார்த்து வந்ததற்கு மேலாகச் சொல்லித் தந்து விட்டீர்களே! நீங்கள் உங்களுக்கென்று எதை வைத்திருக்கிறீர்கள்?" என்று மருத்துவப்பீடப் பேராசிரியர் எஸ்.கண்ணதாசன் அவர்கள் கேட்டதற்கு, "அடுத்ததற்கிடையில் அடுத்த விடயத்திற்குரியது தானாக வந்து சேர்ந்து விடும்." என்று பதிலளித்தார் என்று அறிகிறேன். பேராசிரியரின் கல்விக்கொடையும், இன்சொல்லும், செருக்கின்மையும், இரக்ககுணமும், தாட்சண்யமும், முனிவின்மையும், ஞானக்கொடையும் அவரது வாழ்க்கைத் துணைவியாரின் விருந்தினரைச் சிறப்பிக்கும் பண்பும், பக்திமேன்மையும் இவை போன்ற பலவும் பலருக்கு முன்மாதிரியானவை . இவை ஆசிரியத்துவமும் குருத்துவமும் கலந்த இவரின் பண்பினை வெளிப்படுத்துவன.


MIS™
Maestro Innovative Solution (Pvt) Ltd.
மேஸ்ட்ரோ இன்னோவேடிவ் சொலுஷன் பிரைவேட் லிமிடெட்.
Your Ideas in Visuals
we're creative
WEB DESIGN COMPANY.
OUR SERVICES
Website Design & Development
Software Development
Graphic Designing
Search Engine Optimization (SEO)
Digital Marketing
உங்கள் வணிகத்திற்குப் பொருத்தமான இணையதளத்தினை கண்கவர் வடிவமைப்புடன் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளுங்கள்.
Maestro Innovative Solution (Pvt) Ltd.
PH: +94 21 221 6592, MOB: +94 766 595 696
E-MAIL: ADMIN@MAESTROIS.COM WEB: WWW.MAESTROIS.COM
MAESTROINNOVATIVESOLUTION
More information call us
+94 766 595 696

# சீதனத்துக்காக



காலமை எழும்பின கையோடை பல்லில கரியப் போட்டுக் கொண்டு வயலுக்கு வெளிக்கிட்டன். இரவிரவாப் பெய்த மழையில மடைமுகத்து வயல் நிரம்பி தண்ணி இழுக்கமாட்டாம வரம்பு தழும்புது. என்னெய்யிற பயிர் பத்துநாளாகேல்ல தலைப்பும் தண்ணிக்கதான் கிடக்கு. இப்ப தண்ணிய குறைக்கப்போனா குருத்து தண்ணியில ஆடி யாடி வெளியில கக்கீடும். ம்... குருத்துக்கக்கினா பயிர் நாசம். சரி அப்பிடியே வரம்பால வழிஞ்சா குருத்தையும் தாக்காது எண்டு நெச்சுக் கொண்டு மற்ற வயலுகளைச் சுத்திப் பாத்துக்கொண்டே வந்து, அலைக்க நிரம்பி நிண்ட தண்ணியில முகத்தை அலம்பினன்.

போனவரியம் பயளை இல்லாததில விளைச்சல் சரியில்ல. இந்த வரியம் பயளை வந்திருக்காம்...கையக்கால அலம்பீட்டு வீட்டுப்படலையத் திறக்க ரஞ்சிதம் இதுக்குத்தான் காத்திருந்தவள் போல ஓடி வாறாள். “மெய்யேப்பா தம்பிராயர் போனெடுத்தவர். மாப்பிளை பகுதியால மறுமொழி வந்திட்டுதாம்.”

அது அவளுக்கு நல்ல செய்தி ஆனா எனக்கு? மாப்பிளை பதில் போட்டபிறகுதான் அவற்ற சொந்தக்காரர் வந்து பொம்பிளை பாக்கிறமெண்டு சொல்லியிருந்தினம்.. அப்ப, எப்ப வருகினமாம்”

“இண்டைக்கு அட்டமி நவமியாம் நாளைக்கு மறுநாள் நச்சத்திரம் நல்லாயிருக்கெண்டு சொல்லி விட்டிருக்கினம்.”

“ஆருங் கேட்டா சிரிக்கப்போகினம். மாப்பிளை ஊரிலயே இல்லை. பொம்பிளையப் பாக்கப் போறது வேற ஆரோ. இதில நாள் நச்சத்திரம் எல்லாம்பாக்கினம்” ஏங்க, நான் ஒரு விசரன் மாதிரி எல்லாத்துக்கும் தலைய ஆட்டுறதை நினைக்கிறன்.

படலைக்க செல்லமணியின்ர பெடியன் வந்து நிக்கிறான். உந்த மாமரம் படர்ந்து வாசலை மறைக்கிது. படலைக்க ஆரும் வந்து நிண்டா பூந்துதான் பாக்கவேணும்.

"மாமியிட்ட முறுக்குரல் கேட்டவாவாம் அம்மா. வாங்கிக் கொண்டரட்டாம்" அந்தப் பெடியனப்பாக்க வாரது சிரிப்பா எரிச்சலா எண்டு தெரியேல்ல. ஸ்கெலட்டன் மொடல்ல நிக்கிறான். எக்ஸ்ரே எடுக்காமலே முழு உடம்பையும் உள்ளுக்க பாக்கலாம்போல. உவள் கீதா சாப்பாடு குடுக்கிறாளோ இல்லையோ. ஊரெல்லாம் இரவல் வாங்கி தொழிலை ஒப்பேத்திறாள்.

"மெய்யேப்பா அவள் யாவாரத்துக்கு பிழியிறவள். ஒண்டை வாங்கி வச்சு பிழிஞ்சா என்னெண்டுறன். வீட்டுப்பாவனைக்கு வாங்கினதை குடுக்கப்போறியே"

"உங்கட குணமிருக்கே ஹ...' மிளகு போற இடந் தெரியாது கடுகு போற இடம் கண்டுபிடிச்சிருவியள்.' அவளென்னப்பா இல்லாமயே கேக்கிறாள் ஆரோ திடீரெண்டு தட்டைவடையும் முறுக்கும் ஓடர் குடுத்தவையாம். தனக்கு தெரிஞ்ச பிள்ளையள் ரெண்டை உதவிக்கு கூப்பிட்டவளாம் அதுதான் இன்னுமொரு உரல் இருந்தா நல்லம் எண்டு கேட்டவள்.

பாவமப்பா வாழ்நாள் முழுக்க போராட்டத்துக்க போயிரும் எண்டு நினைச்சதுகள். இப்ப ஏதோ குடும்பத்தின்ர தேவைக்கு அதையிதைப் பண்ணுதுகள். இந்த முறுக்குரலை இரவல்குடுத்தா உங்கட கொண்ட முதல்ல நட்டமாப் போகுமோ?" ரஞ்சிதம் புறுபுறுத்தவாறே முறுக்குரலை எடுத்து பையனிடம் கொடுத்தாள் அதை வாங்கியவன் தனது கற்பனை மோட்டார்சைக்கிளை றீங்க்.... கிறீங்.... டூர்ர்ர்.... டூர்ர்ர்ர்ரென்று வாயால் இயக்கியவாறே முறுக்குரலை கான்டிலாகப் பாவித்து ஓடிப்போனான்.

இதில நாங்கள் கீதாவைப்பற்றிச் சொல்லியே ஆகவேண்டும். ஒரு பகுதியின் நிதித்துறையில வேலை பார்த்தவள். அப்பவே தன்னோடொத்த போராளியை திருமணம் செய்து கொண்டு வாழ்ந்தவள். யுத்தம் முடிந்து நிறைமாதக் கர்ப்பிணியாகப் புனர்வாழ்வு முகாமில் சிறை வைக்கப்பட்டு அங்கேயே குழந்தையைப் பெற்றவள். அவளுடைய கணவனும் அவளும் விடுதலை பெற்று வந்தபின் அவர்களுக்கு வேலை கிடைப்பதே பெரும்பாடாக இருந்தது.

**தமிழ்க்கவி**



என்றாலும் அவளது விடா முயற்சியால் கிடைத்த வேலைகளையெல்லாம் செய்தாள். சமையல்காரியாக சிலநாள் காவல்காரியாக சிலநாள். ஓடருக்கு சமைத்துக் கொடுப்பதையும் ஊடே செய்தாள். இப்போதுதான் யாரோ வெளிநாடொன்றிற்கு ஏற்றுமதி செய்ய இந்த முறுக்கு, தட்டைவடை, மரவள்ளிக்கிழங்கு பொரியல் என செய்து பைகளில் அடைத்து ஏற்றுமதி செய்வதற்கான வேலையை அவளிடம் கொடுத்திருந்தனர்.

அதுமட்டுமல்ல எங்கே திருமணம், எங்கே சடங்கு எங்கே பிறந்தநாள் என்று அந்த வட்டாரம் முழுவதுமாக செய்திகளை சேகரித்து அங்கே சென்று தன்மையாக பேசி அந்த வீட்டின் மொத்த சமையலையும் பொறுப்பெடுத்து நேர்த்தியாக செய்து பெயரெடுத்தாள். ஊரே வியக்க கீதா உயர்ந்தாள். ஆனால் பிள்ளைகள் படிப்பில் முன்னேறவில்லை அது அவளுக்கு கவலையை தருமா?

அந்தக்கவலையை எனக்கென்னத்துக்கு. கிணத்தடியில பிள்ளை ரோசா குளிக்கிறாள் போல. அவளும் உந்த மழையில குளிக்கிற மாதிரி பைப்பு செய்து தாங்கோ அப்பா எண்டு நெடுக கேட்டபடி. எங்க



எனக்குத்தான் பத்தாயிரம் வரவெண்டா பதினையாயிரம் செலவாக்கிடக்கே... பட்டிக்கால இன்னும் மாடுகள் அவுட்டு விடேல்ல வெள்ளாமை விதைச்சிட்டதால மாட்டுச்சட்டம் போட்டிட்டாங்கள். மாடுகளைக் கட்டித்தான் மேய்க்கவேணும். அல்லது மேச்சல்தரவைக்க கொண்டே மேய்க்கோணும் 'ப்றீச்'செண்டு சிரிப்புத்தான் வருது.

பின்ன மேச்சல்தரவை எங்க கிடக்கிது. பாழ்பட்ட சனம் எல்லா இடத்தையுந்தான் ஆக்கிரமிச்சு வீடுகளைக் கட்டிற்றுதுகளே. ஐயோ எங்கட குளங்களத்தன்னும் விட்டு வைச்சிருக்குதுகளே. நீங்க சொல்லுறியள் சனம் சுடலையளக்கூட நாலாபக்கத்தாலயும் அரிச்சுக்கொண்டு வந்திட்டுதுகள். பங்க நம்மட சுடலை அஞ்சேக்கர் எண்டு பதிவில் கிடக்கு இப்ப ஒரு ஒண்டரை ஏக்கர்தான கிடக்கு. பிறகு சொல்லுறியள். 'ந...அழுவாரும் அழுவாருந் தன் கரைச்சல் திருவன் பெண்டிலுக்கு கட்டியழ ஆளில்லயாம்.' ரஞ்சிதம்தான் பிலாக்கணம் வைக்கிறாள்.

என்னப்பா மசமசண்டு நிக்கிறியள் உந்த ஹோலுக்க கண்டதையும் போடாதையுங்கோ எண்டா கேக்கிறியளே உந்த வயல் சாமானுகளையெல்லாம் கொண்டே பங்க ஒத்தாப்புக்கை போடுங்கோ. எப்பன் கழுவித்துடைச்சு வைக்க, நாலு சனம் வந்து போக சங்கையா இருக்க வேண்டாமே."

நானும் உந்தக் கதை கந்தாயமெண்டு ஒண்டிலுங் கவனமில்லாம என்ர மனமெல்லாங்காத்தால பாத்த வெள்ளாமை வயலுக்கதான் கிடந்துலையுது.

இத்தறிதிக்கு தண்ணி வடிஞ்சிருக்கும். ஒட்ட வடிஞ்சிராம போய் மடையளக் கட்ட வேணும். 'எப்பன் வயலுக்குப் போட்டு வரவேணும். என்னப்பா சாப்பாடு'

ரஞ்சிதம் கோப்பையில போட்ட புட்டையும் பழுத்து குலையால உதிர்ந்த கப்பல் வாழைப்பழத்தையுங் கொண்டுவந்து வச்சாள். ஆவறிபோவறியா அள்ளி வாயில போட்டிட்டு வயலுக்கு வெளிக்கிட்டன். ரோசி பிறகாலை கூப்பிடுறாள். "அப்பா, நானொருக்கா பார்லருக்குப்போகட்டே" துலைஞ்ச குடி நாசம். உந்த அழகுபடுத்துற கடையள சந்து பொந்தெல்லாந் திறந்து வைச்சிட்டு மனிசரக் கொல்லுதுகள்.

ரோசி ஏற்கனவே நல்ல சிவப்பி, தாயைப்போல. பிறகும் அவனாரோ சொன்னமாரி வெயிலுக்கு காட்டாமத்தான் வளக்கிறம் பிறகேன்தான் உந்த பார்லருகளுக்கயும் கொண்டே கொட்டுறாள் எனக்கு விளங்கேல்ல. "ஏனம்மா அப்பா ராணி சந்தன சோப்புத்தானே வாங்கித்

தந்தனானான் பத்தாததுக்கு பேரன்லவுளியும் கிடக்கே பிறகேன்…”

“போங்கப்பா புருவம் சரிப்பண்ண வேணும், பேசியலும் செய்தா நல்லந்தானே” இந்த இடத்தில ரஞ்சிதம், கூப்பிடாமலே ஆஜராகி, “அவருக்கு உதுகள் எங்க விளங்கப்போகுதெண்டு கதைக்கிறாய். நீ கெதியாப் போட்டு வா நாளண்டைக்கு மாப்பிளை பகுதி வருகினமாம். என்றவள் என் பக்கமாகத் திரும்பி, என்னப்பா நீங்கள்? பெம்பிளைப்பிள்ளை நாளைக்கு ஒருத்தருக்கு விக்கிற சரக்கு. கொஞ்சம் பூசி மெழுகி வைச்சாத்தானே” என்றாள். எனக்கு பக்கெண்டிருந்துது.

இருந்த ஒரே பெடியனையும் இப்பிடித்தான் உன்னை நம்பித்தான்ரா தங்கச்சிய வச்சிருக்கிறம். நீ படிச்சு ஒரு வேலைக்குப் போனாத்தானே அவளைக்கரை சேர்க்கவெண்டு அவன்ர சொந்த விருப்பு வெறுப்புகளை யெல்லாம் அடக்கி மடக்கி படி படி யெண்டு படிக்கவிட்டா. அவனெங்க ஓயல்லுக்கு மேல ஒரடி வைக்க மாட்டனெண்டிட்டான். சரி விட்டாளே அங்க சுத்தி, இஞ்ச சுத்தி ஆராற்றயோ காலக்கையப்பிடிச்சு நல்லா விளைஞ்சு கொண்டிருந்த காணித்துண்டை அறாவிலைக்கு விக்கப்பண்ணி வெளிநாட்டுக்கு அனுப்பி விட்டாள்.

ஒரு நல்லநாள், பெரிய நாளெண்டும் அவன்ர முகத்தை கண்ணாடியில பாத்தமாதிரி போனில பாத்து கதைக்கிறதோட சரி. இப்ப மோளுக்கும் வெளிநாட்டு மாப்பிளைதான் வேணுமெண்டு ஒத்தைக்கால்ல நிக்கிறாள். என்ன அந்த வயல்ல ஒரு போகம் விளையிற காசு வெளியிலயிருந்து வருதே… சும்மா போங்கோ.

“மெய்யேப்பா பொங்கலுக்கு தேங்காய் இருக்கிறது காணுமோ இல்ல உரிக்க வேணுமோ” எங்கயப்பா கிடக்கு தேங்காய். நடராசனை வரக்காட்டி விடுங்கோ கோழிக்கூட்டடியில கிடக்கிற மரத்தில ரண்டு குலை கிடக்கு. கூரையில விழுந்தா சீற்ற உடைச்சுப்போடும.; ஆய்விச்சா நல்லம் பொங்கலுக்கும் ஆகும்.”

“ஏனடியாத்தை போனகிழமைதானே ஆறேழு மரம் ஆய்ஞ்சது?”

“கொழும்புக்கு தேங்காய் ஏத்திறவங்கள் வந்தாங்கள். குடுத்திட்டன் உரிக்காம அம்பது ரூவாப்படி குடுத்தனான்”

. அப்ப தேங்கா நாப்பத்தியேழு ரூவா”

. என்னப்பா அம்பதெண்ணுறன்.”

“எடி தேங்காயச் சுத்தி இருக்கிற மட்டை நாலு ரூவா மறந்திட்டியே. பையப்பைய நான் உரிச்சிருப்பன்.” “ஆஹாஹஹ….பெரிய கணக்கு மூக்குமயிர் பிடுங்கித் தும்மினா ஆள்பாரம் குறைஞ்சு போமே சும்மா விடுங்கோ”

மாப்பிளை வீட்டுக்காரர் வர இன்னும் கொஞ்ச நேரந்தான் இருக்கு இன்னும் வெளியில போன ரோசியக்காணேல்ல. எனக்கு பக்குப்பக்கெண்டு இருக்கு. போய் பாத்துக் கொண்டு வரட்டே எண்டு கேட்டா ரஞ்சிதம் விடமாட்டாளாம். ‘போனவளுக்கு வரத் தெரியாதே’படலைக்க கயஸ் ஒண்டு வந்து நிக்குது மாப்பிளை பகுதிதான் நாங்கள் போய்வாசலுக்க நிண்டம். ரஞ்சிதம்தான் வாயெல்லாம் பல்லாக வாங்கோ வாங்கோ எண்டு வரவேற்றாள் எனக்கெண்டா பிள்ளையின்ர…. அப்பாடி அவளும் வந்திட்டாள்..

இப்பன்ன இருவத்திரெண்டு வயதுதான். ஆள் வளந்திட்டாள் எண்டு ரஞ்சிதம் சொல்ல நானும் பிள்ளையப்பாக்கிறன். என்ன இது என்ர பிள்ளையா இது? ஐயோ இதென்ன முகமெல்லாம் பெயிண்ட் அடிச்சு பொம்மைக்கட்டை மாதிரி.

ஓ…ஏற்றுமதிக்காக…

# சீசன் பறவைகள்



க.ஷியா

எல்லாக் காலமும் நீ
மட்டும் தான் மெய்க்கிறாய்
எல்லாக் காலமும் நீ
மட்டும் தான் தனிக்கிறாய்

அழகாய், அழகிழந்து
தாழ்வாய், ஆழமாய் என
எல்லாக் காலமும் நீ மட்டும் தான்
மெய்க்கிறாய்...

சிலருக்குள் கல்லாகிக் கனக்க
சிலர் உன்னில் தான்
மலம் கழிப்பர்

வேடந்தாங்கல் கால காதலை
நீ புசித்துப் புசித்துப் பசித்துப்
போகிறாய்....

உண்டி
பெருத்தவர்களின்
காட்சிக்கூடம் நீ
உன்னில் தான் மாயைக் கூடு
கட்டி மணலிலிட்ட கோலம் போல்
காயம் செய்வர் வலிக்காமல்
வளருமது!

எப்போதும் ஒரு
மூக்கணாங்கயிறு
விம்பங்களிழந்து
மெல்லச் சுண்டும்!
புதர்களும், போர் பொந்துகளும்
உனக்கு வசந்த மேடைகளென
அலங்கரிக்கப்படும்
அவைகள் கங்கணத்தை
தலை தடவி மெல்லத் திணிக்கும்

ஒன்றிரண்டு நிஜமாகலாம்
உன் நேரமோ அவைகளுக்கான
நேரமோ நிலைக்காமல் போகலாம்
நினைவுகள் கரையாக் கட்டியாகி
மனம் வருடும்!

இந்த சீசன் பறவைகளின்
நினைவுப் பெட்டகமாய்
எப்போதும் நீ மட்டும்
தனிமையில்...

போகட்டும் நிலைத்துப்
போ!





## OFFICE FEATURES

- Broadband
- Contemporary design
- Furnished
- Network
- Reception
- Meeting Rooms
- Virtual Offices
- Tea and coffee making facilities

Call Satkin on: 07766562557
now for booking or viewing

SATKIN'S
THE BUSINESS HUB



# ஈழத்தில் சிற்றிதழ்கள் வளர்ச்சியும் உள்ளம் சஞ்சிகையின் உதயமும்



ஈழத்தில் சிற்றிதழ்கள் காலக் கண்ணாடியாகத் திகழ்பவை என்றே கருதலாம். நீண்ட கால வரலாற்றைக்கொண்ட ஈழத்து சிற்றிதழ்கள் காலத்திற்குக் காலம் பல்வேறு பரிணாம வளர்ச்சியுடன் வெளிவந்துள்ளன. இதுவரை காலத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட சிற்றிதழ்கள் தோன்றி வெளிவந்துள்ளன.

**மறுமலர்ச்சிக் கால சிற்றிதழ்கள்**

ஆரம்ப கால ஈழத்து சிற்றிதழ்களில் பாரதி, மறுமலர்ச்சி, கலைச்செல்வி, மல்லிகை, குமரன், இளம்பிறை, சிரித்திரன், விவேகி ஆகிய சஞ்சிகைகள் வரலாற்றில் முத்திரை பதித்துள்ளன.

இத்தகைய பார்வையிலேயே உள்ளம் சஞ்சிகையையும் நாம் உற்றுப் பார்க்க வேண்டும். உள்ளம் இதழானது யாழ்ப்பாணம், கொக்குவிலைக் களமாகக்கொண்டு 1976 ஆம் ஆண்டு முதலாவது இதழானது கையெழுத்துப் பிரதியாக வெளிவந்தது.

'உள்ளம்' சஞ்சிகையின் உதயம் இதுவொரு கலை, இலக்கிய, சமூக மாத இதழாக 1989 ஆம் ஆண்டு மாசி மாதம் கையெழுத்து பிரதியாக மீண்டும் ஒருமுறை வெளிவந்தது.

அக்கால கட்டத்தில் கலை இலக்கியத்துறையில் நன்கு வளர்ந்த, வளர்ந்து வருகின்ற படைப்பாளிகளின் ஆக்கங்களை, தரமான படைப்புக்களை வாசகர்கள் நுகரக்கூடிய வகையில் இது வெளியீடு செய்யப்பட்டது.

உள்ளடக்கத்தில் கலை இலக்கியக் கட்டுரைகள், கவிதைகள், அறிவியல் துணுக்குகள் என்பனவற்றை தாங்கி வெளிவந்தது. அவ்வகையில் 'உள்ளம்' இரண்டாவது இதழ் 1989 மார்ச் இல் அச்சில் வெளிவந்தது. இவ்விதழில்

ஐங்கரன் விக்கினேஸ்வரா



ஏ.ரி.பொன்னுத்துரை எழுதிய 'கண்பார்வை இழந்த பின்பும் கலைத்தொண்டு', செ.ஜோ. புவிநாயகம் எழுதிய 'சூழல் பாதுகாப்பு' ஆக்கமும் பிரசுரமாகின.

கே.எஸ்.சுதாகர் எழுதிய 'ஆசை கொண்ட நெஞ்சங்களிரண்டு' எனும் சிறுகதை இந்த இதழில் வெளியாகியுள்ளதைக் காணலாம்.

அத்துடன் கொக்கூர்கிளான் ஆக்கமான 'நாகரீகமும் பண்பாடும்', குறும்பனை நாடனின் 'வாழ்வு எமக்கு விடியுமோ?', மா.சின்னத்தம்பியின் 'திரைப்படமும் தேசிய அபிவிருத்தியும்', கோகிலா மகேந்திரன் எழுதிய 'மற்றவருடைய கோணத்திலிருந்து பார்த்தல்' ஆகிய ஆக்கங்கள் இந்த உள்ளம் இதழில் பிரசுரமாகியுள்ளன.

உள்ளம் சிற்றிதழின் முதன்மை நோக்கம் கருத்துப் பகிர்வே என்றே கணிப்பிடலாம். ஏனெனில் இந்திய சஞ்சிகைகள் போல வியாபார நோக்கில் இலாபமீட்டுவதை முதன்மை நோக்கமாக உள்ளம் சஞ்சிகை கொண்டிருக்கவில்லை. அத்துடன் 1989இல் வெளியான ஒன்பது இதழ்களில் ஈழத்து இலக்கியப் பாரம்பரியங்கள், இலக்கிய உலகில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் வளர்ச்சிப்போக்குகள் பற்றிய கருத்தோட்டங்களைக் காணக்கூடியதாக உள்ளது.

### போராட்ட கால சிற்றிதழ்கள்

1980களின் ஆரம்ப காலப்பகுதி ஈழத்து வரலாற்றில் போராட்ட காலமாகத் திகழ்ந்தது. சிங்களப் பேரினவாதச் செயற்பாடுகள் முனைப்புற்று அதன் உச்சக்கட்டமாக 1983இல் இனக்கலவரம் ஏற்பட்டு அதன் பாரதூரமான விளைவுகளை தமிழர் தாயகம் முழுவதுமே எதிர்கொண்ட காலமாகும்.

இன்னலுற்ற தமிழ் மக்கள் மத்தியிலும் ஏற்கனவே உருவாகியிருந்த அரசியல், சமூக விழிப்புணர்ச்சி அதிகரித்தது. இதன் விளைவே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கை, குறிப்பாக 1980களில் போர்க்கால வாழ்க்கையாக மாற்றம் பெற்றது.


போரின் விளைவால் ஏற்பட்ட உள்நாட்டு இடப்பெயர்வுகள், அகதி முகாம் வாழ்க்கை நிலை, இராணுவக் கட்டுப்பாடுள்ள, கட்டுப்பாடில்லாத பிரதேச நிர்வாக முறைமை முதலிய மாற்றங்கள் ஏற்பட்டன. இப்போர்க்கால சூழ்நிலையிலும் சிறப்பு நோக்குடைய சஞ்சிகைகளும் வெளிவந்தன. அந்தவகையில் கவிதை, நாடகம், சினிமா, சோதிடம், மருத்துவம், அறிவியல், கல்வி, தொழில் தொடர்பான சஞ்சிகைகள் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

### உள்ளத்தின் உட்கிடக்கை

இதற்கொப்பாக வளர்மதி முன்னேற்றக்கழகம் முதலில் கையெழுத்துப் பத்திரிகையாக வெளியிட்ட 'உள்ளம்' சஞ்சிகை பெரியோர்கள், வாசகர்கள் அளித்த ஊக்கத்தால் இரண்டாவது இதழிலிருந்து அச்சில் வெளிவந்தது.

அச்சு இதழாகப் பரிணமித்திருப்பது உற்சாகமும் ஊக்கமும் பலருக்கும் அளித்தது. கலை, இலக்கியத்துறையில் நன்கு வளர்ந்த மற்றும் வளர்ந்து வரும் படைப்பாளிகளின் படைப்புக்களை, அவர்களின் படைப்புகளை நுகரும் வாசகர்களிடம் கொண்டு சேர்ப்பதே உள்ளம் இதழின் நோக்கமாக அமைந்ததை உள்ளக்கிடக்கையில் காணலாம்.

அச்சு இதழாக வெளிவந்த உள்ளம் இதழின் ஆசிரியர் உள்ளத்தில் "மகத்தான




சமூகப் பணி செய்ய வேண்டும் என்ற ஆசையில் தொடங்கியுள்ள இந்தப் பணி மிகவும் கடினமானது என்பது அனைவரும் அறிந்ததே. வாசகர்களாகிய உங்களது ஆதரவும் ஊக்கமும், ஏற்படக்கூடிய தடைகளைத் தகர்த்து ஆன்மாவின் உயர்ந்த நிலைக்கு உழைக்க உதவும் என்பது எங்கள் நம்பிக்கை.

உள்ளத்தின் எழுச்சிக்கு உறுதியான அடித்தளம் அமைக்கும் எங்களின் சிறு முயற்சிக்கு படைப்பாற்றலையும் ஊக்கத்தையும் தந்து 'உள்ளம்' விமர்சனங்களை முன் வைத்து நெறிப்படுத்துவது வாசகர்களாகிய உங்கள் கடமை. எனவே, ஈழத்து கலை இலக்கிய உலகில் ஏற்கனவே சத்தமில்லாமல் விளையாடிக்கொண்டிருக்கும் மூத்த இதழ்களுடன் இணைந்து இந்தச் சிறு பிள்ளையின் புரட்சிகரப் பணியை வாசகர்களே புரிந்துகொள்ளுங்கள், வந்து கை கொடுங்கள்" என உள்ளம் ஆசிரியர் குழு வேண்டியிருந்தது.

### புலம்பெயர் இலக்கியம்

கொடூரமான போர்ச் சூழலில் தமிழ் மக்கள் வாழ்வில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அந்தவகையில் 1983இல் இடம்பெற்ற இனக்கலவர விளைவுகளிலே ஈழத்தமிழர் தாயகத்திலிருந்து ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா முதலான நாடுகளுக்கு புலம்பெயரத் தொடங்கினார்கள்.

போருக்குப் பின்னரும் முன்னருமாக வெளிவந்த சிற்றிதழ்களில் மொழி, இனம், நாடு தொடர்பான வரலாற்றுக் கருத்துக்களையும் நடப்பியல் நிகழ்வுகளையும் நுட்பமாகப் பதிவு செய்கின்ற அச்சு வடிவில் வந்த இதழ்களில் சுவடுகள், விடிவெள்ளிகள், பூபாளம், பொன்மடல், முனைப்பு, பெருவெளி, தாகம், விளக்கு, வெளிச்சம், சுதந்திரப்பறவைகள், வியூகம், மூன்றாவது மனிதன், முனைப்பு, பூவிழி, ஆகவே, யாத்திரா, இருப்பு, மறுகா, மறுபாதி, எதுவரை, செங்கதிர், நீங்களும் எழுதலாம் போன்றன முக்கியத்துவம் பெற்றவையாகும்.

### கவிதைக்கு களமமைத்த இதழ்கள்

ஈழத்தில் பல சிற்றிதழ்கள் தோன்றி மறைந்திருக்கின்றன. ஆயினும் பல இதழ்கள் இன்னமும் கனதியான இலக்கிய வகிபாகத்தை வரலாற்றில் தடம் பதித்துள்ளன எனலாம். குறிப்பாக, கவிதைகளுக்கு மாத்திரம் களமமைத்துக் கொடுத்த சஞ்சிகைகளுள் 'தேன்மொழி', கவிஞன், 'நோக்கு', 'கவிதை', 'பூபாளம்', 'யாத்ரா', 'நீங்களும் எழுதலாம்'என்னும் சஞ்சிகைகள் முக்கியமான கவனத்தைப் பெறுகின்றன.

இதனைப் போலவே மரகதம், தேனருவி, மலர், மாலை முரசு, நதி, அலை, தீர்த்தக்கரை, அஞ்சலி, கொழுந்து, நந்தலாலா, பூரணி, சுடர், புதுசு, தோழி, நிவேதினி, பெண், புதுமை இலக்கியம், வசந்தம், அஞ்சலி, நதி, களனி, அக்னி, நோக்கு, வாகை போன்ற சஞ்சிகைகளின் இலக்கியப் பங்கு கனதியானது.

உள்ளம் இதழின் 1990ஆம் ஆண்டின் முதல் இதழை சோவியத் சிறுகதையான 'குதிரைக் குட்டி', மிகயீல் ஷோலகவின் ஆக்கமும், டி.எல்.ஜவ்பர்கானின் ஹைக்கூ கவிதைகளும் அழகுபடுத்தின. அத்துடன் அல் அஸூமத் எழுதிய சிறுகதை 'ஊராவது வீடாவது' மற்றும் அஸ்தமனத்தின் உதயம் எனும் கொ.றொ.கொன்ஸ்றன்ரைனின் ஆக்கமும் பிரசுரமாகியுள்ளதைக் காணலாம். வாகுலேயன் எழுதிய ஒரு படைப்பாளியின் பார்வைப் பதிவுகள், அக்கினி முள் கவிதையை எஸ். கருணாகரன் படைத்துள்ளார். இலக்கிய உருவாக்கலின் இயலாத்தன்மை பற்றி கலாநிதி சபா.ஜெயராசாவின் ஆய்வும் இந்த இதழை அலங்கரித்துள்ளன.

1989இல் உதித்த 'உள்ளம்' 1990 மே வரை பல இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்து அவர்களின் படைப்புகளை வெளியிட்டது. 1989, 90 களில் வெளிவந்த போது ஈழத்து இலக்கியப் பரப்பிலே அதிர்வலைகளை ஏற்படுத்தியது 'உள்ளம்' சஞ்சிகை. அன்று உள்ளத்தில் தமது எழுத்துப்பணியை ஆரம்பித்து இன்று முன்னணி எழுத்தாளர்களாக பலர் வளர்ந்துள்ளனர் என்பதும் உண்மையே.

**உள்ளத்தின் மீள் வருகை**

தமிழ் மக்களிடையே வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டும் விதத்திலான ஆக்கங்கள், வடிவமைப்புக்களுடன் மீண்டும் 2021 டிசம்பரில் மீள வெளிவருகிறது 'உள்ளம்'. தற்போது 100 க்கு மேற்பட்ட அழகிய பக்கங்களுடன் பல்வேறு படைப்புக்களைத் தாங்கி மீண்டும் வெளி வருகிறது 'உள்ளம்' கலை, இலக்கிய, சமூக காலாண்டிதழ். தாயக, புலம்பெயர் எழுத்தாளர்கள் மட்டுமின்றி இலைமறை காயாக மறைந்திருக்கும் எழுத்தாளர்களின் சங்கமமாக, இணைப்புப் பாலமாக தற்போது உலகெங்கும் 'உள்ளம்' பரவ ஆரம்பித்துள்ளது.

உள்ளம் சஞ்சிகை போன்றே மாருதம், கீற்று, மாற்று, ஊற்று, பாடும்மீன், ரோஜாப்பூ, கதம்பம், பூமாலை, தமிழமுதம், தமிழின்பம், மாணிக்கம், குன்றின்குரல், தாரகை, பொதுமக்கள் பூமி, சுவர், சமர், களம், சுவைத்திரள், கலகலப்பு, அக்கினிக்குஞ்சு, தாயகம், வசந்தம், எழில், நாவேந்தன், குங்குமம், கற்பகம், சிலம்பொலி, தமிழமுது, வைகறை, பொய்கை, காவலன், களனி, கலை, பொன்மடல், களன், விருத்தம், கிருதாயுகம், தேன்மொழி, கவிஞன், கவிதை, பொறிகள் ஆகிய சிற்றிதழ்கள் தடைப்பட்டு மீள சிறு காலம் வெளிவந்தன.


காலங்கடந்தாயினும் உள்ளத்தின் மீள் வருகை ஈழத்து சிற்றிதழ் வளர்ச்சிக்கு மேலும் வலுவூட்டுவதாகவே கருதலாம்.












திசைகள்
தன் கால்களையும் கைகளையும்
அகல விரித்து தெருவெல்லாம் கிடக்கிறது

திசைகளைப் பாதங்களில் அணிகிறேன்
அது பராக்குக் காட்டி என்னைக் கூட்டிச்
செல்கின்றன

போகும் வழியில்
பள்ளிக்கால நண்பனைக் கண்டு
அவனோடு பேசிக்கொண்டிருக்கிறேன்
விடைபெறும் நேரத்தில்
அவனிடமும் ஒரு திசையை
வாங்கிக்கொண்டேன்
அது வைத்திய சாலைக்குப் போகும் வழி

என் எதிரில் ஒரு திசை
மண்ணில் உருண்டு புரண்டு
என் முகத்தை ஆவலாகப் பார்க்கிறது
அது என் காதலியின் வீட்டுக்குப் போகும் திசை
அது என் கழுத்தைப் பிடித்து இறுக்கிக் கைது
செய்கிறது

இப்போது நான்
திசைகளைக் கடலில் கொண்டுபோய்க்
கரைக்கிறேன்
கடலுக்குள் இறங்கிய ஒரு திசை
முதலாம் கடலை முதுகில் ஏற்றிக்கொண்டு
சீனா செல்கிறது
அங்கேயும் ஒருவன்
கடல் நீரில் திசைகளைக் கரைத்துவிட்டு
வெளிறிய கால்களுடன் திரும்பிச் செல்கிறான்

புதிய திசைகள்
அவனது கால்களில் ஒட்டிக்கொள்கின்றன.






மின் விசிறி
காற்றை அலங்கோலப்படுத்துகின்றது
என் ஈரமான தலை முடிக்குள்
வந்து ஒழிந்துகொண்ட காற்று
காதுக்குள் இரகசியங்கள் சொன்னது
நான் மின் விசிறிக்கு அருகாமையில்
இன்னும் அமர்ந்திருக்கிறேன்
காற்றின் இரகசியங்களில் இலயித்து

தண்ணீரின் வீட்டில் இருக்கிற காலமெல்லாம்
நடுங்கி நடுங்கி
உன் கூந்தலில் அமர்ந்துகொண்டு
குளிரின் கவிதைகளை எழுதுவேன்
நீ சூரியனின் குகைக்குள் நுழைகின்றபோது
உன்னைத் திட்டிப் பறந்திடுவேன்

கண்ணாடிக் கதவுக்குள்
நீ மூக்கை நுழைப்பாய்
அந்த நேரத்தில் கூட
உன் மீது இருக்கிற காதலை
சொல்ல முடியாமல் பயந்து, நாணி, உருகி
கண்ணாடியில் எழுதிக் காட்டுவேன்

கண்ணாடிக்கு
வியர்த்து விட்டதாகச் சொல்லி
நீ விலகி விடுவாய்
கதவைத் திறக்கும் இன்னுமொருவன்
கண்ணாடியின் கண்ணீர் என்பான் என்
காதலை.

ரகுராஜ்
நிதித்துறை நிபுணர்



# காசு... பணம்... துட்டு...

## Money... Matters...



### அறிமுகம்

உலகின் மிகப்பெரிய நிறுவனம் எதுவென எவரைக்கேட்டாலும், அதற்குப் பதிலாக அவர்கள் சொல்லும் நிறுவனம் அப்பிள். Apple) அல்லது மைக்ரோசொப்ற் (Mi—crosoft)ஆகத்தான் இருக்கும். சந்தையின் மொத்த மூலதனம் (marketing capitalization) என்ற அடிப்படையில் இது சரியான விடயம் தான். ஆனால் ஒரு நிறுவனம் பெரிதாக மட்டுமில்லாமல் பாதுகாப்பனதாகவும் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில், நான் அப்பிள் அல்லது மைக்ரோசொப்ற் என்ற இரு நிறுவனங்களை விடவும் இன்னொரு நிறுவனத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

### எவ்வாறு கணிப்பது?

ஒருநிறுவனம் மிகப்பெரியது மட்டுமன்றி பாதுகாப்பானது என்பதனைச் சந்தை மூலதனம்(marketing capitalization),நிகரச் சொத்துக்கள் (Net assets),வருவாய்கள் (Earnings ),என்ற முக்கிய அடிப்படைகளில் நாம் அறிந்து கொள்ள முடியும். கீழே தரப்பட்டிருக்கும் தரவுகளை அவதானிப்பதன் மூலம் இதனை நாம் மேலும் விபரமாக ஆராய்ந்து பார்க்க முடியும்.

### முக்கியமான தரவுகள்

உலகத்தில் இருக்கும் 100முன்னணி நிறுவனங்களில் 19சதவீதமானவை தொழில்நுட்ப (technology)நிறுவனங்களாகும். அடுத்தபடியாக 17சதவீதமானவை நிதிச் சேவைகள் சம்பந்தப்பட்ட (Financial services. நிறுவனங்களாகவும் 16சதவீதமானவை சுகாதாரப் பாதுகாப்பு (Health Care) நிறுவனங்களாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. உலகத்தில் உள்ள 100பெரிய நிறுவனங்களில் 58சதவீதமானவை அமெரிக்காவில் நிறுவப்பட்ட நிறுவனங்கள் மற்றும் 2ஆவது இடமாக 11சதவீதமானவை சீன நாட்டு நிறுவனங்கள் என்ற தரவுகள் இங்கு கவனிக்கப்பட வேண்டியவையாகும்.

| | | | |
|---|---|---|---|
| | **Market capitalisation** | | |
| 1 | Apple | $ 2,649 T | USA |
| 2 | Microsoft | $ 2,279 T | USA |
| 3 | Saudi Aramco | $ 2,071 T | Saudi Arabia |
| 4 | Alphabet (Google) | $ 1,339 T | USA |
| 5 | Amazon | $ 1,067 T | USA |
| 6 | Berkshire Hathaway | $ 708 T | USA |
| 7 | NVIDIA | $ 693 T | USA |
| 8 | Meta platform | $ 613 T | USA |
| 9 | Tesla | $ 511 T | USA |
| 10 | Visa | $ 471 T | USA |

| | | | |
|---|---|---|---|
| | **Net Assets** | | |
| 1 | Nornickel | $ 602 B | Russia |
| 2 | ICBC | $ 510 B | China |
| 3 | Berkshire Hathaway | $ 480 B | USA |
| 4 | Saudi Aramco | $ 443 B | Saudi Arabia |
| 5 | China Const Bank | $ 417 B | China |
| 6 | Agricultural Bank of China | $ 387 B | China |
| 7 | Bank of China | $ 372 B | China |
| 8 | JP Morgan Chase | $ 303 B | USA |
| 9 | Samsung | $ 281 B | South Korea |
| 10 | Bank of America | $ 280 B | USA |

| | | | |
|---|---|---|---|
| | **Earnings** | | |
| 1 | Saudi Aramco | $ 307 B | Saudi Arabia |
| 2 | Apple | $ 112 B | USA |
| 3 | Exxon Mob | $ 86 B | USA |
| 4 | Microsoft | $ 85 B | USA |
| 5 | Equinor | $ 78 B | Norway |
| 6 | Alphabet (Google) | $ 72 B | USA |
| 7 | Shell | $ 64 B | UK |
| 8 | ICBC | $ 61 B | China |

சந்தை மூலதனம் என்ற அடிப்படையில் மேலே உள்ள தரவுகளின்படி, முதல் பத்து பெரிய நிறுவனங்களில் 90 வீதமானவை. அமெரிக்கா சார்ந்த நிறுவனங்களாகவும் நிகர சொத்துக்கள் என்ற அடிப்படையில் உலகின் முதல் 10 நிறுவனங்களில் 40 வீதமானவை சீனாவைச் சேர்ந்த நிறுவனங்களாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## முடிவுரை

அப்பிள் அல்லது மைக்ரோசொப்ற் போன்ற நிறுவனங்கள் சந்தை மூலதனம், வருவாய்கள், என்ற அடிப்படையில் முதல் நான்கு இடங்களைப் பிடித்திருந்தாலும், நிகர சொத்துக்கள் என்ற அடிப்படையில் முதல் பத்து இடங்களை வகிக்கத் தவறிவிட்டன. ஒருநிறுவனத்திற்கு அதிகளவு சொத்துக்கள் அதனுடைய இருப்பு நிலையில்(Balance Sheet) இருப்பது அந்த நிறுவனத்திற்கு வலிமையானதாகும். ஆபத்துக் காலங்களில் எந்த நிறுவனங்களையும் காப்பாற்றப்போவது அதனுடைய நிகரச் சொத்துக்களே. தற்போது இருக்கும் அதிகூடிய வட்டிவீத பொருளாதார சூழ்நிலையில் எந்த நிறுவனம் அதிகளவு கடனை வாங்காது வட்டிச் செலவுகளைக் குறைத்துக்கொள்கின்றதோ அந்த நிறுவனமே முதலீட்டாளர்களுக்கு மத்தியில் ஒரு பாதுகாப்பான நிறுவனமாகத் தோற்றமளிக்கும். இந்த நிலையில் சவூதி அரேபியா நாட்டைச் சேர்ந்த Saudi Aramco என்ற நிறுவனம் அப்பிள் அல்லது மைக்ரோசொப்ற் போன்று சந்தை மூலதனம், வருவாய்கள் என்ற அடிப்படையில் முதல் மூன்று இடத்திற்குள் வந்திருந்தாலும், நிகரச்சொத்து என்ற அடிப்படையில் உலகத்தில் உள்ள நிறுவனங்களில் 4ஆவது இடத்தினை அடைந்திருப்பதால் என்னைப் பொறுத்தவரையில் Saudi Aramco நிறுவனம் உலகின் மிகப்பெரிய நிறுவனம் மட்டுமல்லாமல் மிகவும் பாதுகாப்பான நிறுவனமுமாகும்.



முகநூலில் சுய எள்ளல் நகைச்சுவை பதிவுகள் மூலம் சிரிக்கவைக்கும் வடகோவை வரதராஜன் அவர்கள் இந்த இதழில் இருந்து வாசகர்களின் கேள்விக்கு தனது எள்ளல் பாணியில் பதிலளிக்கிறார். இதில் வரும் பெரும்பாலான கேள்விகள் ஜெர்மனியில் வசிக்கும் எழுத்தாளர் மாலினி அவர்களால் கேட்கப்பட்டவையாகும். அவருக்கும் எமது நன்றிகள்.

**விதானையாருக்குச் சமைக்கத் தெரியாது. பிறகேன் மனிசியின் சமையலைக் கிண்டலடிக்கிறீர்கள். ஆணாதிக்கவாதியா?**

*சமைப்பதை சமைப்பதில் விதானையார் கில்லாடி.*

**குண்டசாலையில் நீங்கள் கொட்டிய குப்பைகளில் உச்சமான குப்பை எது?**

*மக்கு குப்பை தயாரிப்பது எப்படி என்பதைப் பற்றி ஆறு மணித்தியால விரிவுரை கேட்டது. அதுக்கு ஒரு நாள் முழுக்க பிறக்ரிக்கல் வேறை .*

**இழுக்க, இழுக்க இன்பம் பெற்றதுண்டா?**

*மனிசியின்ரை இழுப்புக்கெல்லாம் ஆடினதெல்லாம் என்னவாம் .*

**பதநீர்– கள்ளு இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?**

*பதநீர் பதப்படுத்தும். கள்ளு கலக்கியடிக்கும்.*

**இயற்கை உணவுகள் மீது பிரியம் கொண்டவர் நீங்கள். அவை கிடைக்காத சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதா? அப்படி ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டால் என்ன செய்வீர்கள்?**


*புட்டும் ரம்ளர் தண்ணீரும் இருக்கும் வரை விதானையாருக்கு பிரச்சனை ஒண்டுமில்லை.*

**உண்மையைச் சொல்லுங்கள் விதானையார். தாய்மீதா, தாரம் மீதா உங்களுக்கு நேசம் அதிகம்?**

*ரம் மீது தான்.*



# விதானையாரின் விண்ணானப் பதில்கள்



**கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் எண்ட மாதிரி விதானையார் வீட்டுச் செல்லப் பிராணிகளும் கதையெழுதும் எண்டொரு செய்தி உலாவுது மெய்யே விதானையார்?**

*விடிய எழும்பினால் நாச்சியாரும் சிங்காரியும் முத்தத்து மண்ணை விறாண்டி வைச்சிருக்குதுகள். காலமை வந்த பத்திரிகைக்காரன் அதைப் படமெடுத்து 'விதானையார் வீட்டு நாய்கள் சீன மொழியிலே எழுதியிருக்கு' எண்டு நியூஸ் போட்டிட்டான். உப்பிடித்தான் மோனை. எழுத்தாளன் ஒண்டு நினைச்சு எழுத. விமர்சகன் அதை வேறையொண்டாய் வித்துவப் படம் காட்டுவான் .*

**உந்த மூஞ்சிப் புத்தகத்தில உங்களைக் கழுவிக்கழுவி ஊத்துறவை பற்றி என்ன நினைக்கிறியள். அதுக்கு என்ன காரணம் விதானையார்?**

*கழுவிக் கழுவி ஊத்த ஊத்த விதானையார் வெள்ளையாய் வாறாறெல்லே.*

**சிங்காரி சாப்பிட்ட தட்டைக் கழுவிற கரிசனையோட எப்பவாவது ஜி. எஸ் அன்ரி சாப்பிட்ட தட்டைக் கழுவியிருக்கிறியளோ?**

*உள்ளும் புறமும் நாக்கால் வழிச்சுத் துடைத்து சாப்பிட்ட தட்டுக்கு. தண்ணியை ஏன் வீணாக்குவான்.*

**புட்டுக்குத் தண்ணி ஊத்தி அடிக்கிற ரெசிப்பியை ஒருக்கா விலாவாரியா சொன்னீங்கள் எண்டால் சொதி வைக்கிற செலவும் நேரமும் மிச்சமாகும் விதானையார்?**

*Very simple. ஒரு தம்ளர் தண்ணீர் எடுத்து பக்கத்தில் வைத்துக் கொள்க. சுடு புட்டில் தண்ணீரை சிறிது சிறிதாக ஊற்றி நீராடலாக குழைத்து கொள்க. இந்த நீராடல் புட்டை சாப்பிடும் போது பலமாக சத்தம் வர உறிஞ்சிச் சாப்பிட வேண்டும். பக்கத்தில் இருப்பவர் நாம் சுவையான வெந்தயக் குழம்புடன் சாப்பிடுகிறோம் என்று எண்ணும்படியாக உறிஞ்சல் சத்தம் வரவேண்டும்.*

**அடிக்கடி அவசரத்தில எக்குத்தப்பா வாசிச்சுப் போடுறியள். அப்பிடி என்ன தலைபோற அவசரம் விதானையார்?**


*அட கோதாரி. இதையும் விலைபோற அவசரம் எண்டு வாசித்துப்போட்டேன்.*

# உள்ளம் இருந்த காலம்















ஈழத்தின் தனித்துவங்களில் ஒன்றாக விளங்கியது வாசிகசாலை என்ற் சமூக மையம். இது பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்று நாளாந்த, வாராந்த, மாதாந்த ஏடுகள் மற்றும் நூலக அமைப்போடு அந்தந்த ஊர்களின் சமூக நிலைக்களனாகவும் விளங்கின.

இன்று போல் எந்த விதமான சமூக வலைத்தள ஊடகங்களும் இல்லாத அந்தச் சூழலில் இவ்விதம் நிலைபெற்றிருந்த வாசிகசாலைகளில் இளைஞர் ஒன்று கூடி முற்றத்தில் வலைப்பந்து விளையாட்டுகள், படக்காட்சிகள் போன்றவற்றையும் நிகழ்த்துவதுண்டு.

அப்போது நாம் தேடித் தேடிப் பத்திரிகைகளையும், புத்தகங்களையும் படித்த போது கண்ணிற்பட்டது “உள்ளம்” என்றதொரு சஞ்சிகை.

இந்தச் சஞ்சிகை அயற்கிராமமான கொக்குவிலில் அமையப்பெற்ற வளர்மதி சனசமூக நிலையத்தில் இருந்து வெளிவந்தது தெரிந்து ஆச்சரியமாக இருந்தது. ஏனெனில் அந்தக் காலத்தில் ஆனந்த விகடன், குமுதம் போன்ற சஞ்சிகைகள் எட்டாத தூரம் தமிழகத்தில் இருந்து வந்த போது, மல்லிகை, சிரித்திரன் போன்ற ஈழத்துச் சஞ்சிகைகள் உள்ளூரில் வந்திருந்தாலும் அவை டொமினிக்

கானா பிரபா,
*சிட்னி*



ஜீவா, சிவஞானசுந்தரம் போன்ற பெரும் எழுத்தாளர்களால் கொண்டு வந்ததால் புத்தக வாசிப்போடு சரி. இதென்ன புதுமையாக இருக்கிறது ஒரு வாசிகசாலையின் சார்பில் இவ்வளவு கனகாத்திரமான சஞ்சிகை வருகிறதே என்ற பிரமிப்பும் எழுந்தது.

அப்போது உள்ளம் சஞ்சிகையின் வடிவமும் சற்றுப் பெரிதாக இருந்தது. உள்ளடகத்தில் மொழிபெயர்ப்பு இலக்கியங்களோடு, இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனின் “முள்முடி மன்னர்கள்” என்ற நாவலும் தொடராக வந்தது. இன்னொரு பக்கம் புதிய புதிய எழுத்தாளர்கள் பலரை அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தது உள்ளம்.

அவ்விதம் கிடைத்த ஒரு அற்புதமான படைப்பாளி அலெக்ஸ் பரந்தாமன். அவருடைய கதைகளில் தொனிக்கும் வசீகரமான எழுத்து நடையும், புதுமையான களங்களும் வாசித்து முடித்த பின்னர் என் சகபாடி குமரனோடு அவற்றைப் பற்றிப் பேசுவதில் பொழுது கடக்கும். அப்போதே வாசிப்பும், நயப்புமாக எங்களை வளப்படுத்த உள்ளம் உதவியது.

உள்ளம் சஞ்சிகையில் எழுதிய இளம் படைப்பாளி இன்று அவுஸ்திரேலியாவில் நன்கறியப்பட்ட எழுத்தாளராகத் திகழும் கே.எஸ்.சுதாகர் அவர்கள்.

உள்ளம் சஞ்சிகையின் தனித்துவமே தான் பிறந்த ஊர்ப்பெருமை பாராட்டாமல், ஒட்டுமொத்த ஈழத்தின் இலக்கியக் குரலாக ஒலித்தது தான். விமர்சனம், சிறுகதை, மொழி பெயர்ப்பு இலக்கியம், சமகாலப் பிரச்சனை தழுவிய சமூக விமர்சனக் கட்டுரைகள், கவிதை என்று பரந்து விரிந்த களமாக அது இயங்கியது.

ஈழத்து இலக்கிய இதழ்களின் சாபக்கேடு, அவை உள் நாட்டு யுத்தக் காரணிகளாலும், வாசகர்களின் எண்ணிக்கை இல்லாததாலும் இயங்குவதை நிறுத்திக் கொண்டதுண்டு.

உள்ளம் சஞ்சிகைக்கு வாசகப் பரப்பு என்பது பரந்து விரிந்ததால் அது எழுபதுகளில் கையெழுத்துச் சஞ்சிகையாகவும், பின்னர் எண்பதுகளின் இறுதிப் பகுதியில் அச்சு இதழாகவும் இயங்கித் தன் ஓட்டத்தை நிறுத்தினாலும் ஈராயிரத்தில் மீண்டெழுந்து பார்த்தது.

உள்ளம் மீதான வாசக அபிமானம் குறையவே இல்லை. அதனால் தான் எண்பதுகளின் நனவிடை தோய்தலில் மறக்கமுடியாத நினைவுகளில் “உள்ளம்” வாசிப்பும் தவறாமல் எம் மனதில் கிளன்றெழும்.

உள்ளம் சஞ்சிகை தன்னை நிலை நிறுத்திக் கொள்ள தென்னிந்திய சினிமாவை ஒட்டிய பல்சுவை சஞ்சிகையாகக் கூட உருவெடுத்திருக்க முடியும். ஆனால் ஈழத்து வாசகர்களுக்கு அது செழுமையான இலக்கிய உரம் ஊட்டவேண்டும் என்ற முனைப்போடு இயங்கியது. இன்று இன்னொரு யுகத்தில் ஃபீனிக்ஸ் பறவையாக அது மீண்டு வந்திருக்கிறது, அதே பொலிவோடு.

“வெள்ளை நிறப்பூவுமல்ல
வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி
உத்தமனார் வேண்டுவது”

உள்ளம் சஞ்சிகையின் மகுட வாக்கியம் ஒன்றே போதும், அதன் தூய்மையான இலக்கியப் பணியைப் பறை சாற்ற.

**நவமகன்**



"அம்..ஆ.." என அடித்தொண்டையிலிருந்து வந்த குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள் சந்தியா. தலையை ஒரு பக்கமாய்ச் சாய்த்தபடி நாக்கையும் அதே பக்கமாய் நீட்டி முழியைப் பிரட்டி நெற்றிக்குள் செருகியவாறே கைகளை உதறிக்கொண்டிருந்தான் மகன் தூயவன். ஏதஏற்படின் இப்படியான உடல் மொழிகளினால் வெளிப்படுத்துவதே அவனது வழமையாகவிருந்தது.

அவனுக்கு உணவை ஊட்டிவிட்டுப் பாத்திரத்தைக் கழுவிக்கொண்டு நின்றவளுக்கு அப்போதுதான் மகனுக்குத் தண்ணீர் பருகக்கொடுக்கவில்லை என்பது புரிந்தது. மீண்டும் அவனிடம் சென்றவள் தண்ணீரைப் பருக்கிவிட்டு அவனது வாயைத் துடைத்துவிட்டதுமே, விரல்களைப் பொத்திப்பிடித்த கைகளை முகத்திற்கு நேரே ஆட்டியவாறு கண்களைச் சுருக்கி உதடுகள் விரித்த புன்னகையால் சந்தோஷத்தை வெளிப்படுத்தினான். இத்தகைய செய்கையானது எப்போதும் அவனது திருப்தியை வெளிப்படுத்துவதாகவே அமைவதுண்டு.

ஒஸ்லோவின் காலநிலை இன்று சூரியனைக் கண்ணில் காட்டியது. விடுமுறை நாட்களில் நல்ல வெய்யிலெறித்தால் இங்குள்ள தமிழர்களால் 'தூசணப் பார்க்' என்று அழைக்கப்படும் நிர்வாணச்சிலைகளைக்கொண்ட 'வீகெலாண்ட்' பார்க்குக்கு மகனை அழைத்துச் சென்று மகிழ்விப்பதே அவளது மகிழ்சியான நடைமுறைகளில் ஒன்றாகவிருந்தது.

கொரோனாத் தொற்றுக் கொஞ்சம் கட்டுப்பட்டதுபோல் மீண்டும் மக்கள் வெளியே உலாவ ஆரம்பித்திருந்தார்கள். கொரோனாப் பயந்தெளிந்த சந்தியாவும் உடைகளை மாற்றிகொண்டு மகனுக்கு பார்க்குக்குச் செல்ல ஆயத்தமானாள். மகனின் துணியிலான முகக் கவசத்தைத் தேடியபோதுதான், நேற்று அலைபேசியைத் தரவில்லை என்ற கோபத்தில் அவன் முகக் கவசத்தை வீசி எறிந்ததும் அது ஜன்னல் திரைச்சீலைத்

தாங்கியில் மாட்டிக்கொண்டு தொங்கியதும் ஞாபகத்தில் வந்தது. அதனை எடுக்க முயற்சித்தவளுக்கு நுனிக்காலில் நின்றும் அது எட்டவில்லை.துள்ளிக்குதித்து எடுக்கலாமா என எண்ணியபோதே, பின் பக்கத்தாலிருந்து கட்டியணைத்த கைகளால் சட்டென எதிர்பாராதவிதமாக அவள் முகக்கவசம் எட்டக்கூடிய உயரத்துக்கு மேலே தூக்கப்பட்டாள். முகக் கவசத்தைக் கைப்பற்றியவுடன் கீழே இறக்கப்பட்டவள், தன்னிலும் உயரமாக நின்ற மகனை இன்ப அதிர்ச்சியுடன் கட்டித் தழுவிக்கொண்டபோது அவளது கண்கள் ஆனந்தக் கண்ணீரில் பனித்திருந்தன. மகனும் கண்கள் சுருங்கி உதடுகள் விரிய அதே கள்ளங் கடபமற்ற குழந்தைச் சிரிப்புடன் நின்றான். ஆம் அவன் குழந்தைதான். பதினேழு வயதில் தாயைத் தூக்குமளவுக்கு ஆஜானுபாகுவாக உடல் வளர்ந்துவிட்டபோதிலும் அவனது உள்ளம் இன்னும் குழந்தையாகவே இருக்கிறது. அந்தப் பெரிய குழந்தையை சக்கர நாற்காலியில் இருக்கவைத்துத் தள்ளியபடியே வீகெலாண்ட் பார்க்கை நோக்கி நடந்துகொண்டிருந்தாள் சந்தியா.

■

தூயவன் பிறந்து இரண்டாவது வயதைத் தாண்டியும் எழுந்து நடக்க முடியாதவனாகவும், காரணமின்றி அழுவது, சிரிப்பது, கைகளைத் தட்டுவது, விரல்கள், கைகள் மற்றும் உடலை இயல்புக்கு மாறாக அசைப்பது போன்ற ஒரே மாதிரியான செயலைத் திரும்பத் திரும்பச் செய்பவனாகவே இருந்தமையினால் ஜயத்துடன் வைத்தியர்களை அனுகினார்கள். அப்போதுதான் அவனது மூளையானது தகவல்களைப் பயன்படுத்திப் புரிந்துகொள்ளும் திறனையும், பார்த்தல் கேட்டல் போன்ற உணரும் விடயங்களையும் சரியாகப் பயன்படுத்திப் புரிந்துகொள்ள முடியாதபடி ‘ஆட்டிசம்’ என்னும் தன்முனைப்புக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்தது.

அன்றிலிருந்தே அவளது நாட்கள் நரகமாகத் தொடங்கின. ஒரு தாயாய், குழந்தை விடயமாக அவள் வரைந்து வைத்திருந்த கற்பனைச் சித்திரங்கள் எல்லாமே அவளது கண்ணீரிலேயே கரைந்தழிந்துபோயின. அதேகாலத்தில்தான் அவளது இரண்டாவது குழந்தையும் வயிற்றிலிருந்தது. முதற் குழந்தை இப்படிப்

பிறந்துவிட்டதே என்ற கவலையும், இரண்டாவது குழந்தை எப்படிப் பிறக்கப்போகிறதோ என்ற ஏக்கமும் அவளையும் அவளது கணவன் ராகுலனையும் ஆட்டிப்படைத்துக்கொண்டிருந்தன.

கருக்கலைப்புக்கு நச்சரித்த ராகுலன் அவளை வைத்தியரிடம் அழைத்துச் சென்றபோது காலம் கடந்துவிட்டதாகக் கையை விரித்த வைத்தியர் உத்ராலீட் மூலம் குழந்தையின் அசைவுகளைப் பரிசோதித்து இரண்டாவதும் ஆண் குழந்தை என்றும், குழந்தை ஆரோக்கியமாக இருப்பதாகவும் உறுதிசெய்தார். முதற் குழந்தையும் ஆரோக்கியமாக இருப்பதாகவேதான் உத்ராலீட் மூலம் உறுதிசெய்திருந்தார்கள், அதனால் அவள் மெய்ஞானத்தை மட்டுமல்ல விஞ்ஞானத்தையுமே நம்ப முடியாதவளாகவே இருந்தாள்.

ஆனாலும், சோர்ந்துவிடவில்லை. கவலைப்பட்டுக் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தால் வயிற்றிலிருக்கும் குழந்தைக்கும் பாதிப்பு ஏற்பட்டுவிடும் என்பதைப் புரிந்துகொண்டவள், மனதைக் கல்லாக்கிக்கொண்டு கவலைகளையெல்லாம் புறந்தள்ளி வைத்துவிட்டு மூன்று வயதைத் தாண்டியும் நடப்பதற்கும், பேசுவதற்கும் சிரமப்பட்ட முதற் குழந்தையை நடக்க வைக்கவும், பேச வைக்கவுமெனப் படாத பாடுகள் பட்டாள்.

ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுடன் பெற்றோர்கள் அதிக நேரத்தையும், கவனத்தையும் செலவிட வேண்டுமென்பதையும், சாதாரண குழந்தைகளிடம் செலுத்தும் அன்பைவிடவும் இந்தக் குழந்தைகளுக்குக் கூடுதல் அன்பும், அரவணைப்பும் தேவைப்படும் என்பதையும் புரிந்துகொண்டவள் அதற்காகத் தன்னைத் தயார்ப்படுத்திக்கொண்டாள். சிறப்புக் குழந்தைகள் வளர்ப்பிற்கான விசேட பயிற்சி வகுப்புக்களுக்குச் சென்றாள். சிறப்புக் குழந்தைகளுக்கான எல்லா வைத்தியர்களையும் பார்த்தாள், எல்லாவிதமான பயிற்சிகளையும் செய்வித்தாள்.

மகனுக்கு ஒரு விநோதமான பழக்கமிருந்தது. அதாவது, கைகளில் எப்போதும் ஏதாவதொரு பொருளைப் பிடித்து வைத்திருக்கவேண்டும் இல்லையேல் அவன் அமைதியை இழந்துவிடுவான். பிடித்துக்கொள்ள எதுவுமே இல்லாவிடின் இரண்டு கைகளாலும் தனது செவிகளையே சிவக்குமளவுக்கு இறுகப் பிடித்துக்கொண்டு கோபத்தில் உறுமுவான்.

அதனால் எப்போதும் ஏதாவதொரு விளையாட்டுப் பொருளை அவனது கைப்பிடிக்குள் கொடுத்தபடியே இருந்தவளுக்கு ஒரு நாள் தொலைக்காட்சியில் குன்னக்குடி வைத்தியநாதனின் வயலின் கச்சேரியைப் பார்த்துக்கொண்டிருந்தபோதுதான் மகனின் கைகளிலும் வயலினைக் கொடுத்தாலென்ன? என்று ஒரு யோசனை தோன்றியது. யோசனையை நிறைவேற்றவும் அவள் தாமதிக்கவில்லை. அடுத்த சில தினங்களிலேயே மகனின் கைகளில் வயலினும், 'போவ்' என்று சொல்லப்படுகின்ற வில்லும் இருந்தன. முதன் முதலாக அவன் வயலினில் வில்லை வைத்து உரசியபோது எழுந்த இசையைக் கேட்டு ஆச்சரியப்பட்டு மகிழ்ந்ததை அவதானித்த சந்தியா யூ—டியூப்பில் வயலின் இசைக் கச்சேரிகளைத் தேடிப்பிடித்து அடிக்கடி மகனுக்குப் போட்டுக் காட்டினாள். அவனுடைய பொழுதுகள் வயலினுடனேயே கழிய ஆரம்பித்தன. எப்போதும் அவனைச் சுற்றி வயலின் இசை தாறுமாறாக ஒலித்தபடியே இருந்தது. அவனது ஆர்வத்தைப் பார்த்து வியந்தவள் ஒரு வயலின் பயிற்சியாளரையும் ஒழுங்கு செய்ததோடு மகனை ஊக்குவிப்பதில் அதி தீவிரமானாள். புதிர் விளையாட்டுகள், படம் வரைதல், கட்டுமானத் தொகுதி விளையாட்டுப் போன்றவற்றில்



ஈடுபடுத்தினாள். மகன் சின்னச் சின்ன நல்ல விடயங்களைச் செய்யும்போது பாராட்டினாள். பாராட்டுக்கள் அவனை ஊக்குவித்தன. தினமும் சிறுசிறு பயிற்சிகள் கொடுக்க அவனது கற்றுக்கொள்ளும் திறனும் அதிகரித்தது.

மகனின் வாய்மொழி அல்லாத தொடர்பை நன்றாகக் கவனித்து அவன் ஏன் கத்துகிறான் ? எதைப்பார்த்து சிரிக்கிறான் ? பசி வந்தால் என்ன செய்கிறான் ? என்பதையெல்லாம் கவனித்துப் புரிந்து கொள்வதற்குச் சிரமப்பட்டாலும் பெரும் முயற்சிகளின் மூலமாக மகனின் தேவைகளைப் பூர்த்திசெய்தாள்.

ஆனால், மகனின் விடயத்தில் கவலையும், ஏமாற்றமும் மட்டுமே அடைந்திருந்த ராகுலன் எந்த முயற்சிகளிலும் நம்பிக்கை அற்றவனாகவே இருந்தான். அவனுக்குள் இருந்த கவலைகள் எல்லாவற்றையும் ஒரு கட்டத்தில் சந்தியா மீதான கோபங்களாக வெளிப்படுத்த ஆரம்பித்திருந்தான். அதற்கான காரணமாக சந்தியாவின் தாத்தாவின் சகோதரர் ஒருவர் இப்படியான ஆட்டிசப் பாதிப்புக்கு உள்ளானவராக இருந்ததுவேயாகும்.

“இது உன்ர பரம்பரையில் இருந்து வந்த வியாதிதான்” என்று அடிக்கடி குத்திக் காட்டினான். அதனால் கலைத்துக் கலைத்துக் காதலித்துக் கட்டிக்கொண்டவர்களுக்குள் காதலும் கலைந்து, கலைந்து காணாமற்போக ஆரம்பித்திருந்தது. ராகுலனுக்குள் இருந்த மகன் மீதான பரிதாப உணர்வுகள்கூட

**சந்தியாவோ இல்லாத ஒன்றைத் திட்டவும் இல்லை, நொந்துகொள்ளவும் இல்லை. விழுந்து விழுந்து கும்பிட்டும், விரதங்கள் பிடித்தும் யாருக்கும் எந்தப் பாவமும் செய்யாமல் நேர்மையாகவும், நியாயமாகவும் வாழ்ந்த தனக்கு இப்படியான ஒரு குழந்தை கிடைத்தபோதே அவள் கடவுள் மீதான நம்பிக்கையை இழந்துவிட்டிருந்தாள்**

மெல்ல மெல்ல வெறுப்பு உணர்ச்சிகளாக மாறிக்கொண்டிருந்தன. இப்படியான ஒரு குழந்தையைத் தங்களுக்குத் தந்ததற்காக எப்போதும் கடவுளைத் திட்டித் தீர்த்து நொந்துகொண்டேயிருந்தான்.

சந்தியாவோ இல்லாத ஒன்றைத் திட்டவும் இல்லை, நொந்துகொள்ளவும் இல்லை. விழுந்து விழுந்து கும்பிட்டும், விரதங்கள் பிடித்தும் யாருக்கும் எந்தப் பாவமும் செய்யாமல் நேர்மையாகவும், நியாயமாகவும் வாழ்ந்த தனக்கு இப்படியான ஒரு குழந்தை கிடைத்தபோதே அவள் கடவுள் மீதான நம்பிக்கையை இழந்துவிட்டிருந்தாள்.

ஆனாலும் அவள் தன்னம்பிக்கையை ஒருபோதும் இழந்துவிடவில்லை. அவளது முயற்சிகளின் பயனாக நான்காவது வயதில் மகன் தட்டித் தடுமாறி எழுந்து நின்றான். அது அவளுக்குள் ஒரு உற்சாகத்தையும், நம்பிக்கையையும் வரவழைத்தது. அதேகாலத்தில்தான் இரண்டாவது மகனும் பிறந்திருந்தான். உதவிக்கு யாருமே அற்ற அந்நிய தேசத்தில் ஒரே நேரத்தில் இரண்டு குழந்தைகளைக் பராமரிக்க வேண்டியவளாகவிருந்தாள். மூத்த மகனைப்பேச வைப்பதற்கான அவளது அதீத ஈடுபாடுகளால் இரண்டாவது மகன் மீதான கரிசனைகள் குறைந்துள்ளதாக குற்றஞ்சாட்டிய ராகுலன் அடிக்கடி அவளோடு முரண்பட்டுக்கொண்டான். முரண்பாடுகள் முற்றி அவ்வப்போது சண்டைகளாகவும் வெடித்தன. அதனால் அவன் வீட்டில் செலவிடும் நேரங்களும் குறைந்துபோனது.

எப்போதும் எல்லாவற்றிலும் இளைய மகனுக்கே முன்னுரிமை கொடுத்த ராகுலன் மூத்த மகன் மீது காட்டாத அன்பையும் சேர்த்தே இளைய மகன் மீது காட்டினான். அவனும் நல்ல சுகதேசியாக வளர்ந்துகொண்டிருந்தான். ஒரு வயதிலேயே எழுந்து நடந்தான், இரண்டாவது வயதிலேயே பேசவும் ஆரம்பித்தான். எப்போது எங்கு சென்றாலும் ராகுலன் இளைய மகனையே அழைத்துச் சென்றான். கேட்டதையெல்லாம் வாங்கிக்கொடுத்தான்.

அதனால் அவன் அப்பாவின் செல்லமாகனானான். அம்மா எப்போதும் அண்ணாவுடனேயே அதிக நேரங்களைச் செலவிடுவதானது அவனது குழந்தை மனதுக்குள் தமையன் மீதான வெறுப்பையும், பொறாமையையும் உண்டாக்கியதோடு தாயுடனான நெருக்கத்தையும் குறைத்துக்கொண்டிருந்தது.

சந்தியா வெளிவேலைகள் எதற்கும் செல்லாமல் மகனைச் சிறப்புக் குழந்தைகளுக்கான பாடசாலைக்கு அழைத்துச் செல்வதிலிருந்து மீண்டும் கூட்டி வந்து வீட்டில் வைத்துப் பராமரிப்பதுவரையான முழு நேர வேலைகளையும் அவளே செய்வதனால் அவளுக்கான அரசாங்கக் கொடுப்பனவும் கிடைத்தது.

அவளுக்கு ஓய்வு தேவைப்படும் நேரங்களில் வேறு வேலையாட்கள் வந்து மகனைக் கூட்டிச் சென்று பராமரிப்பதற்கான வசதிகள் உட்பட இலவச வாடகைக் கார் போன்ற பல வசதிகளையும் ஒஸ்லோ நகரசபை செய்துகொடுத்திருந்தது. நல்ல அரச

உதவிகள் கிடைத்தமையினால் குடும்பத்தில் பொருளாதார ரீதியில் எந்தச் சிக்கல்களும் இருக்கவில்லை.

பாடசாலைக்கு மட்டுமன்றி மூத்த மகனை எங்கு கூட்டிச் செல்வதாக இருந்தாலும் அது சந்தியாவினது வேலையாகவே இருந்தது. அதனால் அவள் சமூகத்தில் பல இன்னல்களையும் அனுபவித்தாள். தன்முனைப்புக் குறைபாடுள்ள குழந்தையின் நடவடிக்கைகளை ஏளனப்பார்வை பார்த்த சில அறிவுக் குருடர்களின் கேலி, கிண்டல்களுக்கும் ஆளானாள். வேற்றுக்கிரக வாசிகளைப் பார்ப்பது போன்று அருவருப்புப் பார்வை பார்க்கின்ற சில மனிதர்களையும் தினந்தோறும் சந்தித்தாள். அத்தகையவர்கள் மீதான அவளது கோபங்கள் எல்லாமே மகனை ஒரு இயல்பான மனிதனாக்குவதற்கான வெறியாகவே மாறியது.

அந்த வெறியோடு மீண்டும் மீண்டுமாய் சளைக்காது உச்சரிப்புக்களைச் சொல்லிக்கொடுத்துப் பேச்சுப் பயிற்சிகளை அளித்தாள். அதன் பலனாக "அ..ம்..ஆ" என்ற வார்த்தை அவனது வாயிலிருந்து உதிர்ந்து விழுந்தது. அதனைக் கேட்ட கணத்தில் வானிலிருந்த நட்சத்திரங்கள் எல்லாமே அவளது காலடியில் உதிர்ந்து விழுந்தது போன்ற மகிழ்ச்சியில் அவளது முகம் பிரகாசமானது. புன்னகை சிந்திய உதடுகளுடன் மகிழ்ச்சியில் திளைத்து நின்றாள். அவளது சந்தோசப் புன்னகையை பார்த்த மகனின் முகமும் அதைவிடவும் பிரகாசமானதைக் கவனித்தபோதுதான் அவளுக்கு ஒரு விடயம் புரிந்தது.

முன்பெல்லாம் நான் அழுதபோது மகனின் கண்களும் பனித்திருக்கின்றன, முன்பெல்லாம் நான் சோகமாக இருந்தபோது மகனின் முகத்திலும் சோக ரேகைகள் படர்ந்திருக்கின்றன. இப்போது நான் மகிழ்ந்து சிரிக்கும்போது அவனும் மகிழ்கின்றான்,சிரிக்கிறான் என்றால் இனி நான் மகனுக்காக எப்போதும் சிரித்த முகத்துடன் மகிழ்ச்சியாகவே இருக்கவேண்டும். அது வெறும் நடிப்பாய் மட்டுமில்லாமல் துன்ப துயரங்களை வாழ்க்கைப் போக்கில் அப்படியே ஏற்றுக்கொண்டு பிரச்சினைகள் உறுத்தல்களுக்கு மத்தியிலும் சிரிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அதுவே வாழ்கையில் பெரிய வெற்றியாக அமையும் என்பதைப் புரிந்துகொண்டவள் எல்லாவற்றையும் கற்றுக் கடந்து மகனுக்காக அந்த வெற்றியை அடைந்தே தீர்வதென அன்றிலிருந்து மனதுக்குள் முடிவெடுத்துக்கொண்டாள்.

இச்சமூகத்தில் தன் மகனையும் ஒருவனாய் ஏற்றுக்கொள்ளாமல் ஏளனப்பார்வை பார்ப்பவர்களைப் பார்த்து இப்போதவள் சிரிக்கிறாள். கேலி, கிண்டல்களால் அவமானப்படுத்துபவர்களைப் பார்த்து இப்போதவள் சிரிக்கிறாள். ஒரு அவமானம் தன்மீது வீசப்படும்போது அதைப்பார்த்துச் சிரிக்காவிட்டால், தான் அந்த அவமானத்தை ஏற்கத்தகுதியானவள் என்றாகிவிடுவதாகவே இப்போதவள் கருதுகிறாள்.

அறியாமையினால் தங்களை அவமானப்படுத்தியவர்கள் எல்லோருமே அனுதாபத்திற்கு உரியவர்களே அன்றிக் கண்டனத்திற்கு உரியவர்கள் அல்ல என்பதை உணர்ந்தபோது தன் முந்தைய கோபங்களை எண்ணியும் சிரிக்கிறாள். இப்போதவள் உதடுகளில் சிரிப்பு ஒட்டிக்கொண்டுவிட்டது. அது அவளையும் மாற்றியது. ஆம், இப்போதெல்லாம் அவள் தன்னிரக்கம் கொள்வதில்லை. மனத்தாங்கல் அடைவதில்லை. எல்லாவற்றையும் சிரித்தே கடக்கப் பழகிக்கொண்டுவிட்டாள். கடந்துகொண்டேயிருக்கின்றாள்.

'ஆட்டிசம்' பாதித்த குழந்தைகளை முழுமையாகக் குணப்படுத்த முடியாதென மருத்துவர்கள் கூறிய போதிலும், தாயுள்ளம் அதனைக் கேட்கவும், நம்பவும்

தயாராகவில்லை. தொடர்ந்தும் தளராத முயற்சிகளில் ஈடுபட்டிருந்தவளுக்கு அதற்கான பலனும் கிடைத்தது. மகன் மெல்ல மெல்லத் தத்தித் தத்தி சக்கர நாற்காலி இல்லாமல் வீட்டுக்குள் எழுந்து நடக்க ஆரம்பித்திருந்தான். உடலின் சமநிலை குன்றி இருந்தமையினால் வேகமாகவோ அன்றி நீண்ட தூரமோ நடக்க முடியாதவனாக இருந்ததனால் வெளியே செல்லும்போது மட்டும் சக்கர நாற்காலியின் துணை தேவைப்பட்டது.

ஆனால் அவனுடைய ஞாபக சக்தியும், காதுகளும் மிகவும் கூர்மையானதாக இருந்தன. ஒருவருடைய பெயரையும் தொலைபேசி இலக்கத்தையும் சொன்னாலே போதும் பின்னர் எவ்வளவு காலத்திற்குப் பிறகு பெயரைச் சொல்லிக் கேட்டாலும் உடனேயே தொலைபேசி இலக்கத்தை சொல்லிவிடுவான், அந்த அளவிற்கு அவனுடைய ஞாபக சக்தி அபாரமானதாகவிருந்தது. பெரும்பாலும் இரவு வேளைகளில் மின் குமிழ்களின் அதீத வெளிச்சம் அவனின் மன அமைதியைக் குழப்பியது. அத்தகைய வேளைகளில் உடல் அசைவுகளிலும், குரலிலும் மூர்க்கத்தனத்தை வெளிப்படுத்துவான். அவன் அமைதியை இழக்கும் வேளைகளில் எல்லாம் இசையே அவனை மீண்டும் அமைதியில் ஆழ்த்தியது. அதனால் வீடு எப்போதும் மங்கலான வெளிச்சத்துடன் வயலின் இசையால் நிறைந்திருந்தது.

வீடு எந்த நேரமும் இருட்டாகவும், ஒரே சத்தமாகவும் இருப்பதாக புறுபுறுத்துக்கொண்ட ராகுலன், இதனால் இளைய மகனின் படிப்பும், இயல்பு வாழ்க்கையும் கெட்டுப் போகின்றதென சந்தியாவுடன் சண்டைகள் பிடித்தான். சண்டைகள் அடிக்கடி இயல்பாக நிகழ ஆரம்பித்தன. அவள் வீட்டின் ஒரு பக்கத்தில் அமைதியை நிறுவ முற்பட மறுபக்க அமைதி குலைந்து கொட்டுண்டுபோனது. மகன் விடயமாக கணவனோடு முரண்பட்டுக்கொண்டு கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாத ஒரு தருணத்தில், “என்னை என்ன செய்யச் சொல்லுறீங்க, அவனைக் கழுத்தை நெரித்துக் கொண்டுபோட்டு நானும் தற்கொலை செய்து சாகவா?” எனக் கோபாவேசமாகக் கேட்டாள்.

மறுநாளே தான் கடுமையான வார்த்தைகளை உதிர்த்துவிட்டதாக எண்ணித் தனக்குள்ளேயே வருந்தினாள். தானும் கணவனும் நல்ல மனநல மருத்துவரிடம் ஆலோசனை பெறுவது நல்லதென எண்ணிக்கொண்டவள் அந்த எண்ணத்தை ராகுலனிடம் தெரியப்படுத்தியபோது, “ஏன், உன்னையும் உன்ர மூத்ததையும் போல எனக்குமென்ன விசரே?” என அவன் கேட்ட கேள்வியானது அவளின் இதயத்தைப் பிழிந்து சாறாக ஊற்றியதோடு எதனாலும் இட்டு நிரப்ப முடியாத இடைவெளியையும் அவர்களுக்குள் ஏற்படுத்தியது.

அதன் பின்னர் தூயவனின் பத்தாவது வயதில் ஒரு நாள் வீட்டில் பூகம்பம் வெடித்தது. அந்த நாள் ஒஸ்லோவில் ராகுலனின் தம்பியின் திருமணம் நடக்கவிருந்த நாளுக்கு முதல் நாளாகும். திருமணம் நடைபெறவிருந்த மண்டபத்தில் அலங்கார வேலைகள் செய்துவிட்டு தாமதமாக வீட்டுக்கு வந்த ராகுலன் “நாளைக்குத் தூயவனைப் பராமரிக்கிறதுக்கான ஆட்களை ஒழுங்கு செய்திட்டியே?” என்று சந்தியாவிடம் கேட்டான்.

“ஏன்? நாளைக்குத்தானே கல்யாணமாச்சே.!” என்றாளவள் குழப்பத்துடன்.

“அதனால தான் கேட்கிறன்” என்றானவன் எரிச்சலுடன்.

“என்ன சொல்லுறிங்க.!?” என்றவள் ஒரு கண்ணில் ஆச்சரியக்குறியும், மறு கண்ணில்

**முத்திப்போச்சு, அதுதான் கூட்டிக்கொண்டு வரயில்ல எண்டு சொல்லுங்கோ" என்றவாறு கோபாவேசத்தோடு எழுந்து மகனின் அறைக்குள் புகுந்து கதவைச் சாத்திக்கொண்டவள் மகனைப் பார்த்ததும் முகத்தை மாற்றிப் புன்முறுவல் காட்ட முயற்சித்தாள்.**

கேள்விக்குறியுமாக நின்றாள்.

"அவனைக் கொண்டுபோய் அங்க சமாளிக்க ஏலாது. விட்டுட்டுத்தான் போகவேணும்" என்றான்.

"அது என்னெண்டு, அதெல்லாம் சரிவராது" என்றாளவள் உறுதியான குரலில்.

"உனக்குமென்ன விசர் முத்திப்போச்சே.? ஊர்ச் சனங்கள் எண்டும், வெளிநாடுகளிலிருந்து சொந்த பந்தங்கள் எண்டும் எவ்வளவு

சனங்கள் வரும் அங்க இவனைக் கூட்டிக்கொண்டுபோய் என்னைப் பரிசுகெடுக்கப்போறியே.?" கோபாவேசத்துடன் கேட்டானவன்.

"இது நாங்களாவே பெத்தெடுத்த எங்கட பிள்ளை. இது இயற்கையா வந்த ஒரு குறைபாடு. இதில மறைக்கிறதுக்கு என்னயிருக்கு? பரிசுகேடு எங்கயிருக்கு? சரி, என்ர பிள்ளைக்கு அங்க இடமில்லை எண்டால் நானும் அங்க வரமாட்டன். நீங்க வேணுமெண்டால் தாராளமாப் போயிற்று வாங்கோ" என்றவள் கலியாணத்துக்காக அயன் பண்ணி மேசையில் அடுக்கி வைத்திருந்த உடைகளைக் கோபத்தோடு விசிறி எறிந்தாள்.

"இதெப்படி? இது இன்னும் பரிசுகேடல்லோ, மனுசி எங்க எண்டு சனங்கள் கேட்டால் நானென்ன சொல்லுறது.?" எரிச்சலோடு கேட்டான்.

"மனுசிக்கும் மூத்த மகனுக்கும் விசர்

முத்திப்போச்சு, அதுதான் கூட்டிக்கொண்டு வரயில்ல எண்டு சொல்லுங்கோ" என்றவாறு கோபாவேசத்தோடு எழுந்து மகனின் அறைக்குள் புகுந்து கதவைச் சாத்திக்கொண்டவள் மகனைப் பார்த்ததும் முகத்தை மாற்றிப் புன்முறுவல் காட்ட முயற்சித்தாள். புன்முறுவல் என்பது உதடுகளில் தோன்றுவதல்ல, மனப்பூர்வமான புன்முறுவல் உள்ளத்திலிருந்து தோன்றுவது என்பதனால் தோற்றுப்போய் நின்றாள்.

"திறவடி கதவ" எனக் கத்தியவன் கதவைக் கால்களால் உதைத்துத் தள்ளினான்.

"இதுக்குமேல எங்களை ஆக்கினைப்படுத்தினீங்களோ நாளைக்குக் கலியாணவீட்டை இல்ல செத்தவீட்டைத்தான் பார்ப்பீங்க" என உள்ளேயிருந்து வந்த கடுமையான எச்சரிப்புக் குரலைக் கேட்டதும் அமைதியானான் ராகுலன்.

மறு நாள் இளைய மகனுடன் திருமணத்துக்குச் சென்று வந்தவனின் கையில் அவனது கையெழுத்திட்ட விவாகரத்துக் கோரும் பத்திரம் இருந்தது. அதனைப் பார்த்ததும் சிரித்தவாறே கையெழுத்திட்டாள். இளைய மகனையும் தன்னோடு வைத்திருக்கப் போராடிப் பார்த்தவளுக்கு ஏமாற்றமே கிடைத்தது. தன்னை ஏமாற்றிய சட்டத்தை எண்ணியும் சிரித்தாள். தனக்குத் துரோகம் செய்தவர்களையும், தன்னை எதிரியாகப் பார்த்தவர்களையுங் கூடப் பார்த்துச் சிரித்தாள். அவர்களைச் செயல் இழக்கச் செய்வதற்கு இந்தச் சிரிப்பைவிடவும் வேறெந்தப் பெரிய ஆயுதங்களும் அவளுக்குத் தேவைப்படவில்லை.

இளைய மகனுடன் வேறு வீடு எடுத்துக்கொண்டு குடியேறிப்போன

ராகுலன் விவாகரத்துக் கிடைக்கப்பெற்ற சில மாதங்களிலேயே வேலைத்தளத்தில் அறிமுகமான ஏற்கனவே விவாகரத்தாகி ஒரு குழந்தையுடன் வாழ்ந்துகொண்டிருந்த ‘எலினா’ என்ற நோர்வேஜியப் பெண்ணுடன் திருமணம் செய்யாமலேயே சேர்ந்து வாழ ஆரம்பித்திருந்தான். சனி, ஞாயிறுகளில் மட்டுமே இளைய மகன் தாயிடம் வந்துபோக, இப்போது மூத்த மகனுடன் சந்தியாவின் காலங்கள் கழிந்துகொண்டிருக்கிறன.

■

பல நாட்களாக வீடுகளுக்குள் அடைபட்டுக் கிடந்த ஒஸ்லோ வாசிகளின் முகங்களில் லொக்டவுன் தளர்வினால் ஏற்பட்ட மகிழ்ச்சியைக் காண முடிந்தது. பூங்கா சனங்களால் நிறைந்திருந்தாலும், அங்கே சிலைகளுக்குள் இருந்த நெருக்கத்தைச் சனங்களுக்குள் காண முடியவில்லை. எல்லோரும் சமூக இடைவெளிகளைச் சரிவரக் கடைப்பிடித்தார்கள். சிலைகளைக் கண்டதுமே இடது கையில் வயலினையும், வலது கையில் வில்லையும் தூக்கிப் பிடித்தபடியே உடல் அசைவிலும், குரலிலும் சந்தோசத்தை வெளிப்படுத்தினான் தூயவன்.

சக்கர நாற்காலியை தள்ளியபடியே நடந்துகொண்டிருந்தவளின் இடது பக்கத்திலிருந்து வித்தியாசமான குரலில் ஒலித்த நோர்வேஜிய மொழியிலான பாடல் தூயவனை வசியப்படுத்த அத்திசையை நோக்கித் தலையைச் சாய்த்து நாக்கை நீட்டியபடி கைகளை உதறினான். மகனின் மனதைப் புரிந்துகொண்டவள் பாடல் கேட்ட திசையை நோக்கி சக்கர நாற்காலியை திருப்பினாள்.

அங்கே ஒரு காதல் ஜோடியின் நிர்வாணச் சிலையின் கீழிருந்த இருக்கையில் அறுபத்தைந்து எழுபது வயது மதிக்கத்தக்க நோர்வேஜியத் தம்பதியருக்கு நடுவே நாற்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் நெஞ்சில் நாடி முட்டுமளவுக்கு கவிழ்த்து வைத்திருந்த தலையை இடமும், வலமுமாக உடலோடு சேர்த்து அசைத்தபடியே பாடிக்கொண்டிருந்தார். பார்ப்பதற்கு அழகாகவும் கம்பீரமான தோற்றமுடையவராகவும் இருந்தாலும் அவரது உடல் அசைவுகளும், துண்டு துண்டாக உடைந்து உடைந்து வெளிவந்த குரலும் வித்தியாசமானதாகவே இருந்தன.

நடுக்கத்துடன் அவரது மடியிலிருந்த கைகளின் பத்து விரல்களும் நீட்டியபடியே நாற்பத்தைந்து பாகை கோணத்தில் விரிந்திருந்தன. இயல்புக்கு மாறாக முகத்தைச் சுருக்கி அடிக்கடி கண்களை இறுக மூடுவதும் திறப்பதுமாக இருந்தார். இவைகளை அவதானித்ததன் மூலமாக இவரும் ஆட்டிசம் பாதிப்புக்குள்ளானவர் என்பதைப் புரிந்துகொண்ட சந்தியா அவ்விடத்தைக் கடந்து செல்ல முற்பட்டவேளையில் மீண்டும் தலையைச் சாய்த்து நாக்கை நீட்டியபடி பார்த்த மகனின் பார்வையும், முனகலும் அவளை அங்கேயே தடுத்து நிறுத்தியது.

சில நொடிகள் பாடிக்கொண்டிருந்தவரை உற்றுப் பார்த்தவாறே இருந்த தூயவன் திடீரென்று வயலினை வாசிக்க ஆரம்பித்தான். உடனேயே

**அங்கே ஒரு காதல் ஜோடியின் நிர்வாணச் சிலையின் கீழிருந்த இருக்கையில் அறுபத்தைந்து எழுபது வயது மதிக்கத்தக்க நோர்வேஜியத் தம்பதியருக்கு நடுவே நாற்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் நெஞ்சில் நாடி முட்டுமளவுக்கு கவிழ்த்து வைத்திருந்த தலையை இடமும், வலமுமாக உடலோடு சேர்த்து அசைத்தபடியே பாடிக்கொண்டிருந்தார்.**

பாடிக்கொண்டிருந்தவர் தலையை நிமிர்த்தி தூயவனைப் பார்த்துப் புன்னகை சிந்தியவாறே கால்கள் இரண்டையும் சட...சடவென தரையில் உதைத்தபடி உற்சாகமானார். அந்த வயோதிபத் தம்பதியர் இவர்கள் இருவரையும் கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டேயிருந்தனர். சந்தியாவின் பார்வை தம்பதியரின் பக்கம் திரும்பியபோது அந்தப் பெண்மணி அவளைப் பார்த்து "இவர் உன் மகனா?" எனக் கேட்டார்.

"ஆம், இவர் என் மகன் தான்" என்றாள் ஒரு கனிவான புன்னகையோடு.

"ஓ.. அப்படியா! இவரும் எங்கள் மகனைப் போல ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்டவரா?" என ஒருவித தயக்கத்தோடு கேட்ட பெண்மணிக்கு "ஆம்" எனத் தலையசைப்பிலே பதிலளித்தாள் சந்தியா.

"வா.. இதில வந்து இரு" என வாஞ்சையோடு எதிரே இருந்த இருக்கையைச் சுட்டிக்காட்டியவர் "இவர் எங்கள் மகன் ஜோன்" என்றவர். உங்கள் மகனின் பெயர் என்ன? எங்கே இருக்கிறீர்கள்? மகனுக்கு எத்தனை வயது?" போன்ற விபரங்களை எல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டதோடு, தாங்களும் இங்கே அருகில்தான் இருப்பதாகவும் தங்களுக்கு இவர் ஒரே மகன் என்றும், முப்பத்தெட்டு வருடங்கள் ஒரு குழந்தை உள்ளத்துடனேயே தங்கள் வாழ்வு கழிந்துவிட்டதாகவும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் எல்லாமே தங்களுக்கு இவர்தான் என்றும், தங்களையும் முதுமை நெருங்கிவிட்டதனால் இப்போதுதான் தாங்கள் இவரைப்பற்றிக் கவலைப்பட ஆரம்பித்திருப்பதாகவும் அவர் சந்தியாவிடம் மிகுந்த வேதனையோடு கூறிக்கொண்டிருந்ததை தன் காதிலும் வாங்கியவாறே அவரது கணவர் குழந்தைகள் இருவரையும் கண்வெட்டாது பார்த்துக்கொண்டிருந்தார்.

அப்போது பாடுவதை நிறுத்திவிட்டு சட்டென எழுந்த ஜோன், கைகளின் கட்டை விரலுக்கும், ஆள்காட்டி விரலுக்கும் இடைப்பட்ட பகுதியை தூயவனின் சக்கர நாற்காலியின் கைப் பிடியில் வைத்துத் தள்ளியவாறு சந்தோஷக் களிப்புடன் அவர்கள் இருந்த இடத்தையும் சிலையையும் சுற்றிவர தூயவனும் வயலினையும், வில்லையும் தூக்கிப்பிடித்து அசைத்தவாறே பூரிப்புடன் அமர்ந்திருந்தான்.

"எங்கட மகனால கை விரல்களை மடக்க முடியாது. ஆனால் நல்ல பலசாலி. இசையைக் கேட்பதிலும், பாடுவதிலும் ஆர்வம் இருந்தபடியால பாட்டுக்களைச் சொல்லிக்கொடுத்திருக்கிறோம். ஆனால் அவனுடைய குரல் வெளிப்பாடு எல்லோருக்கும் புரியாது. சிலவேளை உங்களுக்குப் புரிந்திருக்கலாம்" என்றவாறே சந்தியாவைப் புன்னகையோடு பார்த்தார் ஜோனின் தந்தை.

"ஓ.. அப்படியா.! நல்லாத்தானே பாடுகிறார். என்ர மகனுக்கும் இசை என்றால் ரொம்பப் பிடிக்கும்" என்றாள் சந்தியா. "அதனால் தானோ என்னவோ பார்த்த உடனேயே இருவருமே நல்ல ஒற்றுமையாகிவிட்டார்கள்" என்றார் ஜோனின் தாயார்.

"இதற்கு முன்பு ஒருபோதுமே உங்களை இங்கு கண்டதில்லையே" என்ற சந்தியா இருவரையும் ஏற இறங்கப் பார்த்தாள்.

"ஆம், நாங்கள் இங்கு வருவது மிகவும் குறைவுதான். நீங்கள் அடிக்கடி வருவீர்கள் போல, பிள்ளைகள் நல்ல நட்பாகிவிட்டார்கள் எனவே இனி அடிக்கடி வருவோம்" எனப் பதிலளித்தார் ஜோனின் தாயார்.

"ஆம், மகனுக்கு இங்கு வரப் பிடிக்கும் அதானல் ஒவ்வொரு கிழமையும் சனி, அல்லது ஞாயிறு இங்கு வந்துவிடுவோம்" என்று சந்தியா கூறிக்கொண்டு

இருக்கும்போதே ஜோன் சக்கர நாற்காலியைத் தள்ளிக்கொண்டுவந்து நிறுத்திவிட்டு சந்தியாவைப் பார்த்து வாய் பிளக்கப் புன்னகைத்தவாறே அவளருகில் அமர்ந்தார். அமர்ந்தவர் புறாவின் குறுகுறுப்பை ஒத்த ஒலியை எழுப்பியவாறே மெல்ல மெல்ல அரக்கியரக்கிச் சென்று அவளை உரசியபடியே இருந்தார்.

அதனைக் கடைக்கண்ணால் கவனித்த ஜோனின் தந்தை, "சரி..சரி.. நேரமாகுது புறப்படுங்கள் போவோம்" என்றவாறு எழுந்ததுமே, எதிர்வரும் சனிக்கிழமை இதேநேரத்தில் இதே இடத்தில் மீண்டும் சந்திப்பதாகக் கூறிக்கொண்டு விடைபெற்றுச் சென்றார்கள். புறப்பட மனமின்றியே ஜோன் தந்தையின் கைப் பிடியில் இழுபட்டுச் சென்றார். பிரிய மனமற்ற தூயவனும் தலையைத் திருப்பாமல் ஜோனையே பார்த்தவாறே அமர்ந்திருக்க சக்கர நாற்காலியைத் தள்ளியபடியே வீடு நோக்கி நடந்துகொண்டிருந்தாள் சந்தியா.

மறுநாள் இளைய மகன் வீட்டிற்கு வந்திருந்தான். அண்மைய சில நாட்களாக அவனின் முகத்தில் வழமையான சந்தோசத்தைக் காண முடிவதில்லை. சென்ற கிழமையும் வாடிய முகத்துடனேயே வந்துபோனான். இம்முறை உடலும் மெலிந்து மிகவும் கவலை தோய்ந்த முகத்துடனேயே வந்திருந்தான். அவனைப் பார்த்துக் குழப்பமடைந்த சந்தியா "என்ன நடந்தது.? ஏன் ஒரு மாதிரியாய் இருக்கிறாய்.?" எனக் கேட்டபோது "ஒன்றுமில்லை" என மழுப்பலான பதிலையே அளித்தானவன். ஆனாலும் சந்தியா விடவில்லை, "அப்பா ஏதும் பேசினாரா.? அல்லது உனக்கு அங்கிருக்கப் பிடிக்கவில்லையா.?" என அவள் துருவ ஆரம்பித்ததுமே "அப்பாவுக்கும் எலினாவுக்கும் கொஞ்சக் காலமாக ஒரே சண்டைதான். அதனால ரெண்டு கிழமைக்கு முன்னர் அவா அப்பாவை விட்டுப் பிரிஞ்சு போயிட்டா, இப்ப நானும் அப்பாவுந்தான் தனிய இருக்கிறம்" என்று யாருக்குமே சொல்லக்கூடாதென அப்பா சொல்லிவைத்த விடயத்தை அம்மாவிடம் சொல்லி முடித்தான் இளைய மகன்.

அதனைக் கேட்டதுமே "அப்படியெண்டால் நீ இங்க எங்களோடையே வந்திருக்கலாமே" என்ற தாய்க்கு "அப்பா அங்க தனிச்சுப்போயிடுவாரே" என்றானவன் ஏக்கத்துடன். மேலும் அதுபற்றிப் பேசாமல் சாப்பாடு போட்டுக்கொண்டுவந்து மகனுக்கு ஊட்டிவிட்டாள் சந்தியா. சாப்பிட்டு முடிந்ததும் ராகுலன் வெளியே வந்து நின்று கோர்ன் அடிக்க அம்மாவைக் கட்டியணைத்து முத்தமிட்டு விடைபெற்றுக்கொண்டவன் பரிதாபத்துக்குரிய முகத்துடன் காரில் ஏறிச்செல்ல, மகனை நினைத்து ஏக்கப்பெருமூச்சு விட்டபடியே நின்றாளவள்.

■

தூயவனுக்கு இரண்டாவது கொரோனாத் தடுப்பூசி போடுவதற்கான நாள். வெளியே வாடகைக் கார் வந்து காத்து நின்றது. அவசர அவசரமாக மகனை வெளிக்கிடுத்திக்கொண்டிருந்தாள் சந்தியா. வாடகைக் கார்க்காரர் வழமையாக வரும் ராஜன் என்ற தமிழர் என்பதனால் அவர் அவசரப்படவில்லை. வீட்டுக்கு அருகே காரை நிறுத்திவிட்டு சக்கர நாற்காலியை மடித்துக் காரில் ஏற்றிய ராஜன் தாயின் கைப்பிடியில் மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்தபடி நடந்துவந்த தூயவனை கைத்தாங்கலாகப் பிடித்து காரில் அமரவைத்தார். பின் கதவைத் திறந்துகொண்டு சந்தியா ஏறியமர்ந்ததுமே காரைக் கிளப்பிய ராஜனிடம் சந்தியா கேட்டாள் "எப்பிடிப் பிள்ளைகள் சுகமா இருக்கினமே.?"

"ஓமோம்.. சுகமா இருக்கினம், என்னதான் இருந்தாலும் பிள்ளைகளுக்குத் தாய்

இருக்கிறதுபோல வராதுதானே" என்றார், இரண்டு வருடங்களுக்கு முன்னர் கொடிய புற்றுநோய்க்கு மனைவியைப் பறிகொடுத்திருந்த ராஜன்.

'தாய் இருக்கிறதுபோல வராதுதானே' என்ற வார்த்தைகள் சந்தியாவுக்கு இளைய மகனின் ஞாபகத்தையே வரவழைத்தது. அவனை நினைத்து ஏங்கியவள் மனதை மாற்ற யன்னலினூடே கண்களை வெளியே எறிந்தபடியிருந்தாள்.

ஊசி போடும்வரை காத்துநின்று மீண்டும் வீட்டில் கொண்டுவந்து இறக்கிவிட்டுப் புறப்படும்போது, "பிள்ளைகளுக்கு அம்மாவும், அப்பாவும் இருக்கிறதுதான் நல்லது" எனக் கூறித்தூயவனின் கன்னத்தைச் வெட்டிச் சாப்பிட்டுத் தேநீரும் பருகிவிட்டுப் புறப்படும்போது ஒருகணம் வாசலில் நின்று சந்தியாவைத் திரும்பிப் பார்த்த ராஜன், "என்ர பிள்ளைகளுக்கு உங்களை மாதிரி ஒரு அம்மாவும், உங்கட பிள்ளைகளுக்கு என்னை மாதிரி ஒரு அப்பாவும் இருந்தால் எவ்வளவு நல்லா இருக்கும்

யோசிச்சுப்பாருங்கோ" எனக் கூறிவிட்டு விறுவிறுவென்று நடையைக்கட்டி மறைந்தார்.

எதிர்பார்த்திராத ராஜனின் வரவும், வார்த்தைகளும் சந்தியாவுக்குள் குழப்பங்களைக் குடிபுகுத்தின. ராஜனின் மன நிலையைப் புரிந்து கொண்டாலுங்கூட தன் மகனுக்காக மட்டுமே வாழ்வது என்ற தன்னுடைய மன நிலையிலிருந்து

'தாய் இருக்கிறதுபோல வராதுதானே' என்ற வார்த்தைகள் சந்தியாவுக்கு இளைய மகனின் ஞாபகத்தையே வரவழைத்தது. அவனை நினைத்து ஏங்கியவள் மனதை மாற்ற யன்னலினூடே கண்களை வெளியே எறிந்தபடியிருந்தாள்.

செல்லமாகத் வருடிவிட்டுச் சென்றார் ராஜன்.

மறுநாள் காலை அழைப்புமணி கேட்டுச் சந்தியா கதவைத் திறந்தபோது, கேக் பெட்டியும் பூங்கொத்துமாக நின்ற ராஜன், "தூயவனுக்குப் பிறந்தநாள் வாழ்த்துக்கள்" என்றார்.

"எப்படித் தெரியும் உங்களுக்கு.?" ஆச்சரியத்துடன் கேட்டாள் சந்தியா.

"நேற்று ஊசி போடப் போகைக்க தூயவன்ர 'டேட் ஒப் பேர்த்தைப் பார்த்துவிட்டேனே" என்றார் ஒரு குஷியான புன்னகையுடன்.

"ஓகோ, அப்படியா.! ரொம்ப நன்றி, உள்ளே வாங்கோ 'ரீ' குடித்துவிட்டுப் போகலாம்" எனச் சந்தியா அழைத்ததுமே, உள்ளே சென்று தூயவனின் கையால் கேக் மாறுவதற்கு அவள் தயாராகவில்லை. இனிமேல் வேறொரு வாடகைக் காரைத்தான் பயன்படுத்தவேண்டுமென முடிவெடுத்துக்கொண்டு அதையே செயற்படுத்தினாள். ஆனாலும் ராஜன் விடுவதாயில்லை. அலைபேசியில் காலை வணக்கம், மாலை வணக்கமென குறுந்தகவல்கள் அனுப்பித் தினசரி சுகம் விசாரித்தபடியே இருந்தார்.

இன்று சனிக்கிழமை காலையிலிருந்தே சூரியனும், முகில்களும் ஒழித்துப்பிடித்து விளையாடிக்கொண்டிருந்தன. மகனைப் பூங்காவுக்கு அழைத்துச் செல்வதா விடுவதாவென இரு மனதில் இருந்த சந்தியாவுக்குச் சென்ற வாரம் சந்தித்த வயோதிபத் தம்பதியருக்கு சனிக்கிழமை வருவதாக உறுதியளித்திருந்தது ஞாபகத்தில் வரவே மகனை அழைத்துக்கொண்டு

புறப்பட்டாள். பூங்காவில் சன நடமாட்டம் குறைவாகவே இருந்தது. சொன்னதுபோலவே ஜோனின் தாயார் அதே இடத்தில் அமர்ந்திருந்தார். சற்றுத் தள்ளியிருந்த நீரோடையின் அருகே ஜோனின் தந்தை புறாக் கூட்டத்திற்கு பாண் துண்டுகளைப் பிய்த்துப் போட்டுக்கொண்டிருக்க, ஜோன் புறாக்களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார். சந்தியாவையும், தூயவனையும் கண்டதும் மகிழ்ச்சியுடன் வரவேற்ற ஜோனின் தாயார் தங்கள் வளவில் விளைந்ததாகக் கூறி ஒரு கூடையில் கொண்டுவந்திருந்த ஜெர்ரிப் பழங்களை அவர்களிடம் கையளித்தார்.

தூயவனைக் கண்டதும் சந்தோஷத்துடன் எழுந்தோடி வந்த ஜோன் சக்கர நாற்காலியைத் தள்ளிக்கொண்டு புறாக்களின் பகுதிக்குச் சென்றான். புறாக்களைப் பார்த்த மகிழ்வில் பொத்திப்பிடித்த கைகளை முகத்துக்கு நேரே ஆட்டி "உவ்..உவ்.." எனக் குரலெழுப்பி ஆரவாரம் செய்தான் தூயவன்.

சந்தியாவும் ஜோனின் தாயாரும் பேசிக்கொண்டிருக்கையில், "எப்படிச் சுகம்?" எனச் சந்தியாவைப் பார்த்துக் கேட்டவாறே வந்தார் ஜோனின் தந்தை. "ம்.. நல்லா இருக்கிறம். நீங்கள் எப்படி..?" அவளும் பதிலுக்குக் கேட்டாள்.

"ஓ.. எனக்கென்ன குறை காதல் மனைவி இருக்கும்போது" என்றவர் புன்முறுவலோடு வலது கையால் மனைவியை அணைத்துக்கொண்டு அமர அவரது மார்பில் சாய்ந்துகொண்ட மனைவியும் காதலுடன் அவரின் இடது கையைப் பற்றிக்கொண்டார்.

"ஆஹா.. உங்களைப் பார்க்க எவ்வளவு சந்தோசமாக இருக்கிறது. எப்படி இந்த வயதிலும் இவ்வளவு ஒற்றுமையாகவும், சந்தோசமாகவும் இருக்கின்றீர்கள்.?" ஆச்சரியத்துடன் கேட்டாள் சந்தியா.

"அதுதான் சொன்னனே காதல் தான், வேறயென்ன.." என்றபோது அண்ணாந்து பார்த்த மனைவியின் நெற்றியில் சூடாகவொரு முத்தத்தைப் பதித்தார் அவர்.

"நான் இப்ப மகனுடன் தனியாகத்தான் இருக்கிறன். மகனுக்கு ஆட்டிசம் என்று தெரிந்ததிலிருந்தே எனக்கும் கணவருக்குமிடையில் அடிக்கடி பிரச்சினைகள் ஏற்பட்டுப் பிரிந்துவிட்டோம். ஆனால் நீங்கள் எப்படி இவ்வளவு சந்தோசமாகவும் அந்நியோன்யமாகவும் இருக்கின்றீர்கள். இப்படியான ஒரு குழந்தையால் உங்களுக்குள் பிரச்சினைகள் ஏற்படவில்லையா?" என மீண்டும் ஆச்சரியம் தாளாமல் கேட்டாள்.

"இல்லையே, இப்படியான குழந்தையால் எங்களுக்குள் அன்பும், அந்நியோன்யமும் கூடியதே தவிரக் குறையவேயில்லை" என்ற ஜோனின் தாயார் கணவனின் அணைப்புக்குள் இருந்தவாறே மீண்டும் அவரது முகத்தை காதலுடன் அண்ணாந்து பார்த்தார்.

"அப்படியா.! ஆனால் என் கணவரோ நான் இப்படியான ஒரு பிள்ளையைப் பெத்துவிட்டேன் என்றும், இது எனது பரம்பரையிலிருந்துதான் வந்ததென்றும் என்மீது வெறுப்பைக் காட்ட ஆரம்பித்துவிட்டார்" என்றவள் கலங்கிய கண்களைக் காட்டாது முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

"அதெப்படி நீ மட்டுமா பெத்தாய்? அவரும் சேர்ந்துதானே.." என்ற ஜோனின் தந்தைக்குப் பதிலேதும் சொல்லாமல் தலையைக் குனிந்துகொண்ட சந்தியாவின் மனப்பாரத்தைத் தன் மனத்தால் அளந்துகொண்ட ஜோனின் தாயார் அந்த உரையாடலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்குடன் "அங்கே பாருங்கள் அவர்களுக்கென்ன குறை எந்தக் கவலைகளும் இன்றி எங்களை விடவும் அவர்கள்தான்

மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்" என்றபடி எழுந்து பிள்ளைகளை நோக்கி நடந்தார்.

சட்டென வாடிப்போன சந்தியாவின் முகத்தைக் கவனித்த ஜோனின் தந்தை, "உண்மையில் எங்களுக்குள் வெறுப்புணர்ச்சிகள் இருக்கவில்லைத்தான். அவளுக்கு இப்படியான ஒரு குழந்தையைக் கொடுத்துவிட்டேனே என்று நான் அவளுக்காகப் பரிதாபப்பட்டேன்.

எனக்கு இப்படியான குழந்தையைத் தந்துவிட்டதாக அவள் எனக்காகப் பரிதாபப்பட்டாள்.

ஒருவர் மீது ஒருவர் கொண்ட அந்தப் பரிதாப உணர்ச்சிகள்தான் எங்களுக்குள் அளவுகடந்த காதலை வளர்த்துவிட்டது. ஆனால், நாங்கள் ஒருபோதுமே சுயபரிதாபம் கொண்டவர்களாக இருந்ததில்லை. சுயபரிதாபம் கொள்வதுதான் ஆபத்தானது. உன் துயரங்களையெல்லாம் தாங்கிக்கொள்ள உன்னிடம் போதுமான பலம் இருக்கிறதென்று நம்பு, அதுவே உன்னைத்துயரங்களிலிருந்து மீட்டெடுக்கும்" என்று அவர் கூறிமுடித்தபோது தூயவன் வயலினை வாசிக்கவும், ஜோன் பாடவும் ஆரம்பித்திருந்தார்கள்.

இடையிடையே பாடலை நிறுத்திவிட்டு ஜோன் சந்தியாவின் பக்கமாகத் தலையைச் சரித்து ஒருவிதமான பார்வை பார்க்க அதனைக் கவனிக்கும் ஜோனின் தந்தை பாடு.. பாடு.. எனச் சைகையில் காட்டுவதுமாக இருந்தார். பிள்ளைகளின் இசையையும், பாடலையும் இரசித்தபடி மூவரும் நிறைய விடயங்களைப் பேசிக்கொண்டார்கள். இரண்டாவது சந்திப்பிலேயே நீண்ட காலம் அறிமுகமானவர்கள் போல் அவர்களுக்குள் நல்ல நட்புறவு மலர்ந்திருந்தது.

"இந்த நாட்டில் சிறப்புக் குழந்தைகளுக்கான சலுகைகள் அனைத்தும் உங்கள் மகனுக்குக் கிடைக்கிறதா.?" எனக் கேட்ட ஜோனின் தந்தை, ஏதாவது உதவிகள், ஆலோசனைகள் தேவையெனில் தங்களை அணுகும்படியாகக் கூறித் தமது தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்தபோது சட்டென எழுந்துவந்த ஜோன் சந்தியா மீது ஒருவிதமான குறுகுறு பார்வையைப் பதித்தவாறே அவளருகில் அமர்ந்துகொண்டார்.

அவரது கைகள் படபடத்து ஆடின, வார்த்தைகள் வராமலேயே உதடுகள் துடிதுடித்தன. அந்த உடல்மொழியைப் புரிந்துகொண்ட ஜோனின் தந்தை மனைவியைப் பார்த்து "சரி, இனியுமிங்க இருக்க ஏலாது நாங்கள் புறப்படுவோம்" என்றதுமே, அவர்கள் விடைபெற ஆயத்தமானார்கள். ஜோனின் நடவடிக்கையையும் பெற்றோரின் பரபரப்பையும் சந்தியாவினால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரே குழப்பமாகவே இருந்தது. இம்முறையும் தூயவனும் ஜோனும் பிரிய மனமின்றியே ஆளுக்கொரு பக்கமாகப் பிரிந்து சென்றனர்.

வீட்டுக்கு வந்த சந்தியா மகனைக் குளிப்பாட்டி உணவூட்டிப் படுக்கவைத்துவிட்டு வந்து அலைபேசியை பார்த்தபோது நிர்மலா அக்காவிடமிருந்து இரண்டு அழைப்புகள் வந்திருந்தன. தமிழ்ச் சமூகத்திலிருந்து சந்தியா தள்ளி வந்துவிட்டபின்பும் நோர்வேக்கு வந்த காலத்திலிருந்தே குடும்ப நண்பர்களாகப் பழகிய நிர்மலா அக்காவை மட்டுமே அவளால் தள்ளிவைக்க முடியாதவளாக இருந்தாள். தன் மகனின் இயல்பைப் புரிந்துகொண்டு நிர்மலா அக்கா அவன் மீது காட்டும் அந்த அளவு கடந்த அன்பு தான் அதற்குக் காரணமாகக்கூட இருக்கலாம். உடனேயே நிர்மலா அக்காவுடன் தொடர்புகொண்டாள்.

"வணக்கம் அக்கா.!"

“ஹலோ சந்தியா.! நாளைக்கு வீட்டில நிற்பீங்களே? மகளின்ர கலியாணக் காட் கொண்டுவருவமெண்டு இருக்கிறம்.”

“எதுக்கக்கா காட் கொண்டுவந்தெல்லாம் மினக்கெடுவான், போனில சொன்னாலே போதாதே.”

“என்னயிருந்தாலும் சம்பிரதாயம் எண்டு ஒண்டிருக்கல்லே.”

“ஏனக்கா நாங்கள் அப்படியே பழகினனாங்கள்.”

“ஓமடியப்பா அதுவுஞ்சரிதான். அதிருக்கட்டும் உன்னோட இன்னொரு விஷயமும் கதைக்கவேணும் எண்டிருந்தனான், இவன் டக்சி ராஜன் என்ர மனுஷனோட நல்ல பழக்கமெல்லே, அவன் என்னவெண்டால் தான் உன்னை லவ் பண்ணுறதாயும் கலியாணம் கட்டப்போவதாயும் என்ர மனுசனிட்டச் சொன்னானாம், என்னடியப்பா எனக்குத் தெரியாமல் உங்க ஏதும் நடக்குதே ?”

“ஐயோ அக்கா.! இதென்ன பரிசுகேடாயிருக்கு” எனக் கையை உதறியவள் நடந்த சம்பவங்களை நிர்மலா அக்காவிடம் ஒப்புவித்தாள்.

“சரியடியப்பா, உன்ர காலமுமென்ன முடிஞ்சே போச்சுது. உனக்கும் வாழ்க்கை இருக்குத்தானே, எவ்வளவு காலத்துக்குத்தான் தனியாயிருந்து காலத்தைக் கடத்தப்போற, எதுக்கும் வடிவா யோசிச்சு முடிவெடு” என்ற ஆலோசனையோடு முடித்துக்கொண்டாள் நிர்மலா அக்கா.

ஒருதலையாக நேசித்துவிட்டு அதனைக் காதலென்று சொல்லித்திரியும் ராஜனை நினைக்க அவளுக்குச் சிரிப்பு மட்டுமல்ல, கோபமும் வந்தது அதனால் அவனது குறுஞ்செய்தியில் வரும் நலம் விசாரிப்புகளுக்குப் பதிலளிப்பதைக்கூட அன்றோடு நிறுத்திக்கொண்டாள்.

■

மீண்டும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததைத் தொடர்ந்து பொது இடங்களில் மக்கள் நடமாட்டம் குறைந்திருந்தது. இந்நிலையில் மகனை வீட்டுக்குள் முடக்கி வைத்திருப்பதென்பது பெரும் பாடாகவிருந்தது சந்தியாவுக்கு. சனிக்கிழமையும் அதுவுமாய் என்ன செய்யலாம் என யோசித்துக்கொண்டிருந்தபோதே ஜோனின் தாயிடமிருந்து வந்த அலைபேசியானது அவளையும், மகனையும் அவர்களின் வீட்டிற்கு அழைத்திருந்ததையடுத்து வாடகைக் கார் ஒன்றில் அவர்களின் அந்தப் பிரமாண்டமான வீட்டின் முன் போய் இறங்கியதுமே அமோக வரவேற்புக் கிடைத்தது.

தூயவனும் ஜோனும் ஆரவாரங்களினால் தங்களின் மன மகிழ்வை வெளிப்படுத்தினார்கள். வயலின் இசையும் பாட்டுமாய் அவர்களின் கச்சேரி களைகட்டத் துவங்கியதுமே ஜோனின் தாயார் தங்களின் வீட்டைச் சந்தியாவுக்குச் சுற்றிக் காட்ட ஆரம்பித்தார். ஜோனின் தந்தையார் வீட்டிற்கு வெளியே நெருப்பெரித்து மதிய உணவுக்கான இறைச்சித் துண்டுகளை வாட்டி எடுத்துக்கொண்டிருந்தார்.

வெளி வளவையும் பூ மரங்களையும் சுற்றிப் பார்த்துக்கொண்டு வருகையில் ஒரு ஆப்பிள் மரத்தின் கீழ் கட்டியணைத்து உதட்டோடு உதடு ஒட்டியபடி நின்ற காதலர்களின் சிலை ஒன்றைக் கலை ரசனையோடு கண் வெட்டாது பார்த்து நின்றாள் சந்தியா. அதனைக் கவனித்த ஜோனின் தாயார் உதட்டோரம் அரும்பிய ஒரு நளினப் புன்னகையுடன் “அதுசரி, உனக்காரும் காதலர்கள் இருக்கினமே?” என கேட்டார்.

சட்டெனச் சிலையிலிருந்து பார்வையைத் திருப்பியவள் வெட்கப் புன்னகையுடன் “இல்லை, அப்படி ஒருவரும் இல்லை” என்றாள். “என்னது! இந்த இளமையும்,

அழகும் ஒருத்தன்ர கண்களைக் கூடவா உறுத்தவில்லை?" எனக் கேட்டவர் ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தார்.

"ம்.. ஒருத்தற்ர கண்களை உறுத்திக்கொண்டுதான் இருக்குது, ஆனால் நான்தான் சம்மதிக்கயில்ல" என்றவள் ராஜனின் ஒருதலைக் காதற்கதையை அவரிடம் முழுமையாகச் சொல்லி முடித்தாள்.

"அட, பிறகெதுக்கு யோசிக்கிறீர்? இளமை இருக்கும்போதே வாழ்கையை அனுபவிச்சிடவேணும், காலத்தைக் கை விட்டால் திரும்பவுமது கைக்கெட்டாது. கலியாணந்தான் கட்டவேணும் எண்டில்லையே. ஒத்துப்போற காலம் வரைக்குமாவது ஒருத்தருக்கொருத்தர் துணையா வாழ்ந்திட்டுப் போகலாமே" என ஆலோசனையை அள்ளி வழங்கினார் ஜோனின் தாயார்.

அன்றைய பொழுது மிகவும் மகிழ்ச்சிகரமானதாக கழிந்துகொண்டிருந்தது. ஜோனோடு விளையாடிய தூயவன் வழமைபோன்று இல்லாமல் சக்கரநாற்காலி இல்லாமலேயே நீண்ட நேரங்கள் நிதானமாகவும் வேகமாகவும் நடந்து திரிந்தான். அதனைப் பார்த்து அதிசயித்த சந்தியாவுக்குள் உற்சாகமும், நம்பிக்கையும் அதிகரித்தது.

விளையாடிக் களைப்படைந்திருந்த தூயவன் மதிய உணவின் பின் அவர்களின் ஷோபாவிலேயே சுருண்டு படுத்துத் தூங்கிவிட்டான். பொழுதுபோகாத ஜோனின் சிந்தனை இப்போது சந்தியாவின் பக்கம் திரும்பியது. ஒருவிதமான குறுகுறு பார்வையுடன் சந்தியாவின் அருகே வந்தமர்ந்தவன் "க்கும்.. க்கும்.." என முக்கி முனகியபடியே அவளது தோளோடு தோளை உரசிக்கொண்டான். அதனை அசௌகரியமாக உணராத சந்தியா கனிவானதொரு புன்னகையோடு அமர்ந்திருந்தாள்.

சட்டென அவன் கையொன்றைத் தன் காற்சட்டையின் உள்ளே நுழைக்க அதனைக் கவனித்த ஜோனின் தாயார் "பார் சேட்டையை இவனும் தகப்பனைப் போலவே பெருங்காதலன் தான்" எனக் கண் சிமிட்டிச் சிரித்தார். அதனைக் கேட்டு உதட்டுக்குள் சிரித்தவாறே உடனேயே சுதாரித்துக்கொண்ட ஜோனின் தந்தை அருகிலிருந்த அறைக்குள் நுழைந்தார்.

திறந்து கிடந்த கதவினூடே கண்களை உள்ளே எறிந்த சந்தியா, பிளாஸ்ரிக் பை போன்று மேசையில் கிடந்த ஒன்றை அவர் எடுத்து காற்றடிக்கும் ஒரு இயந்திரத்துடன் பொருத்தி அதனை இயக்கியதுமே மொழு மொழுவென்ற அழகான பெண் போன்ற தோற்றமுடைய மெழுகுப் பொம்மை ஒன்று உருவானதைக் கண்ணுற்றாள். அதனைக் கட்டிலில் வைத்துவிட்டு வெளியே வந்த ஜோனின் தந்தை கண்களைச் சிமிட்டியபடியே "உள்ளே வா" எனக்

கையைப்பிடித்து அழைத்துச் சென்று ஜோனை உள்ளே அனுப்பிக் கதவைச் சார்த்திவிட்டு "கொஞ்ச நேரத்தில் இவனும் அமைதியாகத் தூங்கிவிடுவான். எல்லா உணர்ச்சிகளுக்குமே வடிகால் ஒன்று தேவைதான்" என்றபடி வந்தமர்ந்தார். அதனைப் புரிந்துகொண்ட சந்தியாவுக்கு மகனின் எதிர்காலத்தை நினைத்துப் பார்த்தபோது திக்கென்று இருந்தது.

■

பொது நிகழ்வுகளுக்குச் செல்வதைச் சந்தியா எப்போதோ குறைத்துவிட்டிருந்தாலும் நிர்மலா அக்காவின் மகளின் திருமணம் தவிர்க்கமுடியாததாக இருந்தது. கொரோனாவினால் கொண்டாட்டங்களில் நூறுபேர் அளவிலேயே தற்போது கூடலாம் என்ற நிலையில் சனங்களின் வருகை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அங்கே ஏற்கனவே தந்தையோடு வந்திருந்த

இளைய மகன் எழுந்தோடிவந்து தாயைக் கட்டியணைத்து முத்தமிட்டுக்கொண்டதோடு, தம்பியைப் பார்த்ததும் முகத்தில் ஆரவாரத்தைக் காட்டிய அண்ணனையும் ஆரத் தழுவிக்கொண்டான்.

அதனைக்கவனித்தவறே சங்கடத்துடன் சற்றுத் தூரத்தே அமர்ந்திருந்தான் ராகுலன். தாலிகட்டி முடிந்து பந்தியும் பரிமாறப்பட்டபின் மாலை நேரக் கேக் வெட்டுதலுக்கான தயார்ப்படுத்தல்கள் மண்டபத்தில் நடந்துகொண்டிருக்க, கரோக்கிசையில் பாட்டுக் கச்சேரியும் ஒருபக்கம் நிகழ்ந்துகொண்டிருந்தது.

வந்ததிலிருந்தே ராகுலனின் கண்கள் தங்களையே வட்டமிட்டுக்கொண்டிருப்பதாக உணர்ந்த சந்தியா "அப்பா தனியாக

இருக்கிறார் நீ போய் அவரோடு இரு" எனக் கூறி இளைய மகனை அனுப்பிவைத்தவள் மகனைப் பார்க்கத் திரும்பிய போதெல்லாம் தொடர்ந்தும் ராகுலனின் பார்வை தன்மீதே படிந்திருப்பதை உணர்ந்து சங்கடத்தில் நெளிந்தாள். அவனது அந்தப்பார்வை வித்தியாசமானதாக இருந்தது. காதலித்துத் திரிந்த காலங்களில் அவளை அவன் பார்த்த பார்வையது. சட்டென முகத்தைத் திருப்பியவள் மீண்டும் வேதாளத்தை முருங்கையில் ஏற விடக்கூடாது என்பதில் உறுதியாகவிருந்தாள்.

கேக்வெட்டி முடிந்ததும் மணமக்களுடன் படம் எடுப்பதற்காக எல்லோரும் வரிசையில் முண்டியடித்தார்கள். அப்போது எழுந்தோடிவந்த இளைய மகன் "போட்டோ எடுக்க அப்பா உங்களையும் வரட்டுமாம்" என்றான்.

சுருக்கென்று வந்த கோபத்தை மகனிடம் மறைத்துக்கொண்டு "இல்லை அண்ணா அந்த மேடையில் ஏறமாட்டான், நாங்கள் வரமுடியாது என்று சொல்" எனக்கூறி அவனை அனுப்பிவைத்தவளுக்கு அதற்குமேலும் அங்கிருப்பதற்கு மனம் இடங்கொடுக்கவில்லை. எழுந்து வீட்டிற்குப் போய்விடலாமென நினைத்தபோதே அவ்வளவு நேரமும் பொறுமையாகவிருந்த தூயவன் சட்டெனக் கையில் பிடித்திருந்த வயலினை இசைக்க ஆரம்பித்தான்.

எல்லோருடைய பார்வையும் அவனின் பக்கமாகத் திரும்பியது. அப்போது அவர்களை நோக்கி ஓடிவந்த நிர்மலா அக்கா கரோக்கி இசையில் பாடிக்கொண்டிருந்தவர்களின் ஒலிபெருக்கியில் தூயவனின் வயலின் இசையை இசைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்ள, வயலின் ஆசிரியரிடம் பயற்சி எடுத்த ஏதாவதொரு பாடலை இசைக்கும்படி தூயவனுக்குப் புரியும்படியாகக் கூறி அவனை நிர்மலா அக்காவுடன் அனுப்பிவைத்தாள்.

ஒலிபெருக்கியின் முன் போய் நின்ற தூயவன் உடலை ஒரு உலுப்பு உலுப்பிவிட்டு தலையைச் சாய்த்தபடி தாயைப் பார்த்தான். கீழ் உதடு கடித்த புன்னகையுடன் தாய் பெருவிரலைத் தூக்கிக் காட்டியதுமே தலையை நிமிர்த்திய யோசனையோடு அண்ணாந்து பார்த்தவன் அடுத்தகணமே 'குறையொன்றுமில்லை மறைமூர்த்தி கண்ணா குறையொன்றுமில்லைக் கண்ணா' என்ற பாடலை வாசிக்க ஆரம்பித்ததுமே சபை நிசப்தமானது.

பாடல் முடிந்தபோது அமைதியில் உறைந்திருந்தவர்களின் கண்கள் கசிந்திருக்க, தாயின் இதயம் கனிந்திருந்தது. தொடர்ந்து இசைக்கும்படியாக எல்லோரும் கேட்டுக்கொள்ள உற்சாகத்துடன்

பயிற்சி எடுத்திருந்த பாடல்கள் எல்லாவற்றையுமே இசைத்து முடித்துவிட்டு மீண்டும் அவன் தலையைச் சாய்த்துத் தாயைப் பார்த்தான். தாயும் பெருமையோடு மகனைப் பார்த்த கணத்தில் மண்டபம்

கரகோசத்தால் நிறைந்தது. தூயவனைத் தாயிடம் அழைத்துவர நிர்மலா அக்கா செல்வதற்குள் பாய்ந்தோடிச் சென்ற ராகுலன் அவனை அணைத்தபடி கைத்தாங்கலாக அழைத்துவந்து சந்தியாவின் அருகில் இருத்தியதும் வேண்டுமென்றே யாரோவொரு பிறத்தியானுக்குக் கூறுவதுபோல் அவனின் முகத்தைக் கூட நிமிர்ந்து பார்க்காமலேயே "உதவிக்கு நன்றி" என்றாள். அந்த வார்த்தைகளால் முகத்தில் அறை வாங்கியவன்போல் சென்றமர்ந்தவன் மீண்டும் மீண்டும் அவளையொரு ஏக்கப்பார்வை பார்த்தபடியே இருந்தான்.

தூயவனின் திறமையைக் கண்ட பலரின் பாரட்டுதல்களால் அவளுடைய மனம் குளிர்ந்துபோனது. பாராட்டுதல்கள் எல்லாவற்றையுமே தனது முயற்சிக்கும், மகனின் உழைப்புக்கும் கிடைத்த பிரதிபலனாகவே எண்ணிப் பெருமைப்பட்டவாறே வீட்டை வந்தடைந்தபோது ராஜனின் குறுஞ்செய்திகளும் அடுக்கடுக்காய் அவளின் அலைபேசியை வந்தடைந்தன. இப்போதெல்லாம் ராஜனின் குறுஞ்செய்திகளால் அவளின் அலைபேசி அடிக்கடி சத்தமிட்டவாறே இருக்கிறது. இப்போதவை வெறும் நலம் விசாரிப்புகளாய் அல்லாமல் பெரும் காதல் தொல்லைகளாக மாறியிருந்தன. அதுவேறு அவளுக்கு ஒருபக்கம் தலையிடியைக் கொடுத்தவண்ணமிருக்க, இன்றைய ராகுலனின் பார்வையும், செயல்களும் அவளுக்குள் புதுவிதமான குழப்பங்களையும், எரிச்சலையும் உண்டுபண்ணியது.

▪

கொரோனாவின் இரண்டாம் அலை சூடு பிடித்திருந்த நிலையில் மீண்டும் முடக்கம் ஏற்பட்டு வீட்டுக்குள் அடைந்து கிடந்த தூயவன் கடந்த சில நாட்களாக "ஜோ.. ஜோ.." என உச்சரித்தபடியே ஜோனின் நினைவிலேயே சுத்தித் திரிந்தான். அவனை நாளை சனிக்கிழமை ஜோனின் வீட்டிற்கு அழைத்துச் செல்லலாமா என்று யோசித்துக்கொண்டிருந்தபோதே ஜோனின் தாயிடமிருந்து வந்த அலைபேசியானது, ஜோனின் தந்தைக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்ட நிலையில் கடந்த மூன்று நாட்களாக வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டு இருந்ததாகவும், இன்று அவருக்கு மூச்சு விடக் கடினமாக இருந்தமையினால் அவசர உதவிக்கு அழைத்ததாகவும், இப்போது அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இயற்கைச் சுவாசம் செலுத்தப்பட்ட நிலையில் இருப்பதுமான கவலையான செய்தியைத் தெரிவித்தது.

ஞாயிற்றுக்கிழமை வருவதாகச் சொன்ன இளைய மகன் தாயும், அண்ணனும் வீட்டிலேயே இருப்பதை அறிந்து சனிக்கிழமையே வந்துவிட்டான். வந்தவன் எதையோ சொல்ல எத்தனித்தபடி தயக்கத்துடன் தன்பின்னால் அலைவதை உணர்ந்த சந்தியா மகனை இருத்திவைத்துக் கதை கேட்டபோது "நாங்கள் எல்லோரும் மீண்டும் ஒன்றாகச் சேர்ந்து வாழ்வதற்கு அப்பா ஆசைப்படுகிறார் உங்களுக்கும் விருப்பமா?" எனக் கண்களில் மின்னல் தெறிக்கக் கேட்டான்."இல்லையப்பு. அது சரிவராது, திரும்பவும் அவர் எங்களை விட்டுட்டு போகமாட்டார் எண்டதில எனக்கு நம்பிக்கையில்ல. உனக்குப் பதினெட்டு வயசாக நீ விரும்பினால் எங்களோடையே வந்திருக்கலாம்" என்றாளவள் உறுதியான குரலில். அதனைக் கேட்டவனின் முகத்தில் சந்தோஷம் தொலைந்துபோக அவனுக்குப் பிடித்தமான உணவு வகைகளைச் சமைத்துப் பரிமாறி அன்பைப் பொழிந்து மீண்டும் மகனின் முகத்தில் சந்தோஷத்தை வரவழைத்தாள் தாய்.

விடிந்ததும் ஜோனின் தாயை அலைபேசியில் அழைத்து ஜோனின்

தந்தையின் நலத்தை விசாரித்தபோது அவரது சுவாசக்கோளாறு இன்னமும் சீராகவில்லையாம் என அறிந்த சந்தியாவின் மனத்தைக் கவலைகள் இறுக்கமாகக் கௌவிக்கொண்டன. யோசனையில் ஆழ்ந்திருக்கையில் குறுஞ்செய்தி அனுப்பிக் களைத்துப்போன ராஜன் அலைபேசி அழைப்பில் வந்தான். பதிலளிப்பதா விடுவதா என்ற குழப்பத்துடன் அலைபேசியைக் கையிலெடுத்தவள் அழைப்பை ஏற்றுக்கொண்டு "ஹலோ" என்றாள்.

"ஹலோ நான்தான் ராஜன். உங்களை ஒருக்கால் சந்திச்சுக் கதைக்கலாமா பிளீஸ்" தயங்கித் தயங்கியே கேட்டான்.

"சொறி கதைக்கிறதுக்கு ஒண்டுமில்ல, நீங்கள் நினைக்கிறதொண்டும் சரிவராது. தயவுசெய்து என்னைத் தொந்தரவு செய்யாதிங்கோ பிளீஸ்" தொடர்பைத் துண்டித்துக்கொண்டாள். உறவுகளாலேயே ஒதுக்கப்பட்ட தன் மகனை இந்தச் சமூகத்தில் ஒருவனாய் மற்றவர்களும் மதிக்கும்படியாக உயர்த்தவேண்டும் என்ற கனவைத் தவிர வேறு எதையுமே இலட்சியமாகக் கொண்டிராதவள் மீண்டுமொரு திருமண வாழ்வு அதற்கு தடையாகிவிடுமோ என அஞ்சினாள்.

இலட்சியத்திற்காகத் தன் சுகங்களைக் கூட தியாகம் செய்யத் தயாராகியிருந்தாள்.

மகன் தூயவன் விடயத்தில் எந்தத் தாயுமே எண்ணாத ஒரு எண்ணம் அவள் அடி மனதிலிருந்தது. 'தான் வாழும் காலத்திலேயே தன் மகனின் வாழ்வு முடிந்துவிடவேண்டும்' என்பதுவே அதுவாகும். மற்றவர்கள் பார்வையில் அது கொடுமையான எண்ணமாகத் தோன்றலாம். ஆனால், அவள் இந்தச் சமூகத்தில் யதார்த்தபூர்வமான அனுபவ நிலையிலிருந்து எடுத்த வலி நிறைந்த முடிவு அது.

அன்று மகனை வயலின் வகுப்பில் விட்டுவிட்டு சந்தியா பேருந்துக்காகக் காத்து நின்றபோது பேருந்துத் தரிப்பிடத்தில் கார் ஒன்று வந்து சடன் பிரேக் போட்டு நின்றது. சாரதி இருக்கையில் அமர்ந்திருந்தவாறே மற்றைய முன் கதவைத் திறந்த ராகுலன் "பிளீஸ் கார்ல ஏறும்" என்றான்.

ஒருகணம் திகைத்தவள் மௌனமாக உறைந்துபோய் நிற்க, "உம்மோட மனம்விட்டுக் கதைக்க வேணும் தயவுசெய்து ஏறும்" கெஞ்சல் தொனியில் கேட்டான்.

"சொறி கதைக்கிறதுக்கு ஒண்டுமில்ல, நீங்கள் நினைக்கிறதொண்டும் சரிவராது தயவுசெய்து என்னைத் தொந்தரவு செய்யாதிங்க பிளீஸ்" ராஜனிடம் கூறிய அதே வார்த்தைகளைக் கூறியவள் வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

"சொல்லுறதைக் கேள், ஏலாத பிள்ளையை வைச்சுக்கொண்டு கடைசிவரையும் தனியக் காலந்தள்லாமெண்டு நினைக்காத" குரல் கொஞ்சம் உயர்ந்தது.

"ஓ.. ஏலாத பிள்ளையெண்டு தானே விட்டுட்டுப் போனீங்கள், பிறகிப்ப அதேகாரணத்தைச் சொல்லிக்கொண்டு திரும்பவும் வரப்போறியளே? என்னது ஏலாத பிள்ளையோ? அவனால ஏலக்கூடியது உங்களால ஏலுமே? மாற்றுத்திறன் எண்டால் என்னவெண்டு தெரியுமே உங்களுக்கு?" எனக்குமுறியவள் பதிலை எதிர்பாராமல் கதவை அடித்துச் சாத்தினாள். பின்னால் பேருந்தும் வந்து நிற்க கார் கிளம்பிப் பறந்தது.

சிந்தனை வசப்பட்டவளாய் பேருந்துக்குள் இருந்தவளுக்கு மஜோஸ்ருவன் சந்தியை கண்டதும் ஜோனின் தந்தையின் நினைவுகள் வரவே சட்டென இறங்கி அடுத்த இருபத்தைந்தாம் இலக்கப் பேருந்தைப் பிடித்துக்கொண்டுபோய் அவர்களின் வீட்டின் முன் போய் இறங்கினாள். வழமைக்கு மாறாக வீடிற்கு வெளியே சன நடமாட்டத்தை அவதானித்தவளின் மனதில் ஒருவித நடுக்கம் பரவியது.

வாசலில் வைத்தே முகக் கவசத்தையும் கையுறையையும் கொடுத்தார் ஒருவர். உள்ளே சென்றவள் சோகமே உருவாக தலையைக் கவிழ்ந்தபடியிருந்த ஜோனின் தாயின் அருகே போயமர்ந்து அவரது நாடியைப் பிடித்து தலையை நிமிர்த்தினாள். அவளின் கைகளை இறுகப் பற்றிக்கொண்ட ஜோனின் தாயார் "அவர் எங்களையெல்லாம் விட்டிட்டு போயிற்றாரே" என்றார் பெருஞ்சோகம் அப்பிப்படிந்த முகத்துடன். சந்தியாவுக்கு ஓவென்று குழறி அழவேண்டும் போலிருந்தது. ஆனால் அங்கு நிலவிய நிசப்தம் அவளைத் தடுத்தாட்கொண்டாலும், கண்கள் தன்னிச்சையாக கண்ணீரைச் சொரிந்தபடியேயிருந்தன.

யாரோ ஒருவருடைய தோளில் சாய்ந்தபடி நிலத்தை வெறித்துப் பார்த்தவாறே இருந்தார் ஜோன். தோள் கொடுத்திருந்தவரின் கையொன்று ஜோனின் முதுகை வருடியபடியே இருந்தது. மரண வீடு என்றாலே குழறலும், கூக்குரலும், மாரடிப்புமாய்ப் பார்த்துப் பழகிப்போன சந்தியாவுக்கு இந்த அமைதியானது வாயையும் காதுகளையும் சீமெந்துச் சாந்து வைத்து அடைத்துவிட்டது போலவே பெரும் அந்தரமாகவிருந்தது.

கண்களை மூடி பெருமூச்செறிந்தபடியே ஜோனின் தந்தையுடனான நினைவுகளில் கரைந்துகொண்டிருந்தவளுக்கு சில மணித்துளிகளின் பின் தூயவனின் வகுப்பு முடியும் நேரம் ஞாபகத்திற்கு வரவே, இறுதிச் சடங்கு நிகழ்வு எப்போது? எங்கே? போன்ற விபரங்களை அறிந்துகொண்டு அவர்களிடமிருந்து கண்ணீருடன் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டாள்.

■

"என்னடியப்பா கூத்துகள் நடக்குதிங்க.?" என்ற ஆராய்ச்சிக் கேள்வியோடு அலைபேசியில் வந்த நிர்மலா அக்காவின் கேள்வியைப் புரிந்துகொள்ள முடியாதவளாய் "என்னக்கா சொல்லுறிங்க?" எதிர்க் கேள்வி கேட்டுத் தலையைச் சொறிந்து நின்றாள் சந்தியா.

"ராகுலன் கதைச்சவனடியப்பா, இவன் டக்சி ராஜன்ர கதை ஏதோ அவன்ர காதுக்கும் போயிற்றுதுபோல அதுதான் அவன் நெருப்பெடுக்கிறான்." என்றவள் நிறுத்தி எச்சிலை முழுங்கினாள்.

"ஓ.. அதுக்கிப்ப என்னவாம்?" எந்தவித பதட்டமுமின்றி நின்று நிதானமாகக் கேட்டாள்.

"அடியாத்தி அவன் உன்னோட திரும்பவும் சேர்ந்து வாழப்போறானாமடி. அதுதானவன் இடையில வேறயாரும் வந்தால் வெட்டுவன் கொத்துவன் எண்டு நிக்கிறான்" என்றவளின் குரலில் மிரட்சி தொனித்தது.

"அக்கா, நான் விரும்பாமல் சம்மதிக்காமல் என்ர எந்த இடைக்குள்ளையும் யாரும் வரமுடியாது" என்றாள் ஒரு அசட்டுச் சிரிப்போடு.

"அது சரிதானடியப்பா, உன்ர வாழ்கையை நீ தான் முடிவுசெய்ய வேணும். ஆனால் எனக்கெண்டால் ராகுலன் ஏதோ மனந்திருந்தித்தான் வாறான் போலகிடக்குது. நீயுந்தான் எவ்வளவு காலத்துக்கொண்டு இப்பிடியே இருக்கப்போற, எங்கட சமூகத்தைப்பற்றித் தெரியுந்தானே ஒரு பொம்பிள தனிச்சிருக்கிறாள் எண்டால் கண்டவனும் கயிறு விட்டுப் பார்ப்பான். கயித்த நீ பிடிக்கயில்லையோ கடுப்பில கண்டபடி கதையைக் கட்டி விட்டிருவாங்கள். அதனாலதான் சொல்லுறன் கட்டாயம் ஆம்பிளைத் துணையொண்டு வேணுமடியப்பா நீயும் முரண்டுபிடிக்காமல் எதுக்கும் வடிவா யோசிச்சொரு முடிவையெடு" என்றதோடு முடித்துக்கொண்டாள் நிர்மலா அக்கா.

காலம் கடந்துகொண்டிருந்தது. ஜோனின் தந்தையைப் புதைத்து மூன்று மாதங்களான

நிலையில் அடிக்கடி அவர்களின் வீட்டிற்குச்சென்று மன நிம்மதிக்கான ஆறுதல்களைக் கூறி வந்துகொண்டிருந்த சந்தியாவின் மன நிம்மதி ராகுலனாலும், ராஜானாலும் குலைந்துகொண்டிருந்தது. எங்கு சென்றாலும் அவர்களில் யாரவது ஒருவர் அவளைப் பின் தொடர்ந்தவண்ணமே இருந்தார்கள்.ஒரு கட்டத்திற்குமேல் நிர்மலா அக்கா சொன்னதுபோல் இந்தச் சமூகத்தில் யாராவதொரு ஆண் துணை இல்லாமல் வாழ முடியாதுபோலதான் இருக்கிறதென எண்ணிக்கொண்டவளுக்கு அந்த ஆண் யார் என்பதே இப்போது அவளது மனதுக்குள் கேள்வியாக எழுந்தது.

ஜோனின் தாயோடு கதைத்தபோது "விட்டுட்டுப்போன ராகுலனை நம்பமுடியாது, ராஜன் தான் நல்ல தெரிவு" என்றார். நிர்மலா அக்காவோ "ராகுலன் மனந்திருந்திற்றான் திரும்பவும் அவனோட சேருறதுதான் நல்லது" என்றாள்.

அவள் நாய்படாப் பாடு பட்டுக்கொண்டிருக்க அவளது நாற்பதாவது பிறந்தநாளும் நெருங்கிக்கொண்டிருந்த நிலையில் "புதன்கிழமை உங்கள் பிறந்தநாளென்று தெரியும், அன்று முருகன் கோவிலில் உங்களைச் சந்தித்து வாழ்த்த விரும்புவதோடு முக்கியமான சில விசயங்களையும் மனம்விட்டுக் கதைக்கவும் விரும்புகின்றேன். தயவுசெய்து மாலை ஆறு மணிக்கு கோவிலுக்கு வரவும். நான் நம்பிக்கையுடன் காத்திருப்பேன்" என ராஜனிடமிருந்து குறுஞ்செய்தி வந்தது. அதனைப் பார்த்துக்கொண்டிருக்கும்போதே இளைய மகனிடமிருந்து அலைபேசி அழைப்பு வந்தது.

"அம்மா, வாற புதன்கிழமை உங்கட பிறந்த நாளாமெண்டு அப்பா சொன்னவர். அண்டைக்கு மஜோஸ்ருவாவில இருக்கிற 'சைனா ரவுண்' ரெஸ்ரூரெண்டில பின்நேரம் ஆறு மணிக்கு உங்களைச் சந்திச்சு விஷ்பண்ண விரும்புறாராம், கட்டாயம் உங்களை வரட்டுமாம் எண்டு சொல்லச் சொன்னவர், ஆனபடியால் மறக்காமல் போங்கோ" என்று கூறியவன் அவளது பதிலைக் கேட்காமலேயே தொடர்பைத் துண்டித்துக்கொண்டான்.

புதன்கிழமை நெருங்க நெருங்க நிம்மதிக்கும் அவளுக்குமான நெருக்கம் குறைந்துகொண்டே போனது. கோவிலுக்குப் போவதா. ரெஸ்ரூரெண்டிற்குப் போவதா? என்ற குழப்பம் அவளிடம் இருக்கவில்லை. மூத்த மகனின் நலன்களைச் சாராத தவறான எந்த முடிவையும் எடுத்துவிடுவேனோ என்பதில்தான் அவளது மனம் குழம்பிப்போயிருந்தது.

**புதன்கிழமை காலை "ஹாப்பி பேர்த் டே ரூ யூ..." என்ற பாடலை வயலின் இசையில் கேட்டுக் கண் விழித்த சந்தியாவின் முன் வயலினும் கையுமாக முகம் மலர்ந்து நின்றான் தூயவன். அவனைக் கட்டியணைத்து முத்தமிட்டவள் அவனின் ஞாபக சக்தியை எண்ணி மீண்டுமோருமுறை வியந்து நின்றாள்.**

புதன்கிழமை காலை "ஹாப்பி பேர்த் டே ரூ யூ..." என்ற பாடலை வயலின் இசையில் கேட்டுக் கண் விழித்த சந்தியாவின் முன் வயலினும் கையுமாக முகம் மலர்ந்து நின்றான் தூயவன். அவனைக் கட்டியணைத்து முத்தமிட்டவள் அவனின் ஞாபக சக்தியை எண்ணி மீண்டுமொருமுறை வியந்து நின்றாள்.

மாலை ஐந்து மணிக்கு மகனை வயலின் வகுப்பில் கொண்டுபோய்ச்

சேர்த்துவிட்டு படபடத்த இதயத்துடன் அவள் பேருந்திலேறி அமர்ந்தபோது "காத்திருப்பேன் மறக்கவேண்டாம்" என ராஜனிடமிருந்து குறுஞ்செய்தி வந்தது.

மஜோஸ்ருவன் சந்தியில் இறங்கி அடுத்த பேருந்தைப் பிடித்தபோது அலறிய அலைபேசியை எடுத்துக் காதோடு ஒற்றிக்கொண்டாள் "ஹாப்பி பேர்த்டே ரூ யூ மம்மா" என வாழ்த்துப் பாடிய இளைய மகன் பப்பா ரெஸ்ரூரெண்டில் காத்திருக்கிறார் என்ற செய்தியையும் சொல்ல மறக்கவில்லை.

பேருந்தை விட்டு இறங்கி நடந்தவள் அந்தப் பிரமாண்டமான வீட்டின் அழைப்பு மணியை அழுத்தினாள். கதவைத் திறந்த ஜோனின் தாய் அவளை முகம் மலர வரவேற்றார். அவரோடு கதைத்துக்கொண்டிருக்கும்போதே "தூயன்.. தூயன்.." என அவளையே வட்டமிட்டபடி நின்றார் ஜோன்.

"இன்று எனது பிறந்தநாள் தெரியுமா உங்களுக்கு?" எனக் கேட்டாள் சந்தியா.

"ஓகோ அப்படியா.! வாழ்த்துக்கள்.! வாழ்த்துக்கள்.! தெரிந்திருந்தால் ஏதாவது பரிசுப் பொருள் வாங்கி வைத்திருந்திருப்பனே" என்ற ஜோனின் தாயார் அவளைக் கட்டியணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டார்.

அப்போது தனது அறைக்குள் ஓடிய ஜோன் களிப்புடன் திரும்பி வந்தபோது கையில் ஒரு சாக்லெட் பைக்கற் இருந்தது. அதனை அவளிடம் நீட்டியபடியே "க்கப்பி பெத்தெ.! க்கப்பி பெத்தெ.!" எனக் குதிக்காலில் நின்று குதூகலித்தார்.

"ஓ.. சோ சுவீட், தாங்க்யூ.. தாங்க்யூ.." என இமைகள் சிறகடிக்கச் சந்தோசத்துடன் அதனை வாங்கியவள் உடனேயே ஜோனின் தாயைப் பார்த்து "உங்களுக்குக் கவலை வேண்டாம், இன்று உங்களின் பரிசோடும்தான் நான் வீட்டிற்குப் போகப்போகின்றேன் அதற்கு உங்கள் அனுமதி வேண்டும்" என்றாள்.

அவள் போடும் புதிர் புரியாமல் ஜோனின் தாய் அவளை ஆச்சரியத்துடன் பார்த்து நிற்க, "உங்கள் மகனை எங்கள் வீட்டிற்குக் கூட்டிப்போகப் போகின்றேன் அனுமதி கிடைக்குமா?" எனக் கேட்டாள்.

"ஓ.. அதுக்கென்ன, தாராளமாகக் கூட்டிப்போகலாமே தூயவனுக்கும் மகிழ்ச்சியாய்த்தானே இருக்கும்" என்றவாறே அவர் மகனின் முகத்தைப் பார்க்க ஜோனின் முகமும் மகிழ்ச்சியில் பிரகாசமானது.

உடனேயே அவருக்கு நன்றியைக் கூறிவிட்டு அலைபேசியை அணைத்துக் கைப் பைக்குள் வைத்தவள் ஜோனின் கையைப் பிடித்தபடி "வாருங்கள் போவோம்" எனக் கதவைத் திறந்துகொண்டு வெளியேற ஆயத்தமானாள்.

"ஒரு நிமிடம் நில்லுங்கள்" எனத் தடுத்தவாறே அறைக்குள் நுழைந்த ஜோனின் தாயார், போன வேகத்திலேயே திரும்பிவந்து தலைகுனிந்த சங்கடத்துடன் சந்தியாவிடம் ஒரு கைப் பையை நீட்டினார். அவள் அதனை வாங்கிப் பார்த்தபோது காற்றுப்போன அந்த மெழுகுப் பொம்மையும் காற்றடிக்கும் இயந்திரமும் அதற்குள் இருந்தன.

"இல்லை, இனியிது தேவையில்லை" என்றவாறே அதனைக் கதவின் ஓரமாக வைத்துவிட்டு ஜோனின் கையைப் பிடித்தபடி வெளியே இறங்கிக் கம்பீர நடைபோட்டுக்கொண்டிருந்தவளைப் புரிந்துகொள்ள முடியாமல் புருவம் தூக்கிப் பார்த்தபடியே நின்றார் ஜோனின் தாயார்.

■ ■ ■

# ஐயம் தெளி

**இலங்கையில் கல்வி, பொருளாதார மேம்பாட்டுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை எம்மவர், கலை,கலாச்சார, விளையாட்டுத்துறைகளுக்கு வழங்குவதாகத் தெரியவில்லை. இதற்கான காரணங்கள் என்ன. இத்தகைய போக்கினால் சமூகம் அடையும் பாதகங்களென்ன?**

# ஐயம் தெளி 1 ?

**மு. துலாபரணி**
*எழுத்தாளர், ஊடக கற்கை நெறி மாணவி.*



இன்று ஒருவரின் தனிப்பட்ட வளர்ச்சி என்பது பெரும்பாலும் அவருடைய கல்வியின் அடைவு மட்டங்கள் மற்றும் பொருளாதார வளர்ச்சியின் அளவு கோல்களிலேயே மதிப்பிடப்படுகின்றது. 'படித்தால் தான் வாழ்க்கையில் முன்னேற முடியும்' என்பது எம்முடைய பெற்றோர்களின் தினசரி வாசகங்களாகத் திகழ்கின்றன. இன்றைய பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளை ஒரு இயந்திர வாழ்க்கைக்கு பழக்கப்படுத்தியுள்ளனர். எமது மூதாதையர்களிடம் காணப்பட்ட கலை, கலாசார ஆர்வங்கள் என்பது இன்றைய சமூகத்திடம் காணப்பட்டிருக்குமாயின், தினம் ஒரு விதமாக கலைகள் புத்துயிர் பெற்று வளர்ந்திருக்க வேண்டும். ஆனால் அத்தகைய சமூகத்தை இன்று நாம் காண்பது அரிது. ஆனாலும் இலங்கையில் இன்றும் ஆங்காங்காங்கே சிலர் தங்களின் கலைகளையும், கலாசாரங்களையும் வளர்த்தெடுப்பதிலும், பாதுகாப்பதிலும் பெரிதும் பாடுபட்டு வருகின்றனர்.



ஒருமனிதனுடைய பள்ளிப்பருவம் என்பது பல விடயங்களைக் கற்றுத்தருவது மாத்திரமல்ல, நம்மையும் நம்முடைய திறமைகளையும் இனங்காணும் சிறந்த இடமும் கூட. ஆனால், இன்று பாடசாலை மட்டங்களில்கூட கலை, கலாசார மற்றும் விளையாட்டுப் போட்டிகளின் செயற்பாடுகள் மிகமிகக் குறைந்துள்ளன. காரணம் பாடசாலைகள் இன்று தங்களின் பாடசாலை பெறுபேறுகளை உயர்த்துவதையும், அதனூடாக நிதி உதவிகளைப் பெறுவதையுமே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு இயங்குகின்றன. கல்வியில் நாட்டமில்லாத மாணவர்கள் பலர் விளையாட்டுத்துறையில் மிகச் சிறந்தவர்களாகத் திகழ்வார்கள். இத்தகைய மாணவர்கள் பாடசாலை மட்டத்தில் இனங்காணப்படாத சந்தர்ப்பத்தில் அவர்களின் திறமை என்பது பொழுதுபோக்குக்காக ஊர் மைதானங்களில் விளையாடுவதோடு முடங்கி விடுகின்றது.

அத்தோடு, இலங்கையில் கலை, கலாசாரம் மற்றும் விளையாட்டுத்துறைகளில் நிதி மற்றும் மனித வளங்களின் பற்றாக்குறையும் நிலவுகின்றது. இலங்கையில் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலிருந்தும் நுண்கலைத்துறையை பூரணமாகப் பயின்று பட்டம் பெற்ற பல மாணவர்கள் வருடாவருடம் வெளியேறுகின்றார்கள். ஆனால், அவர்களது கலை செயற்பாடுகள் என்பது பல்கலைக்கழக காலங்களோடு முடங்கி விடுகின்றது. சமூகத்தில் அவர்களுடைய பிரதிபளிப்பு என்பது காணப்படுவதில்லை. காரணம் அவர்களின்

சீரற்ற பொருளாதார நிலையே. கலை கலாசார செயற்பாடுகளில் மாத்திரமே தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் நபர்களுக்கு அரசாங்கத்தினூடாக எத்தகைய உதவிகள் கிடைக்கப்பெறுகின்றன என்பது கேள்விக்குரியே.

இதர செயற்பாடுகளுக்காக நிறுவனங்கள், திணைக்களங்கள் மூலம் வழங்கப்படும் நிதி ஆதாரங்கள் அவர்களின் கலையின் வளர்ச்சிக்கோ அல்லது தன்னிறைவான வாழ்வியலுக்கோ போதுமானதாக இல்லை. இலங்கை ஒரு வளர்ந்து வரும் நாடு என்பதால் அதன் பொருளாதாரம் அனைத்துத் துறைகளிலும் சமமாக முதலீடு செய்வதற்கான வளங்களைக் கொண்டிருக்கவில்லை. அத்தோடு தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் பொருளாதாரச் சிக்கல் என்பது இன்னும் பாரிய பின்னடைவுக்கு இலங்கையை இட்டுச் சென்றுள்ளது என்றே கூற வேண்டும். அரசியல் ஸ்தீரமின்மையால் அரசாங்கத்தில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்கள் இத்தகைய கலை, கலாசார சூழல்களின் சீரற்ற கொள்கைகளுக்கு வழிவகுத்திருக்கின்றது. அதற்குள்ளும் ஊழல் மற்றும் சரியான நிர்வாகமின்மையால் இத்துறைகளில் முதலீடுகள் என்பது இல்லாதுபோய் இந்தத் துறைகளின் வளரச்சியில் பாரிய பின்னடைவை தற்காலத்தில் ஏற்படுத்தி வருகின்றது.

இலங்கையில் இன்று பாரம்பரிய கலாசாரங்கள் மறைந்து புதிய கலை, கலாசாரங்கள் உட்புகுந்துள்ளமையைக் காணலாம். மேற்கத்திய கலாசாரங்கள் எங்களுடைய கலை, கலாசார நுகர்வில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இன்றைய கால இளைஞர்கள் எம்முடைய பாரம்பரிய இசைகளையும், கலைகளையும் நுகர்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. அவர்களுக்கு நம்முடைய கலைகள் பற்றிய புரிதல்களும் மிகமிகக் குறைவு. இவர்களின் ஆர்வங்கள் என்பது ஏனைய நாட்டு இசைகளை இரசிப்பதிலும், ஏனைய கலாசாரங்களை ஆடம்பரமாக கொண்டாடுவதிலுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேற்கத்திய கலை கலாசாரங்களை வியந்து பார்க்கும் எம்மவர்கள் எம்மிடையே காணப்படும் கலைகளை வளர்ப்பதற்கும், எம்முடைய செயற்பாட்டாளர்களை ஊக்குவிப்பதற்கும் தவறிவிடுகின்றனர். அத்தோடு இன்றைய ஊடகங்களும் மக்களின் ஊடக நுகர்வுக் கலாசாரத்தை மாற்றியமைத்துள்ளன. செய்தியை பெற்றுக் கொள்ளுதல், பொழுதுபோக்கிற்காக ஊடகங்களை நுகர்தல் என்ற நிலை கடந்து இன்று ஊடகங்கள் முக்கியமாக சமூக ஊடகங்களாக வாழ்வியலோடு ஒன்றித்து விட்டமையைக் காணலாம்.

எத்தனையோ விருதுகள், சன்மானங்கள் பல துறைகளைச் சார்ந்தவர்களுக்கு வழங்கப்படுகின்ற போதும் கலைகளை வளர்க்கும் கலைஞர்களுக்கு எத்தனை விருதுகளும் சன்மானங்களும்; வழங்கப்படுகின்றன? இவ்வாறு தன்னை புறக்கணிக்கும் சமூகத்தில் தன்னுடைய பிள்ளைகளும் உழன்றுவிட கூடாது என்பதை கருத்திற் கொண்டும் பல கலைஞர்களும் தங்களின் பிள்ளைகளின் கல்வி செயற்பாடுகளுக்கும், அவர்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கும் வழிசமைக்க விளைகின்றனர். ஒரு கலைஞனாக எம்முடைய சமூகத்தில் தோற்றுப்போன ஒருவர் பெற்றோராக அவர்கள் தோற்றுவிட கூடாது என்பதில் திடமாக உள்ளனர்.

அத்தோடு அரசாங்கம் கலை, கலாசாரம் மற்றும் விளையாட்டுத்துறைகளில் நீண்டகால முதலீடுகளை விட குறுகிய கால முதலீடுகளை மேற்கொண்டு அதில் ஆதாயம் காண முற்படுகின்றது. நீண்ட கால பயிற்சிகள், புதிய தொழில்நுட்ப அறிமுகங்கள், தகுதி வாய்ந்த பயிற்சியாளர்கள் மற்றும் நிபுணர்கள் இன்றி குறித்த துறைகளில் வளர்ச்சியை எட்டுவதும், கலைகளை வளர்ப்பதும் இலகுவன்று. இளைஞர்களின்

மேம்பாட்டுக்காகவும், விளையாட்டுத்துறை மற்றும் கலை, கலாசார வளரச்சிக்காகவும் அரசாங்கத் திணைக்களங்களில் பல பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ள போதும் அவை பெயரளவிலும், பக்கச் சார்பாகவும் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. சமூகம் சார்ந்த பக்கச்சார்பான செயற்பாடுகள் என்பன பல வளங்கள் தமிழ்ச் சூழலுக்கு கிடைக்கப்பெறாமல் இருக்கின்றமைக்குக் காரணமாக அமைகின்றன. அனைத்துத் துறைகளிலும் காணப்படும் அரசியல் தலையீடுகளால் திறமையானவர்களும், செயற்பாட்டாளர்களும் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்ற துர்பாக்கிய சூழல் இலங்கையில் இன்றும் நிலவுகின்றன. இங்கு சிறந்த தனிநபர்களை உருவாக்குவதற்கான செயற்பாடுகளை முழுமையாக இலங்கை அரசாங்கம் கைகொள்ளவில்லை என்பது வருத்தத்துக்குரிய விடயமாகும்.

எம்முடைய கலாசாரம் மிகவும் நவீன நோக்கங்களை விட பாரம்பரிய மதிப்புகள் மற்றும் நம்பிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கின்றது. இத்தகைய பழைமைவாத கருத்துக்கள் இன்றைய சூழலுக்கு தகுந்தவாறு கலைகளை தொழில்நுட்ப ரீதியான வளர்ச்சியோடு கொண்டு செல்வதற்கு எத்தனிக்கவில்லை. பழைமைப்போற்றும் நபர்கள் பலர் கலைகளுக்குள் புதுமைகளை கையாள்வதை கடுமையாக எதிர்க்கின்றனர். இதனால் இன்றைய தொழில்நுட்ப உலகில் எம்முடைய கலைகளை நிலைநிறுத்துவது என்பது பாரிய சவாலாகவே காணப்படுகின்றது.

கலை, கலாசாரம் மற்றும் விளையாட்டுத்துறைகளில் அக்கறை செலுத்தாதது பாரிய எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துவதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். கல்வி, பொருளாதாரம் என்பதையும் தாண்டி இதர பகுதிகளில் கவனம் செலுத்தப்படாததால் படைப்பாற்றல், வெளிப்பாடுகள் மற்றும் சமூக தொடர்புக்கான முக்கியமான வாய்ப்புக்களை நாம் ஒவ்வொருவரும் இழந்து கொண்டிருக்கின்றோம். குறிப்பாக, மோசமான உடல் மற்றும் மன ஆரோக்கியத்துக்கு இது வழிவகுக்கின்றது. குறிப்பாக இன்றைய இளைய சமூகம் விளையாட்டு மற்றும் உடல் செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்காமல் இணைய உலகத்தில் மாத்திரமே வாழ்வதால் அவர்களின் உடல் ஆரோக்கியம் என்பது சீர்கெடுவதோடு, மன ஆரோக்கியத்தையும், படைப்பாற்றல் திறன்களையும் அவர்கள் இழந்து கொண்டிருக்கின்றனர் என்றே கூற வேண்டும்.

அத்தோடு, இன்று நாங்கள் கல்விக்கும் பொருளாதாரத்துக்கும் முக்கியத்துவம் வழங்கி கலை, கலாசாரங்களையும் கல்விக்கு அப்பாற்பட்ட இதர பல துறைகளையும் புறக்கணிப்பதால் தேசிய அடையாளம் மற்றும் பாரம்பரிய மரபுகளை காலத்துக்குக் காலம் இழந்து கொண்டிருக்கின்றோம். இவை சமூகத்தில் படைப்பாற்றல் மற்றும் பன்முகத்தன்மையின் வீழ்ச்சிக்கு வழிவகுப்பதோடு, அவை தனிப்பட்ட வளர்ச்சி மற்றும் சுய வெளிப்பாட்டிற்கான வாய்ப்புக்களையும் இழக்கச் செய்கின்றன.

ஆதலால், தனிப்பட்ட மற்றும் சமூக வாழ்வை மேம்படுத்துவதற்கும், நாட்டின் நிலையான நீண்டகால வளர்ச்சியை உறுதி செய்வதற்கும், துடிப்பான ஆரோக்கியமான மற்றும் வளமான சமுதாயத்தை வளர்ப்பதற்கு கலை, கலாசாரம் மற்றும் விளையாட்டுத்துறைகளோடு இணைந்த வளர்ச்சி என்பது முக்கியம் என்பதை எல்லோரும் உணர வேண்டும்.

P.
விக்னேஸ்வரன்,
ஊடகவியலாளர்



ஈழத் தமிழர்கள் குறிப்பாக, யாழ்குடாநாட்டில் வாழும் தமிழர்கள் தாம் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிப்பவர்களென்று பெருமைப்பட்டுக் கொள்ளும் இயல்புடையவர்கள் என்பதை எம்மில் பலர் அறிந்திருக்கிறோம். கல்விக்கு முக்கியத்துவமளிக்கும் மனநிலை, அவர்களின் கலாச்சாரமாகவும் அடையாளமாகவும் இருக்கிறது. எந்த உயிரினமும் தாம் வாழும் சூழ்நிலைகளுக்கு ஈடுகொடுத்துத் தரித்திருப்பதற்குத் தம்மைத் தகவமைத்துக்கொள்கின்றன என்பது உயிரியல் கோட்பாடு. இதைக் கூர்ப்படைதல் என்று சொல்வார்கள். இப்படி கூர்ப்படைந்த ஒரு மனநிலையே யாழ்ப்பாணத் தமிழர்கள் கல்விமீது காட்டும் அக்கறை. கூர்ப்படைதல் உயிரினங்களில் நடைபெறுவதற்குப் பல நூற்றாண்டுகள் எடுக்கும். ஆனால்,

# இலங்கைத் தமிழர்களின் கல்வி, கலை நாட்டம்

2 ஐயம் தெளி

யாழ்ப்பாண மக்கள் கல்விமீது அக்கறை காட்டும் இந்த மனநிலை, இலங்கையில் அந்நியர் ஆட்சிக் காலத்திலிருந்து, குறிப்பாக ஆங்கில காலனித்துவ காலத்தில் ஏற்பட்ட ஒன்று.

இலங்கையை ஆண்ட அந்நியர்கள் தமது மொழியை அங்குள்ளவர்களுக்குக் கற்பித்து, தமக்கு உதவியாளர்களாகப் பணிக்கமர்த்தி, அவர்களுக்கு மாதாந்த வேதனம் வழங்கியதால், அவர்கள் ஏனைய சுதேசிகளைவிட சிறப்பான வாழ்க்கை வாழக்கூடியதாக இருந்தது. அப்படி ஆங்கில ஆட்சியாளர்களுக்குப் பணிபுரிந்தவர்கள் தாமும் உள்ளூர் ஆங்கிலேயர்களாக



வாழ்ந்தார்கள். இந்த நிலை அனைவரின் மனங்களிலும் தாமும் கல்விகற்றால் மாதாந்த வேதனத்துடன் கூடிய சுகவாழ்க்கை வாழலாம் என்ற ஆசையை, கனவை வளர்த்தது. இது இலங்கை முழுவதற்கும் பொதுவான ஒரு நிலையென்றாலும் ஒப்பீட்டளவில் வளம்குறைந்த, வரண்ட நிலப்பகுதியாகிய இலங்கையின் வட பகுதியான யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழ்ந்த தமிழர்களின் மனதில், தாம் வாழ்வில் முன்னேறுவதற்குக் கல்விதான் ஒரேவழி என்ற எண்ணத்தை ஆழமாக விதைத்தது. இலங்கையை ஆக்கிரமித்த அந்நியர்களும் இலங்கையின் செழிப்பான ஏனைய பகுதிகளைவிட வரண்ட பகுதியாகிய யாழ்ப்பாணக்குடாநாட்டில் வசிக்கும் மக்களே தமது எதிர்பார்ப்புக்கு ஏற்றவர்கள் என்று கருதி, அப்பகுதிகளில் கல்விக்கூடங்களை அமைத்து, சிறப்பாக நடத்தி, தமக்கு வேண்டிய உதவியாளர்களை (அரச உத்தியோகத்தர்கள்) உருவாக்கினார்கள். யாழ் குடாநாட்டு மக்களும் கல்விகற்று, அந்நிய அரசில் பதவிகளை இலங்கையில் மட்டுமல்ல, ஆங்கில காலனித்துவ ஆட்சிக்குட்பட்டிருந்த மலேசியாவிலும் பெற்று, இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழ்ந்த பெரும்பான்மை மக்களைவிடவும் சிறப்பாக வாழ்ந்தார்கள்.

இலங்கையில் ஆங்கிலேய ஆட்சி முடிவுக்கு வந்தபின்னர், எனது இளமைக் காலத்தில், குறிப்பாக ஐம்பது, அறுபதுகளில் யாழ்ப்பாணத்தின் அனேகமான ஊர்களில் மலேசியப் பென்சனியர் குடும்பங்கள் வாழ்ந்ததை அறிவேன். எனக்குத் தெரிந்து கொழும்பில் வாழ்ந்த பல தமிழ்க் குடும்பங்களும் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சில தமிழ்க் குடும்பங்களும் வீட்டில் கூட ஆங்கிலம்பேசி வாழ்ந்தார்கள். தமிழைத் தட்டுத் தடுமாறிக் பேசுவதைத் தமக்கான அந்தஸ்தாகக் கருதினார்கள். அந்த வாழ்க்கை உள்ளூர் மக்களுக்குக் கனவுலக வாழ்க்கைபோல் அமைந்து, அதே விதமான வாழ்க்கை நிலையைத் தாமும் அடைய வேண்டுமென்ற உந்துதலால், அதற்கான ஒரே வழியாகக் கல்வியைக் கருதினார்கள்.

தமது சந்ததியினரும் கல்விகற்று சிறப்பாக வாழவேண்டுமென்பதற்காகத் தம் பிள்ளைகள் கல்வியில் மட்டுமே



நாட்டம்கொள்ள வேண்டுமென்று மிகக் கண்டிப்பாக வளர்த்தார்கள், வளர்க்கிறார்கள். வேறு எந்தவிதத்திலும் அவர்களது கவனம் சிதறிவிடக் கூடாதென்பதற்காக கல்வியைத் தவிர வேறு துறைகளில் தம் பிள்ளைகள் நாட்டம் கொள்வதைத் தடுத்தார்கள், கண்டித்தார்கள். குறிப்பாக, கலை இலக்கியத் துறைகளில் நாட்டம் கொள்வதை மிகப் பெரும் கேடாக நினைத்தார்கள். பாடப் புத்தகங்களைத் தவிர வேறு புத்தகங்களை வாசிப்பவர்களை, கலைத்துறைகளில் ஈடுபடுபவர்களை சமூகத்துக்கு உதவாதவர்களாகக் கருதி ஒதுக்கி வைத்ததன்மூலம் தமது பிள்ளைகளுக்குப் பயத்தை ஏற்படுத்தி, கலை இலக்கியத் துறைகளில் அவர்களுக்கு நாட்டம் ஏற்படாதவாறு பார்த்துக்கொண்டார்கள். இலங்கையில், குறிப்பாக யாழ்குடாநாட்டில் கூத்து, நாடகம், மற்றும் கலை முயற்சிகள் பெரும்பாலும் சாதீய அடிப்படையிலேயே இனங்காணப்பட்டதால், சாதி மேலாதிக்க சிந்தனைகொண்டவர்களான பெரும்பான்மையான ஈழத் தமிழ் மக்களுக்கு, கலைத் துறைகளில் ஈடுபடுவது இழிவான செயலென்று தமது சந்ததியினருக்குக் கூறி, அவர்களை பயப்படுத்தி, கலை முயற்சிகளிலிருந்தும் ஒதுங்கியிருக்கச் செய்வது சுலபமாக இருந்தது.

பொதுவாகவே இலங்கைத் தமிழர்களது குறிப்பாக, யாழ்குடாநாட்டுத் தமிழர்களது வாழ்க்கை, சமூகம் பற்றிய பார்வை மிக இறுக்கமாக இருந்தது. கல்வி, அதனால் பெறக்கூடிய தொழில், அத் தொழிலால் ஈட்டக்கூடிய பணம் முதலியன வாழ்க்கையின் மிக முக்கியமான விடயங்களாக இருந்தன.

கல்வியால் மேம்பட்ட வாழ்க்கையை அடையலாமென்று யாழ்குடாநாட்டு மக்கள் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் உணர்ந்துகொண்டாலும், ஆங்கிலேய ஆட்சிக்குப் பின்னர் ஏற்பட்ட சிங்கள மேலாதிக்க அரசியல் காரணமாக தாய்மொழிக் கல்வி, அரச பதவிகளில் பெரும்பான்மையினருக்கு முன்னுரிமை போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையால், தமிழர்களுக்கும் ஆங்கில மோகம் குறைந்தாலும் உத்தியோகங்களுக்கான இலக்கு உயர்ந்தது. இப்போது அவர்களுக்கு அதிக பணத்தை வேதனமாகப் பெறக்கூடிய வைத்தியர், பொறியியலாளர் போன்ற பதவிகளைப் பெறுவதே தலையாய இலட்சியமாக அமைந்தது. எனக்குத் தெரிந்து எழுபதுகளில் அந்த உயர் தொழில்கள் பட்டியலில் கணக்காளருக்கான படிப்பும் சேர்ந்துகொண்டது. அத்தகைய பதவிகளை அடைவதற்கு மிகக் கடினமாகப் படிக்கவேண்டும். எனவே, படிப்பே யாழ்குடாநாட்டுத் தமிழர்களின் மிக முக்கியமான செயலாக அமைந்தது. இந்நிலை 1960களின் பிற்பகுதியில் கல்வியில் அறிமுகப்படுத்தப்பட்ட தரப்படுத்தலால் மேலும் தீவிரமடைந்தது. கல்வி என்பது ஒரு போட்டி நிறைந்த செயற்பாடாக மாறியது. தமிழ் மாணவர்கள் தமக்குக் கிடைக்கக்கூடிய குறைந்தளவு வாய்ப்புகளை எப்படியாவது பெற்றுவிட வேண்டுமென்று வெறிகொண்டு படித்தார்கள். பாடசாலைகளுக்குப் புறம்பாகப் பிரத்தியேகக் கல்வி நிலையங்கள் (tuition Centers. பெருமளவில் தோன்றின. அங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் சினிமாக் கதாநாயகர்கள்போல் சுவரொட்டிகள்மூலம் விளம்பரப்படுத்தப்பட்டார்கள். பெற்றோர்

பணத்துக்கு மிகுந்த சிரமப்பட்டாலும் தமது பிள்ளைகளை அத்தகைய கல்வி நிலையங்களுக்கு அனுப்பினார்கள். தம் பிள்ளைகளை உற்சாகப்படுத்துகிறோமென்று நினைத்து, நன்றாகப் படிக்கும் அயல் பிள்ளைகளைச் சுட்டிக்காட்டி, படிப்பில் வெறியையும் பொறாமைக் குணத்தையும் வளர்த்தார்கள். மற்றையவர்கள் அடையும் வெற்றியைக் கண்டு பொறாமைப்படும் குணம் யாழ்ப்பாணச் சமூகத்தவர் மத்தியில் வளர்ந்தது. யாழ்க்குடாநாட்டுத் தமிழர்களின் இந்த சமூக மனநிலைதான் உலக வழக்கில் பொதுவாக ஒரு சமூகத்துக்கு மேன்மைதரும் கலை, இலக்கிய முயற்சிகள் மிகக் குறைந்தளவில் ஈழத் தமிழ்ச் சமூகத்தில் காணப்படுவதற்கான காரணம். அவற்றில் ஈடுபட்ட சொற்ப தொகையினரும் கலை இலக்கியத் துறைகளில் மேன்மையடையக்கூடிய அளவுக்கு உழைப்பைக் கொடுக்க முடியாதவர்களாக ஒரு மேலோட்டமான பொழுது போக்காகவே அம்முயற்சிகளில் ஈடுபட்டமையால், அவர்களின் கலை இலக்கிய வெளிப்பாடுகள் பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கக்கூடிய அளவுக்குத் தரமானவையாக இருக்கவில்லை.

அத்தோடு, எமக்கு மிக அருகே கோடிக்காணக்கான தமிழர்கள் இந்தியாவின் தமிழ்நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அங்கே கலை இலக்கியத் துறைகள் தொழில்முறையில் செழித்து வளரக்கூடிய சூழ்நிலை இருந்தமையால் அவர்களின் கலை இலக்கிய முயற்சிகள் மக்களை ஈர்க்கும் அளவுக்கு தரமானவையாக அமைந்து, அவற்றுக்கு ஆதரவுதரும் மக்களின் தொகையும் பெருமளவில் இருந்தது. எனவே, அங்கே கலை இலக்கிய முயற்சிகள் தொழில் தரத்துடன் கூடியவையாக மக்களின் ஆதரவைப் பெற்றன. ஈழத் தமிழ் மக்களுக்கும், தாம் கலை இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டு, தமது நேரத்தையும் கவனத்தையும் சிதறடிக்காமல், தமிழ் நாட்டின் படைப்புகளை இரசிப்பது பாதுகாப்பானதாக இருந்தது. இதனால் இலங்கைத் தமிழ்க் கலை இலக்கிய முயற்சிகளுக்குப் போதுமான ஆதரவு கிடைக்கவில்லை. இந்த நிலை இலங்கைக் கலைஞர்களால் தமிழ்நாட்டுக்கு ஈடாகத் தரமான கலைகளை ஆற்றவோ படைக்கவோ முடியாது என்ற மனநிலையை இலங்கைவாழ் மக்களிடையே ஏற்படுத்தியது. இலக்கிய முயற்சிகள் அறுபதுகளிலிருந்து ஓரளவு தனித்துவமானவையாக இனங்காணப்பட்டாலும் அந்த நிலைகூடத் திறனாய்வு மட்டத்திலேயே இருந்தது. இலங்கையின் தமிழ் இலக்கியத்துறை சார்ந்தவர்களும் பொதுமக்களின் கவனத்தைப் பெருமளவு பெறாதவர்களாகவே இருந்தார்கள்.

இந்நிலை 1970களிலிருந்து சிறிதுசிறிதாக மாற்றமடையத் தொடங்கியது. இசை, நடனம் முதலியவற்றைப் பயின்றால் அரச பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமனம் பெறலாம், மாத வருமானம், ஓய்வூதியம் முதலியன பெற்று வாழ்க்கையை ஓரளவு பாதுகாப்பாக நடத்தலாம் என்ற நிலை தோன்றியவுடன் இசை, நடனம் ஆகிய கலைகளைக் கற்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. இப்போது நாடகக் கலையையும் பல்கலைக்கழக மட்டத்தில் படித்துப் பட்டம் பெறக்கூடிய நிலை ஏற்பட்டுவிட்டதால் அதைக் கணிசமான தொகையினர் கற்று, பட்டம்பெற்று நாடகக் கலையைக் கல்லூரிகளில் கற்பிக்கும் ஆசிரியர்களாகவே பணியாற்றுகிறார்கள். ஈழத் தமிழர்கள் நடனம், இசை, நாடகம் முதலியவற்றை இப்போது கற்றாலும் அவற்றை ஆற்றக்கூடிய கலைகளாக அல்லாமல் கற்பிக்கும் கலைகளாகவே கருதுகிறார்கள். இதனால்தான ஈழத் தமிழர்கள் மத்தியில் இப்போது கலை, இலக்கியம்பற்றிப் பேசுபவர்களும் எழுதுபவர்களும் அதிகரித்த அளவுக்கு ஆற்றுபவர்கள் (performers. இல்லாத நிலை காணப்படுகிறது. தாம் கற்ற கலைகளை சிறந்த

முறைகளில் ஆற்றி, பெருமளவு மக்களை மகிழ்ச்சிக்குள்ளாக்கி, அதன் பயனாக ஓரளவுக்கேனும் திருப்திகரமான கலைத் தொழில்வாழ்க்கையை மேற்கொள்ளும் நிலை அங்கு இன்னமும் ஏற்படவில்லை.

ஒருதுறையில் ஈடுபட வேண்டுமென்றால் அத்துறையை அப்பழுக்கற்ற விதத்தில் உண்மையாகவே விரும்பவேண்டும். அத்துறையில் ஈடுபடுவதால் ஏற்படும் மனநிறைவே வாழ்க்கையின் இலட்சியமாக இருந்தால்தான் தாம் ஈடுபடும் துறையில் சாதனைகள் படைத்து உச்சத்தை அடையமுடியும். பொருளாதாரக் காரணத்தை முதன்மைப்படுத்தி அதற்காக ஒருவர் ஒருதுறையில் ஈடுபடுவாரேயானால், அவர் பொருளாதாரத் தன்னிறைவை அடைந்துவிட்டால் மேற்கொண்டு அத்துறையில் அவரால் முன்னேற முடியாது. அப்படி எதிர்பார்த்தபடி பொருளாதார நிலை கைகூடாவிட்டாலும் மிக விரக்தியடைந்து தாம் ஈடுபடும் கலைகளில் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்வதைக் கைவிட்டுவிடுவார்கள். ஆக, பணத்தை மட்டுமே குறியாகக்கொண்டால் கலைகளில் சிறந்து விளங்குவதற்கு வேண்டிய கடின பயிற்சியையும் முயற்சியையும் தொடரமுடியாது. பொருளாதார மேம்பாடு ஒரு பக்க விளைவாக மட்டும் இருக்கவேண்டுமேயன்றி அதுவே பிரதான இலட்சியமாக இருக்கக்கூடாது.

நாம் கல்வியில் நாட்டம் கொண்டவர்கள் என்பது வீண் பெருமை. நாம் உண்மையில் கல்வியில் நாட்டம் கொள்ளவில்லை. கல்விமூலம் பெறக்கூடிய தொழிலிலும் அத் தொழில் தரும் பொருளாதாரப் பாதுகாப்பிலுமே நாட்டம் கொள்கிறோம். வசதியான வாழ்க்கைக்கான இலகுவான வழியாகவே கல்வியைக் கருதுகிறோம். ஒவ்வொருவரதும் கற்கும் திறமைக்கேற்ப சிலருக்கு கல்வி கற்பது கடினமாக இருக்கலாம், சிலருக்கு இலகுவாக இருக்கலாம். ஆனால், வாழ்க்கையைப் பொருளாதாரப் பிரச்சினை இன்றிக் கொண்டுசெல்வதற்கு கல்வி சுலபமான வழி என்பதுதான் உண்மை. வேறு வழிகளில் அத்தகைய பொருளாதாரப் பாதுகாப்புடன் கூடிய வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்கு மிகுந்த திறமையும் புத்திக் கூர்மையும் கடின உழைப்பும் வேண்டும்.

நாம் கல்வி கற்பதில் உண்மையான மனநிறைவைக் கொண்டிருந்தால், அவரவர் கற்கும் துறைகளில் தொடர்ந்து பல ஆராய்ச்சிகளைச் செய்து, மனித குலத்துக்கு நன்மை பயக்கும் பல கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடித்து, புதிய கோட்பாடுகளை உருவாக்கி உலக அளவில் அறியப்பட்ட கல்விமான்களைக்கொண்ட ஒரு சமுதாயமாக இருந்திருப்போம். அத்தகைய கல்வியாளர்கள் எம்மிடையே எத்தனைபேர் இருக்கிறார்கள்? எமது கல்வியாளர்களும் ஆராய்ச்சிகள் செய்கிறார்கள்தான். அந்த ஆராய்ச்சிகள், ஆய்வுக் கட்டுரைகள் எழுதி, பேராசிரியர்களுக்கு சமர்ப்பித்து, கலாநிதிப் பட்டம் பெறுவதற்கான முயற்சியாக மட்டுமே இருக்கின்றன.


கலைத்துறையை எடுத்துக்கொண்டாலும் அதே நிலைதான். எமக்கெல்லாம் தெரிந்த இந்தியக் கலைஞர்கள், தாம் ஈடுபடும் கலைத் துறைகளில் எவ்வளவு தீவிரமாக சிறுவயதிலிருந்தே பயிற்சிகளை மேற்கொண்டு உச்சநிலையை அடைந்தார்கள் என்று விபரிப்பதைக் கேட்டிருக்கிறோம். இப்போது இந்திய தொலைக்காட்சிகளில் பாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் இளையவர்கள், பாடுவதில் வெறித்தனமான ஆவல்கொண்டு அதற்கான முயற்சிகளை மேற்கொள்வதைப் பார்க்கிறோம். மணிக்கணக்கில் பயிற்சிகளை மேற்கொள்கிறார்கள். சிலர் தாம் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் நல்ல வருமானம் தரக்கூடிய தொழில்களை விட்டுவிட்டுப்

பாடகர்களாக வருவதற்கு முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். அவர்களுக்குத் தாம் பாடகர்களாக வரவேண்டுமென்ற இலட்சியம் மட்டுமே இருப்பதை எம்மால் உணரக்கூடியதாக இருக்கிறது. இங்கு நான் ஒரு உண்மையை வலியுறுத்த விரும்புகிறேன். கலைத்துறைகள் முன்னேறுவதற்கு, அவற்றைத் தொழிலாக மேற்கொள்ளக்கூடிய சந்தை வாய்ப்புகள் நிறைந்த பெருந்தொகையான எண்ணிக்கைகொண்ட ஒரு சமூகம் வேண்டும். அப்போதுதான் நாம் வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர் என்று நல்ல வருவாய் தரும் தொழில்களைக் குறிவைத்து முயற்சிகளை மேற்கொள்வதுபோல் கலைத்தொழிலையும் குறிவைத்த தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இலங்கைத் தமிழ்ச் சமூகம் அத்தகைய பெரிய சந்தைவாய்ப்பைக் கொண்டதல்ல. எனவே, எந்தக் கலைத்துறையையும் தொழிலாக மேற்கொள்ள முடியாத நிலை எமக்கு இருக்கிறது.

ஆனால், ஈழத்தமிழர்கள் எந்தத் துறையிலும் ஈடுபட்டு மேன்மையடையக்கூடிய நிலை இப்போது உருவாகிவருகிறதென்று நான் உணர்கிறேன். ஈழத் தமிழர்களின் புலப்பெயர்வு அத்தகையதொரு நிலையைத் தோற்றுவித்திருக்கிறது. கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலிருந்து செல்லும் இலங்கைச் சிறுவர்கள், இந்தியத் தொலைக்காட்சிகள் நடத்தும் பாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு முன்னணியில் திகழ்கிறார்கள். அதற்காகத் தமது வழக்கமான அன்றாட வாழ்க்கையைத் துறந்து, இந்தியா சென்று மாதக் கணக்கில் தங்கியிருந்து, கடுமையான பயிற்சிகளை நாள்தோறும் பல மணித்தியாலங்களுக்கு மேற்கொண்டு தம்மை நிரூபித்து வருகிறார்கள். படிப்பைக்கூட ஐந்தாறு மாதங்கள் ஒதுக்கிவைத்துவிட்டு தமது விருப்பமான துறைகளில் ஈடுபடுவது, எமது இளமைக்கால நாட்களில் நினைத்துப் பார்த்திருக்க முடியாத ஒரு நிலை. உண்மையில் புலப்பெயர்வு, எமக்குப் பழக்கப்பட்ட யாழ்ப்பாணச் சிந்தனைப் போக்கை மாற்றத் தொடங்கியிருக்கிறது. காரணம், நாம் இலங்கையில் இருக்கும்போது அண்ணார்ந்து பார்த்த செல்வந்த வாழ்க்கை, அந்த வாழ்க்கைமூலம் பெறக்கூடிய வீடு, கார், வெளிநாடுகளுக்கு விடுமுறைச் சுற்றுலாக்களை மேற்கொள்ளுதல் போன்ற வசதிகளைப் பெறுவதற்கு கல்வி இங்கு அவசியமானதல்ல. எனவே, இங்கு இன்னும் சிறிது காலத்தில் உண்மையாகவே கல்வித்துறையில் விருப்பமுள்ளவர்கள் மட்டுமே கல்வி கற்பதில் ஈடுபடுவார்கள். தாம் விரும்பித் தேர்ந்தெடுக்கும் கல்வித் துறைகளில் மேம்பட்டு, உலகறிந்த கல்வியாளர்களாக சாதனை படைப்பார்கள் என்று நம்புகிறேன். அதுபோலவே சகல துறைகளிலும் உண்மையான மனநிறைவைப் பெறக்கூடிய வகையில் ஈடுபட்டு, உலக சமூகத்துக்கு ஈடானவர்களாக ஒவ்வொரு துறையிலும் ஈழத் தமிழர்கள் உயர்வார்கள். இது படிப்படியாக மிக மெதுவாக நடக்கக்கூடிய செயல். இந்த நிலையைத் துரிதப்படுத்துவதற்கு ஈழத் தமிழர்களாகிய நாம், குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்கள், உலக நடப்பு அறியாதவர்களாக வீண்பெருமை பேசி, இறுமாப்புக்கொள்வதை நிறுத்தவேண்டும். எமக்கு முன்னேற்றம் நிச்சயம்.



# டீன் கபூரின் இரு கவிதைகள்





## விளக்கமற்று

இரைந்து
இரைந்து பறந்தது நினைவு
நீர்த்தேக்கங்களில்
தன் இறைக்கையை விட்டுக் குளிப்பாட்டி
சடைத்து உதிர்த்த மரமொன்றில் தங்கி
பல நாட்களாகச் சேமித்த
அழுக்குகளைக் கழுவி பறந்து சென்றது.
இன்னொரு நாள் வந்து மனசில் குந்தியது
தாங்க இயலாது மனசு உதறியது
அது விழுந்து கண்ணாடிப் பாத்திரங்களை
உடைத்துச் சென்றது.
ஒரு பெரிய புத்தகத்தைப் பிரித்து
சில கடின சொற்களைக் காண்பித்து
இவைகளோடு எழுத்தோவியம்
வரையச் சொல்லி சுவரொன்றைக் காண்பித்து
கழன்றது.
உற்றுப்பார்த்தேன் விடியவிடிய கண்களுக்குள்
ஓர் எழுத்தோவியம் பிரசவிக்க நோக்காடு
எழவில்லை.
நான் நினைவுகளோடு வாழவிருப்பின்றி
ஒரு மலரின் வாசனையை
முகர்ந்துகொண்டிருக்கிறேன்.



# எனது வேர்




எனக்கும் வேர் இருக்கின்றன
எனது கால்களுக்குள் இருந்து இரு ஆணி வேர்களும்
பக்க வேர்களுமாக நிலம் முழுக்க ஓடியிருக்கின்றன.

ஓரிடமென்று இல்லை
நான் எங்கெங்கு நடைபயில்கின்றேனோ
அங்கங்கு வியாபித்திருக்கும்.

நான் உறங்கும் போது
இன்றும் சில வேர்கள் நிலம் தேடியிருப்பதை அறிவேன்.

எனது வேரை
ஒரு தென்னையின் வேராகவோ
ஒரு வேம்புவின் வேராகவோ
ஒரு புளியையின் வேராகவோ நான் நீரூற்றி வளர்க்கவில்லை.

எந்நேரமும் இடநெருக்கடியில் பிடுங்கிடப் பொருத்தமான
சிறு பயிர்களின் வேராகவே வளர்த்து வருகிறேன்.

எனது வேர் ஒரு மூலிகையின் வேர்தான்
அம்மியில் அரைக்க அரைக்க மணக்கும்.

# காலத்தை வென்ற இசைக்குரலோன்

# பொப் மார்லி

(Bob Marley)!

‘நிறவெறியை எதிர்த்துப் போராடிய கரீபிய கலைஞன்; மனித நேயத்திற்காக குரல் கொடுத்த ஜமேக்கா பாடகன்’

சுருள் சுருளாக இருக்கும் நீண்ட தலைமுடி, வாயில் சப்பிய புகையிலை, மென்மையான இளஞ்சிரிப்பு என இருக்கும் ஜமேக்காவைச் சேர்ந்த அந்த இசைக்கலைஞனின் முகம் சம்பந்தமே இல்லாத பலருக்கும் நெருங்கிய உணர்வை இசையாய் உள்ளத்தில் ஏற்படுத்தும். காலத்தை வென்ற இசைக் குரலோன் பொப் மார்லி, மக்களுக்கான விடுதலையை, மானுட அன்பை, இசையின் வழியாக பாடிய அந்த இசைக்கலைஞனின் பிறந்த தினம் பெப்ரவரி 6. மனித நேயத்திற்காக குரல் கொடுத்த ஜமேக்கா பாடகனை, உலகம் முழுவதும் உள்ள இசைப் பிரியர்களுக்கு, குறிப்பாக இன்றைய இளைஞர்களுக்கும் பொப் மார்லியைப் பற்றிய அறிமுகம் அதிகம் தேவையில்லை.

வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு மகனாகப் பிறந்த நெஸ்டா ரொபர்ட் மார்லி என்ற இயற்பெயருடைய பொப் மார்லி இங்கிலாந்தைச் சேர்ந்த நார்வல் சிங்ளேர் மார்லி என்பவருக்கும் ஆபிரிக்காவைச் சேர்ந்த செடெல்லா என்பவருக்கும் பிறந்தவர்.

கலப்பு இனத்தில் பிறந்ததால் பொப் மார்லி ‘வையிட் பாய்’ என்று கேலியாக அழைக்கப்பட்டார். இப்படி அழைக்கப்பட்டது பின்னாளில் தனக்கென ஒரு தத்துவத்தை வளர்த்துக்கொள்ள உதவியது என மார்லி தெரிவித்துள்ளார். நான் வெள்ளையின மக்களின் பக்கமோ அல்லது கறுப்பின மக்களின் பக்கமோ இல்லை. நான் கடவுளின் பக்கம் நிற்கிறேன் என்பது தான் அந்த தத்துவம்.

**யார் இந்த பொப் மார்லி?**

ஏன் பொப் மார்லியை உலகம் இந்தளவிற்குக் கொண்டாடுகிறது? சேகுவேராவுக்கு அடுத்தபடியாக அதிகமான இளைஞர்களின் உடைகளில், நெஞ்சினில் பச்சை குத்தி இடம்பெறும் அளவுக்கு இளைய தலைமுறையை இவர் என்றும் கவர்ந்துள்ளார் எனலாம்.

பொப் மார்லியின் பாடல்களில் புதைந்திருக்கும் அரசியல் உணர்வு மற்றும் விடுதலை வேட்கையே அதற்கான காரணங்களாகும். கரீபியன் தீவுகளின் சமூக மற்றும் அரசியல் நிலவரம் தொடர்பான அவரது வெளிப்பாடு சாதாரண தொழிலாளர் வர்க்கத்திலிருந்து பணக்காரர்கள் வரை இரசிகர்களை அதிகம் தேடித்தந்திருந்தது. ஏன், தற்போதைய காலத்துக்கும் அவரது பாடல் வரிகள் பொருந்திப் போகின்றன. மார்லியின் பாடல்களில் பிரதிபலிக்கும் விடயங்கள் அனைத்தும் அவர் சிறு வயதில் கண்ணுற்ற சாட்சியங்களாகும்.



ஐங்கரன்
விக்கினேஸ்வரா

கறுப்பு. வெள்ளைத் தம்பதியினருக்கு 1945ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி ஜமேக்காவின் Saint Ann Parish, 9th mile எனும் இடத்தில் பிறந்த பொப் மார்லி, பின்னாளில் உலகின் தலைசிறந்த பாடகனாக சரித்திரத்தில் இடம்பிடிப்பான் என கனவிலும் அவனது பெற்றோர்கள் நினைக்கவில்லை.

காதலும் கஞ்சாவும் 1966ஆம் ஆண்டு பெப்ரவரி 10இல் பாடகியான ரீட்டா அண்டர்சனை மார்லி திருமணம் செய்துகொண்டார். ரீட்டா மூலம் ரஸ்தபாரி எனும் மதம் மார்லிக்கு அறிமுகமானது. ஜமேக்காவில் அதிகமாக கஞ்சா விளையும். அது ரஸ்தபாரி மதத்தில் புனிதப் பொருளாக பார்க்கப்பட்டது. மேலும் மூலிகையாகவும், தியான நிலைக்கு உகந்ததாகவும் கருதப்பட்டது. மார்லி மாமிசம் உண்பதை தவிர்த்து சைவ உணவுகளை உண்ணத் தொடங்கினார். 1966இல் ஜமேக்கா திரும்பிய மார்லி மீண்டும் லிவிங்ஸ்டன், டொஸ் ஆகியோருடன் இணைந்துகொண்டு மீண்டும் தனது இசைப் பயணத்தை ஆரம்பித்தார்.

'ஐலண்ட்ஸ் ரெக்கோர்ட்ஸ்' அனுசரணையுடன் முதல் தடவையாக முழு அல்பமொன்றை வெய்லர்ஸுடன் இணைந்து உருவாக்கினர். தீயைப் பிடி (Catch. Fire) என்ற பெயரிலேயே அந்த அல்பம் வெளிவந்தது. பிரித்தானியா மற்றும் அமெரிக்கா சென்று இசை நிகழ்ச்சி நடாத்த இந்த அல்பம் உதவியது. பின்னர் அதேயாண்டு பர்னின் (Burnin) என்ற அல்பமும் வெளியிடப்பட்டது. இந்த அல்பத்தில் வரும் 'I shot the Sher— iff', 'Get Up Stand UP' ஆகிய பாடல்கள் மிகவும் பிரபலமாகின. இந்தப் பாடல்கள் மூலம் சர்வதேச அங்கீகாரத்தை மார்லி பெற்றுக்கொண்டார். இவரது பாடல்களை இன வேறுபாடின்றி அனைவரும் கேட்கத் தொடங்கினர்.

'Get Up Stand UP' பாடலில் தங்களது உரிமைகளுக்காக எழுந்து போராடுங்கள் என கறுப்பின மக்களைப்பார்த்து அறைகூவல் விடுக்கிறார்.

உரிமைகளுக்காக எழுந்த பாடல்கள் :

எழுந்து நில்லுங்கள்

உங்களது உரிமைகளுக்காக...

வானத்திலிருந்து கடவுள் வந்து

அனைத்து துக்கங்களையும் எடுத்துக்கொண்டு சந்தோஷத்தை வழங்குவாரென்று நீங்கள் அனைவரும் நினைப்பீர்கள்...

ஆனால்,

வாழ்க்கையின் பெறுமதியை புரிந்துகொண்டீர்களானால் உங்களது வாழ்க்கையை இந்த பூமியில் தான் தேடுவீர்கள்...

அப்போது நீங்கள் வெளிச்சத்தைக் காண்பீர்கள்...

அதனால் எழுந்து நில்லுங்கள்... எனத் தொடரும் அப்பாடல் மூலம் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு உலகம் பூராகவும் உள்ள இரசிகர்களை அவர்களது உரிமைகளுக்காக எழுந்து நிற்க வைக்க மார்லியால் முடிந்தது.

1975இல் பொப் மார்லியும் வெய்லர்ஸும் (Bob Marly. the Wailers) என குழுவின் பெயர் மாற்றப்பட்டது. இந்தக் குழு 'Reggae' இசையை உலகம் பூராகவும் கொண்டுசேர்க்க கடுமையாக முயற்சி செய்தது. இதன் பலனாக 'No Woman No Cry' என்ற பாடல் வெளியாகி மிகவும் பிரபலமானது.

உலகம் முழுவதும் கண்ணீர் சிந்தும் கோடிக்கணக்கான பெண்களுக்காக அவர் இந்தப் பாடலை இயற்றிப் பாடினார். தான் ஒரு கலப்பினத்தைச் சேர்ந்தவன் என தெரிந்திருந்தும் மார்லி தன்னை ஆபிரிக்க வம்சாவளியைச் சேர்ந்த கறுப்பினத்தவன் என்று அறிமுகம் செய்து அடையாளப் படுத்திக்கொள்ளவே விரும்பினார்.

வெள்ளையர்களால் கறுப்பினத்தவர்கள் அடிமைப் படுத்தப்படுகின்றமையைக் கண்டதனாலேயே மார்லி இந்த முடிவுக்கு வந்தார். கறுப்பு, வெள்ளை, என்ற அனைத்து இன மக்களும் மனிதன் என்ற அடிப்படையில் ஒன்று சேர்வதே மார்லியின் கனவாகும்.

### நிறவெறிக்கு எதிராக மார்லி

ஜமேக்காவில் நிறவெறிக்கு எதிராக போராடிய மார்க்ஸ் கிரேவின் அரசியல் செயற்பாடுகளுக்கு மார்லி உதவினார். ஆபிரிக்காவில் மட்டுமன்றி உலகம் பூராவும் வாழும் 'நீக்ரோ' மக்களின் வளர்ச்சி குறித்து மட்டுமன்றி ஆபிரிக்கா 'நீக்ரோ' மக்களின் சுதந்திர பூமியாக விளங்கவேண்டும் என்ற இலக்குடன் பொப் மார்லி செயற்படத் தொடங்கினார்.

உலக நாடுகளில் இன்னல்களை அனுபவித்துவரும் 'நீக்ரோ' மக்களின் விடிவிற்காக பாடல் ஒன்றையும் பொப் மார்லி பாடியுள்ளார்.

இரண்டாயிரம் ஆண்டுகள் கொண்ட வரலாற்றை அவ்வளவு சீக்கிரம் அழித்துவிட முடியாது...

இரண்டாயிரம் ஆண்டுகள் கொண்ட கருப்பின மக்களின் வரலாற்றை அவ்வளவு சீக்கிரம் அழித்துவிட முடியாது...

'Zion Train' என்ற பாடலில் கறுப்பின மக்களில் வரலாறு தொடர்பாக பாடியுள்ளார்.

அதுமட்டுமல்லாமல் 'Black Survi—our', 'Bady Lon System' ஆகிய பாடல்கள் மூலம் வெள்ளையர்கள் கறுப்பின மக்களின் உழைப்பையும் உரிமைகளையும் சுரண்டுகின்றனர் என்றும், அதற்கு எதிராக எழவேண்டும் என்றும் பொப் மார்லி மக்களிடம் விண்ணப்பித்துள்ளார்.

### மரணப் படுக்கையில் பொப் மார்லி:

புற்றுநோயால் இறந்த பொப் மார்லி தன்னுடைய மரணக் கட்டிலில் இருந்தபோது மகனிடம், "பணத்தால் வாழ்க்கையை வாங்க முடியாது" என்றும் "On your way up, take me up. On your way down, don't let me down" என்றும் தெரிவித்தார்.




1981ஆம் ஆண்டு மே மாதம் 11ஆம் திகதி பொப் மார்லி தனது 36ஆவது வயதில் அமெரிக்காவின் மியாமி நகரிலுள்ள வைத்தியசாலையொன்றில் மரணமடைந்தார்.

ஜமேக்கா மக்கள் பொப் மார்லியை ஒரு விடுதலைப் போராளியாகவே என்றும் கருதினர். 1981ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி இறுதிக் கிரியை அரச மரியாதையுடன் நடத்தப்பட்டு மார்லியின் பிறந்த இடமான நைன் மைல் பகுதியில் உடல் புதைக்கப்பட்டது.

அத்தோடு, அவரது பிறந்த தினமான பெப்ரவரி 6ஆம் திகதி ஜமேக்காவில் தேசிய விடுமுறை தினமாக அரசால் 1990ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது. ஜமேக்காவின் நைன் மைல் பகுதியில் பொப் மார்லி வாழ்ந்துவந்த வீடு பின்னர் மார்லியின் அருங்காட்சியகமாக மாற்றப்பட்டது.

2018ஆம் ஆண்டு ஃபோர்ப்ஸ் (Forbes) இதழ் வெளியிட்ட தகவலின்படி, அதிக வருமானம் ஈட்டும் இறந்த பிரபலங்களின் பட்டியலில் பொப் மார்லி ஐந்தாவது இடத்தில் இருப்பதாக அறிவித்துள்ளது. கடந்த இருபது ஆண்டுகளில் மட்டும் பொப் மார்லியின் அல்பங்கள் 75 மில்லியனுக்கும் அதிகமாக விற்றுள்ளமை பொப் மார்லியின் இசைத்திறமைக்கு வரலாற்றுச் சாட்சியாகும்.





# குல்லமடை...



சரவணபவன் ஆதவன்

செவிழி கதையை எப்ப கேட்டாலும் எத்தின தரம் கேட்டாலும் அவர்களுக்கு சலிப்பதில்லை. ஒரு கோபக்காரியினதும் இன்னொரு கொலைகாரியினதும் கதை. அதுவும் கரகரத்த குரலில் பரமேஸ்வரி ஆச்சி சொல்வது எப்போதோ நடந்த பழைய கதையை. அந்தக் கால மனிதர் நேரடியாகச் சொல்லும் சாயலில் இருப்பது கேட்பவர்களின் ஆவலைத் தூண்டும். மர்மங்கள், அமானுஷங்கள் நிறைந்த கதைகளுக்கு குரலின் ஏற்ற இறக்கங்கள் அதன் ஜீவனை அப்படியே கொடுக்கும் என்பதும் அவருக்குத் தெரியும். அதைவிட ஆத்திரமும் வன்மமும் சொல்லாடலில் விரவிக்கிடப்பதை ஊன்றி அவதானித்தால் தான் தெரியும்.

பரமேஸ்வரி ஆச்சிக்கு வயசு, போன மார்கழியோட எழுபத்தேழு ஆகிவிட்டது. ஆறடி உயரமான நராங்கல் ஆள். கை கால்கள் மெல்லியதாக இருந்தாலும் நரம்புகள் புடைத்த வலிச்ச தேகம். கரகரப்பான உரத்த குரல், அதிகாரத்தொனியை கேட்பவர்களுக்கு உண்டாக்கும். கோடா போட்ட சுருட்டு இரவில் பத்தி கறுத்த உதடுகளும் வெத்திலை போடுவதால் அடிக்கடி சிவப்புச் சாயம் பூசித் தம்மை அழகு பார்க்கிறது. பெரும்பாலும் கெட்ட வார்த்தைகள் அப்பப்ப சில நல்ல வார்த்தைகள் அத்தி பூத்தால்

போல அவர் வாயில் இருந்து வரும். வலிகளும் வேதனைகளும் நல்ல வார்த்தைகளை இயல்பாகவே தருவதில்லைப் போலும்.

மாலை செக்கல் மண்டிய நேரம். உணவு தேடி வௌவால்கள் வானத்தில் அணிவகுக்கத் தொடங்கிவிட்டன. இரணியனின் இரத்தம் பாய்ந்தது போல மேல் வானம் செந்நிறப் போர்வை போர்த்திருந்தது. முத்தத்து வேலியில் நின்ற சீமைக் கிளுவையில் கொக்கத்தடியால் குழை ஒடிச்சுக்கொண்டு நின்றாள் ஆச்சியின் ஒரே மகள் தேவி. இரண்டு ஆட்டுக்குட்டிகள் பின் தாழ்வாரத்தில் கட்டி வளர்க்கிறாள். ஆச்சி உந்த வேலைகளில் தலையிடாமல் தானுண்டு தன்ர பாடென்று இருந்தார். அவர் அந்தப்பக்கம் பார்க்கவேயில்லை. தவறணையில் ஒரு போத்தில் கள்ளு அடிச்சால் அவருக்கு அதுவே நாலு பேரோட கொளுவச், சண்டைபிடிக்கப் போதும். இன்றும் கள்ளு வாடை தாம்பூலத்துடன் கலந்து வருகிறது அவரின் மூச்சுக்காற்றில். முகம் சிவப்பேறி மெல்லிய போதையுடன் விறைப்பாக இருந்தது. நாற்சார் வீட்டின் முன் போட்டிக்கோ குந்தில் ஆச்சி முதுகெலும்பை நேராக நிமிர்த்தி இருக்கிறார். கண்ணகி சிலையானாலும் எப்படிக் கோபமாக இருக்கிறாளோ அதேபோல. பல நாளாக வர்ணம் பூசாத வீட்டுச்சுவர் பாதி உரிந்து கிடக்கிறது. சீமெந்து நிலம் வெடித்தும் கிளம்பியும் சொர சொரப்பாக கிடந்தது. அவருக்கு முன்னால் சம்மாணம் போட்டு ஆறு சிறுவர்கள் ஏழில் இருந்து பதினைந்து வரை வயதானவர்கள் ஆர்வமாக அமர்ந்திருந்தார்கள். இருவர் ஆச்சியின் மகளின் பிள்ளைகள். மற்றவர்கள் அயலட்டை சிறார்கள். மெல்லிய குளிர் காற்று லேசாக கூதல் கூட்ட தொண்டையைக் கனைத்து ஆச்சி அதேகதையை மறுபடியும் ஆரம்பித்தார். கேட்கக் கேட்கச் சலிக்காத கதை.

“இது ஒன்பதாவது பளை தெரியும்தானே. புதுக்குடியிருப்பு பத்தாப்பளைக்கு கண்ணகி போக முன்னம் உதிலதான் காலாறிட்டு போனாவாம். மதுரையை எரிச்சிட்டு ஆவேசமா கால்போன போக்கில் வந்த பத்தினி தெய்வம் அங்கங்க இளைப்பாறிப் போனது வழிவழியாக வந்த கதைகளாக எங்களுக்குத் தெரியும். அதையெல்லாம் பொய் என்று சொல்லவும் ஒரு போக்கறுந்த கூட்டம் இருக்கு. கோடை காலம் சரியான வெயில் வெக்கை. ஒரு சின்னப் பெடியன் எதையோ பாத்து அலறியடிச்சு மயங்கி விழக் கூட விளையாடின பெடிகள் அயலட்டை ஆக்களைக் கூப்பிட ஆரோ அவனுக்கு தண்ணி தெளிச்சு எழுப்பினவை. என்னெண்டு கேட்டால் ஒரு பொம்பிளை தலைவிரிச்சபடி வயலுக்க உழவு முடிச்சு கிடந்த கலப்பையில் குந்தி இருந்தவாவாம். தன்னை கைகாட்டி கூப்பிட்டு பேன் பார்க்கச் சொல்லிச்சாம்” என்று நிறுத்தி கண்களைத் துருத்தி சிறுவர்களைப் பார்த்தார். அவர்கள் சலனமே இல்லாமல் இருந்தனர். அந்த அமைதியை சடுதியில் குலைத்த ‘டமார்’ என்ற சத்தம். முன்னால் இருந்த பெடி பெட்டைகள் திடுக்கிட்டுதுகள். அவர்களை ஏளனமாக பார்த்தார். உதட்டில் சிறு புன்னகை சட்டென்று வந்து ஒளிந்தது. பின் வளவில் பனம்பழம் விழுந்திருக்கவேண்டும் என்பதை மனத்தால் கணித்தவர் தொடர்ந்தார்,

“முடியை விலத்திப் பாத்தால் தலை முழுக்க கண்கள். என்ர தாத்தா கிழவன் இருத்தி வச்சு சொன்னது இதெல்லாம் வரிக்கு வரி ஞாபகம் இருக்கு.” பரமேஸ்வரி ஆச்சி வாய்க்க குதப்பி வச்சிருந்த வெத்திலை பாக்கு கலவையால் எச்சில் முட்டி தெறிச்சுப் பறந்தது. ஆட்காட்டி விரலையும் நடு விரலையும் சேர்த்து வாயில் வைத்து பக்கவாட்டில் திரும்பி ‘பொளிச்’ என்று துப்பினார். நிமிர்ந்து தனக்கு முன்னால் ஆவெண்டிருந்த சின்னனுகளை இன்னும் விறைப்பாக நோக்கினார். அவர்கள் கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டு இருந்தனர். அவரின் சிவந்த எச்சில் ஊறிய வாயை. அவ்வளவு நேரமும் வெளிய

வரமுடியாமல் தத்தளித்த எச்சில் சுதந்திரக் காற்றை சுவாசிக்க அருகில் முள் முருங்கை மர அடியில் தஞ்சம் அடைந்தது. மூத்தவன் ராசன் கட்டினதுக்கு நட்ட கன்னிக்கால். நல்லா சடைச்சு நிண்டாலும் அடித்தோல் நெக்கி கொழ கொழ எண்டானதுக்கு பரமேஸ்வரி ஆச்சியின் வெத்திலை எச்சில் தான் பிரதான காரணம். அதுக்கு இன்னொரு காரணம் வந்த மருமேள். போக்கறுந்தவள் கதைய கேட்டு ராசன் தன்னை கண்டுக்கிறேல எண்ட கடுப்பு. மருமேள்காரி மகன இடுப்புக்க சுருட்டி வச்சிருக்கிறாள் அதால தான் தனக்கு கள்ளுக்கும் சாராயத்துக்கும் ஏன் சுருட்டுக்கும் காசு தர அவன் வீட்டுப் பக்கம் வரவே இல்லை என்று நினைத்துக் கொண்டிருக்கும் ஆச்சி. சின்னவன் குடும்பம் நாலு தெரு தள்ளி வீடுகட்டி இருக்குது. அவனுக்கு கன்னிகால் நடவில்லை. வீட்டில் எதிர்ப்பு இருந்தும் பொம்பிளையைக் கொண்டு ஓடிட்டான். இப்ப வதவத என்று நாலு பிள்ளைகள் பெத்து விட்டான். அவனுக்கு மூத்த பிள்ளை பிறந்ததும் தானே போய் பாத்திட்டு வந்தார். ஆனால் ஆச்சியின் நச்சரிப்பால் வீட்டுப் பக்கம் வர ஏலாது. 'ஓடுகாலி' எண்டு போகிற போக்கில் குத்திக் காட்டி சீண்டி விடும். அதால இரண்டாம் மருமேள் ஐயோ உந்தக் கிழவி என்ர மானத்த வாங்குது நான் வரல நீங்களே போங்க என்று வாறதுக்கு பின்னடிப்பாள்.

மேள் குடும்பம் ஆச்சியுடன் இந்த வீட்டில் இருந்தாலும் நச்சரிப்புக்குக் குறைவில்லை. எடுத்தெறிந்து பேசுவது மட்டும் இல்லை இங்கிதம் தெரியாத மனிசி என்று பேர் எடுத்தது பற்றி எந்தக் கவலையும் இல்லை அவருக்கு. வாய் வளம் சரியில்லை என்று முகத்துக்கு நேர திட்டின பலர் தூசனத்தால கிழி வாங்கினதுதான் மிச்சம். நாளடைவில் அவரை சீண்டுவதை அயலட்டையும் சொந்தகாரரும் தவிர்த்தனர். மேளின் புருசன் செல்வம், மத்திய கிழக்கு நாடொன்றில் பணிபுரிகிறான். ஆச்சிக்கு செலவுக்கு தேவையான பணத்தைப் பாத்துப் பார்க்காமல் அனுப்புறது அவன் மேல் பாசத்தை அதிகரித்து விட்டது. மூன்றாவது மேன் நடராசு கொஞ்சம் குழப்படிகாரன். பதினைந்து வயதில விசர் நாய் கடிச்சு ஒருமாதம் வைத்தியசாலையில் கிடந்தவன். தொப்பிளைச் சுத்தி நூற்றி எட்டு ஊசிக்கு தாங்க முன்னமே சீவன் போட்டுது. அதோட பத்திரகாளியா மாறின மனிசிதான் இன்னும் அப்படியே அதே கோபத்தோடு இருக்குது. அது நடந்து இப்ப முப்பது வருடம் ஆகிட்டுது. ஆனால் சாக முன்னம் நடந்த திருவிழாவில் நடராசு கொண்டுவந்த சுளக பத்திரமா எடுத்து வைத்திருக்கிறார். நாலாவது பெடியன் வெற்றி கடைசியா மகளுக்குப் பிறகு பிறந்தவன்.

"சுதுமலை பெரிய அம்மன் கோவிலுக்கு பின்னால விழுது நிரம்பி நிக்கிற ஆலமரத்துக்கு கீழ தான் அவள் இருக்கிறாள். சரியான கோவக்காரி. அவளைத்தான் கண்ணகி எண்டு வருசா வருசம் பொங்கி படைச்சுக்கொண்டிருக்கிறம். அவளிட கோவம் எப்பிடி இருக்கும் தெரியுமோ? பெடிகள் விழுதில பிடிச்சு தொங்கிறதும் ஊஞ்சல் ஆடுறதும் துண்டறப் பிடிக்காது. பலர் விழுந்து முதுகு எலும்ப முறிச்சது தான் மிச்சம். நான் கண்ணால பாத்த கன சம்பவம் இருக்கு. கல் நெஞ்சுக்காரி." இப்படிச் சொல்லிப் பல்லை நெருமினார். முகத்தில் உரு ஏறுற மாதிரி இருந்தது. பதட்டமாக கேட்டுக் கொண்டு இருந்த சின்னனுகள் பயந்து போனது அப்பட்டமாக அவர்கள் முகத்தில் தெரிந்தது. ஆச்சியின் முகமும் சிவந்து கோபம் கொப்பளித்தது முன்னாலே இருந்த சில வளர்ந்த சிறுவர்களுக்கு இது பரிச்சயமான ஒன்றாக உணர்ந்தனர். இருந்தும் கொஞ்சம் வளர்ந்த மூத்தவங்கள் இரண்டு பேர், பதினைந்து வயது இருக்கும். தங்களுக்குள்ளேயே குசு குசுத்தார்கள் நமட்டு சிரிப்புடன். "ஆச்சி அடிச்சு விடுது. விட்டால் கொள்ளிவால் பேய் பிசாசு இருக்கு என்று கதை கதையளக்கும் போல" என்று பரிகசித்தான் ஆதி. அவன் ஆச்சியின்

மகளின் மூத்தவன். பரமேஸ்வரி ஆச்சிய சீண்டிப் பேச்சு வாங்காமல் தப்பும் ஒரே ஜீவன். அவர் பார்த்த முதல் பிரசவத்தில் பிறந்தவன் என்பதாலோ என்னவோ. அதுவும் 83 கலவரம் முடிந்து அதன் வெப்பியாரம் குறையாத நிலமையில் நடந்தது.

"டேய் குருமன்கள் பின்னால மட்டும் கண்ணகி இல்லை தெரியுமோ?" ஆச்சி தொடர்ந்தார். "முன் வீதி தென் கிழக்கு மூலையில பேச்சி இருக்கிறாள் செந்நிறத்தில் நாக்கை நீட்டியபடி. அவளுக்கு உந்த சீலம்பாய் சர்க்கரை பொங்கல் சரிவராது. மச்சம் மணக்க காச்சிப் படைக்க வேணும். அவள் பலி எடுக்கக் கூடிய ஆள். கண்ணகி மாதிரி சாவம் போடுறதில்லை. அதால பேசாமல் கிடவன" என்று பலதடவை சொன்னவள். ஆனாலும் ஆதிக்கு பிடிக்கும் என்பதால் அவன் நித்திரையாக கதையும் தேவைப்பட்டது.

"கறி முட்டையோட மூண்டு நீத்துப் பெட்டி புட்டும் படைக்க வேணும். அதுவும் குரக்கன், அரிசி, ஓடியல் மாவில் தனித்தனியாக அவிச்சு வைக்கிறது. வசதி இல்லாத சனம் சோறும் சமைச்சு படைக்குங்கள் அந்தக் கொலைகாரிக்கு. தூமச்சிக்கு" இப்ப இன்னும் அதிகமாக நர நர என்று பல்லை நெருமினார். கண்கள் கோபத்தைக் கொப்பளித்தது.

"எழும்பி ஓடுங்கடா வீடுகளுக்கு" தேவி

**யாழ்ப்பாணத்தின் புறநகர் பகுதியான சுதுமலையில் புவனேஸ்வரி அம்மன் கோவில் இருக்கிறது. நெல் வயலை அண்டி அமைந்த பெரிய கோவில். மிடுக்கான இராஜகோபுரம். வயல்களின், குளங்களின், ஆற்றங்கரைகளின் சூழல் தனி அழகுதான்.**

அவளுக்கு முட்டையும் அவிச்சு கறியும் காச்சி படைக்க வேணும். பெரிய அம்மன் பறை ஒலி முழங்க பின்னேரம் மூன்று மணிக்கு தேரில ஆரோகணிக்கேக்க வரிசையா குல்லமடை பரப்பி இருக்கும். அதுதான் புது சுளகுகளில் படைப்பாங்கள். பல நூறு சுளகுகள் வரிசையில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்"

"பாட்டி அந்த புட்டை விட்டுட்டாயண" ஆதி மெல்லிய சிரிப்புடன் ஞாபகப்படுத்தினான். பலதடவை கேட்ட கதை அவனுக்கு அத்துபடி. அங்கே இருந்தவர்களில் அவன்தான் அதிக தடவை பாட்டியிடம் கதை கேட்டிருப்பான். ஆதிக்கு இரெண்டரை மூன்று வயதில் இருந்தே இரவு படுக்கையில தலையை நுணாவிப் பேன் பிடிச்சு குத்தும் போது மெதுவா அவனுக்கு மட்டும் சொல்லுவார். மகளுக்கு கேட்டால் திட்டுவாள் என்ற தயக்கம். "பிள்ள சாமத்தில திடுக்கிட்டு எழும்பி அழப்போறான். எல்லாரையும் திட்டி வழமை போல துரத்தியடித்தாள். ஒரு கையால் முள் முருங்கையின் அடியை பிடித்து அந்த வலிப்பை அடக்க முடியாமல் மரத்தை உலுப்பினார் ஆச்சி.

யாழ்ப்பாணத்தின் புறநகர் பகுதியான சுதுமலையில் புவனேஸ்வரி அம்மன் கோவில் இருக்கிறது. நெல் வயலை அண்டி அமைந்த பெரிய கோவில். மிடுக்கான இராஜகோபுரம். வயல்களின், குளங்களின், ஆற்றங்கரைகளின் சூழல் தனி அழகுதான். வணங்குபவர்களுக்கு ஆன்ம பலத்துடன் மகிழ்ச்சியையும் தரும் என்றுதான் அநேக கோவில்கள் இவ்வாறான இடங்களில் எழுந்தன போலும். எந்த வெக்கை காலநிலைக்கும் சில்லென்ற காற்று விடாமல் வருடும். அந்த அம்மன் கோவிலைச் சுற்றி வெளி வீதியிலே இன்னும் சில சிறிய நடுத்தர அளவான கோவில்கள் இருக்கின்றன. முருகன், சிவன், கண்ணகி மற்றும் பேச்சி அம்மன் என்று முழுமையான வழிபாட்டுக்கு

உரிய இடம். கண்ணகி மூன்று சிலைகளில் காட்சி தருகிற சிறிய கோவில் பெரிய அம்மன் கோவிலுக்கு பின்னால் மேற்குப் பக்கம் வீதியில் அணுக்கமாக கூட்டமாக இருக்கும் சில ஆலமரங்களுக்கு கீழ் இருக்கிறது.

சுதுமலை அம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் சுற்று வட்டாரக் கிராமங்களான தாவடி, இணுவில் ஆனைக்கோட்டை, மானிப்பாய் எங்கும் பிரசித்தம். சில வசதியான உபயகாரர்களின் திருவிழா நாட்களில் பல வண்ண அலங்கார விளக்குகளால் வீதியும் அதற்கு வரும் பாதைகளும் நிறைந்திருக்கும். மதியம் அன்னதானம் இரவு பொங்கல், அவல் போதிய அளவு சுற்றுவட்டார மக்களுக்கு கிடைக்கும். ஒலிபெருக்கிகள் பல நூறு மீற்றர்கள் தொலைவுக்கு கட்டப்பட்டுக் காலையில் இருந்து ஊரையே செவிடுபடுத்தும். பெரும்பாலும் நாலைந்து கூட்ட மேளம் கட்டாயம் இருக்கும். இரவுத் திருவிழா இன்னும் விசேடமானது. முன்வீதியில் டிராக்டர் பெட்டிகளை இணைத்து மேடையும் அதற்கு வண்ண விளக்குகளின் அலங்காரம். இரண்டு மூன்று கூட்டம் மேளச்சமா. அது முடிய தவில் சமா. சின்னமணி இல்லாட்டி ஈழநல்லூர் ஸ்ரீ தேவி வில்லுப்பாட்டு. சிலவேளையில் பட்டிமண்டபம் இருக்கும். அதிலும் கம்பன் கழகம் ஜெயராஜ் தலைமையில் என்றால் மேலதிக கூட்டம் வந்துவிடும். எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாய் அதிகாலை ரெண்டு ரெண்டரைக்கு இன்னிசைக் கச்சேரி தொடங்கும். யாழில் பிரசித்தமான சாந்தன் அல்லது ராஜன் கோஷ்டி இன்னும் பல குழுக்கள் இருந்தன. விடிய ஆறு மணிவரைக்கும் தொடரும்.

அப்படியான மதியத் திருவிழா மேளச்சமா ஆச்சியின் வீட்டுக்குப் பக்கத்தில் கட்டப்பட்ட ஒலிபெருக்கியால் காதோரம் வந்து உருவேற்றும். சிறிது நேரம்தான் அவரால் தாக்குப் பிடிக்க முடியும். உடம்பு முறுக்கேறும். வாய்க்கு வந்தபடி அம்மனைத் திட்டிக் கத்தத் தொடங்குவார். வசை பாடிய படியே அங்கும் இங்கும் முத்தத்தில் நடப்பார். உடல் உதறல் எடுக்கும். நிலத்தில் விழுந்து உருளுவார். முத்தத்தில் நிக்கும் வேப்ப மரத்தில் இரண்டு கெட்டுகளை முறிச்சு இரண்டு கையிலும் ஏந்தி ஆர்ப்பாட்டமாக கத்திக் கொண்டு ஓடுவார். வெறுங்காலுடன் கரடுமுரடான கற்கள் நிறைந்த பாதையை சட்டை செய்யாமல் கோவிலை நோக்கிய ஓட்டம். நேரே கோவிலின் முன் மண்டபத்தில் ஆக்ரோஷமாக கத்தி ஆடுவார். கலை கொண்டு ஆடும் ஆச்சியை யாரும் தடுக்க முடியாது. அப்படி ஒரு ஆட்டம். நாக்கை வெளியில் துருத்தி தள்ளி காளி வடிவெடுக்கும் அகோர ஆட்டம். நாக்கு பல்லில் நறுக்குப் பட்டு இரத்தம் கடைவாயில் வடிவதும் சில சொட்டுகள் மண்டப தரையில் சிதறி விழும்.


**சுதுமலை அம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் சுற்று வட்டாரக் கிராமங்களான தாவடி, இணுவில் ஆனைக்கோட்டை, மானிப்பாய் எங்கும் பிரசித்தம். சில வசதியான உபயகாரர்களின் திருவிழா நாட்களில் பல வண்ண அலங்கார விளக்குகளால் வீதியும் அதற்கு வரும் பாதைகளும் நிறைந்திருக்கும்.**

போகப்போக ஆட்டம் வலுவிழந்து அவரும் மயங்கி விழுவார். அவ்வளவு நேரமும் மண்டபத்தின் மூலையில் இருந்து ஆச்சியை அவதானித்துக் கொண்டிருப்பான் இளைய மகன் வெற்றி. சரியான மெல்லிய தேகம். வயது முப்பத்தைந்துக்கு மேல இருக்கும். திருமணம் ஆகவில்லை.

வலது கை தோள் மூட்டு எலும்பில் உணர்ச்சி இல்லாமல் தொங்கியது. ஆச்சி

விழுந்ததும் மெதுவாக இடது கையை நிலத்தில் ஊன்றி எழும்பினான். ஏற்கனவே நீர் நிறைத்து வைத்திருந்த ஒண்டரை லீற்றர் சோடா போத்திலை இடது கையால் எடுத்துக்கொண்டு ஆச்சியை நெருங்குவான். வலது கால் கணைக்காலுக்கு கீழே பிரண்ட பாதத்தின் ஓரம் நிலத்தில் ஊன்றி இழுத்து இழுத்து நடந்தான். ஆச்சியின் முகத்தில் நீரை தெளிக்கவும் அவர் இலேசாக கண்களை திறந்து வெற்றியின் உதவியுடன் மண்டப தூணில் கால்களை நீட்டி சாய்ந்து அமர்வார். சேலைத்தலைப்பால் முகத்தில் வழிந்த வேர்வையையும் தண்ணீரையும் துடைத்து விடவும் வயற்காற்று சுருங்கிய வதனத்தை தழுவவும் சரியாக இருக்கும். வெற்றியின் பிரண்ட பாதங்களை உணர்ச்சியே இல்லாமல் வருடுவார். "விளையாட்டுப் பையனை மன்னிக்கத் தெரியாத பாதகி. அதுசரி மன்னன் செய்த குற்றத்துக்கு மதுரையை எரித்தவள் தானே. அவளிடம் எப்படி நியாயத்தை எதிர்பார்ப்பது" என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக்கொள்வார். அதில் இருந்தபடியே வயல் வெளியூடு தூரத்தில் எதையோ வெறித்துப் பார்த்தபடி கவனத்தை ஒருமுகப்படுத்தி இருப்பார். அடிக்கடி அருகில் இருக்கும் வெற்றியின் பிரண்ட காலையும் பார்க்கத் தவறவில்லை. கோவிலுக்கு வருபவர்களை சட்டை செய்ய மாட்டார். இவர் கலை ஆடினதைப் பயந்து ஒதுங்கி நின்று பார்த்த சிறுவர்கள் மறுபடியும் ஆடுவாரோ என்ற ஆவலில் அவரையே கண்வெட்டாமல் பார்த்துக்கொண்டு இருந்தனர்.

ஆனால் என்ன நடந்தாலும் கோவிலுக்கு உள்ளே போகமாட்டார். இதயத்துடிப்பின் வேகம் அடங்கி சீராகும் மட்டும் இருப்பார். சிறிது நேரத்தில் எழுந்து அவிழ்ந்த சீலையை இறுக்கிக் கட்டி வெற்றி பிடித்துக் கொண்டுவரும் ஆட்டோவில் ஏறி வீடு வருவார். நேரே தனது படுக்கைக்கு வருபவர் கட்டிலுக்குக் கீழே கிடக்கும் நடராசு கொண்டுவந்த சுளகை மறுபடியும் பார்க்க மனம் உந்தினாலும் பார்க்கமாட்டார். கோபம் கடவுளுக்கு மட்டும் வருவதில்லை. மனிதனுக்கும் வரும், என்ன அவன் போடும் சாபம் பலிக்கும் அளவுக்கு சக்தி இல்லாதது என்று தனக்கு தானே சொல்லிக்கொண்டு படுப்பார்.



சுகன்யா
ஞானசூரி



# தமிழ்நாட்டில் ஈழ அகதிகளும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைப்பாடுகளும்



## (ஒரு அகதியின் ஒப்புதல் வாக்குமூலம்)

காலம்தான் எவ்வளவு வேகமாகச் சுற்றிக்கொள்கிறது. ஒரு சொடக்குப் போடுவதற்குள் காலம் கடந்து விட்டதைப் போலிருக்கிறது. நினைவின் தாழ்வாரத்தில் கடந்த காலம். பொங்குமாக்கடலின் அலை நுரைகளில் உப்புக் கரிப்பை வாழ்வு சுவைத்துக் கொண்டிருக்கிறது. அத்தனை விரைவாக நாம் நாடு திரும்பிவிடுவோம், அதுவரையில் உயிரைத் தக்கவைக்க ஒரு பாதுகாப்பான நிலம் தேடிப் புறப்பட்ட பாதங்கள் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகவே இங்கு தங்கிவிட்டன, இல்லை வேர் விட்டன என்பதே பொருத்தமாகும். “நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும் நாட்டின் அடிமை விலங்கு தெறிக்கும்” என்ற வார்த்தைகள் நீர் மேல் எழுத்தாய்க் கலைந்து போனது. நிம்மதி தேடிப் புறப்பட்ட இவ்வாழ்க்கை நிர்க்கதியாகி நிற்கிறது. இன்னும் எத்தனை காலத்திற்கு இந்த துயர்பட்ட வாழ்வென்றே மூன்றாம் தலைமுறையும் கேள்வி கேட்கத் தொடங்கிவிட்ட பின்பும் அனைவரின் கள்ள மௌனங்கள் புரியாத புதிராகவே உள்ளது. இது எனது குரல் மட்டுமல்ல, தமிழகத்தின் இருபத்தெட்டு மாவட்டங்களிலுள்ள நூற்றி ஆறு முகாம்களின் எழுபதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்களின் ஒட்டுமொத்தக் குரலாகவே உள்ளது. இங்கு அகதிகள் என்போர் ஒரு தனிப்பட்ட மதம் சார்ந்தோ, பிரதேசம் சார்ந்தோ இல்லை. சைவர்கள், வேதக்காரர்கள், இஸ்லாமியர்கள் எனவும், மலையகத்தோர், வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசம் சார்ந்தோர் என கலந்துபட்ட விளிம்புநிலைச் சமூகமாகவே அகதிகள் என்னும் அடையாளத்தின் கீழ் வாழ்ந்து வருகின்றனர்.



### முகாம் எனும் முள்வேலி

இதுவொரு திறந்தவெளிச் சிறைச்சாலை என்பதே பொருத்தமானது. ஒவ்வொரு முகாமும் மாவட்ட எல்லைகளுக்கு அப்பால் பொட்டல் வெளிகளிலும், வறண்ட பகுதிகளிலும், சுடுகாட்டு நிலங்களிலுமாக அமைக்கப்பட்டிருக்கும். ஆரம்பத்தில் அருகிலுள்ள உள்ளூர் மக்கள் அச்சப்படும் படியான தோற்றங்கள் ஏற்படுத்தப்பட்டாலும் நாளடைவில் தேவைகளின் பொருட்டு சந்திக்கவும், பொருட்களை விற்கவும் வாங்கவுமாக முகாம்களுக்குள் சாதாரண மக்களைத்தவிர வட்டிக்கு கடன் கொடுப்போரும், வியாபாரிகளும் வந்து செல்ல அனுமதிக்கப்பட்டனர். முகாம் கழிவறை என்பது ஆரம்பத்தில் கருவேலங் காடுகள், தைல மரக் காடுகள், முந்திரி மரக்காடுகள் மற்றும் சுற்றியுள்ள பற்றைகள் போன்றவையே இருந்தன. பிற்பாடு ஐந்து வீட்டுக்கு ஒரு கழிவறை என சில தொண்டு நிறுவனங்களின் கருணையால் உருவாக்கப்பட்டன. இப்போதும் அதுவே தொடர்கிறது. ஒரு முகாம் சிறியது எனில் குறைந்தபட்சம் நூற்றைம்பது குடும்பங்களும், பெரியது எனில் அறுநூறு குடும்பங்களையும் கொண்டதாக அமைக்கப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் கோழிப்பண்ணைகளிலும், பழைய குடோன்களிலும் அமைக்கப்பட்டிருந்தன. வீடமைப்பு குதிரை லயங்களைப் போன்று பத்து முதல் இருபது வீடுகள் சேர்ந்தாற்போல் லைன் (line) தொடர்ச்சியான வீடமைப்பைக் கொண்டது. அடுத்தவர் வீட்டு விம்மல் ஒலி துல்லியமாகக் கேட்கும்படியாக இருந்தது. தார் சீற்று என்று சொல்லப்படுகின்ற கறுப்பு அட்டையால் அமைக்கப்பட்டிருந்த ஆரம்பகால வீடுகள் தறப்பாள்களால் சுற்றப்பட்டு இருந்தன. பின்னர் ஒற்றைச் செங்கல் வைத்து கட்டப்பட்டு அஸ்பெஸ்டஸ் சீற்றுக்கு தரம் உயர்த்தப்பட்டிருந்தது. தற்பொழுது தமிழக அரசு ஊழியர்களின் தொகுப்பு வீடுகளைப்போல் சிறந்த வீட்டுத் திட்டத்தை செயற்படுத்தி வருகிறது. அடிபம்புகள் இருந்தநிலை மாறி நீர்த்தேக்க தொட்டிகள் அமைத்து சீராக வழங்கப்பட்டு

வருகிறது. ஆரம்பத்தில் குடிநீருக்காக பல தோட்டக் கிணறுகளைத் தேடிச் சென்று கிணற்றின் சொந்தக்காரர்களின் மோசமான திட்டுக்களில் கூனிக்குறுகி நின்ற நாட்கள் நினைவை விட்டு நீங்காமலே உள்ளது.

**கல்வி**

அகதிகளாகி வந்த ஆரம்ப நாட்களில் கல்வி என்பது எட்டாக்கனியாகவே பார்க்கப்பட்டது. பின்னர் ஆரம்பக் கல்வியை முகாம்களுக்கு அருகிலிருந்த பள்ளிகளில் பயில அனுமதி வழங்கப்பட்டது. பிறகு உயர்கல்வி பயில அனுமதிக்கப்பட்டது. முன்னாள் தமிழக முதல்வராக இருந்த கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் சிறப்பு ஒதுக்கீடுகள் வழங்கி பட்டப்படிப்புகள் வரையிலும் பயில அனுமதி வழங்கியிருந்தார். இந்த ஒதுக்கீடுகள் சில தொண்டு நிறுவனங்களின் தவறான போக்கால் முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதா அவர்களால் குறைக்கப்பட்டது. பின்னர் அது முற்றாக நிறுத்தப்பட்டது. கலை, அறிவியல் துறைசார் பட்டப்படிப்புகள் தவிர பிற துறைகளுக்கு எம்மவர்கள் விண்ணப்பிக்க முடியாத சூழலுக்குத் தள்ளப்பட்டனர். கல்வி மாநிலங்களின் அதிகாரத்திலிருந்து மத்திய அரசின் அதிகாரத்திற்கு மாற்றப்பட்ட பின்னர் நீட் நுழைவுத்தேர்வு எனும் அரக்கன் முகாம் மாணவர்களின் மருத்துவக் கனவுகளை தகர்த்து விட்டது. இதுவரையில் முகாமிலிருந்து மருத்துவம் பயின்றவர்கள் முகாம்களுக்குள் எவ்வித செயற்பாடுகளையும் முன்னெடுக்காத சூழலில் இதுகுறித்து கவலைப்படுவதில் பிரயோசனம் இல்லை என நாம் கடந்து போக நினைத்தாலும் தொடர்ச்சியாக நடுவண் அரசு செயற்படுத்தி வரும் அனைத்து பட்டப்படிப்புகளுக்கும் நுழைவுத் தேர்வு என்பது இன்னும் பல்வேறு உளவியல் சிக்கல்களுக்கு எம் மாணவர்களை இட்டுச் செல்லும் என்பதே நிதர்சனம். மருத்துவம், வேளாண்மை, சட்டம் மற்றும் கடல்சார் படிப்பு போன்றவை எம் மாணவர்களுக்கு கிடைக்காமல் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்போது பொறியியல், கலை, அறிவியல் மற்றும் டிப்ளோமா கல்விகளும் நுழைவுத்தேர்வு எனும் அரக்கத்தனமான செயலால் கல்வியற்ற சமூகத்தை நோக்கி நகர்த்தும் துர்ப்பாக்கிய சூழல் நெருக்கி நிற்கிறது.

**ஊரின்மத்தியில் பேருந்துத்தரிப்பிடத்துக்கு முன்பாக, சமூகத்தில் பின்நிலைப்படுத்தப்பட்டவர்களுக்கென தகரமூக்குப்பேணிகளிலும், உயர்சமூகமென அடையாளப்படுத்தப்பட்டவர்களுக்கு சில்வர் மூக்குப்பேணிகளிலும் தேநீர் வழங்கிய தேநீர்க்கடை உரிமையாளர் தேவசகாயம்...**

**வேலை வாய்ப்பு**

பெரும்பாலும் வேலைவாய்ப்பு என்பது இங்கு பெரிய உத்தியோகங்கள் என ஒன்றும் இல்லை. முகாம்களில் அடைபட்டிருந்த மக்கள் அரசு வழங்கிய பணக்கொடையிலும், ரேசன் பொருட்களிலுமே தங்களின் கால்வயிற்றை நிரப்பி வந்தனர். சில முகாம்களில் கட்டுப்பாடுகள் வரையறைக்குட்பட்டு நிர்மாணிக்கப்பட்ட சூழலில் வெளியே காலையில் வேலைக்குச் சென்று மாலைக்குள் முகாம்களுக்குள் திரும்பும்படியான இருவேளை கையெழுத்திடும் நடைமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டது. இது ஒரு சிறிய விடுதலையுணர்வை எமக்கு வழங்கியது என்பதே நிதர்சனம். முகாம்களை ஒட்டியுள்ள கடைகளில் சொற்ப சம்பளத்தில் எடுபிடி

வேலை, கட்டுமானப்பணிகளில் கொத்தனார், சித்தாள் பணிகள், கல்லுடைத்தல், வர்ணம் பூசுதல் வேலைகள் எமக்கு இப்போதும் செய்யக்கூடியதாக உள்ள அனுமதிக்கப்பட்ட வேலைகளாக இருக்கின்றன. சில படித்த இளையோர்கள் தங்களின் அகதி அடையாளங்களை மறைத்து படிப்பிற்கு ஏற்ற மேல் வேலைகளுக்கு செல்லத் தொடங்கினர். இப்போதும் அப்படியே தொடர்கிறது. படித்தும் பெரிய வேலைகளுக்கு செல்ல முடியாது என்ற எண்ணம் படிக்கின்ற வயதிலேயே வேலைக்குச் செல்லத் தூண்டுகிறது. அப்படியான சூழலே இங்கு இருக்கையில் கல்விக்கு செலவு செய்ய மனம் விரும்புவதில்லை என்பது யதார்த்தம்தான். அகதி என்ற சொல் கல்விக்கும் வேலைவாய்ப்புக்கும் பெரும் சுமையாகவும், சவாலாகவும் இருக்கிறது என்பதே உண்மை.

## சமூகச் சூழலும் எதிர்கொள்ளும் பிரச்சினைப்பாடுகளும்

"வீடு எப்படியோ அப்படியே நாடும்" என்பார் பேரறிஞர் அண்ணா அவர்கள். அகதி முகாம்கள் அமைந்திருக்கின்ற இடங்களில் சுற்றியுள்ள சாதீய, மதப் பண்பாட்டுக் கூறுகள் சமீப காலமாக முகாம்களுக்குள்ளும் தலைகாட்டத் தொடங்கியுள்ளது. பெரும்பான்மையான ஆதிக்கம்கொண்ட சாதியை தங்களின் சாதிய அடையாளமாக வரித்துக் கொள்ளும் போக்கு ஆரோக்கியமற்ற இளைய சமூகத்தை உருவாக்கியிருக்கிறது.

அரசின் மதுபானக் கடைகள் முகாம்களுக்கு அருகில் இருப்பதால் மதுப்பழக்கம் அகதி முகாங்களுக்குள்ளும் ஒரு கலாச்சாரமாக பரவியுள்ளதைக் காண முடிகிறது. எல்லாக் கொண்டாட்டங்களிலும் மதுபானம் தவிர்க்க முடியாத ஒன்றாக பெரும்பாலும் இளைஞர்கள் மத்தியில் உள்ளது. அது பல குடும்பங்களின் சீரழிவுக்கு அடித்தளமாயுள்ளது. மதுபோதையால்



விபத்துக்கள் ஏற்படுவதும் அதிகரித்து வருகிறது.

உலகத் தாராளமயமாக்கலும் நுகர்வுக் கலாச்சாரமும் அகதிச் சமூகத்திற்குள்ளும் ஊடுருவி சமூகச் சிக்கல்களை தோற்றுவித்து வருகிறது என்பதையும் நாம் மறுப்பதற்கில்லை. இருபத்தி நான்கு மணி நேரமும் கண்காணிக்கும் க்யூப் பிரிவு புலனாய்வு அமைப்புகள் இதுகுறித்து கிஞ்சித்தும் கவலைப்படுவதில்லை. அவர்களைப் பொறுத்தவரை இம்மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவோர், எழுத்தாளர்கள், படைப்பாளர்கள், அறிவு ஜீவிகள் ஒருங்கிணைக்கும் நிகழ்வுகள் ஒரு தீவிரவாதச் செயற்பாடாக உறுத்துவதால் உடனே விசாரணை எனும் பெயரில் முடக்குவதே முழுநேர நோக்கமாக கொண்டு செயற்படுகின்றனர் என்பதே நிதர்சனம்.

இங்கு ஒவ்வொரு சமூகமும் சீர்பெற்ற ஆரோக்கியமான சமூகமாக வேண்டும் எனில் பேரறிஞர் சொன்னதுபோல் தங்களின் வீடுகளில் இருந்துதான் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

## அரசின் சட்டங்களும் கட்டுப்பாடுகளும்

முகாமானது காவல் நிலையம், ஒரு காவல் அதிகாரி மற்றும் புலனாய்வு அதிகாரி என்ற மட்டத்தில் செயற்படும். தாசில்தார் மாதாந்தர தணிக்கையின் போது வருவார். வெளியே செல்லும்போதும் உள்ளே வரும்போதும் காவல் அலுவலகத்தில்



கையெழுத்திட வேண்டும். இந்த நடைமுறை தற்சமயம் தளர்த்தப்பட்டு எவ்வித ஜனநாயக விதிமுறைகளுமின்றி அதிகாரிகளின் சைகைகளுக்கு கட்டுப்படுகின்ற விசுவாசமான ஒருவரை முகாம் தலைவராக அதிகாரிகளே கைகாட்டும் முகாம் தலைவரிடம் சொல்லி விட்டுச் சென்று வரலாம். இவைகள் எழுதப்படாத சட்டங்களாகவே இன்றும் தொடர்கிறது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் அகதிகளுக்கு ஏற்றதாக இல்லை. குறிப்பாக தமிழ் அகதிகளுக்கு. 1955 அரசியல் அமைப்புச் சட்டத்தில் பல்வேறு திருத்தங்கள் செய்யப்பட்ட போதும் தமிழ் அகதிகளுக்கான வாசல் அடைக்கப்பட்டே இருக்கிறது. 2019இல் ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்ட குடியுரிமை திருத்தச் சட்டம் பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், நேபாளம், மியான்மார் அகதிகளுக்கு குடியுரிமை வழங்க வழிவகை செய்கிறது. ஆனால் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அகதிகளாக உள்ள தமிழ் அகதிகளுக்கு அதில் எந்தவொரு வரியும் குறிப்பிடாது தவிர்த்திருக்கிறது. திருத்தப்பட்ட 1955 சட்டம் 21இன் பிரிவு 1987க்குப் பிறகு ஆவணங்கள் இன்றி வந்தவருக்கு குடியுரிமை மறுக்கிறது. தமிழ் அகதியானவர் இந்தியப் பிரஜையை திருமணம் செய்தாலும், அவர்களுக்கு பிறக்கும் இந்தியக் குழந்தைக்கும் இந்தியப் பிரஜாவுரிமையை மறுக்கிறது. ஆக எந்த வகையிலும் தமிழ் அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமையை வழங்காமல் தவிர்க்கின்றனர். இந்திய அரசைப் பொறுத்தமட்டில் தமிழ் அகதிகள் சட்டவிரோதக் குடியேறிகள் என்றே வரையறுக்கிறார்கள்.

**முடிவாக**

ஐக்கிய நாடுகள் சாசனத்தில் அகதிகளாக வருபவர்கள் அவர்களது விருப்பத்திற்கு எதிராக அவர்கள் நாடுகளுக்கு திருப்பி அனுப்பப்படாமல், அவர்களுக்கான கல்வி, வேலைவாய்ப்பு, வீட்டு வசதி, மத உரிமை போன்றவைகள் வழங்கப்பட வேண்டும் எனவும், அதேவேளை சட்டவிரோதமாக நாட்டுக்குள் வந்ததற்காக அவர்களை தண்டிக்கக்கூடாது என்றும், அவர்களை நாட்டிற்குள் சுதந்திரமாக வாழ விடவேண்டும் என்றும், அவர்களுக்குத் தேவையான ஆவணங்களை வழங்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையில் அகதிகளுக்கான சாசனத்தில் இந்தியா கையெழுத்திடவில்லை என்பதைக் காரணமாக்கி தமிழ் அகதிகளை சட்டவிரோதக் குடியேறிகளாகவே இந்திய அரசு அணுகி வருகிறது.

அகதிகளைத் தண்டிக்கப் பயன்படுகின்ற சட்டம் ஏன் வாழ்வதற்கு பயன்படாமல் போகிறது என்கிற புதிர் மட்டும் இன்னும் விளங்காத கேள்வியாகவே உள்ளது.

Dr. Yalini Aravinthan
BDS, DDS
Dentist

# YA Smiles Dental Clinic

QUALITY | CARE | TRUST



## New Patients Welcome

**YOUR DENTAL HEALTH IS OUR FIRST PRIORITY!**

### WHY CHOOSE US?

We provide quality and comprehensive dental care, We are committed to patients convenience providing dedicated service in a family friendly environment

## Call Us: (905) 554-5524

### CLINICAL SERVICES

- Routine Cleanings
- Braces/Invisalign
- Kids dentistry
- Oral surgery
- Full & partial dentures
- Bridges Crowns Veneers
- Root canal treatment
- Composite Fillings
- Teeth whitenings
- Implants


7475 McCowan RD, Markham, Ontario, L3S 3J6, Canada www.yasmiles.ca

info@yasmiles.ca | fb.me/yasmilesdental

# கிராமம்

நீண்ட நாள்களாக மனதினுள் கிடந்து துருத்திக்கொண்டிருந்த விருப்பொன்று, இன்று நிறைவேற இருப்பதையிட்டு பரமலிங்கத்துக்கு மிகவும் மகிழ்வாக இருந்தது. எண்பதுகளின் ஆரம்பத்தில் அவர் அந்தக்கிராமத்தைவிட்டு வெளிக்கிடும் வரைக்கும் அந்தக்கிராமமே அவருக்கு உயிர்நாடியாக இருந்தது என்னவோ உண்மைதான். சிறுவயது தொடக்கம் வாலிப வயதுவரை அந்தக் கிராமத்தில் வாழ்ந்தவருக்கு, சந்தர்ப்ப சூழ்நிலைகள் அவரைக் கொழும்புக்கு அழைத்துச்சென்று, பின்பு எண்பத்துமூன்று ஆடிக்கலவரத்தோடு வன்னிக்கு அழைத்து வந்துவிட்டன. அவர் இப்போது வன்னிவாசி. வன்னி மண்ணிலே தனக்கென ஓர் இணையைத் தேடிக்கொண்டவர், பிற்பாடு வன்னிமண்ணே அவருக்கு வாழ்வாதாரத்துக்கான மூலதனமாகப் போய்விட்டது.

இருப்பினும், தான் பிறந்து வளர்ந்த கிராமத்தையும் அதன் நினைவுகளையும் பரமலிங்கத்தால் தன்மனதில் இருந்து அகற்ற முடியவில்லை. விரல்விட்டு எண்ணக்கூடிய தன் சமூகம் சார்ந்த உரித்துறவுகள்... கல்விகற்ற பாடசாலை... நடமாடித்திரிந்த ஒழுங்கைகள்... தார்வீதிகள்... வழிபாட்டிடங்கள்... கல்விகற்பித்த ஆசிரியர்கள்... இப்படிப் பலதையும் அவர் தன் நினைவினில் கொண்டு வரும்போதெல்லாம், புளித்துப்போன கோதுமைமாவை கைகளால் பிசைந்தெடுப்பதுபோன்றதொரு கடுமையானவலி இதயத்தில் எழுந்து அலைக்கழித்து... பின் மெல்லத் தணிந்து கொள்ளும்.




வாழ்வின் பயணம் நேரானதல்ல... என்பதை அவர் தனது வாழ்வனுபவங்களில் இருந்து தெரிந்து கொண்டார். கர்மவினைக்கான கடன்கழிப்பு ஓரளவு நிறைவடைந்துவிட்டதை அவர் உணர்ந்தார். சிலகாலம், தான் வாழ்ந்திருந்த கிராமத்தையும் அங்குள்ள இப்போதைய தலைமுறைகளையும் எஞ்சியிருக்கும் தனது காலத்தோடொத்த சில நண்பர்களையும் சந்திப்பதன்மூலம், பழைய நினைவுகளை மீட்டுக்கொள்ள முடியும் எனவும் நம்பினார்.

அதிகாலைவேளை வன்னிப்பெருநிலப் பரப்பிலிருந்து புறப்படும் அரசபேருந்து



**அலெக்ஸ்பரந்தாமன்**
புதுக்குடியிருப்பு.



ஒன்றில் அமர்ந்திருந்தார் பரமலிங்கம். நேரநகர்வில் கிழக்குவான்பரப்பில் மெல்லச் சிவக்கத்தொடங்கின மேகங்கள். போகும் வழியிடையே பரந்து கிடந்தது உப்புத்தரவைக்கடல். நீர்குறைந்த பரப்பில் வெண்பறவைகள் மோனநிலையில் நின்றுகொண்டிருந்தன. பேருந்தின் யன்னலூடாக மெலிதான குளிர்காற்று வந்து கொண்டிருந்தது. பரமருக்கு காற்றின் ஸ்பரிசம் ஒருவித சுகத்தைக் கொடுத்தது. கூடவே பேருந்தினுள் ஒலித்துக்கொண்டிருந்தது அவருக்குப் பிடித்தமான பக்திப்பாடலொன்று.

பரமலிங்கம் வலிகாமம் வடக்குப்பகுதியைச் சேர்ந்தவர். அவரது தந்தை இராசையா கடினமானதொரு உடல் உழைப்பாளிமட்டுமல்ல விவசாயியும் கூட. எண்பதுகளுக்கு முற்பட்ட கால நிலைபரத்தில், வடக்குப்பகுதில் இருந்த வீடுவளவு, தோட்டம்துரவு யாவற்றையும் விற்றுவிட்டு, தென்பகுதியில் இருந்த தனது தம்பியின் பேச்சைக்கேட்டு, அங்கு குடும்பத்தோடு குடியேறச்சென்றவர், ஆடிக்கலவரத்துக்கு முன்பாக நோய்வாய்ப்பட்டு இறந்துபோனார். அதன்பின் ஏற்பட்ட கலவரத்தின் நிமித்தம் பரமர் தனது தாய் சகோதரிகளுடன், ஊருக்குச் செல்லவிரும்பாது, வன்னிப்பக்கம் சென்று குடியேறிக்கொண்டார். அதன்பின் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகளின் நிமித்தம், வன்னியில் நிலவிய ‘பாஸ்நடைமுறை’ மற்றும் வடபகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றினால் அவர் ஊருக்குச் செல்வதற்கான சூழ்நிலைகள் சரிவர அமையவில்லை. ஆயினும், ஊரினதும் அங்குள்ளவர்களினது நினைவுகளும் மனப்பதிவேட்டில் காலப்பதிவுகளாக நிரம்பிக் கிடந்தன. அதிலும், யோகலிங்கத்தின் நினைவுகள்...

பரமலிங்கம் சிறுவனாக இருந்த காலத்தில், யோகலிங்கம் அவருக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டியவர். அவரது சகபாடிகள் குடி கூத்து, கொத்து வெட்டு... என இளவயது திமிர்த்தனத்தோடு திரிந்தவேளைகளில்,

அவர்மட்டும் அவர்களிடத்தில் இருந்து வேறுபட்டு, வித்தியாசமாக வாழ்ந்து கொண்டிருந்தவர். வெள்ளை நிறத்தினாலான வேட்டி, சாரமும் அரைக்கை சேர்ட்டும் அணிந்திருப்பார். கரபந்தாட்டத்தில் மிகவும் ஈடுபாடுடையவர். பரமர் சிறுவனாக இருந்தபோதும், அவரோடும் அவரோடொத்த சிறுவர்களோடும் அவர்களில் ஒருவராகவே மாறிவிடுவார். பகிடிக்கதைகளை நாகரிகமாக வெளிப்படுத்துவார். இதனால்தான் என்னவோ அந்தச்சின்னவயதில் பரமருக்கு யோகலிங்கத்தைப் பிடித்துப் போயிற்று. ஊரிலே பழைய தலைமுறையாக அவர் ஒருவரே எஞ்சியிருந்தார்.

வன்னிப்போர்க்கள நிலைபரம்... ஊரையும் அங்குள்ள மனிதர்களின் நினைவுகளையும் பரமருக்கு ஞாபகத்தில் கொண்டுவர விடவில்லை. எந்த நேரமும் உயிரச்சத்தோடு வாழ்ந்ததான வாழ்வு அது. இறுதியில் போர்க்கள நிலைமை நன்கு இறுகி, வெடித்துச் சிதறி, ஓய்ந்தபோது... எல்லாமுமே அடங்கிப்போயின. அதன்பின்பு, வருடங்கள் பத்துக்கு மேலாகிவிட்டன. பரமருக்கும் வயது அறுபதுக்கும்மேலாகி விட்டது. பிள்ளைகளும் வாழ்க்கைப்பட்டு, ஆங்காங்கே தனிக்குடித்தனமாகப் போய்விட்டார்கள்.

என்னவோ தெரியவில்லை. சிலநாள்களாக பரமருக்கு ஊரின் நினைவுகள் வந்து மனதுள் மோதிக்கொண்டிருந்தன. அதிலும், யோகலிங்கத்தின் நினைவுகள் அதிகமாக இருந்தன. இது தவிர, சொப்பனங்களிலும் கடந்தகால நிகழ்வுகள் அவ்வப்போது படம்காட்டிவிட்டு, மறைந்து கொண்டிருந்தன. பரமரின் மனதுக்குள் ஒரே குழப்பம். 'ஒருக்கா ஊர்ப்பக்கம் போயிட்டு வந்தாலென்ன...?' என்ற சிந்தனை அவருள் உருவாக்கம் பெற, அதை அவர் தன் மனைவியிடம் கூறினார்.

"போகிலிப் போட்டு வாங்கோவன். இப்ப அங்கை ஆர்... எவர்... இருக்கினமோ தெரியாது. எல்லாரும் போய்ச் சேர்ந்திருப்பினம்..." மனைவி கூறிய அந்த வார்த்தையில் யதார்த்தம் தொக்கி நிற்பதை பரமரால் உணர முடிந்தது. பரமர் இளைஞனாக ஊரைவிட்டு வெளிக்கிடும்போது, அவருக்கு இருபத்திமூன்று வயது. இப்போது அறுபத்து மூன்று வயது. இந்த இடைப்பட்ட நாற்பது வருட காலத்திற்குள் ஊரினுள் பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும் என்பதையும் அவரால் அனுமானிக்க முடிந்தது. மனைவி கூறிய, "இப்ப அங்கை ஆர் இருப்பினமோ தெரியாது...?" என்ற வார்த்தை... அவருக்குள் பல சிந்தனைகளை உருவாக்கிக் கொண்டிருந்தது.

போர்க்காலச் சூழலும் அதன்நிமித்தம் எழுந்த புலம்பெயர் பயணங்களும் தனதூரிலும் பொருளாதார ரீதியாக பல மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கும்... என்பதைப் பரமர் நம்பினார். ஆனால், மனிதர்கள்...? பொருளாதாரநிலை மாற்றமடைந்தது போன்று, மனிதர்களின் மனங்களிலும் ஏதாவது ஒரு சிறுமாற்றம் ஏற்பட்டிருக்குமா? அப்படி ஏற்பட்டிருப்பினும், அவர்கள் இப்போதும் வாழக்கூடிய அகவையில் உள்ளனரா?

பரமருக்கு குழப்பமாக இருந்தது.. சரி எதற்கும் நேரே போய் பார்த்தால் போயிற்று... என்று தனக்குள் சமாதானம் கூறிக்கொண்டார். அவரது மனநினைவில் பலரது முகங்கள் வந்து தரிசனம்காட்டிவிட்டு மறைந்து கொண்டிருந்தன.

அவரது ஊர் பல சமூகத்தவர்களையும் உள்ளடக்கியிருந்தது. பலரைத் தொழில் ரீதியாகப் பிரித்தும் அத்தொழில்மூலம் மனிதர்களைச் சாதிரீதியாக வகுத்தும் தனக்குள் வைத்திருந்தது. இதன்நிமித்தம் சாதீய சண்டைகளும் சாதீய சமூகங்களுக்குள் பணத்தால், புஜபலத்தால் யார் பெரியவன்...? என்ற குழுமோதல்களும் உறைந்து கிடந்தன. ஊர் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, வடகிழக்கு, தென்மேற்கு... பிரிவுகளென

உள்ளடக்கியிருந்தது. அந்தப் பிரிவுகளுக்குள் சகல சமூகத்தவர்களும் பரம்பலாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

விவசாயம், சந்தைவியாபாரம், சீவல்தொழில், சலவைத்தொழில், சிகை அலங்கரிப்பு, பறை அடித்தல், மீன்வணிகம், மரக்கறிவாணிபம், பலசரக்கு விற்பனை, வாடகைக்கார் ஓட்டுதல், சோதிடம் பார்த்தல், மேசன்தொழில், தினக்கூலிகள், தச்சுத்தொழில்... போன்ற தொழில்களைக் கொண்டோர் வாழ்ந்த அக்கிராமத்தில், வடக்குப் பகுதியில் உள்ள ஒருசிலரின் நடவடிக்கைகள்... அவர்களது முகங்கள்... பரமரின் நினைவுகளில் தங்கிவிடுகின்றன.

ஊரின் பொதுச்சந்தையின் உள்ளே மீன்விற்கும் பகுதியில் மீன்வியாபாரம் செய்து கொண்டிருந்த சின்னவன்...

ஒற்றைத்திருக்கல் மாட்டுவண்டில் வைத்துப் பிழைப்பு நடத்திக்கொண்டிருந்த செல்லையன்...

பைரவர் கோவில் ஒன்றை ஆதரித்துக்கொண்டு, சலவைத்தொழிலாளர் சமூகத்தில், தன்னையொரு 'நாட்டாண்மைக்காரன்' ஆக நிலைநிறுத்த முயன்ற செல்லப்பா...

சாந்தமே உருவான முகத்தைக் கொண்ட சலூன்கார சின்னத்தம்பி...

சாவீடுகள் மற்றும் கோவில் திருவிழாக்களில் பறைமேளம் அடிக்கவரும் நல்லான்...

தயாளமனம் கொண்ட மரக்கறிகள் விற்கும் தங்கம்மாக்கா...

ஊரின்மத்தியில் பேருந்துத்தரிப்பிடத்துக்கு முன்பாக, சமூகத்தில் பின்நிலைப்படுத்தப்பட்டவர்களுக்கென தகரமூக்குப்பேணிகளிலும், உயர்சமூகமென அடையாளப்படுத்தப்பட்டவர்களுக்கு சில்வர் மூக்குப்பேணிகளிலும் தேநீர் வழங்கிய தேநீர்க்கடை உரிமையாளர் தேவசகாயம்...

இப்படிப் பலரக மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருந்த நேரத்தில்தான், பரமர் தனது பெற்றோருடன் ஊரைவிட்டுப் புறப்பட வேண்டியதாயிற்று. காலச்சுழற்சியுள் சிக்கிய அவரது வாழ்வு, ஒருவாறாக ஓரிடத்தில் கரையொதுங்கியபோது... அவர் முதுமைநிலைக்கு வந்துவிட்டார். இருப்பினும், ஊர்நினைவுகள் அவரை விட்டபாடில்லை. தனக்கு 'ஏதாவது' ஆகிவிடமுன்பு ஊருக்கு ஒரு தரிசனம் செய்துவிடவேண்டுமென்ற அவாவில் அவர் இன்று புறப்பட்டு விட்டார்.

ஊரின்மத்தியில் பேருந்துத்தரிப்பிடத்துக்கு முன்பாக, சமூகத்தில் பின்நிலைப்படுத்தப்பட்டவர்களுக்கென தகரமூக்குப்பேணிகளிலும், உயர்சமூகமென அடையாளப்படுத்தப்பட்டவர்களுக்கு சில்வர் மூக்குப்பேணிகளிலும் தேநீர் வழங்கிய தேநீர்க்கடை உரிமையாளர் தேவசகாயம்...

சுமார் இரண்டரை மணித்தியால ஓட்டத்தின்பின்பு, பேருந்து வடபகுதியின் பிரதான பட்டினத்தை வந்தடைந்தது. பட்டணத்துக்கான காலைநேரச் சுறுசுறுப்பு மெல்ல வியாபிக்கத் தொடங்கியிருந்தது. பரமர் பேருந்தை விட்டிறங்கினார். அருகில் உள்ள உணவகம் ஒன்றுக்குச்சென்று, பால்தேநீர் அருந்திவிட்டு, திரும்பவும் பேருந்து தரிப்பிடத்துக்கு வந்தார். வடமராட்சி நோக்கிப்புறப்படும் பேருந்து ஒன்றில் ஏறி, வசதியாக அமர்ந்து கொண்டார். போய் இறங்கவேண்டிய இடத்தையும் அதற்குரிய பணத்தையும் நடத்துநரிடம் கொடுத்துவிட்டு நிற்கையில், பேருந்து புறப்படத் தொடங்கியது.

பட்டணத்தில் இருந்து பத்துமைல் வித்தியாசத்தில் இருந்தது அவரது ஊர். பேருந்து ஊரை நெருங்கிவிட்டது. பரமர் பேருந்தைவிட்டு இறங்கிக் கொண்டார். அவர் கண்களில் ஆச்சரியம்! அவரால் நம்பமுடியவில்லை. நாற்பது வருடங்களுக்கு முன்பிருந்த ஊரின் மத்தியபகுதி வெகுவாக மாறிவிட்டிருந்தது. முன்னைய காலத்தில் சுடலைமடமாகக் காட்சியளித்த 'பஸ்தரிப்பு நிலையம்' இன்று நவீன கட்டிடமாக எழுந்து நின்றது. கிராமத்துக்கே உரித்தான பழைய சந்தையும் 'நியூமார்க்கெட்' என்ற பெயரில் பழைய வனப்புமாறி இருந்தது. அவர் வாழ்ந்த கிராமம் விவசாயச் செய்கைக்குப் பெயர் பெற்ற ஒரு கிராமமாகும். ஆனால், சந்தைக்குள் மரக்கறிவியாபாரிகள் மிகக் குறைந்தளவிலும், மரக்கறிவகைகள் மிகச் சொற்பமான அளவிலுமே காணப்பட்டன. மீன் வியாபாரத்துக்கென புறம்பாக ஒதுக்கப்பட்ட பழைய கட்டிடத்தைத் காணவில்லை.தற்காலச் சந்தையோடு பொருத்தப்பட்ட ஒரு தகரக்கொட்டகைக்குள் இரண்டொரு வியாபாரிகளே தங்கள் வியாபாரத்தை மேற்கொண்டிருந்தார்கள்.

பரமர் தனது காலத்தில் மீன்வியாபாரம் செய்த சின்னக்கண்ணன் என்பவரை நினைத்துப் பார்க்கிறார். படிப்பறிவற்ற பகுத்தறிவற்ற, ஊருக்குள் சண்டித்தனமான ஒரு மனப்போக்கைக் கொண்ட சின்னக்கண்ணனைக் காணவில்லை. அவர் சந்தைப்பகுதியைவிட்டு வெளியே வந்தார். பேருந்து நிலையத்துக்கு முன்பாக தேநீர்க்கடை வைத்து நடாத்திய கண்ணபிரானைக் காணவில்லை. தேநீர்க்கடை இருந்த இடத்தில் ஒரு பலசரக்குக் கடை ஸ்தாபிதமாகி இருந்தது. கண்ணபிரானின் கடைக்கு எதிரே இன்னொரு தேநீர்க்கடை பாழடைந்து கிடந்தது. பற்றைகளும் இடிந்து விழுந்த சிமெந்துக்கற்களுமாய் அது காட்சியளித்தது. அக்கடையை வைத்து நடத்திய முகிலம்மா பரமனின் நினைவினில் வந்து நின்றாள்.

பருத்த சரீரம்! எந்நேரமும் கடவாயில் இருந்து ஒழுகும் வெற்றிலைச்சாறு. சாதீயத்தை கிஞ்சித்தும் விட்டுக்கொடுக்காத மனப்பான்மை அவளிடமிருந்தது. அவள் நடத்திய தேநீர்க்கடைக்குள் சமூகத்தில் சாதியெனும் பெயரால் பின்நிலைப்படுத்தப்பட்ட மக்கள் எவரையும் அவள் அனுமதிப்பதில்லை. சாதி கேட்டறிந்து, சாதிக்கேற்றவகையில் தகரமூக்குப்பேணிகளிலும் சில்வர்பேணிகளிலும் தேநீர் கொடுக்கும் அவளை. அவளது சமூகத்தில் பலர் விரும்புவதேயில்லை. அவளது கடைக்குப் பக்கத்தில் இருந்த முருகையா சைக்கிள் திருத்தும்கடை தற்போது கால்நடை தீவனம் விற்கும் கடையாக மாறியிருப்பதைக் கண்டார். சந்தியால் திரும்பும் இடத்தில் சின்னத்தம்பி வைத்து நடத்திய சலூனையும் காணவில்லை. அங்கு வெறுந்தரையே எஞ்சியிருந்தது.

வானம் சற்று மப்பும் மந்தாரமுமாக இருந்ததில், பரமலிங்கத்தாருக்கு பயணக்களை தெரியவில்லை. ஊர்மண்ணில் கால்வைத்த பரவசம் அவர்மனதுள். பார்வையை அக்கம்பக்கமாகச் சுழலவிட்டபடி... சந்தியால் திரும்பி, கிழக்குத்திசை நோக்கிச்செல்லும் பிரதான சாலைவழியே மெல்லநடையாகச் சென்றுகொண்டிருந்தார். சாலையில் அவரை எவரும் இனம் கண்டு கொள்ளவில்லை. அங்கு புதியதொரு தலைமுறை உருவாகியிருந்தது. அவருக்கும் தன்னோடொத்த வயதுக்காரரை காண முடியவில்லை.. எல்லாரும் போய்ச் சேர்ந்திட்டினம்போல...' என்று தனக்குள் நினைத்துக்கொண்டு, இடப்பக்கம் திரும்பிப் பார்த்தார். அவரது காலத்தில் தோட்டப் பயிர்ச்செய்கையாக இருந்த நிலங்களில், நவீன வசதிகளோடமைந்த மனைகள் எழுந்து நின்றன. பரமருக்கு மனது ஒருகணம் வலித்துக் கொண்டது.

அந்தநேரம் ஆடுமாடுகளுக்குப் புல்லுப் பிடுங்கிக் கொண்டுபோன இடம். எப்படியான பசுமையுள்ள நிலம் அது.

பரமரால் அதை ஜீரணிக்க முடியவில்லை பிரதான சாலையில் இருந்து வலதுபக்கம் திரும்பும் ஒழுங்கைக்குள் இறங்கி நடந்தார். ஒழுங்கைக்குள் ஆள்களின் நடமாட்டம் அரிதாக இருந்தது. 'எங்கே போனார்கள் இவர்கள்...?' என்ற சிந்தனையோடு நடந்தவர், இடதுபக்கம் திரும்பி, சிறிது தூரம் சென்றதும், யோகலிங்கத்தின் வீட்டுக்குச் செல்லும் குச்சொழுங்கை அருகில் வந்தது. அவருக்கு சற்று தடுமாற்றமாக இருந்தது. காவோலை மற்றும் கிடுகு வேலிகள் பலவும் தகர, மதில் மறைப்புகளாக உருமாறியிருந்தன. பரமருக்கு யோகலிங்கத்தின் வீட்டுக்குப் போவதற்கான வழி புலப்படவில்லை.

தூரத்தே ஒரு இளம்யுவதி நடந்து வருவது அவருக்குத் தெரிந்தது. அவள் தன்னருகில் வந்ததும் பரமர் கேட்டார்.

"பிள்ளை... தங்கச்சி! இதில யோகலிங்கத்தின் வீடு எங்கையம்மா இருக்கு...?"

"உப்பிடியே நேர உதால போங்கோ. இடப்பக்கம் ஒரு வாசிகசாலை இருக்கு. அதுக்கு முன்னால உள்ள வீடு.. "

"ரொம்ப நன்றியம்மா..." பரமர் கூறிவிட்டு, ஒழுங்கையில் நடக்கத் தொடங்கினார். ஒரு கூப்பிடுதூரம் வந்ததும், இடப்பக்கம் வாசிகசாலை வந்தது. பரமர் திகைத்துப்போனார். ஒருகாலம் பத்திரிகை படித்த இடம்... நண்பர்களோடு அரட்டை அடித்த இடம்... இன்று அலங்கோலமாகக் கிடந்தது. வாசிகசாலைக்கு முன்பாக உள்ள யோகலிங்கத்தின் வீடும் வடிவத்தில் சிலமாற்றங்கள் பெற்றிருந்தன.

பரமர் கேற் வாசலில் நின்று யோகலிங்கத்தைக் கூட்பிட்டார்.

"யோகமண்ணை... யோகமண்ணை..."

கூப்பிட்ட குரலுக்கு யோகமண்ணை வரவில்லை. நாயொன்றுதான் குரைத்தபடி... கேற்வாசலுக்கு ஓடிவந்தது.

நாயின் குரைப்பொலியைக் கேட்டு, யோகலிங்கம் வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்தார். பரமர் கேற்றைத்திறந்து உள்ளே போனதும்.. பரமலிங்கத்தை யோகலிங்கத்தாலும், யோகலிங்கத்தைப் பரமலிங்கத்தாலும் இனம் காண சிலவிநாடிகள் பிடித்தன.

"நீங்கள் பரமலிங்கம்தானே.. ?"

"ஓமண்ணை..."

பரமலிங்கத்தால் தனது உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கண்கள் பனித்து விடுகின்றன அவருக்கு. பரமரை அழைத்துக்கொண்டு வீட்டினுள் சென்றார் யோகலிங்கம். அவரது மனைவி நிருசாந்தி வந்து பரமரின் வயோதிபத் தோற்றத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்.

யோகலிங்கம் பரமரைப்பற்றி விசாரித்தார். பரமர் தனது ஊரைவிட்டுப் போன நாளில் இருந்து, இன்றுவரையான சம்பவங்கள் அனைத்தையும் ஒரு கதைபோல அங்கு ஒப்புவித்தார். யோகலிங்கத்துக்கு கவலையாக இருந்தது. "என்னதான் இருந்தாலும், கொப்பர் அருமந்த தோட்டம் துரவுகளை விட்டிட்டுப் போயிருக்கக் கூடாது..." என்றார். பரமரும் அதை ஆமோதித்துக் கொண்டார்.

யோகலிங்கம் ஊரில் நிகழ்ந்த கடந்தகால சம்பவங்களைக் கூறினார். ஆட்டம் போட்டவர்கள், அதிகாரம் செய்தவர்கள் பலரும் பாடையில் சென்றுவிட்டதாகக் கூறினார். ஒவ்வொருவருடைய சாவும் இருப்பவர்களுக்குப் படிப்பினையாக அமைந்திருந்தது என்பதையும், இருப்பவர்கள் சிலர் இன்னமும் தங்களது கொள்கைகளைச் சீர்செய்யாது வாழுவதாகவும், காலப்போக்கில் இவர்களும் மரித்துப்போக அந்த வரட்டுப் பெருமைகளும் காலாவதியாகிக் காணாமல் போய் விடும் என்று கூறிக் கொண்டிருந்தார்.

நாற்பது வருடங்களுக்கு முந்தைய சாதீயக் குறியீடுகளாக விளங்கிய பலதும் பெரும்பாலும் அழிந்து விட்டிருந்தன. இந்த அழிவுக்கு பெருப்பங்காற்றிய காரணிகள்... உள்நாட்டுப்போர், புலம்பெயர் பயணம், கடின உழைப்பு, பொருள் ஈட்டல்... போன்றனவாகும். சலவைத்தொழிலாளர்களது வீட்டில் இருந்த 'வெள்ளாவிகள்', சீவல் தொழிலில் பயன்படுத்தும் இணையக்கூடு, பாளைக்கத்திகள் மற்றும் ஒற்றைதிருக்கல், இரட்டைத் திருக்கல் வண்டிகள் போன்றன இப்போது ஊரில் இல்லையென்றும், இத்தொழில் புரிந்தவர்களின் பிள்ளைகள் புலம்பெயர் தேசத்தில் நிரந்தரவதிவுரிமை பெற்றுக்கொண்டு விட்டதாலும், தொழிலுக்குரியவர்கள் மண்ணாக சாம்பலாக மாறிவிட்டதாலும் ஊரில் யார் எவர் என்ன சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்பதை இப்போது கண்டுபிடிப்பது சிரமம் என்றும் யோகலிங்கம் கூறியபோது, பரமருக்கு மனதுள் உள்ளூர மகிழ்வாக இருந்தது.

''இழிசனர் என்ற குறியீட்டோடு வாழ்ந்த ஒரு தலைமுறை மரித்து விட்டது. அதிலிருந்து தோன்றிய விழுதுகள் இப்போது நாகரிகத்திலும், பொருளாதார ரீதியிலும் நன்கு முன்னேறி விட்டதில், ஊருக்குள் சாதி காணாமல் போயிருந்தது. செய்யும் தொழிலால் சாதியெனும் பிரிவினைகளைச் சுமந்த ஒருதலைமுறையின் வேர்கள் மண்ணோடு மண்ணாக உக்கிப்போய் விட்டன. அதிலிருந்து உருவான ஒரு தலைமுறையிலிருந்து இப்போது புதிய தலைமுறைகள் உருவாகி விட்டன. இனி அதிலிருந்து வேறு ஒரு தலைமுறை உருவாகத் தொடங்கும்... காலநகர்வில் இந்த சாதி, சமயம், பணம், படிப்பு... எல்லாமே அவர்கள் முன்பாக அடிபட்டுப் போய்விடும்." யோகலிங்கம் கூறிக்கொண்டிருந்தார். பரமரும் கேட்டுக் கொண்டிருந்தார். பொழுதும் மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது.


REALTOR®
Killi
CHELLIAH
SALES REPRESENTATIVE
Dir:416.624.7562
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Galaxy

HOTLINE: 416 284 5555
2010 - 80 Corporate Dr, Toronto, ON M1H 3G5
416.284.5555




# திரைப்படம் வங்கி, மற்றும் நிதித்துறைகளை மோசடிக்காரராக தவறாகச் சித்தரிக்கின்றதா?

சிவநேசன் வைத்தியநாதர்
*நிதியியல் நிபுணர்.*



நாடொன்றின் பொருளாதாரம் சந்தைகளின் உறுதிப்பாடு தன்மையில் (Integrity) தங்கி உள்ளது. மத்திய வங்கி, வணிக வங்கிகள், சிறப்பு வங்கிகள், நிதிக் கம்பனிகள் நிதி நிறுவனங்கள், காப்புறுதி அரச மற்றும் தனியார் கடன் செலாவணிச் சந்தை, சிறு மூலதனக் companies) என்பனவெல்லாம் மிகப் பெருமளவில் நிதிச் (Stability) மற்றும் நியாயத் நிதித்துறை என்கின்ற போது தேசிய சேமிப்பு வங்கி போன்ற போன்ற வங்கி அல்லாத நிறுவனங்கள், பங்குச்சந்தை, சந்தைகள், அன்னியச் கம்பெனிகள் (Micro finance அடங்கும்.

அஜித் கதாநாயகனாக நடித்து, அண்மையில் வெளிவந்த படம் பற்றிய பரபரப்பான செய்திகளுடன் திரைப்படம் அடிப்படையில் cial Crimes) பற்றியது. தமது போலியான முதலீடுகளில் நிதி நிறுவனங்கள் எவ்வாறு எச். வினோத்தின் இயக்கத்தில் துணிவு. பங்குச்சந்தை ஊழல்கள் படம் தொடங்குகிறது. இந்தத் நிதிக் குற்றங்கள் (Finan— வாடிக்கையாளர்களை பணத்தை முதலிடச் செய்து ஏமாற்றுகின்றன என்பதையும் நியாயமற்ற வட்டி அறவீடு, தண்டப்பணம், முதலீடுகளில் உள்ள ஆபத்துக்களை வாடிக்கையாளர்களுக்கு சரிவர வெளிப்படுத்தாமல் மோசடி செய்தல், போலியான வாக்குறுதிகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குதல் எனப் பல நிதி மோசடிகளைப் படம் விவரிக்கின்றது. எச். வினோத், பொதுவாகவே பத்திரிகைகளில் வரும் செய்திகளை,

அவற்றின் பின்னணிகளை நன்கு ஆராய்ந்து தனது படங்களில் பயன்படுத்துபவர் எனப் பெயரெடுத்தவர். இவரது முன்னைய திரைப்படங்களான சதுரங்க வேட்டை, தீரன் அதிகாரம் ஒன்று என்பன விமர்சகர்களால் மிகவும் பாராட்டப்பட்டன.

கடன் அட்டைகள் (credit cards), காப்புறுதி (insurance), மியூச்சுவல் ஃபண்ட் (mutual funds) எனத் தனது பல்வேறு சேவைகளிலும் வங்கி ஒன்று எவ்வாறு வாடிக்கையாளர்கள் மீது எந்த விதமான கரிசனையும் இன்றி, தனது லாபத்தை மாத்திரமே கருத்தில் கொண்டு, எவ்வாறு அப்பாவி வாடிக்கையாளர்களை ஏமாற்றுகின்றது என்பதனை துணிவு திரைப்படம் சினிமாவுக்கே உரிய மிகைப்படுத்தலுடன் எடுத்துக்காட்டுகின்றது. மியூச்சுவல் ஃபண்ட் என்பது பங்குகள். தனியார் துறை, அரசாங்க கடன் பத்திரங்கள் போன்ற பல்வேறு முதலீடுகளிலும் சாதாரண மக்களும் குறைந்த அளவான பணத்தையும் முதலிடுவதற்கு ஏற்படுத்தப்பட்ட ஒரு முதலீட்டு சாதனம் ஆகும்.

துணிவு படத்தில் வங்கி ஒன்று, மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகளை எப்படியாவது வாடிக்கையாளர்களது தலையில் கட்டி விட தனது ஊழியர்களைத் தூண்டுகிறது. வாடிக்கையாளர்களுக்கு மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகளில் உள்ள அபாயங்கள் பற்றி முழுமையான வெளிப்படுத்துகைகள் (Disclosures) செய்யப்படாமல் அல்லது உண்மையான முதலீட்டு ஆபத்துக்கள் மறைக்கப்பட்டு, எத்தகைய பெறுமதியும் இல்லாத மோசமான முதலீடுகள், சிறந்த முதலீடுகள் எனக் கபடமாக விற்கப்படுகின்றன. அப்பாவி வாடிக்கையாளர்களின் முதலீடுகளும் வைப்புக்களும், வங்கியின் தலைமைப் பொறுப்பாளரின் பெயரில் உருவாக்கப்பட்ட போலியான கம்பனிகளுக்கு மாற்றப்பட்டு மோசடி செய்யப்படுகிறது. வங்கியும் மியூச்சுவல் ஃபண்ட் நிறுவனமும் இந்த மோசடியில் கூட்டாகச் செயற்படுவதாகக் காட்டப்படுகிறது.

இங்கு எழுகின்ற பிரதான கேள்வி, நிஜ உலகில் இத்தகையதொரு பாரிய மோசடி நிறுவன மயப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற முடியுமா என்பதாகும். பணத்தாசை பிடித்தவர்களுக்கு எத்தகைய நிதி மோசடியும் சாத்தியமே. திரைப்படங்களில் காட்டப்படுவது போல நிதி நிறுவனங்களில், வங்கிகளில் பொறுப்பு மிக்க பதவியில் இருப்போர் இத்தகைய நிதி மோசடிகளில் ஈடுபடுவது இலங்கையில் கூட பல தடவை நடந்துள்ளது. அதே நேரம், நிதி நிறுவனங்கள் வாடிக்கையாளர்களுக்கு முதலீடுகளில் உள்ள முழுமையான நட்ட ஆபத்துக்களைத் தெரிவிக்காது முதலிடுமாறு தூண்டுவதும், நியாயமற்ற வகையில் வட்டி மற்றும் அறவீடுகளை மேற்கொள்வதும் சாதாரணமாக நடைபெறுவதை நாம் அவதானித்து உள்ளோம். மோசடிகளுக்கு வாய்ப்பு உள்ளதால் நிதி நிறுவனங்கள் மீது மக்கள் நம்பிக்கை இழக்க வேண்டுமா? நிச்சயமாக இல்லை.

எல்லா வகையான முதலீடுகளிலும் பல்வேறு நிதி ஆபத்துக்கள் (Risks) காணப்படுகின்றன. நிதி நிறுவனம் ஒன்று சரிவர முகாமை செய்யப்படாவிடின் வாடிக்கையாளரது வைப்புக்களும் முதலீடுகளும் ஆபத்துக்குள்ளாகும். பங்குச்சந்தை முதலீடுகளிலும் பல்வேறு அபாயங்கள் உள்ளன. பங்குச் சந்தையில் இடம் பெறும் நிறுவனம் ஒன்று திறம்படச் செயற்படாவிடின் அந்த நிறுவன பங்குகளின் விலை வீழ்ச்சி அடையும். நிதி நிறுவனங்களில் தமது பணத்தை வைப்பில் இடுகின்ற வாடிக்கையாளர்களும் பங்குச் சந்தையில் முதலிடுகின்ற பொதுமக்களும் எந்த ஒரு முதலீட்டைச் செய்யும் முன்னரும் குறிப்பிட்ட முதலீட்டில் உள்ள சாதக பாதகங்களைப் பற்றி முழுமையாக அறிந்திருப்பது முக்கியமானதாகும்.




இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்ட திட்டங்களின்படி மத்திய வங்கியின் உரிமம் பெற்ற நிறுவனங்கள் மட்டுமே பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்க முடியும். மத்திய வங்கி, இந்த நிறுவனங்களுக்கு வழிகாட்டுதல்களையும் ஒழுங்கு விதிகளையும் வழங்குகின்றது. மேலும் இத்தகைய விதிமுறைகளை நிறுவனங்கள் பின்பற்றுகின்றனவா என்பதைத் தொடர்ச்சியாக மேற்பார்வையும் செய்கிறது. மேற்பார்வை செய்யப்படும் நிறுவனம் ஒன்று மோசடியில் ஈடுபட மாட்டாது என்பதோ அல்லது முறிவடைய மாட்டாது என்பதோ இதன் கருத்தல்ல. மாறாக, அத்தகைய நிறுவனம் தொடர்பிலான நட்ட ஆபத்து மிகக் குறைவானது என்பதே இங்கு மிக முக்கியமான விடயமாகும். பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள நிறுவனங்களில் மாத்திரமே பொதுமக்கள் தமது பணத்தை வைப்பிலிட வேண்டும்.

நிதித்துறை மோசடிகளை, அவற்றின் பின்னணியை, சாதாரண மக்களுக்கு எடுத்துச் செல்ல துணிவு படம் உதவுகிறது. கடை நிலை மக்களின் நிதியியல் அறிவை (Financial Literacy) வளர்க்க இத்தகைய திரைப்படங்கள் உதவும். மறுபுறத்தில், மிகைப்படுத்தல் காட்சிகள், வங்கியின் உள்ளேயே கோடிக்கணக்கான மோசடிப் பணம் மறைத்து வைக்கப்படுதல் போன்ற உண்மைக்குப் புறம்பான தகவல்கள், எங்கேயாவது எப்போதாவது நடந்திருக்கக் கூடிய ஒன்றிரண்டு உண்மைச் சம்பவங்களை வைத்து அவற்றை ஒட்டுமொத்த முறைமைக்கே பொதுமைப்படுத்துதல் போன்ற சினிமாத்தனங்களால் நிதி நிறுவனங்கள் மீது பொதுமக்களுக்கு இருக்கும் நம்பகத் தன்மையை இத்தகைய படங்கள் சீரழித்து விடக் கூடும் என்ற குற்றச்சாட்டும் பரவலாக முன்வைக்கப்படுகிறது. மேற்பார்வை நிறுவனங்களது தொடர்ச்சியான கண்காணிப்புக்குள் இருக்கின்ற வங்கிகள், மியூச்சுவல் ஃபண்ட் நிறுவனங்கள், இன்சூரன்ஸ் நிறுவனங்கள் இந்தத் திரைப்படத்தில் காட்டப்படுவது போல கூட்டுச் சேர்ந்து பெரிய அளவில் நிதி மோசடியில் நிறுவனமயப்படுத்தப்பட்ட ரீதியில் செயல்படுவது ஏறக்குறைய சாத்தியமற்றது. ஏனெனில் சரிவர முகாமிக்கப்படும் ஒரு நிதி நிறுவனத்தில் உள்ளக கணக்காய்வுகள், வெளியகக் கணக்காய்வுகள், மேற்பார்வை நிறுவனத்தின் ஆய்வுகள் எனப் பல நிலைகளில் கட்டுப்பாடுகள் (controls) அமைந்திருக்கும்.

ஒரு நாட்டின் பொருளாதார

மற்றும் நிதியியல் உறுதிப்பாடு, நிதித்துறை நிறுவனங்கள் மீதான மக்களது நம்பகத்தன்மையிலேயே கட்டியமைக்கப்படுகிறது. இந்த நம்பிக்கை மீது ஐயங்கள் எழுகின்ற போது, பிரதான நிதி நிறுவனங்கள் மீது மக்கள் நம்பிக்கை இழக்கின்ற போது, மக்கள் தமது முதலீடுகளையும் வங்கி வைப்புக்களையும் மீளப் பெற முண்டியடிப்பர். (A bank run or run on the bank). இதன் தொடர்ச்சியாக, ஒட்டுமொத்த நிதி முறைமையே சரிவைச் சந்திக்க நேரலாம். இதன் காரணமாகவே நிதியியல் முறையின் உறுதிப்பாட்டைப் பேணுதல் என்கின்ற அம்சம் உலகின் பல மத்திய வங்கிகளினது பிரதான குறிக்கோள்களில் ஒன்றாக இடம்பெறுகின்றது.

நிதித்துறையில் உள்ள முக்கியமான அம்சம், குறிப்பிட்ட நிதி நிறுவனம் ஒன்றில் ஏற்படுகின்ற சிக்கல் ஏனைய நிறுவனங்களையும் மிக விரைவாகப் பாதிக்கும் என்பதாகும் (Risk of contagion).

முக்கியமான நிதித்துறை நிறுவனங்கள் எல்லாம் ஒரு பொதுத்துறை நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழ் கட்டமைக்கப்படுகின்றன.

- எல்லா நாடுகளிலுமே வங்கிகள் மற்றும் பொதுமக்களிடம் வைப்புக்களைப் பெறுகின்ற நிதி நிறுவனங்கள், மத்திய வங்கியின் உரிமம் பெற்று மத்திய வங்கியின் அனுமதியுடன் மட்டுமே இயங்க முடியும். இலங்கை மத்திய வங்கி, பிரதான நிதி நிறுவனங்களை மேற்பார்வை செய்து ஒழுங்குபடுத்துகிறது. ஒரு குறிப்பிட்ட உச்ச அளவு வரை இத்தகைய கண்காணிப்புக்கு உட்படும் நிதி நிறுவனங்களின் வாடிக்கையாளர் வைப்புக்களுக்கு வைப்புக் காப்புறுதியும் ((Deposit In—surance) கட்டாயமாக்கப்பட்டுள்ளது. நிதி நிறுவனங்களின் தோல்வியில் இருந்து வைப்பாளர்களைப் பாதுகாப்பதற்கான ஒரு பொறிமுறையை உருவாக்குவதும், அதன் மூலம் நிதி நிறுவனங்களின் ஸ்திரத்தன்மையையும், வைப்பாளர்களின் நம்பிக்கையைப் பேணுவதன் மூலம் நாட்டின் ஒட்டுமொத்த நிதி அமைப்பையும் மேம்படுத்துவதும் கட்டாய வைப்புக் காப்புறுதியின் நோக்கமாகும்.
- பங்குச் சந்தை சார்ந்த நிறுவனங்களும் அலகு அறக்கட்டளை நிதி (Unit Trust) போன்ற முதலீட்டு நிறுவனங்களும் முதலீட்டு முகாமையில் ஈடுபடும் நிறுவனங்களும் (Fund Managers) SEC (SECURITIES AND EXCHANGE COMMISSION OF SRI LANKA) எனப்படும் இலங்கைப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு என்ற கண்காணிப்பு அமைப்பின் அனுமதியுடன் மட்டுமே இயங்க முடியும். மேற்படி நிறுவனங்கள் யாவும் தொடர்ச்சியான மதிப்பாய்வுக்கும் கண்காணிப்புக்கும் உட்பட்டு மாத்திரமே செயல்பட முடியும்.
- இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறை ஆணையம் (Insurance Regu—latory Commission of Sri Lanka. இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற காப்புறுதி நிறுவனங்களை மேற்பார்வை செய்கின்றது. காப்புறுதிதாரர்களின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கில், இலங்கையில் காப்புறுதி வியாபாரம் நேர்மையுடனும் தொழில்சார் மற்றும் விவேகமான முறையிலும் பரிவர்த்தனை செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதே ஆணைக்குழுவின் நோக்கமும் பொறுப்பும் ஆகும். இலங்கையில் இயங்கும் அனைத்து காப்புறுதியாளர்கள், காப்புறுதி தரகர்கள் மற்றும் இழப்பைச் சரிசெய்வோர் காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைய ஒழுங்குமுறை வரம்புக்குட்பட்டவர்கள்.

இத்தகைய அரச துறைக் கண்காணிப்புக் காரணமாக நிதித்துறையில் மோசடிகள் இடம் பெறுவதில்லை என்பது கருத்தல்ல. இலங்கையில் பல நிதி நிறுவனங்கள் காலத்துக்குக் காலம் முறிவடைந்துள்ளன. கடந்த ஆண்டில் கூட ஐந்து செயலிழந்த நிதிக் கம்பெனிகளின் உரிமங்களை மத்திய வங்கி மீளப் பெற்றது. 1980 களில் பல நிதிக் கம்பெனிகள் தொடர்ச்சியாக முறிவடைந்தன. 2002 இல் பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கி கலைக்கப்பட்டது. இந்த முறிவுகளால் ஆயிரக்கணக்கான அப்பாவி வாடிக்கையாளர்கள் நமது வாழ்நாள் சேமிப்பை இழக்க நேர்ந்தது. இலங்கை மத்திய வங்கி பிணைமுறி ஊழல் தேசத்திற்கு 11 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கும் அதிகமான இழப்பை ஏற்படுத்தியது என விக்கிபீடியா குறிப்பிடுகின்றது. மோசடியான பிரமிட் வகைத் திட்டங்களை (Pyramid type schemes. நம்பியும் இலங்கையில் அப்பாவிப் பொதுமக்கள் தமது சேமிப்புக்களை இழந்துள்ளனர். கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில் மேற்பார்வை செய்யப்படும் நிதி நிறுவனங்களில் ஏற்படக்கூடிய ஆபத்து எவ்வித மேற்பார்வைகளும் அற்ற நிறுவனங்களோடு ஒப்பிடுகின்ற போது ஒப்பீட்டளவில் மிகக் குறைவானதாகும்.

வாடிக்கையாளர்கள் விழிப்பாக இருப்பதும் தாம் மேற்கொள்கின்ற நிதி கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான சரியான தகவல்களை வேண்டி பெற்றுக் கொள்வதும் பிரதானமானதாகும். மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே அடிப்படையான நிதியியல் அறிவு வளர்க்கப்படுவது இத்தகைய மோசடிகளுக்கான மற்றொரு தீர்வாகும். இலங்கை மத்திய வங்கி, SEC எனப்படும் இலங்கைப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறை ஆணையம் போன்ற கண்காணிப்பு நிறுவனங்களால் வெளியிடப்படும் வழிகாட்டுதல்களை பொதுமக்களும் முதலீட்டாளர்களும் சரிவர விளங்கிக் கொண்டு தமது முதலீட்டுத் தெரிவுகளை, நிதித் தெரிவுகளை மேற்கொள்ள வேண்டும். நிதி நிறுவனம் மற்றும் மேற்கொள்ளப்படும் முதலீடு அதிலுள்ள ஆபத்துக்கள் பற்றிய அடிப்படையான தகவல்களை தீர்மானத்தை மேற்கொள்வதற்கு முன்னரே திரட்டிக்கொள்வதும் நமது கொடுக்கல் வாங்கல்களில் சந்தேகங்கள் இருந்தால் குறித்த நிறுவனத்தின் தகுதி வாய்ந்த பிரிவினருக்கு எழுத்தில் நமது குறைகளை தெரிவிப்பதோடு தேவைப்படின் மத்திய வங்கி போன்ற மேற்பார்வை செய்யும் நிறுவனத்துக்கும் முறையீடு ஒன்றை வழங்க எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும்.

எல்லா வகையான நிதி முதலீடுகளிலும் நட்ட ஆபத்துக் காணப்படுகின்றது. எல்லா வகையான நிதி நிறுவனங்களிலும் ஆபத்து உள்ளது. பொதுவாக நாட்டின் அரசாங்கத்தினால் வெளியிடப்படும் அரச கடன் பத்திரங்கள் நட்ட ஆபத்து அற்றவை எனக் கருதப்பட்டாலும் இலங்கையில் கடந்த ஆண்டு ஏற்பட்ட மோசமான பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து அரச பத்திரங்களே ஆபத்து மிக்கவையாக அடையாளம் காணப்பட்டன. இதே வேளை, முதலீட்டுக்கு முதலீடு ஆபத்தின் அளவும் மாறுபட்டுக் காணப்படும். குறிப்பாக மத்திய வங்கியால் கண்காணிக்கப்படுகின்ற, வங்கி வைப்புகளுக்கான காப்புறுதியைக் கொண்டிருக்கும் வங்கி ஒன்றில் இடப்படுகின்ற பணம், பங்குச்சந்தையில் முதலிடப்படும் பணத்தோடு ஒப்பிடுகின்ற போது பெருமளவில் ஆபத்துக் குறைந்ததாகும். முதலீட்டின் தன்மை, அதன் செயலாற்றம், குறிப்பிட்ட முதலீட்டில் உள்ள ஆபத்துக்கள் பற்றிய அறிவு வாடிக்கையாளர்களிடம் காணப்படுமாயின் நட்ட ஆபத்துக்களை குறிப்பிடத்தக்களவு முகாமை செய்ய முடியும்.




பிரவீணன்
விழிமைந்தன்



# வேண்டத் தக்கது அறிவாய் நீ...

*“வணக்கம் அண்ணை. நான் யாழ்ப்பாணத்திலையிருந்து தயாளன் கதைக்கிறன்.”*

*“........”*

*(எந்தத் தயாளனாக இருக்கும்?)*

“என்னண்ணை ஞாபகம் இல்லையே? முந்தி நீங்களும் நானும் இலங்கை வானொலியிலை விவாத நிகழ்ச்சி செய்தமே?”

*(ஓ! அந்தத் தயாளனா? அவருக்கு என்னை விட வயது கூடுதல் ஆயிற்றே! அண்ணை என்கிறார்?)*

“ஓம். ஓம், நல்லா ஞாபகம் இருக்கு. மறக்க முடியுமா? சொல்லுங்கோ!”

“இல்லை, நாங்கள் ஒரு விவாதப்போட்டி ஒண்டு நடத்திறம். யாழ்ப்பாணக் கல்லூரிகளுக்கு இடையில.”

*(‘நாங்கள்’ என்றால் யார்?)*

*“ஓ! அப்பிடியா. நல்ல விடயம். சந்தோசம்.”*

“போட்டிக்கு எல்லா ஏற்பாடும் முடிஞ்சுது அண்ணை. இன்னும் இரண்டு கிழமையிலை போட்டி வைச்சுப் பரிசு குடுக்கப்போறம். அதிலைதான் உங்களிட்டை ஒரு சின்ன உதவி எதிர்பார்க்கிறம்.”

(என்னவாக இருக்கும்? ஒருவேளை தலையங்கங்கள் எடுத்துத் தரச்சொல்லிக் கேட்கப் போகிறாரா? அல்லது ஸூமில் நடுநிலைமை வகிப்பதற்கா?)

“ஓம். கட்டாயம். சொல்லுங்கோ.”

“இல்லையண்ணை. மற்றதெல்லாம் நாங்கள் பார்த்துக்கொள்ளுவம்.. இந்தப் பொருளாதார நிலைதான் கொஞ்சம் கஷ்டமாயிருக்கு அதுதான்.பரிசுகள் வாங்கிக் குடுக்கிறதை நீங்கள் ஸ்பொன்சர் செய்தியள் எண்டால் நல்லது. உங்களை மாதிரியான தமிழார்வம் உள்ளவர்களின்ரை ஆதரவை எதிர்பார்க்கிறம்.”

(ஓ! இதுக்குத்தான் “அண்ணை” யா!)

“அப்படியா. சரி, பார்க்கலாம். உங்கடை கடிதத் தலைப்பில் ஒரு கடிதம் எழுதி அனுப்புங்கோ.”

(நடத்திறது யார் என்றாவது பார்ப்போம்.)

“நன்றி அண்ணை. சரியண்ணை வைக்கிறன்”.

இப்படியான தொலைபேசி உரையாடல்கள் சாதாரணம்.

அதுவும், பல வருடங்களுக்கு முன்பு “ஒருக்கா எடுக்கிறீங்களா” என்ற கோரிக்கை விடப்பட்டு புலம்பெயர்ந்தவர் திருப்பி அழைத்த பிறகுதான் மிகுதி பேசப்படும். இப்போது வாட்சப்பின் புண்ணியத்தில் அது தேவைப்படுவதில்லை. ஆனால் யாரிடம் பொருளாதார உதவிக்கு கோரிக்கை விடுக்கப்படுகிறதோ அவருக்கு “அண்ணை” என்ற கௌரவப் பட்டம் வயது பேதமின்றி அளிக்கப்படும். தாதா உலகில் குழுத்தலைவனை “அண்ணன்” என்று வயது பாகுபாடில்லாமல் அழைப்பதுபோல இந்தவிதமான புலம்பெயர். தாயகத்தமிழர் ஊடாட்டங்களிலும் புலம்பெயர் தமிழன் எப்போதும் அண்ணன்.

புலம்பெயர் தமிழர்கள் தாயகத்துக்கு ஒரு வளம். ஒரு பலம். ஒரு துணை. அதேநேரம் இது ஒரு முடியக்கூடிய வளமும்தான். புலம்பெயர் நாடுகளில் வளரும் அடுத்த தலைமுறை தாயகத்துடன் நெருக்கமான உணர்வு ரீதியான பிணைப்புகளைக் கொண்டிருக்கப்போவதில்லை. அதனால் அது பெரும் உதவிகளைத் தாயகத்துக்கு வழங்கப்போவதுமில்லை. அடுத்த சில வருடங்களுக்கோ தசாப்தங்களுக்கோ புலம்பெயர் தமிழர்கள் தாய்நாட்டு உறவுகளுக்குத் தம்மால் முடிந்த உதவிகளை வழங்குவார்கள். அதேவேளை புலம்பெயர் தமிழர்களால் தாயகத்துக்குச் சில உபத்திரவங்களும் இருக்கின்றன என்பதும் உண்மையே. இந்த அன்பும் வெறுப்பும், உதவியும் உபத்திரவமும், அடித்தலும் அணைத்தலும் கலந்த தாயகத் தமிழர். புலம்பெயர் தமிழர் உறவைப் பற்றி ஆழமாகப் பேசுவதானால் அதுவே மிக நீண்ட கட்டுரை ஆகிவிடும். ஆனால், உதவியோ உபத்திரவமோ புலம்பெயர்ந்த தமிழர்களிடம் இருந்து தாயகத்துக்கு வருகிற எதுவும் அடுத்த முப்பது வருடங்களுக்குப் பிறகு கிடைக்காது என்பது மட்டும் உண்மை. ஆனால், புலம்பெயர்ந்த தமிழர்களிடம் இருந்து கிடைக்கக்கூடிய உதவிகள் ஒரு காலரீதியாக மட்டுப்படுத்தப்பட்ட வளம் என்பதை மனதில் வைத்துக்கொண்டு அந்த வளத்தில் இருந்து உச்சப்பயன்பாட்டைத் தாயகம் பெற்றுக்கொள்கிறதா என்று பார்த்தால், இல்லை என்பதே வருத்தத்திற்குரிய விடையாக இருக்கிறது. இதற்குப் பிரதான காரணம் புலம்பெயர்ந்த தமிழர்கள் தாயகத்திற்கும் தாயக மக்களுக்கும் செய்யக்கூடிய உதவிகள் பற்றி ஒருபரிமாணப் பார்வை ஒன்று உருவாகி (அல்லது உருவாக்கப்பட்டு) நிலைத்து நிற்பதே. இன்னும்

தெளிவாகச் சொல்வதானால், புலம் பெயர் தமிழர்கள் தாயகத்திற்கு வழங்கக்கூடிய உதவிகளை, நேரடியான, குறுகிய காலப் பயன்பாட்டுக்கான பண உதவிகள் என்பதற்குள் மட்டுப்படுத்தி விடுவதே சாதாரணமாக வழக்கமாக இருக்கிறது. தாயகத்திலுள்ள பல குடும்பங்களுக்கு இந்தக் குறுகியகாலப் பொருளாதார உதவி என்பது மிக அத்தியாவசியமானதாக, வயிற்றுப் பசி தீர்க்கும் விடயமாக இருந்தது, இன்னும் இருக்கிறது என்பதும் உண்மைதான். ஆனால், சமீப காலங்களில் புலம்பெயர் தமிழர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் பொருளாதார உதவிகள் உணவு, உடை, உறையுள் என்ற அடிப்படைத் தேவைகளைத் தீர்த்துவைத்தல், அல்லது அக்கா தங்கைமாருக்குச் சீதனம் கொடுத்துத் திருமணம் செய்துவைத்தல் என்ற ஆரம்பகால இலக்குகளில் இருந்து நகர்ந்து, மோட்டார் சைக்கிள், கார், பெரிய வீடு என்று ஆடம்பர வாழ்வு வாழ்வதற்கு உதவுதல், கோயில்களைப் பெரிதாகக் கட்டுவதற்கும் திருவிழாக்களை ஆடம்பரமாக நடாத்துவதற்கும் உதவுதல், தாயகத்திலுள்ள நிறுவனங்கள் தமது அத்தியாவசியமான மற்றும் அத்தியாவசியமற்ற செயற்பாடுகளை மேற்கொள்ள உதவுதல் என்றிவ்வாறு பல பரிமாணங்களில் விரிந்து செல்கின்றன. ஆனால், காரியம் என்னவாக இருந்தாலும், அதற்குப் புலம்பெயர் தமிழர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படும் உதவியானது பொருளாதார உதவியாகவே பெரும்பாலும் இருக்கிறது.

புலம்பெயர் தமிழர்கள் புலப்பெயர்வால் தேடிக்கொண்டது பணம் மட்டும் அல்ல. புலப்பெயர்வால் அவர்கள் இழந்தவையும் பெற்றவையும் பல. இன்னும் சொல்வதானால் பணம் அவர்கள் தேடிக் கொண்டவற்றில் முக்கியமானது கூட அல்ல. பல துறைகளில் உயர்கல்வி மற்றும் நிபுணத்துவ அறிவு, குறிப்பாக தாயகத்தில் இன்னும் அறிமுகப்படுத்தப்படாத தொழில்நுட்பங்களுடனான ஊடாட்டமும் பயிற்சியும், வியாபார, மூலதன, மற்றும் தனியார் நிறுவன மேலாண்மையில் நிபுணத்துவம், மேலைத்தேயக் கல்விமுறைகள் தொடர்பான பரிச்சயம், மனித உரிமைகள் மற்றும் சக மனிதருக்கான மரியாதை பற்றிய சர்வதேச விழிப்புணர்வு, முதலிய எத்தனையோ விடயங்களைப் புலப்பெயர்வின் மூலம் தமிழர்கள் பெற்றுக்கொண்டுள்ளார்கள். இவை தாயகத்துக்குக் கடத்தப்படுமாக இருந்தால் தாயக அபிவிருத்திக்கான மிகச்சிறந்த வளமாக இவை அமையும்.

உதாரணமாக, வளர்ச்சியடைந்த மேலைத்தேய நாட்டில் கடமையாற்றும் ஒரு மருத்துவரை எடுத்துக்கொண்டால், அவர் பொருளாதார ரீதியில் ஒரு பலம்வாய்ந்த நிலையில் இருப்பார், அவரிடம் பல திட்டங்களுக்குப் பொருளுதவி கோரலாம் என்பதே பலருடைய மனதில் முதலில் வரும் எண்ணமாக இருக்கிறது. ஆனால் தாயகத்துக்கு அவர் செய்யக்கூடிய மிக முக்கியமான சேவை அதுவல்ல. அவர் தாம் சிறப்புத் தேர்ச்சியடைந்த மருத்துவத் துறையில் தாம் பெற்றுக்கொண்ட அறிவைத் தாயகத்திலுள்ள மருத்துவர்களுடன் பகிர்ந்து கொள்வதன்மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் பல உயிர்களைக் காப்பாற்ற முடியும். தாயகத்தில் பயின்று தொழில்புரியும் மருத்துவர்கள் பலரும் தமது உயர்கல்வி மற்றும் பயிற்சிக்காக இப்போதும் வளர்ச்சியடைந்த மேற்கத்திய நாடுகளுக்கே அநேகமாகச் செல்லுகின்றனர். ஆகவே குறித்த நாடுகளில் நிரந்தரமாக வாழ்கின்ற ஒரு மருத்துவ நிபுணர் தமது துறையில் உயர்ந்த பயிற்சியும் அனுபவமும் கொண்டவராக இருப்பார் என்பதை யாரும் நிராகரிக்க முடியாது. ஆனால், புலம்பெயர்ந்த நாட்டில் வாழ்கின்ற ஒரு மருத்துவர் பற்றித் தாயகத்தில் இருக்கின்ற விம்பம், அவர் “ஒரு மருத்துவர்” என்பதன் அடிப்படையிலன்றி “அவர் இன்ன தேசத்தில் வாழ்பவர்” என்பதையே முதன்மையாகக் கொண்டு

கட்டமைக்கப்பட்டதாக இருக்கிறது. இந்தத் தேச அடிப்படையிலான அடையாளக் கட்டமைப்பானது புலம்பெயர் தமிழர்கள் தாயகத்துக்கு வழங்கக்கூடிய உதவிகளிலும் மட்டுப்படுத்தல்களை ஏற்படுத்தி, குறுகிய காலப் பண உதவிகள் என்பதற்குள் கொண்டுவந்து பெரும்பாலும் அடக்கி விடுகிறது.

இன்னொரு உதாரணம் சொல்வதாயின், தாயகத்தில் தொழில்புரியும் ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒரு பேராசிரியராகப் பொதுவெளியில் அறியப்படுவார். அவரிடம் அறிவுரைகள் முதலியன கேட்பதற்கு நிறையப்பேர் புரிபவர்களுக்கும், தங்கள் நாடு தங்கள் தொழிலாகக் கருதப்படுவது வருத்தத்திற்குரிய ஒரு விடயமாகவே இருக்கிறது.

"வெளிநாடு" என்பது பற்றித் தாயகத்தில் நிலவும் தவறான கருதுகோள்கள் தாயகத்தமிழர்களின் சுயகணிப்பை மட்டுமின்றிப் புலம்பெயர் தமிழர்களின் சுயகணிப்பையும் சிலவேளை பாதிக்கின்றன என்பதற்கே இந்த உதாரணத்தைச் சொல்கிறேன்.

இந்த ஒருபரிமாணப் பார்வை இயல்பாகவே மக்களிடம் வேரூன்றி உள்ளது என்றாலும் சிலவேளைகளில் சில தனிநபர்களாலும் சில நிறுவனங்களாலும்

**"வெளிநாடு" என்பது பற்றித் தாயகத்தில் நிலவும் தவறான கருதுகோள்கள் தாயகத்தமிழர்களின் சுயகணிப்பை மட்டுமின்றிப் புலம்பெயர் தமிழர்களின் சுயகணிப்பையும் சிலவேளை பாதிக்கின்றன என்பதற்கே இந்த உதாரணத்தைச் சொல்கிறேன்.**

வருவார்கள். பாடசாலைகள் முதலிய ஸ்தாபனங்களில் அவரை உரையாற்றும்படி அழைப்பார்கள். ஆனால், அதே பேராசிரியர்

வெளிநாட்டில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் சேவைசெய்தால், தாயகத்தைப் பொறுத்தவரை அவர் ஒரு பேராசிரியர் என்ற அடையாளத்தைவிட அவர் குறித்த நாட்டில் வாழ்பவர் என்ற அடையாளமே முன்னிலைப்படுத்தப்படுகிறது. அதாவது அவரது தொழில் "பேராசிரியர்" அல்ல; "கனடா" அல்லது "லண்டன்" அல்லது "அவுஸ்திரேலியா" தான் அவரது தொழில்! இதனால், தாயகத்தில் இருப்போர் அவரின் பரந்த அறிவைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புவதைவிட அவரிடம் பணம் கேட்டு வாங்குவதிலேயே அதிக குறியாக இருக்கிறார்கள். இது ஒரு வகையில் அவருக்குச் செய்யும் அவமதிப்பே. எனவே வெளிநாடுகளில் உயர்தொழில் தமது சுயநல நோக்கங்களுக்காக வேண்டுமென்றே கட்டமைக்கப்படுகிறது என்பதும் வருத்தத்திற்குரிய உண்மையே. உதாரணமாக, பொருளாதார ரீதியான ஊழல் நிறைந்த நிறுவனங்கள், தமது நிதிக் கையாளுகைகள் மீது அதிகமான கவனம் குவிக்கப்படுவதை இயல்பாகவே விரும்புவதில்லை. எனவே புலம்பெயர் தமிழர்களை தமது நாளாந்த நடவடிக்கைகளில் தலையிட அனுமதிப்பது தமது நிதிக்கையாளுகைகளைக் கேள்விக்கு உட்படுத்த இடமளிக்கலாம் என்ற இயல்பான பயம் அவர்களுக்கு உண்டு. புலம்பெயர்ந்த தமிழர்களை பணத்தைக் கொடுத்து விட்டு அதற்குப்பதிலாக புகழுரைகளையும் எப்போதாவது தாயகத்திற்கு வரும்போது மாலை மரியாதைகளையும் மட்டும் ஏற்றுக்கொண்டு போகும் தூரத்திலேயே அவர்கள் வைத்திருக்க விரும்புகிறார்கள். இது எல்லா நிறுவனங்களுக்குமான

பொதுமைப்படுத்தப்பட்ட விமர்சனம் அல்ல. மக்களுக்கு நேர்மையுடனும் உண்மையுடனும் சேவைசெய்யும் பல நிறுவனங்கள் தாயகத்தில் உள்ளன. தனிநபர்களும் உள்ளனர். ஆனால், ஊழல் மலிந்துள்ள தொண்டு நிறுவனங்களும் உள்ளன என்பதை யாரும் மறந்துவிட முடியாது. இப்படியான நிறுவனங்கள் புலம்பெயர் சமூகத்தைப் பணம் காய்ச்சி மரமாக மட்டுமே பார்க்க விரும்புகின்றன.

இவையும்போக, பல்வேறு துறைகளில் துறைசார் நிபுணர்களாகத் தாயகத்தில் வாழ்ந்தவர்கள் புலம்பெயரும் போது ஏற்கனவே அவர்களிடம் இருந்த நிபுணத்துவமும் அவர்களுடன் புலம்பெயர்ந்து விடுகிறது. அவர்கள் தாயகத்தில் வாழாவிட்டாலும் பல சந்தர்ப்பங்களில் தாம் பெற்றிருந்த அந்த நிபுணத்துவத்தைத் தாயகத்தின் நன்மைக்காகப் பயன்படுத்த ஆயத்தமாகவே இருப்பார்கள். புலம்பெயர்ந்து விட்டார்கள் என்பதற்காக அவர்கள் வைத்திருந்த அந்த நிபுணத்துவத்தை அவர்களிடம் இருந்து வேறுபடுத்தி அவர்களை வெறுமனே பணம் காய்ச்சி

மரங்களாகப் பார்ப்பது நல்லதல்ல. குறிப்பாக ஒரு துறையில் அதிதிறமை பெற்றிருந்த பலர் வெளியேறும்போது (துரதிஷ்டவசமாகப் பல சந்தர்ப்பங்களில் இது நடக்கிறது) அதனால் ஏற்படும் நிபுணத்துவ வெற்றிடத்தை நிரப்பிக்கொள்வது இலகுவல்ல. அப்படியான சந்தர்ப்பங்களில் வெளியேறியவர்களின் நிபுணத்துவத்தை முடிந்தவரை தொடர்ந்து பாவிப்பதே பொருத்தமாக இருக்கும். தொழில்நுட்பத் துறைகளில் மட்டுமன்றி இயற்றமிழ், இசைத்தமிழ், நடனம், ஓவியம் முதலிய துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்த பலர் இன்றைக்குப் புலம்பெயர்ந்து வாழ்கிறார்கள். இவர்களைத் தாயகத்தின் குறித்த துறைகள் சம்பந்தமான செயற்பாடுகளில் முடிந்தவரை தொடர்ந்து இணைத்துக்கொண்டு பயணிக்கும்போது அத் துறைகள் அதிக வளம்பெறும்.

புலம் பெயர் தமிழர்கள் தாயக மக்களுக்குப் பண ரீதியான உதவிகளை வழங்குவதாக இருந்தாலும், நீண்டகாலத் தொழில் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதே இனிமேல் பொருத்தமாக இருக்கும். "பசியோடு இருப்பவனுக்கு மீனைக் கொடுப்பதை விட, மீன் பிடிக்கக் கற்றுக்கொடுப்பது சிறந்தது" என்பது ஒரு சீனப் பழமொழி. இறந்தகாலத்தில் புறச்சூழற் காரணிகளால் இது அதிகம் சாத்தியமில்லாமல் இருந்ததோடு மக்களின் நாளாந்த இருப்பைத் தக்கவைத்துக் கொள்வது முதலாவது தேவையாக இருந்தது. ஆனால் அதையே தொடர்ந்து செய்துகொண்டிருக்க முடியாது. தாயகத்தின் சமூகத்தைக் குறிப்பாக அதன் இளையவர்களை ஒரு தங்கிவாழும் சமூகமாக உருவாக்குவது அவர்களுக்குச் செய்யும் பெரும் தீமையாகவே முடியும். எனவே பொருளாதார உதவிகள் இனிமேல் வழங்கப்படும்போது அவை கடின உழைப்பைச் செய்யத் தயாராக இருப்பவர்களுக்குப் போய்ச்சேர்வதை உறுதிசெய்வதும், தாயக மக்களின் கடும் உழைப்பும் புலம்பெயர் தமிழர்களின் மூலதனமும் சேர்ந்து தொடர் வருமான மூலங்கள் தாயக உறவுகளுக்கு உருவாக்கிக் கொள்ளப்படுவதை உறுதிசெய்வதும் புலம்பெயர் தமிழர்களின் கடமையாகிறது. அவ்வகையில், புலம் பெயர் தமிழர்களைப் புதுவிதமான தொழில்முயற்சிகளுக்கு இலாபநோக்கில் உதவும் venture capitalists ஆகத் தாயக உறவுகள் பயன்படுத்தலாம்.

ஆனால்,இப்படியான தொழில்முயற்சிகள் நீண்டகால அடிப்படையில் வெற்றி பெறுவதற்கு மூலதனமும் உழைப்பும் மட்டும் போதாது. கல்வியறிவும், தொழில் அனுபவமும், தொழில்நுட்ப அறிவும், தொழில் மேலாண்மை பற்றிய அறிவும் அவசியம். இங்கேதான் புலம்பெயர்

தமிழர்கள் மிகக் காத்திரமான பங்களிப்பை வழங்க முடியும். அப்படி வழங்குவதற்கு, அப்படியான பங்களிப்புகளைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளும் மனநிலை தாயக உறவுகளுக்கும் ஏற்படுவது முக்கியம்.

“அண்ணை, இன்ன தேவைக்கு இவ்வளவு பணம் தேவையாயிருக்கு. உதவ முடியுமா?” இப்படியே தாயகத்தில் இருந்து வரும் அழைப்புகள் இவ்வளவுநாளும் கேட்டுக் கொண்டிருந்தன. இனிவரும் காலங்களில் வேறு வகையான அழைப்புகள் வருவது அவசியம். அவை “இன்ன தொழில் முயற்சி ஆரம்பிக்க இருக்கிறேன். இதற்கு நீங்கள் மூலதனம் இடமுடியுமா? இலாபத்தை இன்ன வகையில் பிரித்துக்கொள்வோம்” என்றோ “இந்தத் தொழில் தொடங்க இருக்கிறேன். இதுபற்றி இங்கே அதிகம் தெரியவில்லை. நீங்கள் உங்கள் நாட்டில் பலவருடங்கள் இதை வெற்றிகரமாகச் செய்வதாக அறிந்தேன். இதுபற்றி எனக்கு ஆலோசனைகள் சொல்ல முடியுமா?” என்றோ “எங்களது கல்வி நிறுவனத்தில் இன்ன கற்கைநெறியை ஆரம்பித்துள்ளோம். இதுபற்றிக் கற்பிப்பதற்குத் தகுந்தவர்கள் நம்மிடம் போதாமல் உள்ளது. நீங்கள் இவ்விடயத்தைக் கற்பித்து வருவதால் நம் மாணவர்களுக்கும் நீங்கள் இதைக் கற்பிக்க முடியுமா?” என்றோ அல்லது “நீங்கள் செய்த நாட்டிய நாடகத்தை யூடியூபில் பார்த்தேன். இத்துறையில் நீங்கள் என்னைவிட மூத்தவர், அனுபவமிக்கவர் என்ற முறையில் எனது மாணவர்களின் நிகழ்வைப் பார்த்தது அபிப்பிராயம் சொல்ல முடியுமா?” என்றோ என்றிவ்வாறு அமையட்டும். சுருக்கமாகச் சொல்வதானால், புலம்பெயர் தமிழர்களின் முதலாவது அடையாளம் அவர்கள் வாழும் நாடு அல்லது அவர்கள் டொலரில் அல்லது யூரோவில் சம்பாதிக்கும் பணம் என்ற எண்ணக்கருவில் இருந்து விடுபட்டு, தனி மனிதர்களாக அவர்களைப் பார்த்து அவர்கள் ஒவ்வொருவரும் தாயகத்துக்கு வழங்கக்கூடிய உதவிகளை இனங்கண்டு அவற்றைக் கேட்டுப் பெற்றுக்கொள்வதன் மூலமே இந்த வரையறுக்கப்பட்ட வளத்தில் இருந்து உச்சப் பயன்பாட்டைத் தாயக உறவுகள் பெற்றுக்கொள்ள முடியும். அதேபோல, புலம்பெயர் தமிழர்களும் இத்தகு ஊடாட்டங்களால் நன்மை அடையலாம் என்பதிலும் சந்தேகமில்லை.

வேண்டத் தக்கது அறிவோம்!


Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

**Chapel Ridge**
**Funeral Home & Cremation Centre**

**துயர் நிறைந்த வேளைகளில் உங்கள் சுமை நிறைந்த தேவைகளை சுலபமாக்கி கனிவான சேவை வழங்குபவர்**




**Vilosan Sivatharman, B.Eng**
**Funeral Director**
**Email: vilosan9@hotmail.com**
**Phone: (416) 993 - 0826 | Fax: (905) 305 - 8128**
**8911 Woodbine Avenue Markham, ON L3R 5G1**

# கட்புலக் கலைஞர்கள்

தமது நேரத்தையும்
உழைப்பையும் உள்ளத்துக்கும்
கட்புலக் கலைஞர்களுக்கும்,
படைப்பாளிகளுக்கும் மெது நன்றிகள்.



**ஓவியர் டீன் கபூர்**

திசை எனும் வாகனம், விளக்கமற்று, காற்றின் காதல், எனது வேர், வெண்மையின் புன்னகை. இதம் மற்றும் நீயொரு குழந்தை கவிதைகளுக்கான ஓவியங்களை வரைந்தவர் ஓவியர் டீன் கபூர் அவர்கள்.



**ஓவியர் நளீம்**

ஏற்றுமதிக்காக, காலமாற்றம், குறையொன்றுமில்லை,ஹிப்பி மற்றும் பொட்டல் வெளிப்பறவைகள் சிறுகதைகளுக்கான ஓவியங்களையும் சயிக்கிள் டாக்குத்தர் என்ற நகைச்சுவைப் பதிவுக்கான ஓவியத்தையும் வரைந்தவர் ஓவியர் நளீம் அவர்கள்.

**ஓவியர் செல்வன்**



விதானையாரின் விண்ணானப் பதில்கள், வேண்டத்தக்கது அறிவோம் ஓவியங்களையும் கவிதைகளான சகோதரர்களே ..பசியுடன் என் தாயை சந்திக்க நேர்ந்தால். கீதம் இனிய குயிலேயின் ஓவியங்களையும். குல்லமடை சிறுகதையின் ஓவியத்தையும் வரைந்தவர் ஓவியரும், கார்ட்டூனிஸ்ட்டுமான செல்வன் அவர்கள்.



**இராசதுரை குணசீலன்**

சீசன் பறவைகள் கவிதைக்கான ஓவியம், கரப்பான் பூச்சி சிறுவர் கதைக்கான ஓவியம், பொப் மாலேயின் ஓவியம் என்பவற்றை வரைந்தவர் ஓவியர் இராசதுரை குணசீலன் அவர்கள்.



**பிரியா தபேந்திரன்**

கொக்குவில். இதன் ஓவியத்தை வரைந்தவர் ஓவியர் பிரியா தபேந்திரன் அவர்கள்.

# அறிவும் கூட்டுக்குள்

நீயொரு குழந்தை
ஓவியம் செய்ய முற்படுகிறாய்
உனது தூரிகையில்
சுதந்திர இயக்கமில்லை
நிறங்களில்
விடிகாலையில்லை
தூரமில்லை பயணமில்லை

நீ
முயற்சி செய்கிறாய்

உன் ஓவியப் பலகையில்
காடு முளைக்கவில்லை
நதி பயணப்படவில்லை
மழை பெய்யவில்லை
மண் பண்படவில்லை
புதுக்கதைகளும் புதுக்கேள்விகளும்
புதுக்கவிதைகளும்
புதுப்பாட்டுக்களும்
புது மேடைகளும் காட்சிதரவில்லை

தேவதைகளும் பிசாசுகளும்
பாட்டிகளும் பாட்டன்களும்
விலங்குகளும் பறவைகளும்
உன்னோடு உறவாடவில்லை
ஆனாலும்
முழுப்பொழுதும்
நீயொருகுழந்தை
ஓவியம் செய்ய முற்படுகிறாய்

ஏன்?





ப.பார்த்தீ

# கொக்குவில்

ஊரில் நான் சிறுவனாக இருந்தபோது நாங்கள் வீதியைப் பயன்படுத்துவதில்லை. வீதியில் சனநெரிசல் இல்லை. எங்கள் வீதியை அதிகம் பயன்படுத்துவது மாடுகள்தான். சூரியன் வந்தாலும் எழும்புவதற்கான எந்த ஏற்பாடுகளும் அற்று தலையை மட்டும் நிமிர்த்தியபடி கோவில் நந்திகளின் தோற்றத்தில் அசைபோட்டபடி மாடுகள் இருக்கும்.

சிறுவனாகிய என்னைக் கண்டால் ஒருமுறை கொம்பை ஆட்டி மூசிவிடும். என் சரீரம் அந்த வீதியில் இருந்து மறைந்துவிடும். இப்போது சிந்தித்தால் அவை மாடுகளுக்குரிய இடமாகத்தான் இருந்தது என்பதை ஏற்றுக் கொள்ள முடிகிறது. அந்த வீதியில் தேங்கி நிற்கும் நீரும், அருகே உள்ள புற்களும், மேடு பள்ளங்களும் மாடுகளின் பார்வையில் குட்டைகள் நிறைந்த, தூக்கத்திற்கு ஏற்ற தொட்டில்கள் தான்.

அந்தத் தருணங்களில் உள் வீதியையே பயன்படுத்துவேன். உள்வீதி என்றால் வேலியை மறித்து சிறிய கடவான்கள் போட்டிருப்பார்கள். ஒற்றையடிப்பாதை அப்படியே ஒவ்வொரு காணிகளையும் கடந்து சந்தி வரை சென்று சேரும்.

அப்படி உள் வீதிகள் நிறைந்த வீடுகளும், காணிகளும் இருந்த காலம் இருந்தது. அவற்றுக்குள்ளால் புளி, உப்பு, சீனி, அரிசி என்று பண்டமாற்றுக்களால் அக்காலம் நிறைந்திருந்தது. பயமற்று, மறைப்புகளற்ற எல்லோருக்கும் எல்லோரையும் தெரிந்த வெள்ளந்திக்காலம் அது. புழுங்கல் அரிசிச் சோறுக்கும், சம்பலுக்கும், கருவாட்டுக் குழம்புக்கும் பிரியப்பட்டு மதிய வேளைகளில் அயல்வீட்டு புஷ்பம் பாட்டிக்கு முற்றம் கூட்டி, கிணற்றில் நீர் எடுத்துக் கொடுத்து மதியச் சாப்பாட்டை முடித்து மெதுவாகக் கடவானைக் கடந்து வீட்டுக்கு வந்தால் காது நிறையப் பேச்சு விழும். 'இப்புடியே ஊரூராத் திரியடா! படிச்சிடாத!'


அன்று கைபேசியில் முகப்புத்தக உள்பெட்டியூடாக ஒரு செய்தி வந்திருந்தது.

'உம்முடன் பேச வேண்டியிருக்கிறது. எனக்கு அழைக்கவும். தூங்கும் நேரத்தைத் தவிர மற்ற நேரங்களில் பேசுவேன்'.

அவரை இதற்கு முன் பார்த்ததில்லை. ஒரு பாடசாலை ஆசிரியருக்குரிய தோற்றம். கண்ணாடி போட்ட முகம். எனக்குப் படிப்பித்த ஆசிரியர் யாருமோ என்று மூளையின் எல்லாப் பக்கங்களையும் இயக்கினாலும் பிடிபடவில்லை.

யாராக இருக்கும்? எதற்காக இருக்கும்? என்ற பயம். அவரின் செய்தியும் 'பாடசாலை அதிபர் அறைக்கு வரட்டாம்' என்ற தொனியிலிருந்தது.

அகரன் பூமிநேசன்





அதைவிடத் தூங்கும் நேரத்தை விட மற்றைய நேரங்களை நான் எப்படி இனம் காண்பது? அவரது தோற்றம் இலங்கையில் ஆசிரியர்கள் அணியும் இஸ்திரி போட்ட சேட்டில் இருந்ததால் இலங்கையில் பகல் நேரம் பார்த்து அழைத்தேன். எனது அழைப்பு சத்தமிடும் ஓசை கேட்டுக்கொண்டே இருந்தது. அவர் எடுக்கவில்லை. சற்று நேரத்தில் எனக்கு குறுஞ்செய்தி வந்தது.

'நான் நித்திரையில் உள்ளேன். பின்னர் அழைக்கவும்.'

தூக்கத்தில் இருப்பவரால் எப்படி குறுஞ்செய்தி அனுப்ப முடிந்தது? என்று எனக்கு நானே திட்டித் தீர்த்தேன். பின்பு 'நீங்கள் தூங்காத நேரம் எனக்கு அழைக்கலாம்' என்று பதில் போட்டேன். அதற்கு பதில் வராது என்று தான் எதிர்பார்த்தேன். ஆனால் 'சரி' என்று பதில் வந்தது.

ஒரு கட்டத்தில் இலங்கையில் தூங்கிக்கொண்டே இருக்கும் தன் எஜமானனுக்காக பதில் எழுதும் கைபேசியைக் கண்டுபிடித்து விட்டார்களோ? என்ற பயத்திலும் இந்த பிரச்சனையிலிருந்தும் விடுபட எனக்கு பல மணி நேரம் பிடித்தது.

மறுநாள் வீட்டுக்கு பொருட்கள் வாங்குவதற்கு சென்று கொண்டிருந்தபோது நித்திரையில் செய்தி அனுப்பும் நண்பரிடம்

இருந்து அழைப்பு வந்தது. பதட்டம் இரு வகையில் அதிகரித்தது.

முதலில் அந்த அழைப்பை ஏற்காவிடில் அவர் மீண்டும் தூங்கி விடக் கூடும். என் வாகனத்தை ஓரம் செய்து அவரிடம் பேசினேன்.

அவர் கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையம் சார்பாக பேசினார். தமிழின் மிகச்சிறந்த கதைசொல்லியான பவா செல்லத்துரையை இலங்கைக்கு அழைப்பது போன்ற விவரங்களைக் கூறினார். 'ஓர் எழுத்தாளனை அழைக்கும் சமூகம் சிந்திக்கிறது' என்று தூங்கும் நண்பரில் ஆர்வம் கூடியது. அவர் கொக்குவில் என்றதும் இன்று கனடாவில் வாழும் அ. முத்துலிங்கம் அவர்கள் 'கொக்குவில்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை நினைவில் வந்தது. இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த பின்னரும் அவர்களின் சுதந்திரம் பறித்து ஒழிக்கப்பட்ட காலத்தின் முன்னரும் கொக்குவில் என்ற கிராமமும், அங்கிருந்த புகையிரதத் தரிப்பிடமும், ஊரின் நடுவே இருந்த கிணறு, அப்போதிருந்த மனிதர்களின் இயல்பும் என்று தன் கிராமத்தை அழகுபடுத்தி இருந்தது அவர் கட்டுரை. அதில் 'கொக்குவில்' என்ற பெயர் எப்படி வந்தது என்று தன் தாயாரிடம் சிறுவயதில் அவர் கேட்ட போது சொன்ன கதையும் அதை அ.மு எழுதிய விதமும் மிகவும் விரும்பத்தக்கது.

'ஏற்கனவே அந்தக் கேள்விக்கு காத்திருந்தவர் போல அம்மா சொல்லத் தொடங்கினார். இராமன் இலங்கைக்கு வந்து இராவணனைக் கொன்றுவிட்டு சீதையை மீட்டுக் கொண்டு அயோத்திக்குத் திரும்பும் முன்னர் நடந்தது. ஒரு ரம்மியமான காலை நேரத்தில் சோலை ஒன்றை ராமர் கண்டார். உடனேயே அந்த இடத்தில் வில்லை ஊன்றி விட்டு அமர்ந்து தியானம் செய்தார். தியானம் முடிந்து கண்விழித்தபோது அவர் முன்னே ஒற்றைக்காலில் ஒரு வெள்ளைக் கொக்கு நின்று தவம் செய்தது. ராமர் மனம் உருகி கொக்கின் முதுகில் தடவிக் கொடுத்தார். 'கொக்கையுமா? அதற்கு மூன்று குறி இல்லையே?' என்றேன். அப்படியல்ல. அணிலுக்கு தடவியதோடு குறி கொடுக்கும் திறன் ராமர் விரல்களுக்கு முடிந்து போனது. ஆனால் நிறைய கருணை இருந்தது. அன்றிலிருந்து அந்த இடம் 'கொக்குவில்' என்று அறியப்பட்டது என்றார். அம்மாவிடம் வேறு குறுக்குக் கேள்விகள் கேட்காமல் அவர் சொன்னதை நம்புவது என்று தீர்மானித்தேன்.'

அ.முத்துலிங்கம் 1972 இல் இலங்கையை விட்டு வெளியேறி பல ஆபிரிக்க நாடுகளில் உயர் பதவிகள் வகித்தவர். ஓய்வு காலத்தில் தனது ஆபிரிக்க அனுபவங்களை அழகிய சிறுகதைகளாக தமிழுக்குத் தந்தவர். இவரின் கதைகள் ஆபிரிக்க மக்களைத் தமிழுக்குக் கூட்டி வந்து பேச வைத்தது. இவரின் ஆபிரிக்கக் கதைகளை உள்வாங்கி இவருக்கு பணியாளாக இருந்து இவரிடம் ஆங்கிலம் கற்ற ஒருவர் பின்பு எழுத்தாளராகி அ. முத்துலிங்கத்தின் நினைவை கதையாக எழுதுவது போல ஒரு கதையை சோபாசக்தி 'முட்டுலிங்கம்' என்ற தலைப்பில் எழுதி இருந்தார். அற்புதமான சிருஷ்டிப்பும், நகர்த்தலும், திருப்பமும் உள்ள அக்கதை அ. முத்துலிங்கம் படைப்புகளை ஆழமாய்ப் படிக்காது எழுத முடியாத அழகிய புனைவு.

அதில் அந்த ஆபிரிக்க எழுத்தாளர், முட்டுலிங்கம் 'Coco ville' என்ற ஊரில் இருந்து வந்தவர் என்று எழுதுவார். இது கூட கொக்குவிலுக்கு பொருத்தமானது. 'Coco' என்றால் தேங்காயையும், 'ville' என்றால் பிரெஞ்சு மொழியில் 'நகரம்' என்பதையும் குறிக்கும். உள்ளபடி 'தேங்காய் நகரம்' என்ற பொருள்படும். ஐரோப்பியர் இலங்கையில் இருந்த காலத்தில் ஒரு பிரஞ்சுக்காரனால் இப்பெயர் வந்திருக்க வாய்ப்புண்டு. இல்லை. இது நம் தமிழ்ப் பெயர் என்று கொக்கு என்றால் கரும்பு. வில் என்றால் குளம் என்று யாராவது சொன்னால் கொக்குவிலில் குளமா? என்று யாராவது தேடி வந்து விசாரிக்கக் கூடும்.

கொக்குவிலுக்கும் இலங்கை இனமுரண்பாட்டின் தீ பற்றியதற்குமான ஓர் சம்பவம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடந்தது என்றால் பலரும் ஆச்சரியம் அடைவர். 1953 ம் ஆண்டில் சேர் ஜோன் கொத்தலாவல இலங்கையின் மூன்றாவது பிரதமராக இருந்தார். அப்போது மலையக தமிழ் மக்களை நாடற்றோர் ஆக்கும் சட்டங்களால் தந்தை செல்வாவின் தமிழரசுக் கட்சி கொத்தலாவலவின் யாழ்ப்பாணப் பயணத்தை மகிழ்ச்சியோடு வரவேற்கவில்லை. அந்த நேரத்தில் இலங்கையயின் சுதந்திர போராட்டத்திற்கான மூத்த முன்னோடியும், இளைஞர் காங்கிரசின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவருமான ஹன்டி பேரின்பநாயகம் கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்தார். அவர் பிரதமரை அழைத்து தன் கல்லூரியில் பேச வைத்தார். அங்கு பேசிய பிரதமர் கொத்தலாவல, 'இலங்கையில் ஆட்சி மொழிகளாக சிங்களமும்,தமிழும் இருக்கும். என்றார். அவர் கொழும்பு செல்ல முதல் S.W.R.D.பண்டாரநாயக்காவிற்கு செய்தி சென்று மகிழ்ச்சியை கொடுத்தது. 1956 தேர்தலில் ஜோன் கொத்தலாவவை வெல்ல அவர் பாவித்த வார்த்தை "நான் வென்றால் சிங்களம் மட்டும் ஆட்சி மொழி ஆக்குவேன்" 1956 இல் S.W.R.D தேர்தலில் பெரு வெற்றி பெற்றார். அற்ப அரசியல் வெற்றிக்காக அவர் ஆடிய ஆட்டம் இலங்கை எதிர்காலத்தைத் தோற்கடித்தது.

கொக்குவில் என்றதும் என்னுள்ளும் ஒரு நினைவு இருந்தது. அதன் திரை ஒருபோதும் மறையாது.

2005இல் வன்னியிலிருந்து கல்விக்காக யாழ்ப்பாணம் சென்ற போது கொக்குவிலில் நான் தங்கியிருக்க ஒரு அறை கிடைத்தது. அதற்காக நாங்கள் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அருகே நாம் மூன்று நண்பர்கள் வீடு தேடினோம். 'இளம் பெடியளுக்கு வீடு கொடுப்பதில்லை' என்று முகத்துக்கு நேராகவே சொன்னார்கள். பெண்பிள்ளை என்றால் கொடுப்பார்களாம். எப்படிப்பட்டவர்கள் என்று பாருங்கள். ஒரு அறையில் தங்குவதற்காக நாம் என்ன பெண் பிள்ளையாகவா மாறி விட முடியும்? கொக்குவிலில் அறை கிடைத்திருக்காவிட்டால் என் நண்பர்கள் இருவரும் பெண்களாக மாறிவிடவும் தயாராய் இருந்தார்கள். நாம் நியாயம் கேட்டபோது 'பெடியளால் சரியான கரைச்சல், பெட்டையள் என்றால் கரைச்சல் இல்லை' என்றார்கள். ஆணாய்ப் பிறந்ததற்காக நாம் யாழ்ப்பாணம் எங்கும் அறை தேடி அலைந்தோம்.

**நாம் நியாயம் கேட்டபோது 'பெடியளால் சரியான கரைச்சல், பெட்டையள் என்றால் கரைச்சல் இல்லை' என்றார்கள். ஆணாய்ப் பிறந்ததற்காக நாம் யாழ்ப்பாணம் எங்கும் அறை தேடி அலைந்தோம்.**

எந்தக் கொடிய சமூகத்திலும் இரக்கம் கொண்ட யாராவது இருப்பார்கள். எமது தறிகெட்ட நிலையைக் கண்டு கலங்கிய ஒரு பெண்ணும் அங்கிருந்தாள். அவள் தனது கல்வியை நிறைவுக்குக் கொண்டு வரும் நிலையில் இருந்தாள். தான் இருக்கும் அறையை உரிமையாளரிடம் பேசி எங்களுக்குத் தருவதாகச் சொன்னாள். அவளுக்கு றியோ குளிர்களியால் நாம் எம் லஞ்சத் தொகையை அன்பு என்ற பெயரில் வழங்கினோம்.

மறுநாள் கொக்குவிலில் இருந்த அந்த நாற்சார் வீட்டின் முன் நின்றோம். அது ஒரு பெரிய வீடு. பழமையான கலை வேலைப்பாடுகளோடு கூடிய குட்டி அரண்மனை. அதில் காவலாளிகள் தங்குவதற்கு கட்டப்பட்டது போன்று முன்னறை ஒன்று எமக்கு வழங்கப்பட்டது. அந்த அறைக்கும்,வீட்டுக்கும் எந்த ஒட்டுறவும் இல்லை.

நாம் சென்றதும் அந்த வீட்டின் பெரும் கதவை திறந்தபடி ஓர் ஆச்சி அவதரித்தார். எமக்குக் கட்டளையிடுவது போல் விதிகளைக் கூறினார்.

1.சத்தம் போடக்கூடாது.

2.வேறு யாரையும் இங்கு அழைத்து வரக்கூடாது.

3. குடிக்கக்கூடாது.

4. ஒவ்வொரு மாதமும் முதல் தேதி வாடகை கொடுக்க வேண்டும்.

5. முன்வீட்டோடு சகவாசம் வைக்கக் கூடாது.

இவற்றை கூறிய கிழவி எங்கள் அபிப்பிராயம் ஏதும் கேட்காது கதவைச் சாத்திவிட்டு உள்ளே சென்றுவிட்டாள். என்னோடு வந்திருந்த தோழன் கதிர் விசித்திரமானவன். அவனுடைய முழுப்பெயர் கதிர்காமன். அவன் காமனைப் பயன்படுத்துவதில்லை. உடனடியாக அவன் முணுமுணுத்தான். 'என்னடா கதிர்?' என்றேன். 'மச்சான் இந்த கிழவிக்கு பேத்தி இருந்தால் அவளை அவசரமாய்க் காதலித்து இந்த வீட்டை சொந்தமாக்கிக் கிழவியை றோட்டில விடுவன்' என்றான். அவனது முழுப்பெயரையும் அவன் கோபத்தில் பயன்படுத்தினான். இதைக் கேட்டிருந்த எமது மூத்த பெண் 'டேய் தம்பியள் கிழவிக்கு இங்க யாரும் இல்லை. எல்லோரும் வெளிநாடு போய்விட்டார்கள். இந்தப் பெரிய வீட்டில் கிழவி மட்டும்தான் இருக்கு. நீங்கள் கிழவியைத் தான் காதலிக்கலாம்' என்றாள். கதிரின் முகம் சூம்பிப் போனது.

அந்த அறைக்கு குடியேறிய எங்களுக்கு பேய் பயம் வர ஆரம்பித்தது. அந்தக் கிழவி வீட்டை விட்டு வெளியேறுவதே இல்லை. மாதம் ஒரு தடவை வாடகை பெற மட்டுமே கதவைத் திறப்பாள். மர்மமான ரகசியம் நிறைந்த கிழவியாக அவள் இருந்தாள். நாங்களும் மர்மமாக செயற்பட ஆரம்பித்தோம். பகலில் விதியின்படி மூவரும்; இரவில் பல நண்பர்களும் என அந்த அறை நிறைய ஆரம்பித்தது.

**கதிருக்கோ கிழவியின் ஐந்தாவது விதியில் ஈர்ப்பு அதிகமாகி எதற்காக கிழவிக்கு முன் வீட்டோடு இத்தனை வெறுப்பு என்று ஆராய்ந்தான். அந்த அறையின் முன் உள்ள மாமரத்தில் ஏறி அடிக்கடி முன்வீட்டை அவதானிக்க ஆரம்பித்தான்**

கதிருக்கோ கிழவியின் ஐந்தாவது விதியில் ஈர்ப்பு அதிகமாகி எதற்காக கிழவிக்கு முன் வீட்டோடு இத்தனை வெறுப்பு என்று ஆராய்ந்தான். அந்த அறையின் முன் உள்ள மாமரத்தில் ஏறி அடிக்கடி முன்வீட்டை அவதானிக்க ஆரம்பித்தான். சில நாட்களிலேயே முன் வீட்டில் ஓர் இளம்பெண் இருப்பது தெரிய வந்தது. இந்த அநியாயத்தை பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இந்தக் கிழவிக்காக முன்வீட்டுப் பெண்ணை காதலித்தே ஆவேன் என்று அடம் பிடிக்க ஆரம்பித்தான்.

அந்த இளம்பெண் அரிதாகவே வீட்டைவிட்டு வெளியேறுவாள். அப்போது வீட்டின் முன்னுள்ள மதகில் கதிர் அவள்

திரும்பி வரும்வரை காத்திருந்து, 'நீங்கள் நல்ல வடிவு' என்று தன் முதுகைக் காட்டியபடி சொல்வான். அந்தப்பெண் வேகமாய் நடந்து வீட்டுக்குள் புகுந்து விடும். அந்த இளம்பெண் வீடும் மர்மமாகவே இருந்தது. ஒரு இளம் குடும்பமும் அவர்களின் குழந்தையும் இந்தப் பெண்ணும் இருப்பதாக கதிரின் மாமரத் தகவல்கள் கூறின.

அந்த வீட்டில் சில வேளைகளில் சண்டைபிடிக்கும் சத்தங்கள் வெளிவரும். அப்போது அந்த ஊரே அமைதியாகிச் சண்டைச் சொற்களை கேட்கும். அந்த இளம்பெண் வீட்டை விட்டு வெளியேறும்போதெல்லாம் கதிர் வீதியின் கரையில் காத்திருந்து அப்பெண்ணுக்கு ஒலிக்குறிப்புகளை அனுப்புவான். காலம் நகர நகர அப்பெண்ணின் கடைவாயில் பதில் குறிப்பு வருவதாக அவனிடம் நம்பிக்கை இருந்தது.

ஓர் அதிகாலை எதிர் வீட்டிலிருந்து ஒரு பெண்ணின் பேரோலம் கேட்டது. கதிர் கட்டியிருந்த சாரத்தோடு ஓடினான். கிழவியின் ஐந்தாவது விதியை முறியடித்து நாமும் ஓடினோம். அந்த இளம்பெண் தற்கொலை செய்து கொண்டிருந்தது தெரிய வந்தது. அழுத பெண் அவளின் திருமணம் ஆன தமக்கையாக இருக்க வேண்டும். அயலவர்கள் வீதியில் கூடி இருந்தனர். அந்த இறந்த இளம்பெண் எதற்காக தற்கொலை செய்தாள் என்பது மர்மமாகவே இருந்தது. அவள் உடலை ஒரு ஆட்டோவில் ஏற்றியபடி கதிர் யாழ்ப்பாண வைத்தியசாலை சென்றான். ஒரு நாள் கூட அவள் அவனிடம் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. ஆனால் அவளது இறந்த உடல் அருகில் கதிர் அமர்ந்து சென்றபோது கலங்கிய கண்கள் நம்மையும் கரைத்தது.

உடல் வெளியேறியதும் வீதியில் கூடி நின்றவர்களும் கலைந்தனர். ஒருவர் கூட அந்த வீட்டுக்குள் நுழையவில்லை. நாம் எதிர் வீட்டிலிருந்து வெளியேறி எமது அறையை அடைந்தபோது கிழவி தன் நாற்சார் வீட்டின் கதவின் முன் எங்களையே பார்த்தபடி நின்றது. நான், 'ஆச்சி அந்த வீட்டில் இருந்த இளம் பெண் இறந்துவிட்டாள்' என்றேன். கிழவியின் முகச்சுருக்கங்கள் நீங்கவில்லை. அதிகரித்தது. முகத்தில் ஒரு ஆச்சரியக்குறியோ, அனுதாபக்குறியோ தெரியவில்லை. கோபக்குறி மட்டும் தெரிந்தது. எங்கள் கண்களை முழுசிப் பார்த்துவிட்டு, 'இனி இஞ்ச ஒரு பயலும் இருக்கேலாது. உடனே கிளம்பீடோனும்' என்று சீறி விட்டு வீட்டுக்கதவை அடித்துச் சாத்தியது. நான் கிழவியின் கதவை பலம் கொண்ட மட்டும் தட்டினேன். கிழவி நாம் என்ன பேசுவோம் என்று கதவின் பின் நின்று ஒட்டுக் கேட்டுவிட்டு முதலை 'ஆ' என்பதுபோல் கதவைத் திறந்து, 'அதுகள் வேற ஆக்கள் அங்கே போனவை இஞ்ச இருக்கேலாது' என்று தன்னால் முடிந்தவரை கத்திச் சொல்லிவிட்டு முதலை வாய் மூடுவது போல் கதவை அடித்துச் சாத்திக் கொண்டாள்.

***

அழைத்த நண்பர் 'கொக்குவில்' என்றதும் இந்த நினைவுகள் எல்லாம் மின்னலாய் வந்தது.


நினைவுகள் வேகமாகப்பயணம் செய்ய வல்லது. அதன் வேகத்தில் வேறு பிரபஞ்சமும் சென்று வரலாம்.

நீங்கள் கொக்குவில் எந்த இடத்தில் இருக்கிறீர்கள்? என்றேன். அவர் To—ronto என்றார். 'வீட்டில் இருக்கும்போது தொலைபேசி பாவிக்க முடியாது. வீட்டு வேலை செய்யாமல் தொலைபேசி நோண்டுவது வீட்டில் தடை' என்றார். அவர் Torontoவில் இருந்தபடி கொக்குவில் வாசிகசாலைக்காக இலக்கிய வேலை செய்கிறார். அவர் கேட்ட ஆக்கத்தை அவர் தூங்காத நேரம் பார்த்து அனுப்ப வேண்டும்.

# இதம்



கருணை ரவி



என் காலடியில்
குவிந்திருக்கும் நிழலில்
காகம் கொத்திய அணிலொன்று
ஓடிவந்து துயில்கிறது

மரங்களற்று
மலடூறிக்கிடக்கும் வீட்டில்
தனித்து அலைகிறது ஒரு மரங்கொத்தி
கடலள்ளிக் குவித்த மணற் திட்டிகளில்
வாய் பிளந்து கிடக்கிறது மதில்கள்

இடித்துத் தள்ளப்பட்டு
மிச்சமாய் இருக்கும்
கல்லறையொன்றில் இருக்கின்றேன்
முடியைக் கிளர்த்திச்செல்லும்
உப்புக்காற்றுமட்டும்
முன்புபோல்
இதமாய் இருக்கிறது

# இறுதிப் பயணம்



முவைஸ் அன்சாரி, இறக்காமம்

நலிந்த தண்ணீர்
வலிமை பெற்றிடவே
இரத்தச் சிவப்பு
உறைந்து கட்டியாகுமே !...

எலும்புப் படையாய் முழுமைபெற்று
கோர்த்து இறுக்கி
அள்ளிப்போர்த்திய தசைகளின்
இறுக்கம் இங்கே
தொடரும் எங்கே. ....

நின்ற நிலையில்
தளர்ந்து போகிறது
நரம்புகள் உடைந்து
ஆவியாய்ப் பறக்கிறது
சிறு கொசுவும் பாரமாய் மாறியே
வலிகளைத் தாங்கா
நிலைமையும் வந்ததே !...

பேச்சினை மறந்து
ஊமையாய் இருந்து
தளர்ந்திடாமல் இறுக்கி
கட்டுகளுக்குள் மறைந்ததே !...

முடிச்சுக்கு மேல்
முடிச்சுகள் போட்டு
சனங்கள் எல்லாம்
அமர்ந்து கொண்டு
ஊமைச் சித்திரம்
அரங்கேறும் நேரமிதே !...

வார்த்தைகளைத் தொடர்ந்து
வரம்புகள் கடந்ததால்
கொடையாய் வந்த உயிரும்
குடைகளும் இல்லாமல்
வெள்ளைச்சீலையால் வீசியெறிந்து
விளக்கமில்லாமல் நடக்குது
நாடகமே !...

கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்துவோர்
சிறிது நேர துக்கத்தை
மறந்திடும் உறவினரே !...

மாத இறுதியில் மனைவியின் நடமாட்டம்
இதுதான் தளர்ந்த தசைகளின்
இறுதிப் பயணமே !...

மண்ணைப் போர்வையாய்
மாற்றிக்கொள்ள
ஆயிரம் கால்களுடன் நடக்கின்றன தசைகள்
இருக்கை இடத்தில் சயனமாய் கிடக்கையில்
கல்லைத்தூவி
எல்லோரும் வழிஅனுப்ப
பதுங்குக்குழியில்
முடிச்சுகள் அவிழ்க்கப்படுகின்றன ......!

# தயித்தில் பாதுத்தந்

காரைக்கவி கந்தையா பத்மானந்தன்



விடியக்காலத்தாலை எழும்பி மாட்டடி ஆட்டடியைக் கூட்டி அள்ளின சாணி ஆட்டுப்புளுக்கை எல்லாத்தையும் ரெண்டு பெரிய தீவுக்கடகங்களிலை நிரப்பின பாலன் ரெண்டு கடகங்களையும் சயிக்கிள் கரியரிலை ஒண்டுக்கு மேலை ஒண்டு வைச்சுக்கட்டிக்கொண்டு சூரியன் எழும்பி வந்து மேலைச் சுடமுந்தியே மாவட்டையில இருந்த தங்கடை வயலுக்குப் கொட்டிச் சிந்திவிட எண்டு கொண்டு போனான். முந்தி எல்லாம் எங்கட ஆக்கள் வயல்களுக்கு வீட்டிலை வளக்கிற மாடாடுகளின்ரை எரு புழுக்கை வீட்டு வளவு கூட்டி வாற வேப்பம்,பூவரசம், சீமைக்கிளுவை,முக்கிளுவை வெக்கிளுவைக் கஞ்சல்கள் அதோட வேலி அடைப்புக் காலத்தில கழட்டிற பனையோலைச் சருகுகள் தான் பசளையாப் பாவிக்கிறவை. அதைமாதிரி வயலுக்கை நிக்கிற காவிளாயை அது நல்ல நைதரசன் பசளை எண்டுபோட்டு ஒண்டும் விடாமை வெட்டித் தாழ்ப்பினம். உந்த நைதரசன் பசளை வேணும் எண்டுபோட்டு மூண்டு வரியத்துக்கு ஒருக்கா பனையோலை வெட்டித் தாழ்ப்பினம். வயலுக்கை ஒவ்வொருநாளும் கட்டுவினம். உந்த மாட்டு பசளை. உப்பிடி வீடுவழிய ஒருத்தரின்ரை வீட்டிலையும் காசுப்புழக்கமும் இருக்கும்.

உப்பிடி உந்த ஆட்டடி வயல் வேலை செய்யவேணும் சனம் பிரம்ம முகூர்த்தம் நித்திரையால அவை எழும்பிறதைப் கூவுங்கள். காகங்கள் கரையத் பெடி பெட்டையளையும் தாய்

மாடுகளைக் கொண்டுபோய் ஒவ்வொரு இடமா அரக்கி அரக்கிக் மூத்திரம் வலு திறமான நைதரசன் மாடாடுகள் வளக்கிறபடியால பஞ்சம் பசி இருக்காது. அதோட

மாட்டடி வேலை செய்ய வேணும், எண்டுபோட்டு முந்தி எங்கட எண்டிற விடியக்காலத்தாலையே எழும்பிப்போடுங்கள். பாத்துப்போட்டுத்தான் சேவல்கள் தொடங்குங்கள். பள்ளிக்கு போற தேப்பன் எழுப்பி படிப்பைப்




பாக்கச் சொல்லுவிவினம். உப்பிடி ஆக்களை எல்லாம் வெள்ளண எழும்ப வைக்க வேணும் எண்டு போட்டுத்தான் எங்கடை கோயில் வழிய விடியப் பூசை ஒண்டை வைச்சு ஊர் முழுக்கக் கேக்கிற மாதிரி பெரிய காண்டா மணியை அடிப்பினம். தற்செயலா அசதியிலை பாயிலை உருண்டு பிரண்டு கொண்டு இருக்கிறவையும் உந்த மணிச் சத்தம் கேட்டதும் தங்களுக்குத் தங்களுக்கு பிடிச்ச கடவுளின்ரை பெயரைச் சொல்லிக்கொண்டு டக்கெண்டு நித்திரையால எழும்பிடுவினம். முந்தி எங்கடை பெடி பெட்டையள் உப்பிடி விடிய விடிய எழும்பிப் படிக்கிறதாலதான் படிப்பில வலு விண்ணர் விண்ணியளா இருந்தவை. அதுமட்டும் இல்லை உப்பிடி விடிய எழும்பிறதாலை ஆம்பிளையள் பெண்டுகள் எண்டு பெரிய ஆக்களும்

அண்டு முழுக்க நல்ல சுறுசுறுப்பாத் தங்கடை வேலை வெட்டியளைப் பாத்தவை.

வயலுக்குப் போட்டு வந்த பாலன் குளிச்சுப்போட்டு சாமி கும்பிட்டுப் போட்டு வீட்டு விறாந்தை இறப்பில கட்டித் தொங்கின ஒலைக்குட்டானிலை இருந்து வீபூதியை மூண்டு விரல்களாலை எடுத்து அண்ணாந்து வானத்தைப் பாத்தபடி சிவ சிவா எண்டு சொல்லிக்கொண்டு நெத்தி நிறையப் பூசினான். பேந்து வந்து தலைவாசல் குந்தில இருந்துகொண்டு விநாசித்தம்பி வாத்தியாரிட்டை இரவல் வாங்கியந்து செத்தையில செருகிக்கிடந்த முதல்நாள் பேப்பரை உருவி எடுத்து வாசிச்சான். முந்தி உப்பிடிப் பாலன் மாதிரி விடியவே பேப்பர் வாசிக்கிற பழக்கம் கனபேரிட்டை இருந்தது. அப்படி வழக்கம்போல தானே சமாதானமாகி "இண்டைக்கு கிளினிக்கெல்லே ....ஒருக்கா என்ரை கிளினிக்கொப்பியை எடுத்துக் கொண்டுவந்து தாவன்..... எண்டான் .

"உங்களுக்கு எல்லாத்துக்கும் பஞ்சி..... உதில செத்தையில சொருகிக்கிடக்கிற கொப்பியை எற்பன் எழும்பி எடுக்கேலாதே...." எண்டபடி கிளினிக்கொப்பியை எடுத்துக் குடுத்துப்போட்டு அடுக்களைக்குத் திரும்பிப்போனாள் சுந்தரி.. பாலனுக்கு இப்ப ரெண்டு மூண்டு வரியமா சீனி வருத்தம் கொலொஸ்றோல் எண்டு வந்து பெரிய கரைச்சல். பாலன் என்னதான் பிரயாசியா இருந்து வயல் வேலை அது இது எண்டு கடுமையா உடம்பை வளைச்சு நெளிச்சு வேலை செய்தாலும் உந்தக் கோதாரி வருத்தங்கள் அவனுக்கு வந்திட்டுது.

**வயலுக்குப் போட்டு வந்த பாலன் குளிச்சுப்போட்டு சாமி கும்பிட்டுப் போட்டு வீட்டு விறாந்தை இறப்பில கட்டித் தொங்கின ஒலைக்குட்டானிலை இருந்து வீபூதியை மூண்டு விரல்களாலை எடுத்து அண்ணாந்து வானத்தைப் பாத்தபடி சிவ சிவா எண்டு சொல்லிக்கொண்டு நெத்தி நிறையப் பூசினான்.**

வாசிக்கேல்லை எண்டால் அண்டைக்கு நாள் முழுக்க அவைக்கு ஒண்டும் பத்தியப்படாது.. வாசிச்சுக்கொண்டே மனிசி சுந்தரி மூக்குப் பேணியில கொண்ணந்து சுடச் சுடக் குடுத்த வேர்க்கொம்புக் கோப்பியை வாயால ஊதி ஊதி கிரீஸ் போடாத சயிக்கிள் பீறிவீல் சத்தம் போடுறமாதிரி ஒருவித சத்தத்தோட உறிஞ்சிக்குடிச்ச பாலன் "இஞ்சையப்பா.... எங்க போட்டாய்.... ஒருக்கா வாவன்..." எண்டு சுந்தரியைக் கூப்பிட்டான்.

"நான் இஞ்சை கையில வேலையாயிருக்கிறன் இப்ப உங்களுக்கென்ன வேணும்....... என்னத்துக்கு சும்மா காஞ்சு களப்பாயில நாய் ஒண்டுக்கு இருக்கிறமாதிரி புறுபுறுக்கிறியள்....." .எண்டு அடுக்களையுக்கை இருந்து கத்தினாள் சுந்தரி. கூப்பிட்ட உடன வரேல்லையெண்டு பல்லை நறநறத்த பாலன் பாலனைப் பாத்த அப்போதிக்கரி கனகர் "உது பரம்பரை வருத்தம் கண்டியளோ .... வடிவா வயித்தியம் செய்யவேணும் .... குளுசையளை ஒழுங்காப்போடவேணும் கண்டியளோ ..." எண்டு சொல்லி அண்டைக்கே கொப்பி ஒண்டைப் பாலன்ரை பெயரில போட்டு வயித்தியத்தைத் தொடங்கி மாசம் மாசம் வந்து காட்டவேணும் எண்டு சொல்லிப்போட்டார். வாய்ப்பான் பிழைப்பானா உப்பிடி வந்த கொஞ்சப்பேரைக் கொப்பி போட்டு வைச்சிருகிறதாலை கனகர் பாடு சீவியத்துக்கு கரைச்சல் இல்லை.

அப்போதிக்கரி கனகர் சொன்னதைக் கேட்ட சுந்தரி "கொப்பர் கோத்தை காணி பூமி எண்டு முதுசம் ஒண்டும் வைக்காட்டிலும்.....

உந்தக் கோதாரி வருத்தங்களை தந்திருக்கினம் எண்டு பரம்பரைப் பெருமையை நாலு பேருக்குச் சொல்லலாம் எல்லே....... எண்டு பாலனுக்கு கேந்தியை எழுப்பினாள். சுந்தரிக்கு கலியாணம் பேசேக்கை பாலன்ரை தாய் தெய்வானையும் தேப்பன் கந்தப்புவும் தன்ரை தாய் தேப்பனை நாண்டுகொண்டு நிண்டு ராசுமால்கட்டி அளவங் கொம்பரை சீணாப்பிட்டி எண்டு இருந்த காணி பூமி எல்லாம் சீதனமா எழுதி வாங்கிப் போட்டினம் எண்டு சரியான வெப்பியாரம். அந்த வெப்பியாரம் குமரிக்கண்டத்தை முழுங்கின கடல்கோள் மாதிரி நிண்டு நிண்டாப்போல சுழட்டி அடிக்கும் உப்பிடி அடிக்கிற அடியிலை பாலன் கிறுகிறுத்துப்போவான்.

சுந்தரியின்ரை பாசையில டிஸ்பென்சறிக்குப் போன பாலன் அங்க முத்தத்தில நிண்ட தென்னையொண்டில சயிக்கிளை கொக்கத்தடியைச் சாத்திறமாதிரி சாத்தி வைச்சுப்போட்டு டாக்குத்தர் இருக்கிறாரோ எண்டு அடை வைச்ச கடகத்துக்கை இருந்து மூடிக்கட்டின சாக்குக்காலை எட்டிப்பாக்கிற அடைக்கோழி மாதிரி மெல்ல உள்ளுக்கு எட்டிப்பார்த்தான். டாக்குத்தரைக் காணேல்லை. முன்னுக்கு மேசையில ஒழுங்காப் பூட்டாத சைக்கிள் சீற் மாதிரி தலையை ஒருபக்கம் திருப்பிக் கொண்டு இருந்த நேர்ஸ் பிள்ளையிட்டை ”பிள்ளை டாக்குத்தர் இல்லையோ. எண்டு கேட்டான்.

இவனை என்னமோ தெருவில கிடந்த கக்கா பிரண்ட சயிக்கிள் ரயரைப்பாக்கிற மாதிரி ஒரு அரியண்டப் பார்வை

**ஒரு மாதிரி சுந்தரி எடுத்துக்குடுத்த கிளினிக் கோப்பியோட அப்போதிக்கரி கனகற்றை டிஸ்பென்சறிக்குப் போன பாலன் அங்க முத்தத்தில நிண்ட தென்னையொண்டில சயிக்கிளை கொக்கத்தடியைச் சாத்திறமாதிரி சாத்தி வைச்சுப்போட்டு டாக்குத்தர் இருக்கிறாரோ எண்டு அடை வைச்ச கடகத்துக்கை இருந்து மூடிக்கட்டின சாக்குக்காலை எட்டிப்பாக்கிற அடைக்கோழி மாதிரி மெல்ல உள்ளுக்கு எட்டிப்பார்த்தான்.**

சொல்லுறதாயிருந்தால் பாலன் ஒரு ஒழுங்காக் கழுவிப்பூட்டாத சயிக்கிள் மாதிரி. எப்ப இடையில கழண்டு விழுந்து நிக்குமோ தெரியாது. உந்த வருத்தங்கள் வந்ததிலை இருந்து கனகற்றை கிளினிக்கும் மருந்துமாத்தான் பாலன்ரை பொழுது போகுது. தலைவாசல் செத்தை வழியை இறப்பு வழியை செருகி வைச்சிருக்கிற அவன்ரை கிளினிக் கொப்பியளை அடுக்கி வைச்சா அடுக்களைக்குப் பக்கத்தில ஒரு அட்டாளையே கட்டிப்போடாலாம் எண்டுவாள் சுந்தரி.

ஒரு மாதிரி சுந்தரி எடுத்துக்குடுத்த கிளினிக் கொப்பியோட அப்போதிக்கரி கனகற்றை பார்த்த நேர்ஸ் “ஐயா இப்ப வருவார்.... உதில உந்த வாங்கில இருங்கோ....” எண்டாள். கொஞ்ச நேரம் வாங்கில இருந்த பாலன் டாக்குத்தரைக் காணாமல் திரும்பவும் நேர்ஸிட்டை டாக்குத்தரைப் பற்றிக்கேக்க “ஏன் உங்களுக்கு சொல்லுறது விளங்கேல்லையே.... தமிழிலை எல்லே ஐயா இப்ப வந்திடுவார் எண்டு சொன்னனான்....” எண்டவள் “இந்தச் சனங்களோட பெரிய கரைச்சல்..... பழைய கறள் பிடிச்ச மக்காட் மாதிரி ஒரே சத்தம்..... எண்டபடி தனக்கு முன்னால கிடந்த வெறும் கொப்பியொண்டை எடுத்து என்னமோ கடும் வேலைப்பிராக்கிலை இருக்கிறவள் மாதிரி வாசிச்சுக் கொண்டிருந்தாள்.

நேரமோ பாண் விக்கிற பேக்கரி ஒட்டோ மாதிரி நிக்காமலே போய்க் கொண்டிருந்தது டாக்குத்தரைக் காணேல்லை. பாலனுக்கோ சங்கானைச் சந்தைக்கு நேரத்தோட போகவேணும் எண்டு நேரத்துக்கு வராத எண்பத்திரண்டு பஸ்சுக்கு ஏம்பலிச்சபடி வாரிவளவிலை காத்துக்கொண்டு நிக்கிற மீன்காறப்பெண்டுகளுக்கு அடிக்கிறமாதிரி நெஞ்சு பக்குப்பக்கு எண்டு அரைகுறையாக் கழண்டுபோன பெடல் கட்டை சயிக்கிள் உழக்கேக்கை கால் மொளியிலை அடிக்கிறமாதிரி அடிக்க வெளிக்கிட்டுது. இக்கணம் பிந்தி வீட்டை போனால் சுந்தரி “எங்க நிண்டு எந்தப் பெண்டுகளின்ரை வாயைப் பாத்து ஏமிளாந்திக்கொண்டு நிண்டு போட்டு வாறாய்..... கதை கண்ட இடந்தான் உனக்கு கைலாயம் எல்லே..... எண்டு பேசப்போறாளே எண்ட பயம் நெஞ்சுக்க போல்ஸ் மாதிரி உருண்டு வந்தது.

இப்பிடியே நேரம் போகப் போக வரியக்கணக்காத் திருத்தாம பள்ளந்திட்டியா இருக்கிற மானிப்பாய் காரைநகர் ரோட்டில ஏழாத்துப்பிரிவிலை விழுந்து எழும்பி வாற நயினாதீவு லோஞ்சிமாதிரி முன்னாலை வாற பஸ்சைப் பாத்து புதுசாச் சயிக்கிள் ஓடுற பொம்பிளைப்பிள்ளை பாவாடையை ஒருகையால பிடிச்சுக்கொண்டு மற்றக் கையால ஹான்டிலைப் பிடிச்சுக் கொண்டு ஆதளிமாதளிப்படுகிறமாதிரி பாலன் அந்தரப்படத் தொடங்கினான். ரோட்டைத் திருத்தினால்த்தான் என்ன திருத்தாட்டித்தான் என்ன நாங்கள் எங்கடை சோலியைப் பாப்பம். எங்களுக்கு உதால என்ன நட்டந்துட்டியே வரப்போகுது எண்டு நினைக்கிற அரசியல்வாதியள் மாதிரி பாலன் படுகிற அவஸ்தையை கண்டும் காணாத மாதிரி நேர்ஸ் தன்ரை பாட்டிலை இருந்தாள்.

உப்பிடியே இருந்தா யாவரத்துக்கு ஆகாது எண்டு நெச்ச பாலன் மனம் கேக்காமை “பிள்ளை.... டாக்குத்தர் வருவார்தானே” எண்டு திரும்பவும் நேர்ஸிட்டைக் கேட்டான். பாலன் இப்பிடித் திரும்பத் திரும்ப கேக்கவும் எண்ணைத்தாச்சியுக்கை டக்கெண்டு விழுந்த பனங்காய்காய் மேலை எழும்பி படபடவெண்டு பொரியிற மாதிரி கோபப்பட்ட நேர்ஸ் “இஞ்சை பாருங்கோ எங்கட டொக்ரருக்கும் கனகாலமா சுகர் கொலஸ்றோல் பிறசரெல்லாம் இருக்கு...... அவர் உங்களை மாதிரி கண்டகிண்ட மருந்தொண்டும் போடுறேல்லே.... காலமையும் பின்னேரமும் நல்லாச் சயிக்கிள்தான் ஓடுறவர்.. இப்பவும் சயிக்கிள் ஓடத்தான் போட்டார். வந்ததும் உங்களைப் பார்ப்பார் அதுவரை கரைச்சல் தராமல் இருங்கோ” எண்டாள்.




# வெண்மையின் புன்னகை



தாட்சாயணி

மருத்துவமனை வாசலில்
அந்த மரத்தின் கீழ் நின்றபடி
இரண்டு வெண்ணுடைகள்
ஒன்றோடொன்று உரையாடின
நெற்றியில் பளீர் குறியோடிருந்தவள்
மருத்துவமனைத் தாதியாகவிருந்தாள்
முன்னால் நின்றவள்
கிறிஸ்துவுக்காகத் தன்னை ஒப்புக் கொடுத்தவள்
சிலுவையொன்று அவள்
மென்கழுத்தில் புரண்டது!
இரண்டு வெண்ணுடைகளுக்குள்
இரண்டு தேவதைகள் பேசுவதைப்
பார்த்துக் கொண்டிருந்தேன்
மேலிருந்து பூவிதழ்கள் போல
சிற்றிலைகள் அவர்கள் தலை மேல் சிந்தின
சில நிமிடங்களுக்கு
அந்த இடம் குளிர்ந்திருந்தது
அவர்கள் விலகிப் போன போது
நிலம் மெல்ல முணுமுணுத்தது
இப்படி எப்போதேனும் தான்
சில அபூர்வ கணங்கள் நிகழ்கிறது
'சிஸ்டர்' என ஒரு குரல்
அவர்களை விழித்த போது
இருவருமே ஒருசேரத் திரும்பிப் பார்த்தார்கள்
பின்னர்
ஒருவரை ஒருவர் பார்த்துப்
புன்னகைத்தார்கள்




# பொட்டல் வெளிப் பறவைகள்



ஏ.எம்.முர்ஷித்

மூன்று வரட்டு இருமல். கழுத்துச் சதைச் சுருக்கத்தில் விடைத்த நரம்புகள் அறுந்து விடும் போல் துடித்தது. நெஞ்சை நீவி விட்டுக்கொண்டார். மார்புக் கூண்டுள் கொர கொரப்பு .தொண்டையுள் நமட்டல். நுரையீரலுள் இருந்து காற்றை இரைந்து திரட்டி காறித் துப்பினார். விழுந்து தத்தளித்த சீதத்தை மெல்ல அடி நகர்ந்து காலால் மண் தள்ளி மூடினார். மீண்டும் எத்தி எட்டு வைத்து முன் திண்ணையின் அரைச் சுவரில் கை ஊன்றி பிருஷ்டத்தை சாய்வு நாற்காலியின் விளிம்பில் பொருத்தி இஞ்ச்...இஞ்சாய் பின்னால் வளைந்து சாய்ந்தார். சாய்வு நாற்காலி விரக வேதனையில் முகிழும் குரலென அணுகியது."வ்.. வே..".புளித்த ஏப்பத்தை அகல வாய் திறந்து துண்டு துண்டாக விட்டார். சொறிச்சல் எடுத்தது. வேட்டியை தளர்த்தி கவட்டுள் கை வைத்து பலமாக சொறிந்தார். உணர்வு இன்னும் சொறியச் சொன்னது, இன்னும் சொறிந்தார். கூரை வளையில் சணலால் பிணைத்துக் கட்டியிருந்த சிறிய ரக றேடியோவில் உதித் நாராயணன் பாடிக்கொண்டிருந்தார்." என்ன எழவுடா இது மூக்கு ஒப்றசன் செஞ்சவனயெல்லாம் பாட்டு படிக்கவுட்டிருக்கானுகள்..மசிராண்டிகள்..." எரிச்சலோடு எழுந்து றேடியோவை நிறுத்தினார். இடுப்பு விண் விண்ணென தெறித்தது. கையை இடுப்பில் பொருத்தி நிமிர்ந்தார். பின் துவாரத்தின் வழி காற்றுப் பிரிந்தது. கூரை வளை இடித்து விடாதபடி குனிந்துகொண்டு வெளியே வந்தார். காகம் பழைய பாகவதர் போல கத்தி...மேல்ஸ்தாயில் பிடித்தது. "ச்சீய்... சனியனே.." பொடிக் கல் பொறுக்கி எறிந்தார். அது தத்தி கிழவருக்கு போக்கு காட்டி விட்டு அடுத்த கிளையில் அமர்ந்து தன் பணியை தொடர்ந்தது. "அட... நாசமாப் போனது...சொன்னாப் போல கேக்குதில்ல...ஆனமான மனிசனே கேக்கிறானுகளில்ல...இந்த அஞ்சறிவு படச்சதா? கேக்க போகுது...".சலித்துக் கொண்டார். வெளி முற்றத்தில் அடி பெருத்து விசாலித்திருந்த மா மரத்திலிருந்து முந்திய நாட்களில் மழை பெய்திருந்ததால் பூக்கள் கருகி விழுந்து சிதறிக் கிடந்தன. "ம்...கும்..வெயில் சாஞ்சவொண..இரிக்கி..ஒரு ஊர்ப்பட்ட வேல..என்ன செய்யலாம்...இந்த மரத்தாலதான் வாசல கொஞ்சமாச்சும் காத்து வருகுது..



ஆளப் போட்டு தறிச்சிரலாம்தான்..பொறகு வெக்கயில கெடந்த உருள வேண்டிதான் வரும்..”.கிழவன் தனக்குள்ளாக முணு முணுத்துக் கொண்டார். கொஞ்சம் நகர்ந்ததும் எதிர்ப்பட்ட ஆசணிப் பலாக்காய் மரத்தை அண்ணாந்து பார்த்து பெரு மூச்சு விட்டார். ஆசணிப் பலாக்காய், இலைக்குச் சமாந்தரமாக காய்த்துக் கிடந்தன. கிழவருக்கு தின்ன விருப்பம்தான். ஆனால் பயம். உண்டால் வயிறு உப்பி விடும். பின்னர் வயிற்றுள் ‘கட முடா..’ சத்தங்கள் தொடங்கி விடும். வயிற்றை உருட்டி மேலேற்றும். ஊறிய வாய் நீரை விழுங்கிக்கொண்டார். செவலையும் வெண்மையும் கலந்த பூனையும் அதன் மூன்று குட்டிகளும் அவரின் காலைச் சுற்றின. குனிந்து குட்டியொன்றுக்கு தடவிக் கொடுத்தார். பாசமலர் சிவாஜிக்கும் சாவித்திரிக்கும் உண்டான அன்பு கடத்தல் போன்றது அவைகளுக்கும் அவருக்கும் உண்டான தொடர்பு. தனது நேரத்தின் நான்கிலொரு பகுதியை அவர் அவற்றோடுதான் தொலைப்பார். அவர் சாப்பிடுவது போன்ற, ஒரு உணவுத் தட்டும் டம்ளரும் அவைகளுக்கும் உண்டு. அவர் உண்ணும் உணவு வகையறாக்களேயே அவைகளுக்கும் கிடைக்கச் செய்வார்.“எங்கே.. அவ..” நெற்றிக் குறுக்கே கையை வைத்துப் பார்த்தார். முன் கம்பி வேலியோடு பொருத்தி நடப்பட்டிருந்த மிலாறுகளில் படர்ந்திருந்த அவரைக் கொடிகளில் காய்த்திருந்த காய்களை பறித்து அவள் புடவை நுனியை மடித்து பள்ளஞ் செய்து அவற்றுள் போட்டுக் கொண்டிருந்தாள். ‘அவள்’ என்பது அவர் மனைவி. அவர் நூறு சொற்களில் தொண்ணூறில் வசிப்பவள். அவர் வளைந்த முதுகுப் பரப்பினை தாங்கிப் பிடிப்பவள். அவர் இயலுமையின் பாதி. அவர் வாழ்வில் இருட்டை துரத்தும் கிழித்த தீக்குச்சி. ஊர்ந்து.. அசைந்து அவள் அருகே சென்றார்.”என்ன.. புள்ள..இம்புட்டு நேரமா..வெயில உக்கிரம் ஒனக்கு வெளங்கெலயோ…”. அவள் கழுத்து மடிப்புள்ளிருந்த வியர்வைப் பொட்டை ஆக்காட்டி விரலால் அப்பி எடுத்து சுண்டி விட்டார். முதுகுப் பகுதி தெப்பமாய் நனைந்திருந்தது. அவர் வேட்டியை உயர்த்தி அவள் முதுகினை ஒற்றத் தொடங்கினார்.”என்ன இது..வெக்கம் கெட்ட வேல பாக்கியள்..உள்ளுக்கு போட்டுக்கிட்டிருக்க அரக் கால் களிசன் வெளங்குது மனிசன். ஆரும் கண்டா என்ன நெனப்பாங்க.. வேட்டிய கெதியா எறக்குங்க…”.அவள் பதறிப் போனாள். அவர், அவள் கரத்தை தனது கரத்துள் அமிழ்த்தி அவள் சூட்டை தனக்குள் ஏற்றிக்கொண்டார். “வேகா..வெயிலுக்க..பறிச்சது போதும் வா…”.அவள் மறுப்பேதும் சொல்லவில்லை. அவர் கைப்பிடித்து தோள் உரசி நடந்தாள். அவர் வேகத்துக்கேற்ப தனது வேகத்தை மட்டுப்படுத்தினாள். பசி கிழவரின் வயிற்றில் சுவாலையாகி எரித்தது. ‘புள்ள…பசி…”. “சரி… இன்னா..சோறு வெக்கன்..கையக் கால நல்லா தேச்சு கழுவிற்று வாங்க..”. கிழவர் கிணற்றடிப் பக்கம் போனார். காய்த்திருந்த மாதுளையின் பாதியளவிலான பிஞ்சுகளை அணில் கொறித்திருந்தது. பெரிய காய்களுக்கு கிழவரின் மனைவி ஏற்கனவே சீலைகட்டி மறைத்திருந்ததால் அவை தப்பித்திருந்தது. கிழவருக்கு கோபம் வரவில்லை. அணிலுக்கும் அவர் இளைய மகளுக்கும் நெருங்கிய தொடர்பு. அவளுடைய சின்ன வயதில் அவர் முன் வாசல் மாமரத்தில் ‘கிறீச்…’சிட்டு திரியும் அணிலை பிடித்து தரச் சொல்லி அவள் சிணுங்கி அழுவாள். அவரும் வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு அதனை பிடிப்பது போல போக்குக்காட்டி மாமரத்தின் அருகே ஓடி கையால் விசுக்கி “ச் சூய்..” என்பார். அணில் கடித்த மாம்பழம் என்றால் அவளுக்கு கொள்ளைப் பிரியம். அணில் கொறித்த மாம் பழத்தை கொக்கையால் பறித்து, கடித்த வாயைச் சுற்றி கத்தியால் வெட்டி உள்ளே தோண்டி சுத்தம் செய்து தோல் சீவி துண்டுகளாக்கி உப்பு நீரில் அமிழ்த்தி மகளிடம் பெருமிதத்துடன் நீட்டுவார். ஒரு சத்திர சிகிச்சை செய்யும்

வைத்தியரின் நேர்த்தி அவர் வேலையில் இருக்கும். இப்போது அவள் லண்டனில் புருஷன்காரனோடு. “அங்கும் அணில் இருக்குமோ..மாம்பழம் கொறிக்குமோ... ஆருக்கு தெரியும்...” மனதுக்குள் சொல்லிக் கொண்டே கிணற்றின் அருகில் இருந்த சீமெந்து தொட்டியில் இருந்த நீரை காகம் அருந்தாமல் போட்டிருந்த வலையை விலக்கி வைத்து விட்டு கை கால்களை அலம்பினார். முகத்தில் நீரை அள்ளி எறிந்தார். தெம்பு பிறப்பதான உணர்வு. மூக்கு வடியப் பார்த்தது. நான்கடி தள்ளியிருந்த பனை மரத்தடிக்கு போய்ச் சீறினார். பின் வாசல் வழியாக வீட்டுக்குள் நுழைந்தபோது மனைவி அவளது புடவைத் தலைப்பை நீட்டினாள். முகத்தை துடைத்துக்கொண்டார். சோற்றில் ஆவி

தெம்பு பிறப்பதான உணர்வு. மூக்கு வடியப் பார்த்தது. நான்கடி தள்ளியிருந்த பனை மரத்தடிக்கு போய்ச் சீறினார். பின் வாசல் வழியாக வீட்டுக்குள் நுழைந்தபோது மனைவி அவளது புடவைத் தலைப்பை நீட்டினாள். முகத்தை துடைத்துக்கொண்டார். சோற்றில் ஆவி பறந்தது. உட்கார்ந்தார்.

பறந்தது. உட்கார்ந்தார். அவருக்கு அன்று பிளாஸ்ற்றிக் கதிரை வசதிப்படவில்லை. “புள்ள கீழே எடுத்து வை, கால கையை நீட்டி உக்காந்து திங்கப் போறன்..”. அவள் கீழே எடுத்து வைத்தாள் பன் பாய் விரித்தாள். கிழவர் உட்கார்ந்து கொண்டார். நெத்தலிக் கருவாட்டுடன் முருங்கைக்காய் சேர்த்த பாற் சொதி, கீரைத் துவையல். கிழவர் உருண்டைகள் பிடித்து வாயை அகலத் திறந்து கொடுப்புக்குள் எஞ்சியிருந்த இரண்டு பற்களுள் வைத்து மெல்லத் தொடங்கினார். அவள் அவரைப் பார்த்திருந்தாள். தொண்டைக் குழிக்குள் சோற்றுக் கவளங்கள் சிரமப்பட்டு இறங்கியபோது... கழுத்து நரம்புகளை நீவி விட்டுக்கொண்டார். அவள் தண்ணீர் கொடுத்தாள். கடைவாய் வழிய அவசரமாக குடித்துக்கொண்டார். “பசிச்சா.. நீயும் வெச்சி தின்னன்...”. “மொதல்ல..நீங்க திண்டு முடிங்க...கொஞ்ச நேரங் கழிஞ்சு நான் சாப்பிடுவன்..”.”ஏன் புள்ள...”. “நேத்து வறுத்த கச்சான்ட மிச்சம் கெடந்தது பதினொரு மணி மட்டுலதான் எடுத்து .. சாப்பிட்டன்.. பசிக்கல்ல...”. “நேரம் இப்போ என்ன ?”. அவள் மரப் பெட்டியின் மேல் இருந்த அலாரம் வைக்கும் பழைய ரக மணிக்கூட்டைப் பார்த்துவிட்டுச் சொன்னாள். “ரெண்டு...பதினாலு..”. கிழவர் காலை மடித்து வைத்துக்கொண்டார்.”ம்.. இப்ப லண்டனில.. என்ன நேரமாகியிருக்குமோ..ராப்பட்டாலும் பட்டிருக்குமாக்கும்..குளிர் கூடின காலமா இருக்குமோ என்ன எழவோ தெரியா... அவவும், அவட புள்ளயளும்..என்ன செய்வாங்களோ...பாவம்...அவக்கு குளிர கண்டால கால் ஈறெல்லாம் பித்தம்வெடிச்சி எரத்தம் தெரியுமே...அங்க என்ன பாடு படுவாவோ..”.கிழவர் அடுக்கிக்கொண்டே போனார். “கொஞ்சம் வாய மூடுறியளா.. இந்த கதைய தூக்காதயள் எண்டு எத்தன தடவதான் சொல்ற”. கிழவர் அமைதியானார். மனைவி கொடுத்த சுடு நீரை குடித்தார். எழுந்து கொண்டார். காறை உதிர்ந்த சுவரில் ஆணி அடித்து கட்டியிருந்த பழைய சீலையில் கையை துடைத்துக்கொண்டார். “வெளியில வெக்கயா கெடக்கு..சாக்கு கட்டில உள்ளுக்கு இழுத்துப் போட்டிருக்கன்...படுத்துக்கோங்க..”. கிழவர் தலையாட்டி விட்டு கட்டிலில் சரிந்தார். கட்டில் ஒரு அசைவுக்கு பின் நிதானத்துக்கு திரும்பியது. நான்கு வருசத்துக்கு முந்தி மூத்தவன் வாங்கித் தந்தது

இந்தக் கட்டில். அதுக்கு மேலாகவும் சின்ன ரேடியோ...மின் விசிறி..விலை குறைந்த பிரேமில் ஒரு மூக்கு கண்ணாடி...தண்ணீர் சூடாக்கும் ஒரு கீற்றர்..சின்னச் சாதி கறுப்பு வெள்ளை திரை கொண்ட நொக்கியா போன்..இத்தனையும் அவன்தான் வாங்கித் தந்தான். எல்லாம் நான்கு வருடத்துக்கு முன்பதாக. உயர்தரத்தில் கணிதம் படித்து அவன் சறுக்கியிருந்தாலும் வாய் கொள்ளும் மட்டும் ஆங்கிலமும் கொஞ்சமாக கொம்பியூற்றரும் ஹோட்டல் மெனஜ்மென்ற்றில் ஒரு செர்ட்டிபிக்கட்டும் வாங்கி, தலைநகருக்கு அண்மித்த பகுதியிலேயிருந்த ஒரு உல்லாசப் பயணிகள் தங்குகின்ற விடுதியில் மத்திமமான ஒரு சம்பளத்தில் வேலை கிடைத்தபோது அவன் கிழவரையும் கிழவியையும் மறந்தே போய்விட்டான். வாரம் ஒரு தடவை வந்து போக்குக் காட்டியபடி இருந்தவன் அதே விடுதியில் தட்டச்சு செய்து கொண்டிருந்த நல்ல சிங்களமும் 'ள'கர 'ல'கர பிழையோடு தமிழ் பேசும் ஒரு தமிழ் பெண்ணை விரும்பி மணந்ததிலிருந்து தனது வரவை மாதமொரு முறையென மாற்றி பின்பு அதுவும் தேய்ந்து ஃபோனுக்கு மாறிப் போனான். ஃபோனிலும் ஒன்றிரண்டு பொறுக்கிய சொற்கள்தான். தொண்டைக்குள் முள் சிக்கியவன் போல சட்டென்று முடித்துக் கொள்வான். மருந்துக்கும் சுகத்தை கேட்கமாட்டான். சுகத்தை கேட்டு மாட்டிக்கொண்டால் என்னாவது என்ற பயம் அவனுக்கு. கல்யாணம் முடிந்த பிற்பாடுள்ள இந்த மூன்று வருடத்துக்குள்ளும் ஆறேழு தடவை வந்திருக்கிறான். அதில் இரண்டு தடவை மாத்திரம் குடும்பத்தோடு வந்திருந்தான். அதுவும் பண்டிகை நாட்களுக்கு. பண்டிகையன்றுகூட அல்ல. பண்டிகை முடிந்து ஐந்து நாட்களுக்கு பிற்பாடு. அவன் மனைவி சிரித்துச் சிரித்து பேசினாள். வீட்டை விட வெளியில் இருக்க விரும்பினாள். மரங்களையும் தோட்டத்தையும் குருவிகளையும் அவர்களை விட நேசித்தாள். உடைந்த பின் சுவர் வழியாக தெரிந்த பச்சை வயல்களையும் வெருட்டியையும் வெள்ளைக் கடதாசிக் கசங்கலாய் குவிவதும் குலைவதுமாக வான வெளியில் தத்தளித்துக்கொண்டிருந்த கொக்குகளையும் வெகுவாக ரசித்தாள். அவள் அழகி இல்லை. ஆனால் 'ம்ஹூம்' என்று ஒதுக்கும் ரகமுமில்லை. கல்யாணம் முடித்த மூன்று மாதங்களுள் கர்ப்பம் தரித்து ஆண் பிள்ளையொன்றை பெற்றிருக்கிறாள். அவளின் சாயல் ஆனால் அவன் அப்பாவின் கறுப்பு. வயிற்றிலும் ஒன்று இருந்தது. ஐந்து அல்லது ஆறு மாதமாக இருக்கலாம். தொழிற்சாலை இயந்திரம் போல் படு செயற்கையாக இயங்கி ஒரு இரவு ஒரு பகல் கடத்தி, போகும்போது மறவாமல் அவன் அம்மாவின் கையுள் சுருட்டிய சில நாணயத் தாள்களை வலிந்து திணிப்பதோடு அவன் கடமையும் பாசமும் முடிந்து விடும். பின்பு எப்போதோ ஃபோனில் கேட்கும் அவனின் குரல் கரகரப்பு அவ்வளவுதான்.

மகள் நல்லவள்தான். ஆனால் கணவனின்


**ஃபோனிலும் ஒன்றிரண்டு பொறுக்கிய சொற்கள்தான். தொண்டைக்குள் முள் சிக்கியவன் போல சட்டென்று முடித்துக் கொள்வான். மருந்துக்கும் சுகத்தை கேட்கமாட்டான். சுகத்தை கேட்டு மாட்டிக்கொண்டால் என்னாவது என்ற பயம் அவனுக்கு. கல்யாணம் முடிந்த பிற்பாடுள்ள இந்த மூன்று வருடத்துக்குள்ளும் ஆறேழு தடவை வந்திருக்கிறான். அதில் இரண்டு தடவை மாத்திரம் குடும்பத்தோடு வந்திருந்தான்**

மனைவி. கணவனே கண் கண்ட...என்று தொடங்கும் பதத்தை முடித்து வைப்பவள். அவளின் கணவன் தாதி உத்தியோகத்தன். சிங்களப் பட்டினமொன்றிலுள்ள ஹொஸ்ப்பிற்றலில் பணியாற்றினான். மனைவியை கூட்டிப் போகாமல் தனியே ஹொஸ்ப்பிற்றலுக்கு பக்கத்திலேயே ஆறு பேர் தங்கும் அறையொன்றில் கூட்டாக தங்கினான். சிகரெட் அடிப்பதுதான் அவனிடமுள்ள கெட்ட பழக்கம் ஆனால் 'தண்ணி' தொடமாட்டான். ஒருநாள் திடு திப்பென்று வந்து நின்று தொழிலைவிட்டு விட்டு ஆங்கில நாடொன்றுக்கு போகப் போவதாகச் சொன்னான். கிழவர் அதிர்ந்து போனார். "உத்தியோகம் புருச லட்சணம்" என்று சொல்லிப் பார்த்தார்.

உத்தியோகத்தை விட்டு வெளிநாடு சென்று திரும்பி வந்து வருமானத்துக்கு அல்லாடுபவர்கள் பற்றிய பத்து உதாரணக் கதைகள் சொல்லிப் பார்த்தார். ஆங்கில நாட்டு பயணம் தொண்ணூறு வீதம் வெற்றியளிப்பதில்லை என்றும் சொல்லிப் பார்த்தார். கடைசியில் ஒரு படி கீழ் இறங்கி தொழிலுக்கு 'நோ_ பே' போடும்படி கெஞ்சினார். அவன் எதற்கும் மசியவில்லை. இரும்புப் பாளத்தில் செய்தவன் போல் திண்மையாக இருந்தான்.கிழவரின் மன்றாட்டங்கள் எல்லாம் வீணாகிப் போயின.அவன் மனைவியும் அவனுக்கு 'ஃபுல் சப்போர்ட்'.எண்ணி மூன்றரை மாதம் அவன் பயணப் பட்டான். ஆபிரிக்க நாடுகள் சிலவற்றில் அலைந்து விட்டு அவன் ஐரோப்பிய நாட்டுக்குள் எப்படியோ நுழைந்து விட்டான். அவன் ஆங்காரம் வென்றது. ஆறேழு வருடத்துள்ளாகவே மனைவியையும் அழைத்துக் கொண்டான். இருக்கும் வரை கிழவருக்கும் பொஞ்சாதிக்கும் அவள் பார்த்து பார்த்து கருமம் ஆற்றினாள்தான். ஆனால் என்ன ஒன்று புருசன்காரனின் 'கோல்' வந்தா அறைக்குள்ளே போய் கதவைச் சாத்தினாள் என்றால் பிணம் விழுந்தாலும் வெளியே வரமாட்டாள். நடுச் சாமம் தாண்டும் வரைக்கும் சிரிப்பும் சிணுங்கலும் கேட்கும். கிழவர் கோபப்பட்டதில்லை."பாவம் இளசுகள் பிரிஞ்சு கெடக்குதுகள்" என்று மனசுக்குள்ளாகவே முணு முணுத்துக் கொள்வார். இப்போது மகள் இல்லை, கம்பளி போர்த்தி சுற்றித் திரியும் ஒரு நாட்டில். அவளும் கணவனும் நன்கு புஷ்டியான இரண்டு பெண் குழந்தைகளும். மகள் போகும்போது அவள் பாவித்த 'ரச்' ஃபோனை கொடுத்து விட்டு புதுப் ஃபோனொன்று வாங்கிக்கொண்டு போனாள்தான். ஆனால் கிழவரின் துரதிர்ஷ்டம் கிணற்றுக் கொட்டில் வைத்து விட்டு சட்டை துவைத்துக்கொண்டிருந்த நேரம் பார்த்து காகம் தட்டி விட ஃபோன் கிணற்றுள் விழுந்து அமிழ்ந்து போனது. பெரிய பிரயத்தனப்பட்டு அயலவர்களின் உதவியோடு ஃபோனை மீட்ட போது அது செத்த ஆமை போல கிடந்தது. "சரிக்கட்ட கடும் காசு செலவழியும்.." மீசை அரும்பிய அந்த இளைஞனின் கதைக்கு பின்னால் கிழவருக்கு ஒரு வாரமாக அரை வயிறுதான் சாப்பாடிறங்கியது. அதன் பிறகு நான்கு வீடு தள்ளியிருந்த ரெஜினா அன்ரியின் வீட்டுக்குத்தான் கோல் வரும், வீடியோ கோல். கிழவரும் மனைவியும் சங்கடத்தோடுதான் பேசுவார்கள். அதிலும் பேரக் குழந்தைகளின் வீர, தீர பிரதாபங்கள்தான் காட்சியாக விரியும். மூத்தவள் சித்திரம் கீறி கலர் அடித்தவற்றை ஒன்றொன்றாய் காட்டுவாள். சின்னவள் ஆங்கிலப் பாட்டு பாடிக் காட்டுவாள். மகள் ஒன்றிரண்டு வார்த்தைகளோடு சரி. பத்திரமாய் இருக்கும்படி பத்து தடவை சொல்வாள். கிழவர் எழுந்து கொள்வார். பல ஆயிரம் கிலோ மீற்றருக்கு அப்பாலிருந்து கனிவும் குழைவுமான வெறும் வார்த்தைகள் எதனை செய்து விடும்? கிழவருக்கு கொடுப்புக்குள் சிரிப்பு. மகளின் புருசன்காரன் ஒரு வீம்பன். அவன் போன நாளிலிருந்து இன்று வரைக்கும் ஒரு வார்த்தையாவது

பேசியதில்லை "என்ன மாமா எப்படி..."என்ற சிறு வார்த்தையாவது கிடையாது. அதனால் கிழவருக்கு வருத்தமில்லை. அவனும் அவன் குடும்பமும் நன்றாய் இருக்கிறார்களே அது போதும்.

இவள்தான் பாவம். வெறுமையில் காந்தும் என்னை துளி சுருங்கிடாமல் அன்பால் நீர்வார்ப்பவள். பிள்ளைகளுக்கும் எனக்குமிடையில் புரிந்துணர்வுச் சிக்கல்களை விடுவிக்க அஞ்சல் ஓட்டம் ஓடிக் கொண்டிருப்பவள். நோய் காரி. ஆனால் காட்டிக் கொள்ளாதவள். வெறும் நாட்டு மருந்துகளுள் மட்டும் தன்னை மடக்கிக்கொண்டவள். என் மனக் குடுக்கைக்குள் கிடக்கும் அந்தரங்க அவஸ்த்தைகளுக்கு வார்த்தையால் ஒத்தடம் செய்பவள்.என் தனிமையின் வெறுமையை அவள்தான் நிரப்புகிறாள். தளர்ந்து போன என் நடுங்கும் கரங்கள் அவள் கைப்பிடிக்குள் அடக்கமாகி விடுகின்றன. அவளுக்காக நான் வாழ்ந்தேனா? தெரியாது. ஆனால் எனக்காக அவள் வாழ்கிறாள் என்று அடித்துச் சொல்வேன்.

கிழவர் திரும்பிப் பார்த்தார். அவள் கிணற்றடிக்கு கிழக்கே இரண்டு தென்னைக்கு குறுக்காக கட்டப்பட்டிருந்த கொடியில் கிழவரின் கழுவிய வேட்டியை முறுக்கி உதறி காயப்போட்டுக் கொண்டிருந்தாள். கிழவர் கண்ணை மூடினார். உள்ளே அவளின் சர சரப்பு. "என்ன படுத்திட்டியளோ.." எழும்புங்கோ..பிளேன்ரி குடியுங்கோ... சீனி..காணாவெண்டா சொல்லுங்கோ.. போட்டுத் தாறன்..".கிழவர் வாங்கிக் கொண்டார். "இந்தாங்கோ...ஒட்டின பிஸ்கட்..கடிச்சிட்டு மேலால பிளேன்ரிய குடிங்கோ...". கிழவர் நறும்பினார். அவள் அவருக்கருகே நிலத்தில் உட்கார்ந்து கொண்டு வெற்றிலையின் நரம்புகளை கிள்ளிக்கொண்டிருந்தாள். "புள்ள.." "என்ன...". "லண்டனிலேயும் தேத் தண்ணி...இருக்குமா...". "இஞ்ச தொடங்காதையுங்கோ ஒங்கட கூத்த..". கிழவர் ஒன்றும் பேசவில்லை. வெள்ளை மங்கிய சுவரில் பல்லி, இரை உண்டு வயிறு வீங்கிக் கிடந்தது. திறந்திருந்த ஜன்னல் வழியே வெளியில் பார்த்தார். மா மரத்தில் உச்சிக் கிளையிலிருந்த கூட்டுள் செவ்வாய் பிளந்த குஞ்சுகளை தாய்க் காகம் ரெக்கையால் போர்த்திற்று. நீல வான வெளியெங்கும் சூரியப் பளிங்குடைய வெண் பறவைகள் அரை வட்டமாக பறந்து கொண்டிருந்தன. சற்று நேரம் கழித்து சூழலின் நிசப்தத்தை கிழித்துக்கொண்டு விமானமொன்றின் இரைச்சல். "ஆர விட்டு ஆரு எங்கே...பறக்கிறாங்களோ..". கிழவர் பெரு மூச்சு விட்டுக்கொண்டே சொன்னார். அவள் எழுந்து கொண்டாள். அவர் நெற்றிச் சுருக்கத்துள் தன் கன்னத்தை பொருத்தினாள். கிழவரின் கண்ணீர்ச் சொட்டு அவள் பெரு விரலை நனைத்தது. மெல்ல அவர் தலையை தூக்கி தன் நெஞ்சோடு பொருத்திக்கொண்டாள். கிழவர் முதுகு குலுங்கினார்.

**என் மனக் குடுக்கைக்குள் கிடக்கும் அந்தரங்க அவஸ்த்தைகளுக்கு வார்த்தையால் ஒத்தடம் செய்பவள்.என் தனிமையின் வெறுமையை அவள்தான் நிரப்புகிறாள். தளர்ந்து போன என் நடுங்கும் கரங்கள் அவள் கைப்பிடிக்குள் அடக்கமாகி விடுகின்றன. அவளுக்காக நான் வாழ்ந்தேனா ? தெரியாது. ஆனால் எனக்காக அவள் வாழ்கிறாள் என்று அடித்துச் சொல்வேன்.**


Yarlpana
Matrimony
யாழ்ப்பாண மெட்ரிமோனி
YARLPANA MATRIMONY
www.Yarlpanamatrimony.com
YARLPANAMATRIMONY
FIND YOUR PERFECT
PARTNER
யாழ்ப்பாண மேட்ரிமோனி (www.yarlpanamatrimony.com) மிகவும் நம்பகமான மற்றும் வெற்றிகரமான திருமண வலைத்தளம். உலகெங்கிலும் மில்லியன் கணக்கான மணப்பெண் மற்றும் மணமகன் சுயவிவரங்களை அணுக பதிவு செய்யுங்கள். நீங்கள் தேடும் சிறந்த வாழ்க்கைத் துணையைத் தேர்வுசெய்ய நாங்கள் உங்களுக்கு உதவுகிறோம்.
WHAT'S APP : +94 75 319 7959
REGISTER NOW!
WWW.YARLPANAMATRIMONY.COM
SRI LANKA'S MOST SECURED MATRIMONY WEBSITE

# சகோதரர்களே... பசியுடன் என் தாயை சந்திக்க நேர்ந்தால்...



சகோதரர்களே,
பசியுடன் என் தாயை
சந்திக்க நேர்ந்தால்
அவளுக்குச் சொல்லுங்கள்
அவளது
கனவுகளை காப்பதற்காக
நான்
வாழ்வின் அந்தர நுனியில்
சிட்டுக்குருவியென
பாடுபட்டுக்கொண்டிருக்கிறேன் என்று

எண்ணாயிரம் இரவுகளுக்குப்
பின்னும்
நமக்கென
ஒரு சூரியன் எழுவதற்கான
காலம் கனிந்துள்ளது
அதனால்
சகோதரர்களே,
பசியை பொறுத்துக் கொள்ளுமாறு
அவளுக்குச் சொல்லுங்கள்

வேர்கள் கருகி செத்த
மரங்களில்
இன்றும்
நம்பிக்கையோடு
வந்தமரும்
கிளிகளுக்கும்,
அம்மாவுக்கும்
பெரும் சத்தத்தோடு கூறுங்கள்
கனிகளின்
காலம் தொடங்கிவிட்டது என்று

ஆதலால்
சகோதரர்களே
எல்லோருக்கும் கூறுங்கள்
பசியை கூர்மையான ஆயுதமாக்கும் படி
அவ்வாயுதம்
கண்களை நிமிர்த்தி எதிர்காலம் நோக்கி
நம்பிக்கையை நடாத்தும்

அவ்வாயுதம்
இழந்த எம் வாழ்வின்
பசுமையைக் கொண்டு வரும்

எனவே,
சகோதரர்களே,
பசியுடன் காத்திருக்கும் என் தாயிடம்
கூறுங்கள்

அவளுக்கான உணவு
அறுவடைக்குத் தயாராகிவிட்டதென்று...

பிறகு...
சுலபமாக ஒவ்வொரு
காளையும் வேட்டையாகியது

பிறகு...
குனிந்த முதுகில்
தேச சுமையும் பெருத்தது.

கீதம் இனிய குயிலே
பிறகு...
அதிகாரம்
சுலபமாக ஒவ்வொரு
காளையும் வேட்டையாடியது.

பிறகு
குனிந்த முதுகில்
ஏறி கெக்கலித்தனர்

பிறகு
ஒப்பந்தங்களால் நாம்
காவுகொள்ளப்பட்டோம்

பிறகு
அடையாளமற்று மிகவும்
மங்கிப்போனோம்.

கேட்பாரற்று என் சவம்
கிடக்கும்;
மாடசாமி கோவில் லயத்து
மாமரக்கிளையிலிருந்து
கீதம் இனிய குயிலே
நீ பாடுவாய்
மாபெரும் வலியோடும்
மாபெரும் தனிமையோடும்

காற்றில் பிணவாடையோடு
ஒற்றை பாடலொன்றின்
கூக்கூ.... கூக்கூ ..... கூக்கூ

உங்களுக்கு கேட்கிறதா?

எனில்
நீங்களே அந்த
கீதம் இனிய குயில்...




சண்முகம் சிவகுமார்

# கீதம் இனிய குயிலே...



# ஹிப்பி



(குளிர் காடு பெண்ணே— மருதோன்றி வளர் நேசம்)

லேலியை பொறுத்தவரை சீசா ஒரு மனிதப் பிராணி, அப்படித்தான் அவனை வைத்திருந்தாள். அவளைப் பொறுத்தவரை காதல் ஒரு புனித மலசலகூடம் போன்ற ஒன்று. மிக நூதனமாக காதலை கையாள வேண்டும் என்று சொல்லுவாள். எப்படி என்றால், அதனால்தான் சீசாவிற்கு நேரத்திற்கு உணவை வைப்பதைப்போல காதலை காட்ட வேண்டும் என்று நினைப்பாள். ஒரு நேரசூசி. அது அவ்வளவு நல்லதில்லை என்று சீசா தெளிவு பெற்ற பிறகு தான் பிரச்சினைகள் ஆரம்பமாகின. இது எப்படியென்றால், ஒரு செல்லப்பிராணிக்கு ஞானம் வருவதைப்போன்றது தான். அது மிருகம், என்ன செய்யும் முரட்டுத்தனமாக மாறிவிடும். கடிவாளத்தை தேவையில்லாத ஒரு சுமையாக குதிரை நினைக்குமா என்று லேலி கேட்பாள். ஒரு குதிரை ஒரு மனிதனின் எண்ணங்களுக்கு பொறுப்பாக முடியாது என்று சொல்லுவான் சீசா. இப்படித்தான் ஒரு மிருகம் பெறும் தெளிவு அபாயகரமானது. சீசா அவ்வளவு ஒன்றும் நல்லவனில்லை, ஆனால் கொஞ்சம் மிருகத்தனத்திலிருந்து தன்னை பாதுகாத்து வைத்திருந்தான். அதையும் வெளிக்கொண்டுவரும் அற்புதமான வேலையை லேலி நேரங்களை ஒதுக்குவேன், நீ சில காதல் பழக்கவழக்கங்களை காதலித்துக்கொள். காலை ஐந்து என்று சொல்லுவதற்கு பதிலாக பார்க்காத போதும் காதல் போல காத்திருக்க வேண்டும். மனநிலை இருந்தாலும் அது வேண்டும். என்னை நீ நேரில் எனது அப்பாவுக்கு பிடிக்காத செய்தால் நான் உன்னைவிட்டு வழியில்லை. காதலிப்பதைவிட பணிகள் உண்டு என்பதை

**ஆதி பார்த்திபன்**



செய்தாள். நான் உனக்கு சில காதலித்துக்கொள், நான் உனக்கு சொல்லித்தருவேன் நீ மணி தியானம் செய்யும் நேரம் ஓம் எனது பெயரை உச்சரி. நீ என்னை உன்னில் ஒரு நதியின் சுழலைப் அந்த நேரத்தில் எவ்விதமான உன்னை உள்ளிழுத்துக் கொள்ள சந்திக்க வரக்கூடாது. அது விசயம். அதை நீ கண்டிப்பாக விலகிவிடுவதைத் தவிர வேறு இந்த உலகத்தில் முக்கிய பழக்கப்படுத்திக்கொள்.



நீ எனக்காக காத்திருக்க வேண்டும். வருடக்கணக்காக என்று நான் சொல்லுவேன். ஆனால் ஒரு யுகமானாலும் நான் சொல்லும் தருணம் மாத்திரம் உனக்கானது. அதைத்தவிர ஒரு இடையூறு உன்னால் நேர்ந்தாலும் பிறகு உனது விதி அவ்வளவுதான். எனக்குள் இருக்கும் உன்மீதான காதல் செத்துப்போகும் குழந்தாய். முடிந்தது தலையை மேல் கீழாகவோ பக்கவாட்டிலோ அசைக்காமல் பொதுவான ஒரு இயக்க திசையில் அசைத்தான் அவன். சத்தியம் செய் மனதினுள்ளே வேறொரு விஷயத்தையும் நேரடியாக அவள் கேட்ட விசயத்தையும் சத்தியம் செய்தான். இவ்வாறு தன்னை பற்றிய சுயசரிதையின் ஆரம்பப் பகுதியை முடித்துக்கொண்டு....

அன்பு என்பது அத்தனை புனிதமான செயலில்லைத்தான் அன்பே, பெருவிரல்களால் அழுத்தம் கொடுத்து இடறி கால்களை விரித்தான். நீ நினைக்கிறாயா நான் அவளை நீ எதுவும் பேசாதே என்று கனவில் தோன்றும் மலைக்கணவாயை போல இருந்த இரண்டு மார்புகளுக்கும் இடையில் அழுத்தித் தள்ளினாள் ஹிப்பி. திரும்ப நான் எழுந்து இருக்கும் போது ஒரு மணிநேரம் கடந்திருந்தது. புழிந்து போடப்பட்டிருந்த தோடம்பழ மேற்பகுதியைப்போல வியர்வை கசிந்திருந்தது முகம் வாடியிருந்தது. படுக்கை விரிப்பின் அருகில் இருந்த முக்காலியை நோக்கி உடலை விழுங்கிய மலைப்பாம்பை போல மெல்ல அசைந்தான். விரல்களால் தடவி கையில் சிக்கிய அந்த பொருளை எடுத்துக்கொண்டான். அது ஒரு தீப்பெட்டி. ஒரே ஒரு தீக்குச்சியை மட்டும் எடுத்து பற்றவைத்து அதை அணைத்து அதன் வெப்பம் மாறாத நிலையில் அவள் நடு மார்புக்கு குறுக்காக ஒரு கோடு, இரண்டு மார்புக்கும் சமாந்தரமாக ஒரு கோடு, குலுங்கி சிரித்தவாறே சொன்னாள் ஸ்தோத்திரம்.

ஹிப்பி ஒரு குளிர்ந்த பழத்தை போன்றவள். சிவலிங்கப்பூவின் அதே வளவளப்புடனான சிவந்த உடல் கொண்டலையும் பெண். வியர்வையில் கரைந்து கண்களின் இருபுறங்களிலும் கரைந்து வழியும் கறுத்த கண் பூஞ்சை. மீண்டும் துடைத்து கண்களில் இன்னொரு தடவை பூசிக்கொண்டு வளைந்து மார்புகளில் விழும் கருநாகத்தின் தோற்றத்தில் ஒத்திருக்கும் தலைமுடியை விரல்களால் ஒரு அபிநயத்தின் லாவகத்துடன் சுழட்டி தலையில் முடிந்து கொள்வாள். பிறகு தென்றல் காற்றின் மேல் அடிப்பில் எழும் இலவம் பஞ்சின் மென்மையுடன் எனது மார்புக்காம்பில் தனது ஆட்காட்டி விரலால் ஒரு அழுத்தம் தருவாள். உனக்கு தெரியுமா சீசா ஒரு ஆணின் மார்க்காம்பை சரியாக கையாளத்தெரியாதவள். அழகியல் தெரிந்த பெண்ணே இல்லை என்று

சொல்லிவிட்டு வலது கண்ணை சிமிட்டுவாள். உலகின் பேரிருளில் இரண்டு ஜோடி மின்மினிகள் மட்டும் எதிர் எதிராக உயிர்ப்பதைப்போல இருக்கும். ஹிப்பியை அவன் ரகசியமாக நேசித்தான். லேலி மீதிருந்த அருவருப்பின் நிழல் ஹிப்பியின் கூந்தலில் புதையுண்டிருப்பதாக நினைத்தான். அதன் பேருண்மையை கண்டறிய மறுபடி மறுபடி அவள் கூந்தலுக்குள் கைகளை நிறைத்து கோதி சேர்த்திழுத்து அவளுடன் முயங்குவது வெகுவாக அவனுக்கு பிடித்திருந்தது.

சீசா இந்த பூமியை மனநிறைவுடன் எப்பொழுதும் பார்த்ததில்லை. இந்த பூமி அவனுக்கு எதை தந்துவிட்டது? நல்ல நண்பர்களையோ நல்ல காதலிகளையோ நல்ல சமூகத்தையோ என்றால் just f... என்று முடித்துக்கொள்வான். ஒரு சிறிய விலங்குக்குள்ள அந்த வெளி என்னிடம் இல்லையே என்று அங்கலாய்த்து கொள்வான். இந்த பூமியில் எதைக்கொண்டு நிறைத்தாலும் அவனை நிரப்பி வெற்றிகொள்ள இயலாது. அவ்வளவு வெறுமையான மனிதன்தான் இந்த சீசா. ஒரு சமயம் அவனுக்குள் எழும் அன்பின் தாகம் பிரபஞ்சத்தை கொண்டு ஈடுசெய்யவும் முடியாமல் ஆர்ப்பரிக்கும். அப்படிப்பட்டவனை அவள் கண்டடைந்தாள். மிக எளிமையான முக தோற்றத்தை உடைய அவனை இலகுவாக ஒரு மனித மிருகம் என்று அடையாளம் கண்டுகொள்ள முடியாது. அவன் மிகவும் உணர்ச்சி வசப்பட்டவனாக அவளுக்கு தெரியவில்லை, அவனது முகம் நன்கு பழுத்த துறவியைப்போல இருந்தது. இந்த பூமியில் பார்த்தவுடனே யாராவது ஒருவர் ஏதோ ஒரு காரணத்துக்காக காதல் செய்யப்படுவார் தானே. அந்த காரணம் எது? ஆயிரம் இருக்கும். உதடுகளின் கீழ் ஒரு இன்ச் கீழே நாடியின் மேல் ஒரு புள்ளி அளவு மச்சம்/ தூரமாக நின்று பார்க்கும் பொழுது ஒரு பட்டாம்பூச்சியை ரசிக்கும் குழந்தை போல ஒளித்திரிந்த கண்கள்/ பரந்த தரைகளில் சில கண்ணுக்கும் தெரியாத அங்கிகள் தனது பாதம் பட்டு இறந்து விடுமோ என்ற பயத்தில் அந்தரத்தில் நடக்கும் அன்பே உருவான ஒருத்தி/ இந்த பூமியின் கலவை/. மைய கலாசாரங்களை உடைப்பதற்கு புரட்சி செய்பவள்/ காற்றுடன் ஆக்ரோசமாக போராடும் அவளின் சுருள் விழுந்த முன் முடி/ இரத்த நரம்புகள் புடைக்கும் ஒருத்தியின் விசாலமான கண்/ வானத்தை நோக்கி அவள் நீட்டி இருப்பாள், தனது நடுவிரலை ஒரு பாப் கட் வைத்த பாப் பாடகி/வியர்வை வழியில் உடலுடன் மண்குடத்தை சுமந்து மைல் கணக்கில் நடந்து நீர் கொண்டுவரும் பெண்/ சொடுக்கினால் தீயை உருவாக்குவதை போல சிவந்திருக்கும் நீண்ட விரல்கள்/ சீன ஆப்பிள்களை போன்ற ஒரு மார்பு/ கனவுகளில் விரல்களால் தடவி இனம்காணும் பித்தளையால் ஆன கடவுள் சிலையை போன்ற வலிந்து வழுவழுத்த இடை. இப்படி எதை பார்த்தாவது காதல் கொள்ளலாம். எல்லையை உடைக்கும் காதலும் எல்லைக்கு வெளியே தாவும் காமமும் தான் இந்த வாழ்வின் தத்துவம்.

இது நீதியானது இல்லை என்றாலும் காதலுக்காக ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் ஒருவனின் மனதில் தோன்றும் காதல் என்பது நீதியானது. உனக்கொன்று தெரியுமா ஹிப்பி, எனது அப்பா மிக சிறந்த காதலர். ஆனால் இந்த உலகம் அவருக்கு எதை தந்தது என்றால் எதையும் இல்லை என்றுதான் சொல்லுவேன். அப்பாவிடம் ஒருநாள் எது காதல் என்றேன். நமக்கு விதிக்கப்பட்டது அவ்வளவு தான் என்று நாம் உறையும் போது வாழ்க்கை ஒரு சூரியனை தரும். அந்த சூரியன் போன்றது தான் காதல் என்றார். நான் அதை புரிந்துகொள்ளவில்லை. ஒரு பெண் பற்றிய தேடலொன்றை நான் எப்போதும் நிகழ்த்தியதில்லை. அது உண்மையாகவே ஆபத்தானதாகத்தான் நான் கருதுகின்றேன். எனக்குள் இருக்கும் பெண்தான் இந்த பூமியின் அனைத்து பெண்களினதும்

பிரதிநிதி. அறியாமையில்தான் அவளை நான் எனக்குள் வளர்த்தெடுக்கின்றேன். அவளை நான் உணர்ச்சிகளின் சுருள் என்று எப்போதும் நம்புவதில்லை. அவள் அறிந்து கொள்ளுதலின் எல்லை தாண்டி வளர்ந்து நிற்கின்றாள் எனக்குள். ஆக நம்மால் காதலிக்கப்படும் எந்த பெண்ணையும் நாம் சமூகத்திலிருந்து தேர்ந்தெடுக்கின்றோம் என்றா நினைக்கின்றாய், இல்லை அவள் ஏற்கனவே நமக்குள் வளர்ந்து நிற்பவள்தான் என்றார். இப்போதும் எனக்கு புரியவில்லை. நான் மிகவும் அறியாமையுடன் அவரை பார்த்தேன். அவர் மிகுந்த போதையில் இருந்தார். என்னை அழைத்து அருகில் அமரச்செய்தார். இரண்டு விரல்களுக்குமிடையில் சிகரெட் புகைந்து கொண்டிருந்தது. புகையை உள்ளிழுக்காது மிகுந்த சிரமத்துடன் சுவாசித்துக்கொண்டிருந்தேன். இறுக்கமாக தொடையில் அடித்து என்னை விழிப்படைய செய்தபின் இந்த உலகத்திலேயே மிகவும் பெறுமதியான வார்த்தை எது தெரியுமா என்றார். நான் அவர் கண்களை பார்த்தேன். மிகவும் இறுக்கமாக ஈரலிப்பே இல்லாமல் வெயில் கால செம்மண் தரையைப்போல இருந்தது. நரம்புகள் வேர்விட்டிருந்தது. மிகவும் பெறுமதியான ஒரு வார்த்தை இல்லை ஒரு வாக்கியம் எந்த சந்தர்ப்பத்திலும் நீ மறக்க கூடாது. உனது தகுதியை அறிந்து கொள், yes இந்த உலகத்திலே பெறுமதியான வாக்கியம் இதுதான். எந்த சந்தர்ப்பத்திலும் அதை நீ ஞாபகம் வச்சுக்கொள். அது உனக்கு எப்பொழுதாவது தற்காப்பொன்றை வழங்கும். அப்பா சொல்லுறன் எண்டதுக்காக இல்லை. ஏனென்றால் நமக்குள் இருக்கும் கருத்துக்கள் மாற்ற முடியாததில்லை. அதை நானே சில சந்தர்ப்பத்தில் மாற்றி விடக்கூடும். நீ யோசிக்காதே. நீ இதை செவி கொடுக்கவேண்டும் என்பது எப்போதும் எனது விருப்பமில்லை. உனது தலைவன் பற்றி உனக்கு எப்போதும் விமர்சனம் எழவில்லை என்றால் நீ சரியான தலைவனை தேர்ந்தெடுக்கவில்லை என்று அர்த்தம் என்றார். உனக்கு அது புரியாது, சரியான வயது வரும்போது அதை நான் உனக்கு சொல்வேன் என்றார். எனது அப்பாவின் சிநேகிதர்கள் பலர், எனக்கு நினைவு தெரிந்த நாட்களில் இருந்தே ஒன்று, இரண்டு பேர் இருக்கின்றார்கள். அப்பாவின் சிநேகிதர்கள் பலர் கம்யூனிஸம் பேசும் மாற்று இயக்கங்களில் உறுப்பினர்கள். அவர்களது கம்யூனிஸம் எதற்கு பயன்பட்டது என்பது எனக்கு தெரியாது. ஆனால் அப்பாவிடம் எப்போதும் பழைய கதைகளை அறியமுடியாது. எதையும் எனக்கு சொல்லக்கூடாது என்பதில் தீர்க்கமாக இருப்பார். அதனால் தான் அவர் மிகுந்த போதையில் இருக்கும்போது நான் அவருக்கு அருகில் இருப்பதை விரும்பினேன். ஏதாவது ஒரு கதையை சொல்லுவார். ஆனால் அவை பெரும்பாலும் சாகஸ கதைகள் போல் வடிவமைப்பை உடையவை. அதனால் அவற்றை நான் நம்புவதில்லை. எப்படியென்றால் சரி விடு நீயும் அதை நம்பமாட்டாய். ஓம் நான் உண்மையாகவே பெரிதாக வாய் வழிக்கதைகளை நம்புவதில்லை. இருந்தாலும் நீ சொல்வதை கேட்க விரும்புகின்றேன்.

**அப்பாவின் சிநேகிதர்கள் பலர் கம்யூனிஸம் பேசும் மாற்று இயக்கங்களில் உறுப்பினர்கள். அவர்களது கம்யூனிஸம் எதற்கு பயன்பட்டது என்பது எனக்கு தெரியாது. ஆனால் அப்பாவிடம் எப்போதும் பழைய கதைகளை அறியமுடியாது. எதையும் எனக்கு சொல்லக்கூடாது என்பதில் தீர்க்கமாக இருப்பார்.**

அது ஒரு காதல் கதை. அதை கொஞ்சம் அழகுபடுத்தி சொல்லலாம். ஆனால் அவசியமில்லை. டானியல் அவரது மிக நெருங்கிய சிநேகிதன். ஒரு கோவில் திருவிழா காலத்தில் அவளை சந்தித்தான். உடல் ஒரு பிரபஞ்ச வெளியென்றால் காதல் என்ற உணர்ச்சி ஒரு கற்பூர படிகத்தை போன்றது தானே. அந்த காதலின் இடையில் எத்தனையோ தடைகள் அவனுக்கு இருந்தது. திருவிழாவில் ஆரம்பித்த காதல் பின் அவள் ஒவ்வொரு வெள்ளி தினங்களிலும் கோவிலுக்கு செல்வதை வழக்கப்படுத்திக் கொண்டான். ஆனாலும் ஒரு கம்யூனிஸ்ட் கோவிலுக்கு செல்வது ஒரு தற்கொலை குண்டுதாரியின் சன நடமாட்டப் பிரதேச விஜயத்திற்கு ஒப்பானது. அந்த கோவிலை

**அந்த கோவிலை சுற்றி நிறைய மஞ்சள் கொன்றைகள். கோவிலின் வலது பக்க தெருவில் பழைய கொன்றை மரமொன்று தனியாக இருக்கும். காலை பூஜைகள் முடிந்தவுடன் அவன் காத்திருக்கும் கொன்றை மர நிழலுக்கு அவள் வந்து சேர்வாள்.**

சுற்றி நிறைய மஞ்சள் கொன்றைகள். கோவிலின் வலது பக்க தெருவில் பழைய கொன்றை மரமொன்று தனியாக இருக்கும். காலை பூஜைகள் முடிந்தவுடன் அவன் காத்திருக்கும் கொன்றை மர நிழலுக்கு அவள் வந்து சேர்வாள். இப்படி பெரிய விளக்கங்களுடன் எனது நண்பன் இந்த கதையை சொல்லி இருப்பான் என்று நீ நினைக்காதே. இது பின் கண்டுபிடிக்கப்பட்ட டயரிக் குறிப்பு... குறிப்பு மிக தெளிவாக இல்லை. ஆனால் இவ்வளவு தெளிவாக இந்த கதை அமைவதற்கு ஒரு காரணம் இருக்கின்றது. அதை கதை முடியும் போது நீ தெரிந்து கொள்வதற்கே விரும்புகின்றேன்.

குறிப்பு—1:. நான் உன்னுடன் பேசும் இந்த ஒரு பத்து நிமிடங்களில்தான் எனது காயங்களின் மேல் கட்டியிருக்கும் துணிகள் அவிழ்கின்றன. காற்று அந்த காயத்தில் படும் போது உணர்வோமே ஒரு சிறு சுனைப்பு. உள்ளே அப்படி ஒரு தருணம் நிகழ்கின்றது. அந்த சுனைப்பை விரல்களால் அழுத்தி தேய்த்து சுகம் கொடுப்பதை போல நீ உரையாடுகின்றாய். ஆனால் காயமோ மாறாமல் இன்னும் ஒரு துளி அதிகமாகிக் கொண்டேயிருக்கின்றது. அமைதியாக அவள் சிரிக்கின்ற பொழுது சூரிய ஒளிபட்டு தெறிக்கும் கொன்றை மஞ்சள் அவளது முகத்தில் விழும். இது சரியானது இல்லை என்று அவன் சொன்னான். இந்த காதல் நமக்கு பலிக்களம். நீ அதை புரிந்து கொள்ளவேண்டும். பேசாமல் என்னை கருணைக்கொலை செய்துவிடு என்றாள் மிக ஆழமாக. என்னால் தற்கொலை எல்லாம் செய்ய முடியாது. நான் வாழவேண்டும். அந்த தைரியம் என்னிடம் இருக்கின்றது. அதனால் நீ என்னை கருணைக்கொலை செய். அவளை அவனால் சமாதானப்படுத்த முடியாது. ஏனென்றால் அவள் பெண், நீரைப் போன்றவள் எத்தனை எத்தனையோ கழிவுகளை அவளில் எறிந்தாலும் அவள் தன்னை தெளிவாக வெளிப்படுத்துவாள் அடங்கமாட்டாள், வெறுமையானவள். கொட்டித்தீர்க்கும் அத்தனையும் எடுத்துக்கொள்வாள், சமாதானம் செய்வது வீண்போக்கு, அதை அவன் அறிவான். ஏனென்றால் ஒரு பெண் தீர்க்கமானவள். அவள் அடைந்துகொள்ள எத்தனிப்பதை மீள் பரிசீலனை செய்துகொள்ள அவள் தன்னை அழித்துக்கொள்வதால்தான் சாத்தியம். நான் உனக்காக நாளை வரை காத்திருப்பேன், நீ எனது வீட்டுக்கு வா, நீ தைரியமானவன், இதை கடினமாக நினைக்காதே, நான்

உனக்காக இந்த குறிப்பிட்ட நேரத்தில் நிச்சயமாக காத்திருப்பேன் என்றாள். அவனால் வேறெதுவும் சொல்ல முடியாது, கீழாகவோ மேலாகவோ பக்கவாட்டிலோ தலையை ஆட்டாமல் பொதுவான ஒரு திசையில் அசைந்தான்.

பின் ஒரு நாள் அவளை அவன் சந்தித்தான். அது இறுதித் தீர்ப்புநாள். வானம் கருமேகங்களை அடர்த்தியாக்கும் பொழுது ஒரு சிறுவன் கூரை வீட்டின் முத்தத்திற்கு நடந்து வருவான் நிசப்தம், வானத்தில் ஒரு பறவை ஒரு மௌன அசைவில் சிறகுகளை விரித்து காற்றின் திசையில் கீழிறங்கும் சிறகின் அடிப்பிருக்காது, சிறுவனின் விழிகள் விரியும், மனம் கிறுக்கப்படாத விரிக்கப்பட்ட தாள், தூய்மையான ஒரு விழிப்புணர்ச்சிதான். ஆனாலும் துக்கத்தின் சாயல், வாழ்வின் மொத்த அனுபவங்களையும் இறக்கி வைத்த துறவியின் மனநிலையை போல அன்று எனக்குள் ஒரு மௌனம். அவனை போடப்போறாங்கள் என்று சதா சொன்னான். அவன் எங்க போயிட்டான். இப்போது எல்லாம் நடந்து முடிந்திருக்கும். நாயே உனக்கிது முதலே தெரியுமா.

இல்ல, ஆனா கேள்விப்பட்டன்.

நாயே முதலே சொல்லி இருக்கவேணாமா வேளைக்கு வா எங்க போயிருக்கப் போறான். ஆகமிஞ்சினா கோவிலடி மோட்டார் சைக்கிளை எடு, நின்சாக் கட்டையை எடுத்து சுருட்டி குரொகோடில் ஜீன்ஸ் இடுப்பு பகுதியில் சொருகினேன். போ வேளைக்கு ...சரியாக மழை அடர்ந்த மேகம் மெல்லிய கறுப்பை எங்களுடைய மோட்டார் வண்டியின் பின் விரித்துக்கொண்டு வந்தது. கொஞ்சம் நாங்கள் நிறுத்தியிருந்தாலும் அந்த இருள் எங்களை மூடியிருக்கும். ஆனால் அவ்வாறு ஆகவில்லை. rally வகையை சேர்ந்த அந்த மோட்டார் சைக்கிள் தனது வழமையான முறுக்க இசையை பிழிந்தபடி காற்றை கிழித்து வந்து சேர்ந்தது. இரைச்சல் தூரமாய் மணலை தாண்டி மரம் கானல் நீரில் மிதப்பதைப்போல தெளிவில்லாமல் தோன்றியது. அதிவேகத்தில் மோட்டார் சைக்கிளை விழுத்திவிட்டு அந்த குறிப்பிட்ட இடத்தை நோக்கி விரைந்தோம். அங்கே ஜனக்கூடடம் சூழ்ந்திருந்தது. அவர்களை விலக்கி உள்நுழைந்த போது கருமேகம் முதுகில் ஏறிக்கொள்ள அவனது உடல் குப்புறக்கிடந்தது. அவன் சுடப்பட்டான். மணல் திட்டுக்களில் சிதறியிருந்த இரத்தம் காய்ந்து அவனது தலைப்பகுதியை சுற்றி தெளிக்கப்பட்டிருந்தது. ஜனநெரிசலை விலக்குவதற்காக எனது நெஞ்சாக் கட்டையை சுழற்றினேன். போங்கடா மயிறுகள். எல்லோரும் கலைந்து சென்ற அரைமணிநேரம் நிசப்தம். முழந்தாளிட்டு அவனது முகத்தை பார்த்தேன், அரும்பிய தாடி, நாடிப்பகுதியில் ஒரு குண்டு ஆழமாக இறங்கியிருந்தது. அவன் புன்னகைத்து இறந்தது ஓரளவு விளங்கிக்கொள்ள முடிந்தது. முழுமையாக எச்சிலை முழுங்கிக்கொண்டு வாந்தி உணர்வுடன் கூடிய அந்த வார்த்தையை சொன்னேன். அவன போடவேணும் சதா. இத விட மோசமா. ஆனா இப்ப நிலைமை சரியில்லை, அவங்களுக்கு ஆக்களிண்ட செல்வாக்கு எப்பிடி இருக்கெண்டு தெரியும் தானே.

எனது அப்பாவையும் அவர்கள் தான் கொன்றார்கள், ஆனால் அது ஒரு நீதியான கொலை என்றுதான் நினைக்கிறேன். ஏனென்றால் அவர் ஒரு தலையாட்டியாக வேலை செய்தார், ராணுவத்தின் ஒற்றன். அவரால் அவர்களில் பலர் காட்டிக்கொடுக்கப்பட்டு சுடப்பட்டார்கள். அதில் மிகவும் அப்பாவியான எனது காதலனும் சுடப்பட்டான். உனக்கொன்று தெரியுமா? அவன் எந்த இயக்கத்தையும் சேர்ந்தவனில்லை. கிறிஸ்துமஸ் நாளில் நத்தார் வேடம் போட்டவன். நாங்கள் காதலிப்பது ஒருமுறை அப்பாவுக்கு தெரிந்தவுடன் என் பொருட்டு ஒரு தடவை தலையாட்டியதால் அவன் சுடப்பட்டான். நத்தார் ஆடைகளுடன்

அவன் துடிதுடித்தான். எனது கண்முன் அது நிகழ்ந்தது. நான்கு தோட்டாக்கள், யாரும் அவனது உடலை உரிமை கோரவில்லை. மூன்றாவது தினம் மழை பெய்து அவனது உடல் உப்பியிருந்தது. ஒரு கிணற்று தவளையை போல அது வளைந்து ஒடுங்கிக் கிடந்தது. பச்சை ஓலையால் செய்யப்பட்ட பாயினால் சுருட்டி அவனது உடலை அப்புறப்படுத்தியபோது அவனுக்காக அழ யாருமில்லை. கூட்டத்தின் ஒரு திசையில் நின்று ஒரு சிறுமி அழுதாள். அழுதுகொண்டே நின்றாள். அவனை போலவே மண்ணிற கண்கள். அவளுக்கு அவனை போலவே கன்னத்தில் குழிச்சிரிப்பு. ஆக உயிருக்கு உயிர் என்ற கொள்கை நீதியானதென்றே நினைக்கிறேன். மேலும் அவர்களை எனக்கு பிடிக்கும். நேசிக்கப்படும் ஒரு கூட்டத்தின் வன்முறைகள்கூட அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது எழுதப்படாத நியதி. வன்முறையால் எழுதப்படும் வரலாறுகள் பெரும்பாலும் வேறு வேறு உணர்வை தரும் என்று சொல்ல முடியாது. ஆயுதங்கள் உடல் இடம்தான் மாறுபடும். நானும் தான் அது பற்றி படித்தேன். ஆனால் இது வேறு உடல்.

...உனது அப்பா மிருகத்தனமாக அவனை கொலை செய்தாரா? அவள் கணவனை அவள் குழந்தையை. yes bru—tally..... அவன் கொலை செய்யப்பட்டான். ஆனால் இப்பொழுது வரை அவன் வாழ்ந்துகொண்டிருப்பதாக எல்லோரும் நம்புகின்றார்கள். ஆக உனது அப்பா ஒரு கொலைகாரன் என்பது உனக்கு கொஞ்சம்கூட வேதனையாக இல்லையா? இல்லை வாழ்தல் என்பதே வன்முறை மீதான புரிதல்தானே. நன்றாக உப்பிட்டு வெயிலில் உலர்த்தப்பட்ட பாகங்கள் சுற்றிவர உள்ள கடற்கரைகளில் யாரும் அறியாது பதப்படுத்தப்பட்ட அவனது உடல், உனக்கு தெரியுமா? அது ஒரு மனிதக் கருவாடு என்று அப்பா சொன்னார். சகிக்க முடியாத ஒரு வாடை மொத்தமாக கெட்டுப்போன கருவாடுகளுடன் அதனை ஒன்றாக்கி, பின் உரமாக்கும் தொழிற்சாலைக்கு கொண்டுசெல்லப்பட்டது. இவ்வாறாக துரோகிகளுக்கு மிக கலைநயமாக ஒரு கொலையை நிகழ்த்துவதில் அவர் திறமைசாலியாக இருந்தார். அதனால்தான் அவரை எல்லோரும் பெரிய தோழர் என்றார்கள்.

அப்படியென்றால் அந்த குழந்தையையும் கொன்று விட்டாரா? அதற்கும் இவ்வாறான தண்டனைதான் கிடைத்தது என்கிறாயா? இல்லை, இல்லை, அந்த குழந்தை ஒரு சுதந்திர ஆன்மாவாக வளர்க்கப்பட்டது, வளர்க்கப்படுகின்றது, ஒவ்வொரு சுதந்திர ஆன்மாவுக்குள்ளும் எல்லையற்ற வெறிகொண்ட மிருகமும் வளரும். காரணம் அதீத குரூரமும் அதீத அன்பும் கொண்டவன்தான் மனிதன் இல்லையா, நீ நினைக்கின்றாயா நாம் எல்லோரும் ஒரு தருணத்தில் அன்புக்காக மட்டும் பழக்கப்பட்டவர்கள் என்று. உன் மனச்சாட்சியை தொட்டு சொல், உன்னால் அதிகம் நேசிக்கப்பட்ட மனிதனை விதம் விதமாக கொலை செய்வது பற்றி உனது மனது சிந்திக்கவில்லையா? குறைந்த பட்சம் கழுத்தை நெரிப்பது பற்றியாவது. அந்த கொலைக்கு பின்னால் ஒருநாள் நான் அறிந்துகொண்டேன், எனது அப்பாவால் கொலை செய்யப்பட்டது வேறு யாரும் இல்லை, அவர்தான் எனது அப்பா. எனது அம்மாவின் நாட்குறிப்பை ஒருநாள் வாசிக்க நேர்ந்த போது அந்த பெண் அவள் எனது அம்மா. இத்தனைக்கும் அமைதியான ஒரு ஆத்மா. அதன் இருப்பை சிதைத்தது அந்த மிருகம். அதன் பிறகு ஒவ்வொரு நாளும் உனக்கு தெரியுமா இன்று காலைவரை அவர்களை விதம் விதமாக கலைநயமாக ரசித்துக்கொல்வது பற்றி சிந்திக்கின்றேன். எனது அம்மாவை எனது அப்பாவை, அவர்களுடைய ஒவ்வொரு அசைவுக்கு பின்னாலும் அவர்களுடைய சாவு நேர்த்தியாக பத்திரப்படுத்தப்பட்ட ஒரு ரகசிய நிழல் மிருகத்தின் வாலைப் போல

பின்தொடர்கிறது. ஒரு தடவை துருவேறிய கூர்மையான கத்தியை எனது அப்பா கண்டுபிடித்தார். அதை நான் பத்திரமாக ஒளித்து வைத்திருந்தேன் அந்த புத்தகத்தின் நடுவில். ஆனால் எப்படி அவருக்கு அந்த புத்தகம் விருப்பத்துக்குரியதாக மாறியது என்று நான் மீண்டும் மீண்டும் கேட்கிறேன். அவரது வாழ்க்கையில் அவர் வெறுத்த காந்தியின் சத்திய சோதனையை திறக்க வாய்ப்பே இல்லாத போது எப்படி சாத்தியம். உனது உண்மையான அப்பா கொலை செய்யப்படுவதற்கு முழுமையான தகுதியுள்ளவர்தான். ஆனாலும் அவர் உனது அப்பா என்ற சிந்தனை உனக்குள் முழுமையாக சிதைத்திருப்பது உனது இருக்கின்ற பறவை, அது வானத்தை பார்க்கும் விதம், அதற்கோ இந்த வானம் பூமி எல்லாமே கம்பிகளின் வெளியே மிக தூரத்தில், ஆசையின் உச்சக்கட்ட உந்துதலையும் அதன் மனம் நிலைத்திருக்கும். அடுத்தது சரணாலயத்தில் இருக்கும் பறவை. அது அதன் கீழுள்ள வனத்தை பார்க்கும் விதம், அதோ தன்னை சுதந்திரம் பெற்றதாக எண்ணிக்கொள்ளும். அது முழு வானத்தையும் முழு பூமியையும் தனது சுதந்திர உணர்வாக எண்ணுவதில்லை. அதன் சுதந்திர உணர்வு அதன் எல்லைக்குள் இருக்கின்றது. ஆனால் அதன் எல்லை அதன் மனதிற்குள் இருக்கின்றது. மூன்றாவது சமுத்திரத்தை கடக்கும் பறவை, அது

**பறவைகள் பற்றி சொல்வதென்றால், என்னை பொறுத்தவரையில் பறவைகளை மனிதர்களுடன் மட்டுமே வைத்து பார்ப்பேன். நீ எந்த வகையான பறவை ? அதை சொல்வதற்கு நீ எனக்கு பறவைகளை உனது மனதில் எவ்வாறு வைத்திருக்கின்றாய் என்பதை நீ சோல்லித்தானே ஆகவேண்டும் என்றாள்.**

*அறத்தை இல்லையா? உன்னை அவர்கள் ஒரு பறவை போல சுதந்திரமாக வளர்த்தார்கள் இல்லையா?*

இல்லை ஒரு பறவை கொலையை சிந்திப்பதில்லை. மேலும் பறவை போல இல்லை, நான் பறவைகள் எல்லாவற்றையும் நேசிப்பதில்லை, பறவைகளின் சுதந்திரத்தை அதன் பறத்தலின் எல்லைகளே தீர்மானிக்கின்றது என்பதை நீ அறிவாயா?

பறவைகள் பற்றி சொல்வதென்றால், என்னை பொறுத்தவரையில் பறவைகளை மனிதர்களுடன் மட்டுமே வைத்து பார்ப்பேன். நீ எந்த வகையான பறவை? அதை சொல்வதற்கு நீ எனக்கு பறவைகளை உனது மனதில் எவ்வாறு வைத்திருக்கின்றாய் என்பதை நீ சொல்லித்தானே ஆகவேண்டும் என்றாள். நான் உனக்கு நான்கே பறவைகளை சொல்கிறேன். முதலாவது கூண்டில் சமுத்திரத்தை பார்க்கும் விதம், ஆம் அதை நீ சுதந்திரமுள்ளது என்று நினைக்கின்றாயா, இல்லை அதன் வலிமை தான் அதன் சுதந்திரம். அதன் சுதந்திரத்தின் எல்லையில் அதன் மரணம் காத்திருக்கலாம். நான்காவது பறவைதான் வானத்தை கடக்கும் பறவை. அதன் ஆயுள் முழுவதும் அது இந்த பூமியை பார்க்கும் விதம் அது நான் நிச்சயமாக நான் என்கிறேன். எனது சுதந்திரம் எதையும் தீர்மானிப்பதில்லை. எதை நோக்கியதுமில்லை. அது சுதந்திரத்தையே நம்புவதில்லை. அதன் விபரிப்புகளையோ விளக்கங்களையோ நம்புவதில்லை, அது பறத்தலை நம்புகிறது. அது தான் உண்மை.

வாழ்க்கையின் அத்தனை தருணங்களிலும் நான் பறந்துகொண்டிருந்தேன். ஹிப்பி உனக்கொன்று தெரியுமா? எனது பயணக்குறிப்புகளே எனது மொத்த வாழ்வுக்கான அடையாளம். நான்

எழுதுகின்றேன், அந்த எழுத்தில் எல்லா மனிதர்களும் சொற்கள் வெறும் சொற்கள் எனது தந்தை தாய் காதலி, எனது தந்தையை நான் கொலை செய்ய முயற்சித்த காலத்தில் ஒருநாள் அவர் அதை அறிந்துகொண்டார். நீ என்னை கொலை செய்வதற்கான முடிவை தெளிவாக எடுத்திருந்தால் அது எப்போதோ நிகழ்ந்திருக்கும். ஆனால் உனது உள்ளத்தில் இரக்கத்தின் கேவல் மிஞ்சுகிறது. ஒரு நல்ல கொலைகாரனால் ஒரு துப்பாக்கியை ஏந்துவதற்கு அவனது இதயம் முழுமையாக ஒளி பெறவேண்டும். நம்பிக்கையின் ஒளி, நாம் செய்யும் குறித்த செயல்களுக்கு மாத்திரமே நம்பிக்கையின் ஒளியை பலியாக்கி விடுகின்றோம். அந்த செயல்களை நல்ல செயல்கள் என்ற வரையறைக்குள் வைத்து விடுகின்றோம்.

நேர்த்தியாக அவளது கரங்களை பற்றிக்கொண்டேன். மெழுகிடப்பட்ட கருங்கல் சிலையின் வளவளப்புடன் இருந்தது. ஆனால் கொஞ்சம் உயிர் துடித்துக்கொண்டிருந்தது. ஹிப்பி உனக்கொன்று தெரியுமா? ஆத்மார்த்தமாக அவளை நேசித்தேன். அவளது உடலின் வாசனையில் குங்கிலியம் கமழும், அவளது சில்க் புடவையில் எலுமிச்சை வாசம் வீசும், அவளது வியர்வை வாசம். ஒரு நாள் மாலை என்னை அழைத்து எல்லாமே முடித்துக்கொள்ளலாம் என்றாள், எப்படி அது முடியும்? அன்று அவளது பிறந்த தினம். இல்லை முடியாது, உன்னை கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டிப்பார்த்தேன், ஒரு வளர்ப்பு நாய் சேமித்து வைத்திருக்கும் மிருக வெறி அது. எனது கண்களில் நீர் வழிந்தது மறுகணமே இல்லை என்னை விட்டுவிடாதே என் உயிரே, இனிமையே, நிறைவே, எனக்கு நீயே எல்லாம் என்னால் உன்னைவிட்டால் எப்படி வாழ முடியும் சொல். please. cant breath my dear, அப்படி சொல்லாதே, please, இல்லை உனது காலில் எத்தனை நாட்கள் தான் நான் விழுந்தே கிடக்க நீ பிரியப்படுகிறாய்.

ஆக நீயே எனது இறப்பையும் நீயே என் மேலான கருணையையும் முடிவு செய்கிறாய், உனக்கு அத்தனை அதிகாரம் இருப்பதை நீ காதல் என்று சொல்கிறாய், சீ நாயே. என்றாள். அப்படி இல்லை லேலி, என்னை மன்னித்துவிடு, உன்னை நான் நேசிக்கிறேன். அதனால் நீ என்னை நேசிக்க வேண்டும், சீ மறுபடி, இல்லை லேலி நீ என்னை விட்டு போனால் நமது அந்தரங்க புகைப்படங்களை உனது தந்தைக்கு தபாலில் சீ, ஏன் இப்படி. லேலி உறுதியாக சொல்கிறேன், இனியும் உனக்கு நான் அடிமையாக இருக்க முடியாது, முடித்துக் கொள்வோம். ஆனால் நான் ஒரு முற்போக்குவாதியாக இருக்கிறேன், அதனால் நான் ஒரு எழுத்தாளன். அதனால் நாங்கள் புரிந்துணர்வுடன் பிரிந்து விடுவோம், நாங்கள் எமது தோழர்களுக்கு நாங்கள் மனமொத்து பிரிந்ததாக அறிவித்து விடுவோம். சிரித்தாள் என்னை ஒரு புழுவை பார்ப்பதைபோல பார்த்தாள். ஆனால் மீண்டும் அமைதியாக அவளது கண்களில் நீர் ஒழுக என்னை பார்த்து, நீ ஒரு கொடிய மிருகம் தெரியுமா. இல்லை லேலி, எனக்கு உனது தோழியை பிடித்திருந்தது, அவளுக்கும் தான். அதனாலென்ன உன் மீதான பிரியங்கள் நோய் கண்டுவிட்டதா என்ன. ஆனால் மனமொரு நோய், நடுக்கத்துடன் அவளை மீண்டும் அணைக்க முயன்றேன், உந்தித் தள்ளினாள், பின் அணைத்துக்கொண்டாள், நான் முழுமையாக கலங்கினேன், மெல்ல காதில் வந்து கிசுகிசுத்தாள்.—உனக்கு ஒரு பெண்ணின் பெறுமதி தெரியவில்லை. ஏனென்றால் நீயொரு கீழான மிருகம். நீ என்னவும் செய்துகொள், உன் வன்முறையை உனது கருணையை எதையும் நான் இனி மதிக்கப் போவதில்லை, செல்... ஒரு பெருமூச்சை ஓங்கி இழுத்து விட்டேன், சரி போ.

இப்போது சொல் ஹிப்பி நான் ஒரு மிருகமென்று நீ நினைக்கிறாயா, ஒரு சுயபரிசோதனை எனக்கு தேவையாக இருக்கின்றதா, நீ சொல்லு ஹிப்பி அவளது

கூந்தலில் ஒரு பகுதி எனது மார்பில் வியர்வையில் சலசலத்தது. இங்கே மிருகத்தனம் என்பது வன்முறையின் வரையறையில்லை. குறிப்பாக எனக்கு உனது மிருகத்தனங்கள் பற்றியோ உனது மேலான கருணை பற்றியோ அக்கறையில்லை, இறுக்கமாக அணைத்துக்கொண்டாள். இரண்டு முழுமையான மார்பும் உடலின் உள்ளே சென்று எனது இதயத்திற்கு ஒன்றும் நுரையீரலுக்கு ஒன்றும் புதைவதைப்போல உணர்ந்தேன், மூளை பிளவுற்று யோனிவழியாக திறந்தது. ஹிப்பி நானுன்னை நேசிக்கின்றேன், நீயே எனது ஆன்மாவின் சுதந்திரம். காதின் அருகில் கிசுகிசுத்தாள், உனது அன்பு பற்றியோ உனது வார்த்தைகள் பற்றியோ எனக்கு அக்கறையில்லை.

உப கதை —1 வாழ்தல் என்பது கொண்டாட்டத்தின் மீதான விசாரணை

அடுத்த கிழமை

ஹிப்பியை சுட்டு விட்டார்கள், அன்று காலை நான்கு மணியளவில் வெள்ளை வாகனத்தில் வந்த அவர்களால் அவள் சுடப்பட்டிருந்தாள். சிவப்பு தகர கதவுகளை ஹார்ன் சத்தத்தில் மிகவும் அதிகாலை அவள் ஆர்வத்துடன் திறந்திருக்க வேண்டும். சரியாக நெற்றிப்பொட்டில் ஒன்று, அடிவயிற்றில் ஒன்று. இரண்டு தோட்டாக்கள். வீட்டின் முன்னால் குவிக்கப்பட்டிருந்த சல்லிக்குவியலின் மேல் அவளது உடல் குறுகிபோய் கிடந்ததை எந்த ஆணாலும் பார்த்து சகிக்க முடியவில்லை, தொடைகளில் நேர்த்தியற்று சரிந்து கிடந்தது அவளின் பாவாடை. இறுகிப்போயிருந்த வாயின் வழியாக அரைவாசி பற்கள் வெளியில் தெரிந்தன.

இத்தனைக்கும் அவளுக்கு எத்தனை வயதென்று நினைக்கிறீர்கள். இருபது, பழுப்புநிற முகத்தில் கன்றிப்போய் கறுப்பு திட்டுகளாக மாற்றம் பெற ஆரம்பித்திருந்தன. பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்த அவளது தாய் கால்கள் முற்றாக செயலிழந்து ஆறு வருடங்களாக படுக்கையில் கிடந்தவள். கைகளால் உந்தி நிலத்தை தள்ளி தள்ளி மெல்ல மெல்ல நகர்ந்து அவளது உடலின் அருகில் வந்து விலகியிருந்த அவளது பாவாடை மற்றும் சட்டையை சரிசெய்து விட்டு அவளது காலடியில் தலைகவிழ்ந்தபடி இருந்தாள். ரத்தம் முழுமையான திரவமாக இல்லாமல் புகைப்படிந்ததை போல கறுத்த நிறம் கலந்த பாகுத்தன்மையுடன் ஒரு கட்டத்திற்கு மேல் வழிந்தோட முடியாமல் நின்றது, தனது பாவாடை தலைப்பினால் முகத்தில் சிதறியிருந்த குருதிவடிவை துடைத்து எடுத்தாள் தாய். மழை துமித்து ஈரம் வடிந்திருந்த சல்லிக்குவியல், நாய் மலம் காய்ந்து கறுத்திருந்தது. வேலிகளின் கரையிலெல்லாம் நீல நிற காட்டுப்பூக்கள் பூத்திருந்தன. ஊரில் இருந்த ஆண்கள் எல்லோரும் ஒரு வெள்ளைத்துணியைக்கொண்டு ஹிப்பியின் உடலை போர்த்தினார்கள். இத்தனைக்கும் தாய் ஒரு குரூர மௌனத்துடன் இருந்தாள். மிகவும் கரியதாகவும் வெடித்துபோயும் இருந்த அவளது உதடுகள் துடித்துக்கொண்டே இருந்தன. மிகவும் வயதான வெற்றிலை கறை தாடி மயிர்களில் படிந்து முறுகி விட்டிருந்த கிழவர், அருகே வந்து துணியை கீழே இழுத்துவிட்டு மிக நிதானமாக அழுக்கடைந்த தனது உடலில் கச்சிதமாக பொருந்தாத வழுக்கி சரிந்த சேர்ட்டின் பொக்கற்றை தனது கைகளால் நெஞ்சில் அழுத்தி தடவியவாறே எஞ்சியிருந்த ஒரே ஒரு புகையிலை சுருட்டை எடுத்து வாயில் வைத்தவாறு" அந்தோனி நெருப்பெட்டிய தாடா" வேசைக்கு எத்தின தரம் சொல்லி இருப்பன், நாறிக்கிடக்கிறாள். பற்றவைத்த சுருட்டை உறிஞ்சி ஒரு இழுவை இழுத்துவிட்டு வாய்க்குள் தேங்கிய எச்சிலை காறித்துப்பினார்.

அந்தோனி அந்த பாய கொண்டுவாடா, ஓலைப்பாயொன்றை அந்தோனி எடுத்து வந்தான், பாயை உடலின் அடியில் வைக்க சைகை காட்டிவிட்டு "தள்ளி இருந்து துலை நொண்டிச் சனியனே", வேசைய பாயில

போடுடா நீ இந்தா காலப்பிடி.

கிழட்டு நாயே அவளிண்ட உடம்ப தொடாத என்று பெரிதாக வலுவானவரை கத்தினாள் தாய், சல்லிகளால் இயன்றவரை கிழவனின் மேல் வாரி இறைத்தாள். ஒரு சதம் குடுக்காம எத்தின தடவை அவளோட நீ படுத்திருப்பாய் பிணஓழி, இப்ப என்னடா உத்தமன் மாதி கதைச்சிக்கொண்டு நிக்கிறாய், போடா இதுல கிடந்தது அவளிண்ட உடம்பு அழுகி நாறினாலும் பரவாயில்லை, உன்ன போல ஒரு தேவடியாள் மகண்ட கை இனியும் அவளிண்ட உடம்பில படக்கூடாது, வேச பொத்தடி வாயை என்று கிழவர் பதிலுக்கு கத்திவிட்டு உடலை உருட்டி பாயில் படுக்கவைத்து, கால் பகுதியில் கிழவரும் தலைப்பகுதியை அந்தோனியும் பிடித்தபடி வீட்டிற்குள் கொண்டு சென்றார்கள், ஹிப்பி வெட்டப்பட்ட அவளது முடிகள் மட்டும் அங்கொன்றும் இங்கொன்றுமாக அசைந்தன.

ஹிப்பி இறப்பதற்கு மூன்று தினங்களுக்கு முன் நான் அவளுடன் இருந்தேன், கொஞ்சம் அவளை பற்றி அறிந்து கொள்ள அவளிடம் பேச்சை குடுத்தேன், நீ யாரையாவது காதலிக்கிறாயா, இல்லை அதற்கான எந்த வளமும் எனக்கு என்னை சார்ந்து இருப்பதில்லை, ஆட்களை தேடி கண்டுபிடிக்க வேணும். அது எப்படி, ஒரு பிரமாதமும் இல்லை, மங்குகிற மாலை வேளையில் பேருந்து நிலையம் சென்று நூறு ரூபாவை எடுத்து முகத்தில் விசிறிக்கொண்டு இருக்கும் போது ஏற்கனவே இது பற்றி அறிந்த ஒருவன் கண்டுகொள்வான், ஒரு இரவு கடந்து விடும், இரவுகள் மட்டுமில்லை பகல்களும். உனக்கொன்று தெரியுமா நான் மிரட்டப்பட்டேன், யாரோ சிலர், நான் கொலைசெய்யப்பட்டு விடுவேனாம், நீ நினைக்கிறாயா நான் இறந்துவிடுவேன் என்று, நீ ஒரு எழுத்தாளனா என்னைப்பற்றி என்றாவது எழுதுவாயா? இல்லை நீ எழுதக்கூடாது. எனது வாழ்க்கையின் புனிதத்தை அது சிதைத்துவிடும், சிரிக்க போகின்றாயா இவள் போன்ற ஒருத்திக்கு புனிதமென்ன என்று, நீ நிச்சயம் சிரிக்க வேண்டுமென்றே அதை சொன்னேன், ஒரு மனிதனாவது ஒரு விபச்சாரியை புனிதமுள்ளவளாக நினைப்பானா, ஆனால் புனிதமென்பது உடலின் கொண்டாட்டம், உடலின் புரிதல், உடலின் விடுதலை, மண்ணில் அமிழ்ந்திருக்கும் அமைதி தான் புனிதம். ஒரு உடல் மண்ணுக்கு சமானம். நீ உன்னைப்போன்ற ஒவ்வொருத்தனும் உலகிலேயே மிக அசுத்தம் வாய்ந்த பொருளை கொள்வனவு செய்வானா, ஆனால் பார் மீண்டும் மீண்டும் மனத்தால் அசுத்தம் என்று உணரப்பட்டாலும் நுகரப்படும் ஒரு உடல் புனிதமில்லையா? அசுத்தமென்று உணரப்பட்டாலும் அதை ஏற்றுக்கொள்ளும் மனம் புனிதமில்லையா.

நான் அந்த இடத்தில் அந்த கூட்டத்தில் ஒருவனாக நின்றேன். ஒரு அடி முன்னேற நான் விரும்பவில்லை, இறந்த உடல்கள் கதைகளை உருவாக்குகின்றன. அது ஒரு சாகச கதை. பெரும்பாலும் ஹிப்பிக்கு பிடிக்காத சமாச்சாரம் அது. ஆனால் நான் இதை நான் சொல்லியே ஆகவேண்டும், யாருக்காவது சொல்லியே ஆக வேண்டும். இதற்கு முன்னர் அதை நான் அவளுக்கு சொன்னேன், உனக்கொன்று தெரியுமா லேலி, எனது அப்பா ஒரு கதையை சொன்னார். அவளது பாதத்தை எனது தொடையில் எடுத்து வைத்து விரல்களை நீவினேன், அதில் வந்த பெண் மிக அழகானவள் பதின்மத்தில் அவள் இருந்தாளாம், நீ நம்பாவிட்டாலும் இது உண்மை கதை. ஏனென்றால் அவளை அவர்கள் சுட்டார்கள். அவர்களால் தான் எங்களூரில் விபச்சாரம் குறைந்தது என்று இப்போதும் நம்பப்படுகின்றது.

அவள் பேரென்ன?

புனிதா.

R &C Property Lawyers LLP

Conveyancing Specialists




Raja Thavaraja & Senthuran Thavaraja Solicitors

UNIT 116 Tooting Works
89 Bickersteth Road
London SW17 9SH

0208 772 4920
02086820651

info@rcpropertylawyers.co.uk
www.rcpropertylawyers.co.uk

# சுட்டை முனைக்கும் சிட்டுக்கள்

# அகரா கவிதைகள்



I strive

to get away from all the eyes on me.

They haven't gotten what they wanted.

My fears haunt me,

Their comments taunt me.

always feel inferior

about how they comment on my exterior.

## கட்டாய முயற்சி

என்னில் குவியும்
அத்தனை கண்களிலிருந்தும்
மறைய முயற்சிக்கிறேன்.
இதுவரை அந்தக் கண்கள் விரும்பிய எதையும் பெறவில்லை.
ஆனாலும்
எனது பயம் என்னைக் கொல்கிறது.
இழிவுச் சொற்களால் நான் துரத்தப்படுகிறேன்.
என் வெளிப்புறத்தை குறைத்து மதிப்பிடும்
அவர்களின் வார்த்தைகளால்
ஒடுங்குகிறது மனது.



Only the beginning

Can’t keep complaining
about the ending,
if you’re still at the start line.
Keep going until
It feels right.

Even that is just the beginning...

## தொடக்கம்

தொடர்ந்து குறை சொல்ல முடியாது
முடிவைப் பற்றி,
நீங்கள் இன்னும் தொடக்க வரிசையில்
இருக்கிறீர்கள்.
தொடர்ந்து செல்லுங்கள்
அது சரியென்ற புள்ளிவரை.

ஆனால் அதுவும் தொடக்கப் புள்ளிதான்.

அப்பையா
தேவதாஸ்



# இவள் ஒரு பொக்கிஷம்



சிங்காரச் சென்னையில் வாழ்ந்திருந்தால் உலகெங்கும் சிதறி வாழும் தமிழர்கள் இவள் பெயரை நிற்சயம் உச்சரித்திருப்பார்கள். என்ன செய்ய இலங்கைத் தீவின் ஓர் மூலையில் வாழ்வதால் உலகறிய வேண்டிய ஒரு இளம் இசை அருவி இன்னும் முறையாக அறியப்படாமல் இருக்கிறது. இருப்பினும் தாயின் கருவறையிலேயே இவள் இசை கேட்டு வளர்ந்ததனால் பல இசை அறிஞர்கள் வியந்து பாராட்டிய பெருமைக்குரியவள் செல்வி.வைஷாலி யோகராஜன்.

கலைகள் மலிந்து “கலையூர்” என்று போற்றப்படும் அளவெட்டி இவளின் பூர்வீகம். அதனாலோ என்னவோ கலைமகள் துணையிருக்க கடல் கடந்து இந்திய உபகண்டம் வரை எட்டி நிற்கிறது வைஷாலியின் குரல்.

“இசைப் பாதுகாவலன்” எனப் போற்றப்படும் கிளீவ்லாண்ட் சுந்தரம் ஐயா,இவளின் ஒளித் தடத்தைக் கேட்டதும் இந்தியாவிற்கு அழைத்து சங்கீத மேதைகள் சங்கமித்திருந்த பல சபைகளில் வைஷாலியைப் பாட வைத்தார். இன்றுவரை இசை நுணுக்கங்களைக் கற்றுக்கொடுத்து வைஷாலிக்கு வழிகாட்டியாக விளங்குகிறார்.



அதற்கான தொடக்கப் புள்ளியாக சக்தி யூனியரில் “சுப்பர் ஸ்ரார்” மகுடத்தை தனதாக்கியிருந்தார் வைஷாலி. இலங்கையின் சிறந்த கர்நாடக இசைக் கலைஞருக்கான ஜனாதிபதி விருதினையும் வென்று, அகில இலங்கை தமிழ்த் தினப் போட்டிகளில் முதலிடம் பெற்று வளர்ந்த வைஷாலியின் இசைக் கச்சேரியை இந்திய இசைமேதைகள் ரஞ்சினி காயத்திரி சகோதரிகள் தமது வலைத்தளத்தில் வெளியிட்டு இலங்கையின் இசைத் தளிராக வைஷாலிக்கு இந்திய அங்கீகாரம் கொடுத்திருந்தனர். இசைத் துறையில் மகுடம் வைத்தாற் போல் இந்தியாவின் 74 வது குடியரசு தினத்தையொட்டி இடம்பெற்ற 15 வயதினர் தொடக்கம் 50 வயதினர் வரையான உலகெங்கும் வாழும் இசைக் கலைஞர்கள் கலந்துகொண்ட கர்நாடக இசைப் போட்டியில் தன் இசையாற்றலால் களமாடி முதலாம் இடத்தைப் பெற்றார் இந்த ஈழத்தமிழ் இசைக்குயில்.

சங்கதிகளைச் சரளமாக ஆளும் வைஷாலியின் குரல் கம்பன் கழகம்,ஆலானா,நல்லை ஆதீனம்,இலங்கை வானொலி,ரூபவாகினி என திரும்பிய பக்கம் எங்கும் இலங்கையில் வலம் வந்தது.

கடல் கடந்து ஸ்ரீபார்த்த சாரதி கர்நாடக மியூசிக் சபா,ஸ்ரீ குருவாயூர் மியூசிக் சென்ரர்,ஸ்ரீ பார்த்த பெரியாழ்வார் சந்நிதி போன்ற இந்திய சபாக்களிலும் 2016ம் ஆண்டு அவுஸ்ரேலிய முத்தமிழ் மாலை இசை நிகழ்ச்சியிலும்,சிட்னி முருகன் ஆலயத்திலும் கல்லையும் கரைய வைக்கும் இசைக் கச்சேரியாக ஒலித்தது இவளின் குரல்.

செவி வழி நுழைந்து இதயத்தை தன்பால் இசைய வைப்பதால் இசைக்கு “இசை” என்ற பெயர் இடுகுறியானது.

மரஞ்செடி கொடிகளும் பறவை விலங்கினங்களும் இசை கேட்கும் என்ற உயிரியல் அறிஞர்களின் கூற்று ஒருபுறமிருக்க இசையால் வசமான ஒவ்வொரு மனிதனும், அந்த இசைக் கலைஞன் அறிமுகம் அற்றவன் ஆயினும் உறவினன் போல உணர்வான்.

சிறு வயதிலேயே இசையால் தனக்கென ஓர் இடத்தை நிலைநிறுத்தி,பெரும் இசை வல்லுநர்களின் பாராட்டுகளையும் பெற்ற அதேவேளை இன்னும் இவள் சாதிப்பதற்கான காலமும் நீண்டு கிடப்பதனால் செல்வி.வைஷாலி யோகராஜன் ஈழத்து இசைத் துறைக்குக் கிடைத்த ஒரு பொக்கிஷம்.

# கரப்பான் பூச்சி




அவள் சுவர் மணிக்கூட்டை தின்றுவிட்டாள் என்று சொல்லிச் சொல்லியே அடுப்பைப் பற்ற வைத்தாள். நூடுல்ஸை கொதி நீரில் போட்டாள். மற்றொரு பாத்திரம் கொண்டு மூடி வைத்துவிட்டு மகளைத் திரும்பிப் பார்த்தாள்.

மகள் அப்போதுதான் குளித்து முடித்திருந்தாள். நனைந்த தலைமயிருடன் சுவர் மணிக்கூட்டை ஏழாவது முறையாக திரும்பிப் பார்த்தாள். அவள் திரும்பிய வேகத்தில் தலை மயிரிலிருந்து தெறித்த ஒரு துளி நீர் சுவரில் முட்டி சுவருக்குள்ளே புதைந்துகொண்டது. மண்ணுக்குள்ளே புதையுண்டவர்கள் பற்றியெல்லாம் அவளுக்குத் தெரியாது.

எவ்வளவு வேகமாக புறப்பட முடியுமோ அவ்வளவு வேகமாக பள்ளிச் சட்டையைத் தூக்கி கதிரையில் போட்டாள். உள்ளாடையிலிருந்து ஒவ்வொரு ஆடையாக எடுத்து அணிந்துகொண்டு அந்த சுவர் மணிக்கூட்டைப் பார்த்தபடி தும்மினாள்.

அவள் தும்மியதைப் பார்த்த மணிக்கூட்டுக்குள்ளிருந்த நிமிட முள் திடுக்கிட்டு மூன்று நிமிடங்கள் முன்னால் போய் நின்றது. தன் வீட்டுச் சுவரில் தொங்கும் மணிக்கூடு பயந்த சுபாவம் கொண்டது என்பது அவள் அப்பாவுக்கு மட்டும்தான் தெரியும்.

**அகமது ஃபைசல்**



தும்மிவிட்டு அந்த நிமிட முள்ளை அவதானித்தவள் தும்மலோடு சண்டை இடுவதுபோல் ஏசிக்கொண்டு பள்ளிச் சட்டையை தலையால் அணிந்து அதன் முன் சுருக்கங்களை சரி பார்த்துவிட்டு தலை மயிரை வாரி இரண்டு ஜடையாகப்பின்னி முதுகுப்பக்கம் போட்டுவிட்டாள்.

அதற்கிடையில் மூன்று முறை மணிக்கூட்டையும் பார்த்துக் கொண்டாள். அவள் பார்க்கும் ஒவ்வொரு முறையும் அந்த நிமிட முள் சற்றும் அசையாமல் நிற்கும் ஆனாலும் எப்படி நேரம் கழிகிறது என்று தெரியாமல் அந்த மணிக்கூட்டுக்கும் ஏசுவாள்.

வாய் சும்மாவே இருக்காது. ஒவ்வொரு பாடத்தின் பெயரையும் சொல்லிச் சொல்லி புத்தகங்களையும் கொப்பிகளையும் சரியாக எடுத்து தோள் பைக்குள் அடுக்கி முடிந்தாள். எழுத்துக்களுக்கு மூச்சு முட்டும் என்பது பற்றியெல்லாம் அவளுக்குத் தெரியாது.

சப்பாத்து ஊத்தையாக இருக்கிறதே என்று அம்மாவை கடிந்துகொண்டு ஒரு தோசையை சாப்பிட்டு முடித்தாள். இறுதியாக கண்ணாடிக்கு முன் நின்று தனது வட்ட வடிவ முகத்தைப் பார்த்துவிட்டுத் திரும்பும்போது அவள் அம்மா சாப்பாட்டுப் பெட்டிக்குள் நூடுல்ஸை அள்ளி வைத்து அடைத்துகொண்டு வந்து மகளின் புத்தகப் பைக்குள் வைத்துவிட்டாள்.

அன்றும் பள்ளிக் கூடத்திற்கு வழமையான பாதையால் செல்லாமல் அவள் கண்டு பிடித்த குறுக்கு வழிப் பாதையால் சென்றாள்.

கேற் மூடுவதற்கு நான்கு நிமிடங்கள் முன்னாடி சென்று விட்டதால் வீட்டுச் சுவர் மணிக்கூட்டுக்கு மனதால் நன்றியைச் சொல்லிக்கொண்டு வகுப்பறைக்குள் நுழைந்தபோதுதான் அந்த ஞாபகம் வந்தது.

டீச்சர் ஒரு கரப்பான் பூச்சியை வரைந்து வரச்சொன்னது.

இனி எதுவும் செய்ய முடியாது, டீச்சர் கரும்பலகையை இரு கைகளாலும் தள்ளிக்கொண்டு பாடவேளை முடியும்வரை நிற்கச் சொல்வார் என்று டீச்சரின் தண்டனை முறையைக் கற்பனை செய்து பார்த்துக்கொண்டாள்.

அது இரண்டாம் பாட வேளை. அன்றைக்கு ஏனோ அந்த டீச்சரின் முகம்கூட கரப்பான் பூச்சியின் முதுகு போன்று மினு மினுத்தது. “எல்லோரும் கரப்பான் பூச்சியை வரைந்து வந்திருக்கிறீங்களா?” என்று சத்தமாக டீச்சர் கேட்டாள். பயத்தோடு கொப்பியை எடுத்து மேசையில் விரித்து வைத்தாள் பாலேஸ்வரி.

டீச்சரையே பார்த்துக்கொண்டிருந்தாள். அப்போது அவள் சட்டைக் கொசுவத்திற்குள்ளிருந்து வெளியே வந்த கரப்பான் பூச்சி அவள் விரித்து வைத்திருந்த கொப்பித் தாளில் பாய்ந்து; தாள் முழுவதும் தன் உடலை விரிவடையச் செய்து தாளில் தன்னை ஒரு அழகிய சித்திரமாக மாற்றிக்கொண்டது.

அவளின் அருகில் வந்த டீச்சர் கொப்பியைத் தூக்கிப் பார்த்தாள். அந்த கரப்பான் பூச்சிச் சித்திரத்தைப் பார்த்து வியந்து பாலேஸ்வரியைப் பாராட்டினாள்.

எல்லோரையும் கை தட்டச் சொன்னாள். கை தட்டல்கள் அவளின் காதுகள் இரண்டையும் நிறைந்தன. அடுத்த பாடவேளை வருவதற்குள் கரப்பான் பூச்சி கொப்பியைவிட்டு வெளியேறி சுவர் வழியாக ஓடிச் சென்றதை வகுப்பில் இருந்த யாரும் பார்க்கவில்லை.

மங்களகரமான வைபவங்களை மகிழ்வுடன் கொண்டாட
அழகான அலங்காரம் முக்கியம்.

KE
KAVI'S EVENTS
THE LUXURY HOME DECOR

- Wedding
- Birthday
- Anniversary
- Saree ceremony
  &
- Any occasion

Decor துறையில் அனுபவம் வாய்ந்தவர்
Kavitha (647) 298-1959






For your construction needs in Jaffna...

Contact Us:
Phone : 0094777959914

E-Mail : trshankar2004@gmail.com

GANGU CONSTRUCTIONS
QUALITY IS THE ONLY CONCERN